Su 16,951.

மட்டக்களப்பு மான்மியம்

ஓர் ஆராய்ச்சி

திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம் எம்.ஏ.

மட்டக்களப்பு மகாத்மியம்
(ஓர் ஆராய்ச்சி)

A STUDY ON THE GLORY OF BATTICALOA

ஆசிரியர் :

திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம்

வி. ஏ. சிறப்பு (வடமொழி), எம். ஏ. (தொல்லியல்)

முதற் பதிப்பு : மார்கழி 1993.

பதிப்புரிமை : தனபாக்கியம் குணபாலசிங்கம்.

விலை : ரூபா 165/-

அச்சுப் பதிப்பு:

சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்,
மட்டக்களப்பு.

உள்ளடக்கம்

பக்கம்

ஆசியுரை. ... ... —

அணிந்துரை. ... ... —

முன்னுரை ... ... —

இயல் 1 : மட்டக்களப்பு மான்மியம்
வரலாற்று மதிப்பீடு 01

இயல் 2 : மட்டக்களப்பு மான்மியம் விபரிக்கும்
அரச குடிவழிகள் 17

இயல் 3 : மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்ற
அரசியலமைப்பு, சமூக வரலாறு.
முற்குகர் சட்டம் 58

இயல் 4 : மட்டக்களப்பு மான்மியம்
ஊரும் பேரும் 87

இயல் 5 : மட்டக்களப்பு மான்மியம் விபரிக்கும்
சாதியமைப்புக்கள் 129

இயல் 6 : மட்டக்களப்பில்
தென்னிந்திய – கிழக்கிந்திய
சைவமதப் பண்பாடுகளும்,
பிற வழிபாட்டு நெறிகளும் 165

இயல் 7 : மட்டக்களப்பு மான்மியம்
கால ஆய்வுகள் 181

அரும்பத விளக்கம் 193

மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்ற
பிற நாடுகள் 203

பிற்சேர்க்கை 208

வரைபடம் (பழைய மட்டக்களப்பு) 209

மட்டக்களப்புத் தமிழகம் அன்றும் இன்றும் ... 211

ஆசியுரை

போரினாலும், பஞ்சத்தினாலும் மக்கள் துயரடைந்திருக்கின்ற காலங்களிலேதான் எழுத்தாளர்கள் கூடுதலாக, அவர்களுக்காக எழுதுகிறார்கள். அதனைத் தம்பேனாவின் பணியென்றும் கருதிவருகின்றார்கள். நாடுகளிடையே, இனங்களிடையே, மதங்களிடையே அன்றும், இன்றும் போர்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அப்படியான சூழ்நிலைகளில் எழுத்தாளர்கள் இன்னும் கூடுதலாக விழிப்பாக இருந்துவருகின்றார்கள் என்பதையறியும்பொழுது, பெருமகிழ்வடைகின்றேன்.

அரசுகள் காலத்துக்குக்காலம் மாறினாலும் சமூகங்கள் மாறுவதில்லை. சமூகங்கள் பழையன கழியப், புதியனவேற்றுப் பாரம்பரியங்களைப் பாதுகாத்துத்தரவல்லன. அதனால் மட்டக்களப்பு மக்களுக்காக அன்றைய எழுத்தாளர்கள் பனையோலை, செப்புத்தகடு, ஆணி இவற்றின் துணைக்கொண்டு, மட்டக்களப்புச் சமய, சமூக. அரசியல் வரலாறுகளை எழுதி, தேசத்துக் கோவிற்பெட்டகங்களிற் பூட்டிவைத்துப் பேணிப் பாதுகாத்துவந்துள்ளார்கள்.

இருபதாம் நூற்றாண்டில் (1962ம் ஆண்டு) இவ்வோலைகளையும், செப்பேடுகளையும் அன்பர்கள் உதவிகொண்டு தேடிப் பெற்றிருந்தார் ஒருவர். அவர்தான் மகாவித்துவான் F. X. C. நடராசா அவர்கள். ''மட்டக்களப்பு மான்மியம்'' என்ற பெயரில் இவர் நூல் பதிப்பிக்கப்பட்டது. இதனை நாம் முதனூலாகக் கருதலாம். ஆனால் இந்நூலில் பொதிந்துள்ள சமய, சமூக, அரசியற் பின்னணிகளை விளங்கிக் கொள்ளவேண்டுமானால் தொல்லியல், வரலாற்றியல் அறிவுகள் அவசியம். இவ்வறிவினை எல்லாரும் பெறுவதென்பது மிகக் கஷ்டமான காரியமாகும். எனவே இந்நூலிலடங்கியுள்ள விடயங்களை யாவரும் விளங்கிக்கொள்ளவேண்டுமென்ற பரந்தநோக்குடன் வழிநூலொன்று உருவாகியுள்ளது. அதனை இயற்றியவர் திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம் அவர்கள்.

இவர் இலங்கை, இந்தியநாடுகளுடன் தொடர்பான தொல்லியல், வரலாற்றியல், சமயவியல் முதலான துறைகளில் நூல்களை எழுதிவரும் ஒரு எழுத்தாளர். எனவே இவரது "மட்டக்களப்பு மான்மியம் (ஓர் ஆராய்ச்சி)" பல அனுபவங்களுக்குப் பின் அயராத உழைப்பைத் துணைக்கொண்டு எழுந்ததாகத் தெரிகின்றது.

அதனால் இதுவரைகாலமும் வரலாற்றாசிரியர்களிடையே ஐயங்களை எழுப்பியிருந்த, இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் வரலாறுகளை, ஆய்வுக்கண்ணோட்டத்தில் ஆய்ந்து, இலங்கையின் ஆதிவரலாற்றை நேர்படுத்தியுள்ளார். இதுவே இந்நூலில் நாம் சிறப்பாகச் சுட்டிக்காட்டக்கூடிய விடயமாகும். மற்றும் உபராசன் குளக்கோட்டன் பற்றிய சிக்கல்மிகுந்த உண்மைகளை இந்நூலில் ஆராய்ந்து காட்டியுள்ளார். இதுவும் ஆய்வாளர்களை ஈர்க்கக்கூடிய விடயமாகும்.

சுருக்கமாகச் சொன்னால் மட்டக்களப்புத் தமிழகத்தின் சமய, சமூக, அரசியல் பாரம்பரியங்கள் யாவும் அலசி ஆராயப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தத்தில் இன்றைய காலகட்டத்திற்கு இந்நூல் தேவையானதொன்றென இந்நூலைப் படிப்போர் உணர்வர்.

இத்தகைய பெரும்பணியை நிறைவேற்றிய திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கத்திற்கு எம் நல்லாசிகள். இந்நூலை அனைவரும் படித்து, இன்புற்றுப் பெற இறையாசி வேண்டிநிற்கிறேன்.

+ Kingsley Ramphilla

திருமலை - மட்டுநகர் ஆயர்.

ஆயர் இல்லம்,
மட்டக்களப்பு.

அணிந்துரை

[1] 1.1. சமூக வரலாறு தொடர்பான அறிவியல் ஆய்வுகளின் இன்றியமையாமை பெரிதும் உணரப்படுகின்ற இவ்வேளைகளிலே, புதிய தரிசனங்களுடன் திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம் அவர்களின் மட்டக்களப்பு மான்மியம் (ஓர் ஆராய்ச்சி) எனும் நூல் வெளிவருவதனையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். ஏற்கனவே தன் நூல்களின் வழியும், பல்கலைக்கழக ஆசிரியப்பணியின் வழியும் தன் அறிவுப் புலமையை நிறுவிக்கொண்ட தனபாக்கியத்தின் நான்காவது நூல் இது.

1·2. மரபுவழிக கல்வி அறிஞரான எவ்.எக்.சி. நடராசா அவர்களின் ஆய்வுத்தேடலின் பேறாக, முப்பது ஆண்டுகளுக்குமுன் நூல்வடிவம் கண்டது மட்டக்களப்பு மான்மியம். அதனை மூல நூலாகக்கொண்டு, அதிலே காணப்படும் வரலாற்றுத்தரவுகள் தொடர்பான புதிய பரிமாணங்களை எல்லோருக்கும் விளங்கும் வண்ணம் நெறிப்படுத்தித்தருகின்றது மட்டக்களப்பு மான்மியம் (ஓர் ஆராய்ச்சி).

[2] 2.1. சமயம், சமூகம், அரசியல், பொருளாதாரம், புவியியல் காலக்கணிப்பு எனப் பண்முகப் பார்வையுடன் வரலாற்று முழுமையைத் தேடும் இந்நூலை, ஏழு இயல்புகளாய் வகுத்துத்தருகிறார் ஆசிரியர்.

2.2. மட்டக்களப்பின் தமிழர் சமூக வரலாற்றின், தனித்துவங்களை ஆழச்சித்திரிக்கும் இவ்வியல்களிடை, ஏற்கனவே நிலவும் ஆய்வுச் சிக்கல்கள் சிலவற்றுக்கான விடைகள் தெளிவாக்கப்படுகின்றன. குறிப்பாக மட்டக்களப்பின் குடிமுறையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆசிரியரின் முடிவுகள் இன்றைய சமூக மானுடவியலாய்வாளரின் கவனத்தைப் பெறுவன. இந்த வகையில் காலிங்காகுடி, வங்காளகுடி, படையாண்ட குடி, உலகப்போடி குடி ஆகியவற்றின் உருவாக்கம்பற்றிய ஆய்வு முடிவுகள் குறிப்பிடத்தக்கது.

2.3. மட்டக்களப்புச் சைவசமயத்தின் தனித்துவக் கோலங்களையும், அதன் மூலகங்களையும் இனங் காட்டும் தனபாக்கியத்தின் ஆய்வுக்கருத்துக்கள் ஈழத்துச் சமயவரலாற்றின் செழுமைக்கும் பெருந் துணையாகும்.

2.4. இன்னமும் விடுவிக்கப்படாத சில அரச வரலாற்று நிலைமைகளைத் தகுந்த ஆதாரத்துடன் தெளி வாக்குகின்றமையும், இந்நூலின் சிறப்புகளில் குறிப் பிடத்தக்கதாகும். அரச குடிகளை அட்டவணைப் படுத்தி, காலந்தோறும் அரசர்களால் குடியமர்த் தப்பட்ட குடிகள் வரலாறுகளையும் காணும் முயற்சியிடை, ஆசிரியரின் ஆய்வுப் பொறுமையும், புலமையும் துலங்கும்.

[3] இன்றைய கால அழுத்தங்களிடையும், தமிழர் சமூக வரலாறுபற்றிய குறிப்பாக மட்டக்களப்புத் தமிழ கத்தின் பாரம்பரியங்கள் தொடர்பான அரியதொரு ஆய்வுக்கனியைத் தந்திருக்கும் திருமதி தனபாக் கியம் குணபாலசிங்கம் அவர்களுக்கு நாம் கடமைப் பட்டவர்கள். மேலும், இதுபோன்று ஆய்வுலகில், அவர் அறிவுநூல்கள் பல வெளியாகத் துணையாகி நிற்போம்.

தனபாக்கியத்துக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

பேராசிரியர் மனோ. சபாரத்தினம்,
விஞ்ஞான பீடாதிபதி,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
செங்கலடி.

முன்னுரை

"இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக்கலா சாரமும்" எனும் எனது நூல் வெளியாகியபின் இரா. நாக லிங்கம் (அன்புமணி) அவர்கள், மட்டக்களப்புத் தமிழகத்தின் வரலாற்றினை நவீன ஆய்வுத்திகளைத் துணைக்கொண்டு எழுதவேண்டும் என்ற தமது வரலாற்றுணர்வினை எமக்குத் தெரிவித்தார். அது ஒரு பாரிய தொழில் என்பதனை அவ ருக்குத் தெரிவித்தபின், அவர் விரும்பிய நோக்கத்தின் ஒரு பகுதியாக "மட்டக்களப்பு மான்மியம் (ஓர் ஆராய்ச்சி)" எனும் இந்நூலை எழுத உளம் கொண்டிருந்தேன்.

அப்பொழுது "மட்டக்களப்பு மான்மியம்" எனும் முதல் நூலின் பிரதியொன்றினை ஒய்வுபெற்றவரும், தற் பொழுது நொத்தாரிசாகப் பணிபுரிபவருமான வித்துவான் ந. நாகலிங்கம் (தாமரைக்கேணி, மட்டக்களப்பு) அன்பளிப்புச் செய்தார்.

இந்நூல் கைக்கெட்டியபின், இந்நூல் விடயங்களில் என் கவனம் ஊன்றியிருந்தது. இந்நூல் நன்கு பரிச்சியமான பின்னர், இந்நூல் குறிப்பிடுகின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்களைத் திருக்கோவில்வரை சென்று பார்வையிட்டேன். ஊர்களையும், மக்களையும் கண்ணுறும்பொழுதெல்லாம், இவர்களின் வரலாறு எத்தனைகாலப் பழைமையுடைத்தன வாக இருக்குமோ, என எனக்குள்ளேயே ஒரு கேள்வி. திருக் கோவிற், பாங்கரில் தம்பதிநல்லாளுடன் வந்த சோழர் குடி களும், களுவாஞ்சிக்குடிப் பாங்கரில் கலைவஞ்சியுடன் வந்த இராமநாதக் குடிகளும் இன்றுவரை, எத்தனை தலைமுறைக ளாக வாழ்ந்துவருகின்றார்களோ என்று இன்னொரு கேள்வி என் நினைவலைகளில் தோன்றி மறையும். இவ்வாறு தமிழ் மணம் கமழும் ஊர்களையும், மக்களையும் பார்வையிட்டபின் பயணக்கட்டுரைகள் அழகாக எழுதியிருக்கலாம். ஆனால் எனது குறிக்கோள் அதுவல்ல. அதுவொரு தொல்லியல் ஆய் வுப் பயணம். எனவே மட்டக்களப்பு மான்மியம் கூறும் வர லாற்றுக்கூறுகளைத் துணைக்கொண்டு, இம்மக்களின் கடந்த காலப் பாரம்பரியங்களைத் தொடுத்துப்பார்த்து, உண்மை களைச் சுட்டிக்காட்டி விபரிப்பதே என் பயணத்தின் நோக்க மாகும். பின் அவ்வாறான வரலாற்றுக்கூறுகளைக் கண்டும், படித்தும், வகுத்தும், தொகுத்தும் ஏழு அத்தியாயங்கள் கொண்டதாக இந்நூலை ஆக்கியுள்ளேன்.

முதலாவது இயலில், இந்நூலில் அடங்கியுள்ள வரலாற்று மூலகங்களை மதிப்பீடு செய்துள்ளேன்,

இரண்டாவது இயலில் தென்கிழக்கிலங்கைப் பிரதேசத்தையாண்டிருந்த எல்லா அரச குடிகளின் வரலாற்றினை அட்டவணைப்படுத்தியுள்ளேன்.

மூன்றாவது இயலில், மட்டக்களப்புப் பிரதேசத்தில் காலந்தோறும் இடம்பெற்ற அரசியல் வரலாறுகளையும், கிழக்கிந்தியக்குடிகள், தமிழகத்துக்குடிகள் ஆகியோரின் குடியேற்றங்களின் பின்னணிகளையும் விபரித்துள்ளேன். அதனுடன் ஒல்லாந்தர் முற்குலச்சட்டத்தினை எழுத ஏதுவாகவிருந்த காரணிகளையும் குறிப்பிட்டுள்ளேன்.

நான்காவது இயலில் மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்ற ஊர்களின் பழமைமிக்க வரலாறுகளை ஆராய்ந்துள்ளேன். இன்று கிழக்குமாகாணத்தில் தமிழ்மக்களின் தொன்மைமிக்க பாரம்பரியங்களை அரண்செய்து நிற்கும் தடயங்களில், இவ்வூர்ப் பெயர்களும் ஒன்றாக அமைந்துள்ளன. காலந்தோறும் ஆக்ரமிப்பாளரிடம் கையளித்துவிட்டு ஒதுங்கிக் கொண்ட, தமிழ்மக்களின் ஊர்களும், எல்லைகளும் எவையென இப்பெயர்களே உணர்த்திநிற்கின்றன.

ஐந்தாவது இயலில், மன்னர்கள் கோவிற்றொண்டுகளுக்காகச் சாதிமுறைகளை வகுத்தமை ஆராயப்பட்டுள்ளன.

ஆறாவது இயலில், மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்ற சமய வரலாறுகள் ஆராயப்பட்டுள்ளன. மக்கள் சைவம் பேணியிருந்தபொழுது, சமயஞானம் பெற்றவர்களாகப் பிற மத வளர்ச்சிகளுக்கும் உறுதுணையாக இருந்துள்ளார்கள். அதனால் ஒன்றே குலம் ஒருவனே தேவன். அவனை அடையும் வழிகளே சமயங்கள் என்ற கோட்பாட்டினை நன்கு உணர்ந்திருந்தார்கள் எனில் மிகையாகாது.

ஏழாவது இயலில் மிகவும் சிக்கல்வாய்ந்த கால ஆய்வுகளை இடம்பெறச்செய்துள்ளேன். என்னுடைய இந்த முயற்சியானது மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடும் வரலாற்று நிகழ்ச்சிகளை ஓரளவு ஊகித்துக்கொள்ள உதவலாம். கால வெள்ளத்திற்குள் கழிந்துபோன நிகழ்ச்சிகளை, ஆராய்ச்சி எனும் நிழல் கண்ணாடியில் பதியவைத்துள்ளேன் என்று பறை சாற்றிக்கொள்ள விரும்பவில்லை. இதுவொரு கன்னி முயற்சியேயன்றிப் பெரும் சாதனையல்ல.

இயல்கள் முற்றுப்பெற்றபின் மட்டக்களப்பு மான்மியத்தில் காணப்பட்ட வழக்கிறந்துபோன வழக்காறுகளையும், சொற்களையும் ''அரும்பதவிளக்கம்'' எனும் தலைப்பில் விளக்கியுள்ளேன். பின் பிறதேசங்கள் பற்றிய குறிப்புகள் தொகுக்கப்பட்டுள்ளன. ''ஊரும் பேரும்'' எனும் பகுதியில் ஆராய்ந்த ஊர்களை முடியுமானவகையில் புவியியற் படத்தில் அடையாளம் காணமுயன்றுள்ளேன்.

இனி இந்நூலுக்கு ஆசியுரை வழங்குமாறு கேட்ட பொழுது மனமுவந்து ஆசியுரை வழங்கிய வணக்கத்திற்குரிய திருமலை – மட்டுநகர் ஆயர் அவர்களுக்கு நெஞ்சார என் வணக்கத்தைச் செலுத்துகின்றேன். இந்நூல் ஒரு வழிநூல். இதன் முதல் நூலாகிய மட்டக்களப்பு மான்மியத்தைத் தொகுத்து அச்சேற்றிய பெருந்தகை மகாவித்துவான் எப். எக். சி. நடராசா அவர்களையும் நெஞ்சார நினைவுகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சந்திக்கும்போதெல்லாம் ''மட்டக்களப்பு மான்மிய ஆராய்ச்சி'' எழுதிமுடிந்ததா? என வினவி ஊக்குவித்தும், பின் அணிந்துரை வழங்கியும் நூலைச் சிறப்பித்த கிழக்குப் பல்கலைக்கழக, விஞ்ஞானபீடாதிபதியான பேராசிரியர் மனோ. சபாரத்தினம் அவர்களுக்கும் எந்நன்றிகள். புவியியற் படத்தை நன்கு தயாரித்துத்தந்த புவியியற்துறை விரிவுரையாளர் செல்வி சி. பொன்னையா (கிழக்குப் பல்கலைக்கழகம்) அவர்களுக்கும், கையெழுத்துப் பிரதிகளைக் கண்ணோட்டமிட்டுக் கருத்துகள் தெரிவித்த எனது தொல்லியல் கற்கை நெறிப், பழைய மாணவியாகிய செல்வி க. தங்கேஸ்வரிக்கும் (கலாசார உத்தியோகத்தர், மட்டக்களப்பு) என் நன்றிகள். இவ்வாறு இந்நூல் உருவாக்கத்திற்குத் தொடர்பாகவிருந்த அனைவரையும் நன்றியுணர்வுடன் நினைவுகூர்கின்றேன்.

இறுதியாக இந்நூலை நன்முறையில் வெளியிட்டுத்தந்த கத்தோலிக்க அச்சகத்தாருக்கும் என் நன்றிகள்.

தனபாக்கியம் குணபாலசிங்கம்,

172, பிரதான வீதி,
ஏறாவூர் – 4.

இயல் 1

மட்டக்களப்பு மான்மியம் வரலாற்று மதிப்பீடு

இலங்கை வரலாற்றில் கிழக்குமாகாணத்தின் வரலாறே மிகத் தொன்மைவாய்ந்ததாகும். கிழக்குமாகாணத்திலிருந்து தான் இலங்கை வரலாறு ஆரம்பமாகின்றது எனினும் மிகையாகாது. இலங்காபுரி, தென்னிலங்காபுரியெனும் ஆட்சிப் பிரிவுகளைக் கொண்ட கிழக்குமாகாணப் பிரிவுகளை ஆதியில் குபேரனும், பின் இராவணனும் ஆண்டிருந்தனர். இராவணன் ஆட்சியின் பின் ஏற்பட்ட கடல்கோளினால் இலங்கை செழிப்பிழந்திருக்கையில் அத்தினாபுரி (ஹஸ்தினாபுரம்) குருதலநாகர் இலங்கையை அடைந்து, இயக்கரோடு இணைந்து உகந்தையைத் தலைநகராக்கியாண்டிருந்தனர். இவர்கள் இவ்வாறு ஆண்டிருக்கையில் அயோத்தி இரகுவமிசத்தைச் சேர்ந்த காலசேனன் (மகாவம்சம் இவனை இயக்க அரசன் எனக் குறிப்பிடும்) படையெடுத்துவந்து மண்டுநாகனையும், மற்றும் நாகர், இயக்கர்களையும் வென்று, அவர்களியற்றிய ஆலயங்களையும் இடித்து அரசு செய்திருக்கையில், வங்க இளவரசனான விசயன் வந்து, குவேனியின் உதவியினால் காலசேனனைக் கொன்று, ஆட்சியைக் கைப்பற்றினான் என்றும் மட்டக்களப்பு மான்மியம் இலங்கையின் ஆதி வரலாறுகளை விபரிக்கும். இவ்வாறு இலங்காபுரியின் ஆதி வரலாறுகளை மட்டக்களப்பு மான்மியம் தெளிவுபடுத்துவதோடு, ஒல்லாந்தர் காலம்வரை தொடர்ந்து இடம்பெற்ற வரலாற்றுக் கூறுகளையும் சுருங்கக் கூறுகின்றது. இவற்றுள் மிக முக்கியமான வரலாற்றுக்கூறு என்னவெனில் விசயன் ஆட்சிக்குப் பின், அவன் பரம்பரையினர் அவனது இலங்கை அரசபாரத்தையேற்க முன்வராத சமயம், கலிங்கர் வந்து அர

சோச்சினர் என்பதாகும். காலப்போக்கில் விசயனின் தம்பி சமித்துவின் மகன் பந்துவாசன் விசயதுவீபத்தின் ஆட்சியுரிமையைக் கோரவே, கலிங்க அரசனாகிய சிறிகுலசேனன் விசயதுவீபத்து ஆட்சிப்பிரிவுகளைப் பந்துவாசனுக்குக் கையளித்துவிட்டு விசயதுவீபமிருந்து தென்மேற்குத் தொடங்கித் தென்கிழக்கு வரையிலிருந்த தென்னிலங்காபுரிப் பிரதேசத்தைத் தன் மகன் கூத்திகனுக்குப் பட்டம்கட்டி, கிழக்கிலங்கையில் கலிங்கருக்கென ஒரு தனியாட்சிப்பிரிவை உருவாக்கியிருந்தான். இவ்விராச்சியப்பிரிவு கி. மு. 400 அளவில் உருவாகியிருக்கலாம் எனத் தெரிகின்றது. இவ்வாறு ஒரு தனியாட்சிப் பிரிவொன்று கிழக்குக்கரையோரமாக உருவாகி, இன்று மட்டக்களப்புத் தமிழகம் எனும் பெயரில் திகழ்ந்துவருகின்றது. இந்த அரசினைப்பற்றி மகாவம்சம், இராஜவலிய போன்ற இலங்கை வரலாற்று நூல்கள் மறந்தும் குறிப்பிடவில்லை. இது சிங்கள அரசுகள் உருவாக்கிய உரோகண அரசுக்குப் பின்னால் இலைமறைகாய்போல் மறைந்திருந்து வந்துள்ளது. இவ்வாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டிருந்த மட்டக்களப்புத் தமிழகத்தின் வரலாற்றையும், இலங்கை வரலாற்றில் குழப்பமுற்றுக் காணப்படுகின்ற வேறு பல வரலாற்றுக் கூறுகளையும் மட்டக்களப்பு மான்மியம் எமக்குத் தெளிவாக்குகின்றது எனில் மிகையாகாது.

மகாவம்சம் சிங்கள மன்னர் ஆட்சிகளையும், அவர்கள் பேணிப் பாதுகாத்த பௌத்தமத வரலாற்றையும்பற்றி எழுந்த நூலாகையினால், இலங்கையின் பிறபாகங்களிலிருந்த சுயாதீன அரசுகளை முற்றாக இருட்டடிப்புச் செய்துவிட்டது. அதனோடு விசயனுக்கு முற்பட்ட இலங்கை வரலாற்றைக் கூட, இலங்கைக்கு வருகைதந்த புத்தரின் தெய்வீகத் தன்மைகளையும், பௌத்தமத வரலாறுகளையும் விபரிக்க முற்பட்டதனால் முற்றாக இருட்டடிப்புச் செய்துவிட்டது. அதனாலே இந்திய இலக்கியங்களிலும், இலங்கையின் பிற வரலாற்று நூல்களிலும் இலங்கையில் இராவணன் மற்றும் நாகர் ஆட்சிகள்பற்றிக் குறிப்புகள் இருக்கையில், மகாவம்சம் அவைபற்றிக் குறிப்பிடுவதாக இல்லை. மாறாக இயக்கர், நாகர்களை அமானுசர் அல்லது பண்பாடற்றவர் என விபரித்து, இலங்கையின் ஆதிவரலாற்றை ஆய்வோர் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தியிருந்தது. இராவணன் ஆட்சிக்குப் பின் குருகுல நாகர் தென்கிழக்கிலங்கையில் ஏற்படுத்தியிருந்த நாகராட்சி பற்றியோ அல்லது மணற்றிடர், மண்ணாறு முள்ளுத்தீவுப் பகுதிகளிலிருந்த நாகராட்சிகள் பற்றியோ அல்லது தட்சணாபதியிலிருந்த இயக்கர், நாகர் ஆட்சி பற்

றியோ மகாவம்சம் கோடிட்டுக் காட்டவில்லை. இவற்றுக்குத் திரைபோட்டுவிட்டு, பௌத்தமதத் தொடர்புபெற்ற மணிபல்லவ நாகராட்சியையும், களனியா நாகராட்சியையுமே குறிப்பிடும். மகாவம்சம் தவிர்க்கமுடியாத வகையில் குறிப்பிட்ட இலங்கையரசியல் போராட்டங்களின் பின்னணிகளைக் கொண்டே மணற்றிடரில் (யாழ்குடா) தனியாட்சிப் பிரிவொன்றிருந்தது என வேறோர் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தோம். (பார்க்க, இலங்கை தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும், பக். 139 - 150). எனவே மகாவம்சத்தின் குறைபாடுகளையெல்லாம் ஈடுசெய்யக்கூடிய வரலாற்றுச் சுருக்கம் மட்டக்களப்பு மான்மியம் என நாம் உணரவேண்டும்.

இராவணன் ஆட்சிமுடிவில் செழிப்பிழந்திருந்த தென்னிலங்காபுரியை அத்தினாபுரத்துக் (ஹஸ்தினாபுர) குருகுல நாகரடைந்து, இயக்கரோடிணைந்து, உகந்தையைத் தலைநகராக்கி அரசாண்டிருந்தனர் என்றும், பின் அயோத்தி இரகுவமிசத்தைச் சேர்ந்த காளிசேனன் (காலசேனன்) படையெடுத்துவந்து இந்நாகரியக்கரை வென்று தென்கிழக்கிலங்கையில் காளிதேசம் எனும் தலைநகரை அமைத்து ஆண்டிருந்தான் என்றும், இவனுக்கஞ்சிய நாகர்களே முள்ளுத்தீவு, மணற்றிடர், மன்னார் வரை பரவி வாழ்ந்தனர் என்றும், அதனால் விஜயன் இலங்கைக்கு வருகைதந்த காலத்திற்கு முன்னரே நாகர்கள் வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, தென்கிழக்கிலங்கை வரை பரவி, அரசோச்சியிருந்தனர் என்றும், எனவே வடமேற்கிலங்கை நாகர்கள் (மகாவம்சம், மணிமேகலை குறிப்பிட்டோர்) தென்னிலங்கை நாகர்களினின்றும் வேறுபட்டவர்கள் என்றும், விசயனும் தோழரும் வந்த படகு மணற்றிடர்க் கரையைச் சேர்ந்த பொழுது அவர்கள் முதலில் மணற்றிடர் நாகரைக் கண்டு அவர்களது முதல் அரசனை வினவியபோது அந்நாகர் தென்கிழக்கிலங்கையில் ஆட்சிபுரிகின்ற காளிசேனன் என, அவர்கள் அவ்வரசனிருப்பிடந் தேடி முள்ளுத்தீவு நாகர்குலத்துச் சிற்றரசனை வினவியபொழுது, நாக அரசனும் தனது முதலரசர் இரகுவமிச்தைச் சேர்ந்த காளிசேனன் என்று கூறத், தென்னிலங்கையிலுள்ள காளிதேசம் சென்று அவனைச் சந்தித்தனர் என விசயனுக்கு முற்பட்ட இலங்கை வரலாற்றினை அக்குவேறாகவும் ஆணிவேறாகவும் பிரித்துக்காட்டி, இலங்கையின் பூர்வீக வரலாற்றை எமக்கு இந்நூல் எடுத்துரைக்கின்றது. பின் விசயன் இரகுவமிசத்தவனான காளிசேனனை நட்புக்கொண்டாடி, இயக்கர்குலக் குவேனியை மணந்திருந்து

மண்ணினால் மாளிகையியற்றி வாழுங்காலம், காளிசேனனின் பிரதானி விட்டு மணவிருந்துக்காகக் காளிசேனன், விசயன், குவேனி யாவரையும் விருந்துக்கழைக்க விசயன் குவேனியினுடைய மாயச்சூழச்சியினால் காளிசேனன் முதலானோரை உறங்கச்செய்து வெட்டிக் கொன்று அரசாட்சியைக் கைப்பற்றி தென்னிலங்கையில் ஒரு மலைநாட்டை இராசதானியாக்கி விசயதுவீபம் எனப் பெயரிட்டு சிங்கக்கொடியையும் உயர்த்தி, பட்டத்தேவியாக வடமதுரையை அரசுபுரிந்த வீரசோகனுடைய மகள் விசாகியை மணம்முடித்து 38 வருடங்கள் ஆண்டிருந்தான். பின் விசயன் தன் அரசினைப் பாரமேற்க வாரிசில்லாமையால் சிங்கபுரத்தையாளும் தந்தைக்கு தம்பி சமித்துவை அனுப்பும்படி கேட்டிருந்தான். இவனது தோழர் மண்ணாற்றுப்பதி (மன்னார்) சென்று வங்கதேசப் படகிலேறிச் சிங்கபுரம் போனபொழுது, விசயன் தந்தை சிங்கபாகு இறந்த பின் சமித்து சிங்கபுரத்தை ஆள்வதையறிந்து, விசயனின் செய்திச்சுருளைச் சமித்துவிடம் கையளித்தனர். சமித்து தான் சிங்கபுரத்தையாள்வதனால், கலிங்கத்து அரசர் சிறிகேசவ சந்திரருடைய மகன் சிறிகுலசேனனுக்குப் பட்டம் கட்டும்படி அனுப்பிவைத்தான். இப்பின்னணியிலே கலிங்கர் இலங்கையாட்சிபாரத்தையேற்றுப் பின் சமித்துவின் மகன் பந்துவாசனுக்கு விசயதுவீபத்தின் அரசாட்சியுரிமையைக் கையளித்து விட்டு, தென்கிழக்கிலங்கையில் ஆதிக்கம் செலுத்தியிருந்த நாகரையும், இயக்கரையும் அகற்றி, பின் அனுராதபுரத்தை யாண்டிருந்த சிங்கள அரசுடன் உடன்படிக்கை செய்து இலங்கையைப் பன்னிரண்டு பாகமாய்ப் பிரித்து எட்டுப் பங்கை விசயதுவீபத்துக்கும், மண்ணாறு மணற்றிடரண்டையும் குருகுலநாகருக்கும், தெட்சணாபதியை இயக்கருக்குமீந்து மட்டக்களப்பைத் தமது சுயதேசமென்று ஆட்சிபுரிந்து வரலாயினர்.

மேலே குறிப்பிட்ட வரலாற்றுச் சுருக்கத்தினை மேலோட்டமாகக் கண்ணோட்டமிடின் இயக்கர், குருகுல நாகர், இரகுவமிசத்து காளிசேனன், கலிங்கர் என்போர் எவ்வாறு கிழக்கிலங்கையில் தத்தம் அரசுகளை உருவாக்கியிருந்தார்கள் என்பது புலனாகும்.

இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் தெரிவிக்கின்ற வரலாற்றுக் கூறுகளில் விரவிக்கிடக்கும் நாகர் வரலாறு பற்றிய குறிப்புகள், இலங்கையில் இதுவரைகாலமும் வரலாற்றாய்வாளர்கள் நாகர்பற்றிக் கொண்டிருந்த ஐயப்பாடுகளைக் களைந்துகொள்ள உதவுகின்றன. நாம் இலங்கையில் நாகர் கலாசாரத்தையாராய்ந்தபொழுது (மு. கு. பக். 31) தொலமி

(கி. பி. 150) தன் புவியியற் படத்திற் தென்னிலங்கையிற் குறிப்பிட்ட நனிகிரி, நாகதும என்ற பிரிவுகளை மகாவம்சம் குறிப்பிடுகின்ற மணிநாகபவத, நாகபவத என்ற பிரிவுகளுடன் அடையாளம் கண்டிருந்தோம். ஜே. ஆர். சின்னத்தம்பி இப் பிரிவுகளை அடையாளம் காணும்பொழுது நனிகிரியைத் தென் கிழக்கு இலங்கையெனவும், நாகதுமவை நாகமகா விகாரை கட்டப்பெற்ற திஸ்ஸமகாராமாப் பகுதியெனவும் அடையாளம் கண்டனர். மேலும் ஜே. ஆர். சின்னத்தம்பி புத்தர் தரிசித்த நாகதீவு முல்லைத்தீவிற்கும் கொக்கிளாய்க்குமிடைப் பட்ட பகுதியென்று கூறியதற்குக் காரணம் முல்லைத்தீவில் அவர் கண்ட நாகர் கலாச்சார எச்சங்களேயாம். இவருடைய கருத்துக்களை அரண்செய்யும் வகையில், மட்டக்களப்பு மான்மியம் முள்ளுத்தீவில் நாகசிற்றரசு ஒன்று இருந்ததென்றும், விசயனும், தோழரும் அந்நாக அரசினைக் கண்டு வினவியே முதலரசன் அயோத்தி இரகுவமிசத்தைச் சேர்ந்த காளிசேனன் என்றும் தெரிந்துகொண்டனர் என்பதனை நாம் உணரமுடிகின்றது. தொலமியும் முல்லைத்தீவிலிருந்த நாகர் செல்வாக்கை நாகதிவோ (Nagadiboi) என்ற பெயராற் குறிப்பிட்டுள்ளார். மேலும் தொலமி தனது புவியியற் படத்தில் நாகதீப என்று யாழ்குடாவையும், நன்கெரிஸ் (Nangeris) என்று நயினாதீவையும் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் நாகதீபமாகிய யாழ்குடா மட்டுமன்றி, மன்னார்ப் பகுதியும் நாகராட்சிக்குட்பட்ட பகுதியேயென்றும் மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிட்டு, ஆதிநாகர் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் எவ்வாறு பரவி வாழ்ந்தனர் என்பதனை விபரிக்கும். இவ்வாறு தொலமி குறிப்பிட்ட நாகரின் புவியியற் பிரிவுகள்பற்றியும், மகாவம்சத்தின் நாகர்பற்றிய மறைமுக வரலாறுகளையும், பிற்கால ஆய்வாளர்களின் சில ஊகங்களையும் தெளிவுபடுத்துகின்ற ஒரேயொரு இலங்கை வரலாற்று நூல் மட்டக்களப்பு மான்மியம் எனில் தவறாகாது.

மற்று, கூத்திகன் காலம் (கி. மு. 400) முதல் எதிர் மன்னசிங்கன் காலம்வரை (கி. பி. 16) கலிங்கச் சிற்றரசொன்று, தென்கிழக்கிலங்கைக்கலிரென இனம்காட்டி மட்டக்களப்புப் பிரதேசத்தை ஆண்டுவந்ததற்காகிய ஒரு அரச பாரம்பரியத்தைத் தொடர்ச்சியாக ம. மான்மியம் காட்டியிருக்கின்றது. தென்கிழக்கிலங்கைக் கலிங்க அரச வம்சத்தினர் வங்க அரசுகளுடன் வைத்திருந்த திருமணத் தொடர்புகளினால் தம்மைக் காலிங்கரென இலங்கையில் அழைத்திருந்தனர். மேலும் விசயனின் தாய்வழியினர் கலிங்க வம்சத் தொடர்புடையவர்களாக இருந்தமையாலும், கலிங்கருக்கென

தென்கிழக்கிலங்கை அரசுப்பிரிவினைக் கையளித்திருந்தமை யாலும், கலிங்க அரசுகள் கி. பி. 12ம் நூற்றாண்டு வரை சிங்களருடன் (சிங்கள அரசுகளுடன்) பகைமை பாராட்டி யிருக்கவில்லையென்றும், தினசிங்கன் எனும் சிங்கர் குலத் தவன் மட்டக்களப்பையாண்டிருக்கையில், அவன் கலிங்கர், வங்கர் முற்காலத்திலேயியற்றிய தேவாலயங்களையிடித்துச் செல்வங்களைச் சோழநாட்டிற்கனுப்பி முகமன் பெற்றுவந் தமையினாலே, கலிங்கர் வருத்தமுற்று கலிங்கதேசத்திற்கறி விக்கவே, மாகோன் கலிங்கத்திலிருந்து வந்து, சிங்கராட்சியி லிருந்து மட்டக்களப்பை விடுவித்துக் கலிங்கராட்சியை உறு திப்படுத்திய காலத்தில் கலிங்கரும் சிங்கரும் பகைமைமிக்கவ ராகக் காணப்பட்டார்கள் என்றும் தெரிகின்றது.

இனித் தென்கிழக்கிலங்கைக் கலிங்கரின் இன, மொழி, மத வரலாறுகள் யாவை? ஏன் இவர்கள் தென்கிழக்கிலங்கை யிற் சைவத்தையும், தமிழையும் வளர்த்திருந்தார்கள் என் பதற்காகிய ஆதாரங்கள் ம. மான்மியத்தில் குறிப்பாகச் சுட்டிக்காட்டப்படவில்லை. எனவே கிழக்கிந்தியாவில் கலிங் கத்தின் தொடக்கநிலை எவ்வகையில் அமைந்திருந்தது, அங்கு எவ்வாறு திராவிடக் கலாசாரம் ஊடுருவலாயிற்று என்ப தனைச் சுருக்கமாக ஈண்டு குறிப்பிடுதல் அவசியமாகின்றது. விஷ்ணு புராணம் இந்துவெளிப்பகுதியில் வாழ்ந்த பலியின் புதல்வர்களின் ஒருவனான கலிங்கனாலே கிழக்கிந்தியாவில் கலிங்க அரசு உருவாக்கப்பட்டது என்று கூறுகின்றது. இன் னும் பல மரபுகள் கலிங்கரைச் சுதேசக் குடிகள் என்பதனை வலியுறுத்துகின்றன. இவர்கள் பல்வேறு காலகட்டங்களில் தமது சுய உரிமைப் போராட்டத்தில் வீர மரணப் போராட் டங்களை நிகழ்த்தியிருக்கிறார்கள். இக்கலிங்கரின் வீரத் திறனை அசோகனின் கல்வெட்டு (XIII) விபரிப்பதிலிருந்து நாம் உணரலாம். அசோகனுக்குப் பின் கலிங்கத்தின் வர லாறு, காரவேலவின் (கி. மு. 155) காலத்தில் உச்சநிலையை யடைந்திருந்தது. இவன்காலத்தில் திரமிரதேச சங்காதம் (தமிழ்மூவேந்தர்) படையெடுத்தபொழுது காரவேல மூவேந்த ர் படையினை அழித்துப் பாண்டியரிடமிருந்து முத்துக் களைப் பெற்றதாக இவனது கல்வெட்டுக் குறிப்பிடும். இவ் வாறு படையெடுப்புக்களின் மூலமும், கடல் வாணிபங்களின் மூலமும் கலிங்கம், வங்கம் முதலான அரசுகளின் கரையோர நகரங்களிற் திராவிட கலாசாரம் ஊடுருவியிருக்கலாம் என்ப தற்குச் சங்க இலக்கியங்களும், தொல்லியற் றடயங்களும், மொழி ஆய்வுகளும் சான்றுகளாகக் காணப்படுகின்றன. இக்

கருத்தினை அரண்செயும் வகையில் மட்டக்களப்பு மான்மிய மும் கலிங்கருக்கும், மூவேந்தருக்குமிடையேயிருந்த தொடர்பு கள் விதிமுறைகளைச் சுட்டி நிற்கும்.

''சீர்பெற்றிலங்கு வுயர்வாலீழநகர்
மேவுதென்னவன், சென்னி; கொங்கன்
தீர ரென மூவரரசாண்டு வருநாளிலே.....
பார்பெற்ற பரிதிகுல கலிங்கமரபினோர்
பதின்மூன்று கும்பமும்
....
எதுகால பரியந்தம் செய்யென்று
சேரனு மிட்டெழுதிவைத்த தருணம்''

என நன்மைக்கும் தீமைக்கும் கும்பவரிசைப் (பக். 88) பகுதி யில் மூவேந்தர் கலிங்கருக்கும், பிறருக்கும் வகுத்த சீர்வரிசை கள் விபரிக்கப்பட்டுள்ளது.

இன்னோர் சமயம் சேனனுக்குப்பின் கலிங்க அரசு பாரத்தைத் தாங்க வாரிசில்லாதிருந்ததனைக் கண்ட இயக் கரும், நாகரும் மேலெழும்பி தமதாட்சியைப் பலப்படுத்திய பொழுது, மீண்டும் கலிங்கராட்சியை உறுதிப்படுத்த வந்த கலிங்கனான இரஞ்சலன் வருகை பின்வருமாறு விபரிக்கப் பட்டுள்ளது.

'பாண்டியன், சோழன், சேரன் பரதநாடதனில்
தோன்றியே கலியுகத் துரத்தனஞ்செய்து
வேண்டிய சிறையொடு வேந்தராயாண்டு
தூண்டினார் மூவர் தேவாலயங்கள்
சிறைகளை வகுத்துத் திருத்தொண்டராக்கி
திறைபெறுக கலிங்கராசனைச் சேர்த்து
துறைவளர் பரத நாடுகளாண்டு
வந்தபின் கலிங்கன்''

(பெரிய கல்வெட்டு வரி 62–69)

இவ்வாறு, இரஞ்சலன் தந்தையிடம் விடைபெற்றுப் படையுடன் மட்டக்களப்பை வந்தடைந்தான் என்கையில், கலிங்கர் மூவேந்தருக்குத் திறை செலுத்தினர் என்பது புலனா கின்றது. மேலும் இரஞ்சலன் ஆட்சியுரிமையைப் படையாட்சி குலத்துச் சிறிகுலனிடம் கையளித்தபொழுது, சிறிகுலன் திரு கோணமலைக்கு வந்திருந்த குருவெனும் நாதனைக் (சிவா சாரியார்) கண்டு, தனது ஆட்சிமுறைபற்றிக் குறிப்பிடுகை

யில் தான் பல அரசுகளிடமிருந்தும் திறைபெற்றுக் கலிங்க ராசனுக்களிக்க, அவனும் ''பார்முழுதாண்ட பாண்டியன் சோழனைக் கண்டு மகிழ்ந்து கடல்சூழிலங்கையில் பண்டுமர பைப் பகுக்க எங்களைப் படைக்கு முதல்வனாய் அனுப்பி னான்'' என்று கூறுவதிலிருந்தும் தமிழ் மூவேந்தர்களுக்கும், ஆதிக் கலிங்க அரசுகளுக்குமிடையிருந்த அரசியல் உறவுகளை நாம் மதிப்பிட்டுக்கொள்ளலாம்.

கி. பி. 11ம், 12ம் நூற்றாண்டுகளில் சோழரின் படை யெடுப்புக்களினால் சோழர், கலிங்கர் உறவுகள் மிக மோச மான நிலையையடைந்திருந்தன. முதலாம் இராசேந்திரனது (கி. பி. 1012 – 1044) கங்கைப் படையெடுப்பின்போது தென் கலிங்கத்தின் மதுரைமண்டலம், நாமணைக்கோணம், பஞ்சப் பள்ளி, மாசுணிதேசம் முதலான நாகசிற்றரசுகளை சித்திரக் கோட்டத்தில் (சக்கரக்கோட்டம்) வெற்றிகொண்டு, பின் ஓட்டரநாட்டையும் (ஒரிசா), கோசலநாட்டையும் (ஆதிநகர்) கைப்பற்றினான். பின் சோழரின் தென்கலிங்க எல்லையான வேங்கிநாட்டில் தன் மருமகன் இராஜராஜ நரேந்திரனை அரசனாக்கினான். முதலாம் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1070 – 1120) வடகலிங்க மன்னனான அனந்தவர்மன் சோடகங்கன் (சோழவமிசத் தொடர்புடையவன்) திறை செலுத்தத் தவறியமையினால் வடகலிங்கத்தின்மீது கருணா கரத் தொண்டமான் படையெடுத்து வெற்றிவாகை சூடி னான். இவ்வாறு சோழப் பேரரசுகளுக்கும், கலிங்க அரசு களுக்குமிடையேயிருந்த உறவுகள், பகைமையாக வளரத் தொடங்கிய பின்னணியிலேயேதான் கலிங்கத்து மன்னன் மனுவரதன் மகன் மாகோன் †(கி. பி. 1215 – 1255) இலங் கைக்கு வந்தான். இக்காலத்தில் மட்டக்களப்பையாண்டிருந்த தினசிங்கன், சோழரின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காகக் கிழக்கிலங்கையில் கலிங்கர், வங்கர் முதலானோர் இயற்றிய சிவாலயங்களையிடிப்பித்துச் செல்வங்களைச் சோழநாட்டுக்கு அனுப்பிவந்தான்.† இதனைப் பொறுக்கமுடியாத படை

† தென்னிந்திய வரலாற்றுக் குறிப்புக்கள் குலோத்துங்கன் II (கி. பி. 1163 - 1216) சேர, பாண்டியர் செல்வங்களைப் பெற்று மதுரைக் கோவிலைப் பொன்மயமாக்கியதோடு, தஞ்சாவூர், திருவாரூர், திருபுவனக் கோவில்களுக்கும் வழங் கினான் என்பதனாலும், ஈழத்தையும் வென்றான் என்பத னாலும், இந்நிகழ்ச்சி குலோத்துங்கன் IIIன் காலத்திலே நடைபெற்றிருக்கலாம் எனத் தெரிகின்றது.

யாட்சிகுல மந்திரிமார் சிங்கர்குல மன்னனான தினசிங்கனுக் குக் கூறியது பின்வருமாறு:

> ''அரசனே கேளும்:– கலிங்ககுலம் மகாவமிசம். அவர் களில் வங்கர் குலம் கலந்ததால் கலிங்கர் காலிங்கர் எனப்பட்டனர். அவர்களுடைய குலந்தான் இந்த மட்டக்களப்பை உண்டாக்கியது. அவர்கள் இயக்கர், நாகரைத் துரத்திச் சுயதேசம் என்று அரசுபுரிந்தனர். சிவாலயங்களை எந்தக் குலத்து அரசர்களியற்றினாலும் கலிங்ககுலத்ததிபருக்கே முதன்மை கொடுத்து வாழ்ந்த வர். இப்போ நீர் சோழகுலத்தில் கலந்து சோழரைத் துணைக்கொண்டு தமிழ்மதங்களை மாற்றி ஆலய நிதி யங்களைச் சோழநாட்டிற்கு அனுப்பிவிட்டீர். அதனால் கலிங்கரால் சில துன்பம் வரவேண்டியது அறிந்து கொள்க.'' (ம. மா. பக். 51–52).

இதுவரை நாம் மேலே ஆராய்ந்த வரலாறுகள் மூவர சர்களுக்கும், கலிங்கருக்கும் மிகுந்த நெருக்கமான தொடர்பு களையும், பின் காலப்போக்கில் அவை பாதிக்கப்பட்ட சூழ் நிலைகளையும் எடுத்துக்காட்டியுள்ளன. மேலும் கிழக்கிந்தி யாவில் கலிங்கர், வங்கர் இனத்தால் சுதேசக் குடிகள், மொழியினாலும் ஆதியில் திராவிட மொழியை நிகர்த்த பேச்சுடையவர்களாகவே இருந்திருக்கிறார்கள். (ஜி. தனபாக் கியம் – வங்க இளவரசர் விஜயன் வரலாறும், இலங்கையிற் சிங்கள இன, மொழி, எழுத்துத் தோற்ற வளர்ச்சி நிலை களும் 1989 பக். 6–16). அதனோடு கிறித்துவிற்கு முற்பட்ட காலம் முதலாக மூவேந்தர் படையெடுப்புகள், மற்றும் வாணிப முயற்சிகள் என்பன அங்கு திராவிட நாகரிகத்தை ஊடுருவவைத்தன. இன்னும் கூர்ந்து நோக்கின் சோழநாடும், கலிங்கநாடும் புவியியலால் அக்கம்பக்கமாக இணைக்கப்பட்ட நாடுகள். அதனால் இவ்விரு நாடுகளுக்கிடையேயும் கலாசார ஊடுருவல்கள் இயல்பானவை. இன்றும் சோடநக்பூர், ஒரி ஸாப் பகுதிகளில் பரவி வாழ்கின்ற 'கோண்டர்', 'கூயி' முதலான திராவிடவினக்கிளையினர் சான்றுகளாகக் காணப் படுகின்றனர். கலிங்கரின் சிவவழிபாடு மிகத் தொன்மைமிக் கது. (இயல் 5ல் கிழக்கிந்திய சைவமதப் பின்னணிகள் விப ரிக்கப்பட்டுள்ளன). அதனாலேதான் மாகோன் இலங்கைக்கு வந்து சிவாலயங்களை இடிப்பித்த சிங்கரை வாளுக்கிரையாக் கிச் சைவத்தையும், தமிழையும், சமூக மரபுகளையும் உறு திப்படுத்தினான் என மட்டக்களப்பு மான்மியம் விபரிக்கும். மகாவம்சம் மாகோனைப் பௌத்தமதத்தினை அழித்த

கொடுங்கோல் மன்னனாக வருணிக்குமேயொழிய அவன் ஏன் பௌத்தமத விரோதியாக இருந்தான் என்பதனைக் குறிப்பிடவில்லை. ஆனால் மட்டக்களப்பு மான்மியம் மாகோன் வந்த காரணம், அவன் இங்கு சாதித்தவை யாவற்றையும் விபரிப்பதனால், மகாவம்சம் கூறுவதுபோல் அவன் கண்மூடித்தனமாக எதனையும் செய்யவில்லையென்பது நிரூபணமாகின்றது.

மேலும் மட்டக்களப்பு மான்மியம் முழு நாட்டினதும் வரலாறுகளைக் கருத்திற்கொள்ளாது, தென்கிழக்கிலங்கைக் கலிங்கரின் ஆட்சி வரலாற்றைக் கூறுகின்ற சிறு நூலாக இருந்தபொழுதும், பிற ஆட்சிப் பிரிவுகளான மணற்றிடர், முள்ளுத்தீவு, தோப்பாவை, விசயதுவீபம் முதலான அரசுகளையும் இடையிடையே குறிப்பிடுவதனால், மகாவம்சம் இருட்டடித்த விடயங்கள் பல துலக்கம் பெறுகின்றன. இந்நூல் கிழக்கிலங்கைவாழ் தமிழ்மக்களுக்குப் பூர்வீக வரலாற்றைத் தொகுத்தளித்திருப்பதோடு, கிழக்கிலங்கைச் சைவத்திற்கென ஒரு வரலாற்றினையும் குறிப்பாகத் தந்துள்ளது. அதனோடு 'முக்குவதேசம்' என அழைக்கப்படுவதற்குக் காரணமாக இருந்த சமூக மரபுகளுக்கும் தனித்துவமான ஒரு வரலாற்றினைத் தந்துள்ளது.

இனிக் குணம்நாடிக் குற்றம் நாடல் என்பதற்கிணங்க இந்நூலிலுள்ள சில குறைபாடுகளையும் ஈண்டுக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. கீழைத்தேய வரலாறுகளில் காலக்கணிப்புகள் சிக்கலான விடயங்களாக இருந்துவந்துள்ளன. இந்தியாவின் வரலாற்று நிகழ்ச்சிகளின் காலக்கணிப்புகள் அலெக்சாண்டரின் படையெடுப்பு முதலாகவே தொடர்புபடுத்தி ஓரளவுக்கு ஊகிக்கக்கூடியதாக இருக்கின்றன. இன்னும் புத்த சகாப்தம் கி. மு. 544 அல்லது கி. மு. 483 அல்லது வேறோர் ஆண்டா என்பதில் ஆய்வாளர்களிடையே இன்னும் கருத்தொற்றுமைகள் இல்லை. (Prof. Heinz Bechert, "G. C. Mendis and the dates of the Historical Buddha", Daily News, August 21-8-93, 24-8-1993). எனவே புத்த சகாப்தத்தைக் கையாண்டு எழுதப்பட்ட மகாவமிசத்தின் காலக்கணிப்புகளும் சிக்கலானவையேயென்பதும் புலனாகும். இவ்விதமே மட்டக்களப்பு மான்மியம் கையாண்டுள்ள கலியாண்டுகளும், கிறித்துசகாப்த வருடக்கணிப்புகளுடன் பொருந்துவனவாகவில்லை. அதனோடு சில சந்தர்ப்பங்களில் ஒரு பரம்பரையினர் எத்தனை தலைமுறைகளுக்கு ஆண்டிருந்தனர் என்று தொகுத்துக் கூறுவதனால் இன்னும் சிக்கலாகிவிடுகின்றது. (இக்காலக்கணிப்புகள் பற்றி நாம் அங்குமிங்குமாகத் தடயங்கள் தேடித் தொடர்புகள் காட்டியுள்ள கால ஆய்வினைப் பார்க்கவும்).

மற்று, இந்நூல் கலிங்க வமிசத்தைச் சேர்ந்த அரசர்களுக்கும், அவருக்குதவியாகவிருந்த படையாட்சிகுலம், வங்கர், பணிக்கர்குலம், உலகப்போடிகுலம் ஆகியோருக்கும் முக்கியத்துவம் கொடுத்து, இவர்களைக் குகன் குலத்தோர் எனப் பெருமைப்படுத்த முயன்றதனால், கிழக்கிலங்கைத் திராவிடக் கலாசாரத்தின் முக்கிய குடிகளான வேளாளர் பதினெண்சிறைக் குடிமக்கள் வரலாறுகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஒரு நாட்டின் அரசபாரம்பரியங்கள், அரசுகளின் ஆட்சி முடிவடையும் போது முற்றுப்பெறுகின்றன. இப்படியொரு அரசன் ஆண்டிருந்தான் என்பதனை வரலாற்று நூல்களோ அல்லது பட்டயங்களோ குறிப்பிடுமேயானால், நாம் அவன்பற்றி அறியவாய்ப்பேற்படுகின்றது. ஆனால் சமூக வரலாறுகள் அப்படியானவையல்ல. அரச பாரம்பரியங்களைப்போல் சமூக பாரம்பரியங்கள் ஒன்றோ அல்லது இரண்டோ பாரம்பரியங்களுடன் நின்றுவிடுவதில்லை. அவற்றில் பிற கலாசார ஊடுருவல்கள் ஏற்பட்டாலும், அவற்றுக்கு அடிபணியாமல் நெளிந்தும், வளைந்தும் சமூக பாரம்பரியங்கள் பேணப்பட்டுவரப்படுகின்றன. இவ்வாறு வளர்ந்துவந்துள்ள கிழக்கிலங்கைத் திராவிட கலாசாரம் பல கட்டங்களினூடாக வளர்ச்சிபெற்று வந்துள்ளது. இவற்றையெல்லாம் மட்டக்களப்பு மான்மியம் கோடிட்டுக் காட்டவில்லை. யாழ்குடாவிலிருந்து மக்கள் காலந்தோறும் வந்து குடியமர்ந்து ஒன்றாகியிருக்கிறார்கள். வெடியரசன் வரலாற்றுடன் தொடர்பான வரலாறுகள் யாழ்குடாவிலிருந்து முற்குகர்கள் புலம்பெயர்ந்து வந்து மட்டக்களப்பில் குடியமர்ந்து விஷ்ணு, கண்ணகி அம்மன் வழிபாடுகளைப் பேணியிருந்தார்கள் எனக் குறிப்பிடுகின்றன. இவர்கள்பற்றியோ அன்றேல் சீர்பாதர்குலக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்ற சோழநாட்டுக் குடியேற்றங்கள்பற்றியோ, அன்றேல் மகாவம்சம் குறிப்பிடுகின்ற மாகன் தன்னுடன் கொண்டு வந்த இருபத்துநான்காயிரம் கேரள (சேரர்) வீரர்களைக் குடியமர்த்தியதுபற்றியோ (சூளவம்சம் 80, 61-77), அன்றேல் செனரதன் (கி. பி. 1605 - 1635) குடியேற்றிய முகம்மதியக் குடியேற்றங்கள் பற்றியோ எதுவும் குறிப்பிடுவதாக இல்லை. எனவே இந்நூல் கிழக்கிலங்கை மக்கள் யாவரினதும் சமூக வரலாற்றைத் தழுவியதாக இல்லையெனலாம். இதற்குக் காரணம் என்னவெனில் காலந்தோறும் இந்நூலை எழுதி

வந்தவர்கள் அரச வமிசத்தில் கலிங்கரையும், குடிமக்களில் குகன்வழித் தொடர்பான குடிகளையும் பெருமைப்படுத்துவ தில் முனைந்திருந்தமையுமேயாம்.

இனி, மகாவம்சம் கூறுவதிலிருந்து முரண்பட்டு நிற்கும் சில வரலாற்றுத் தகவல்களையும் அவதானிக்கலாம். சிங்கர் வரலாற்றைச் சிறப்பித்துக் கூறுவதே குறிக்கோளாகக் கொண்ட மகாவம்சமும், தீபவம்சமும் விசயனின் பாட்ட னான சிங்கபாகு, வங்க இளவரசிக்கும் ஒரு சிங்கத்திற்கும் பிறந்தவன் என விபரித்திருக்கையில், மட்டக்களப்பு மான் மியம் விசயனின் பாட்டனான சிங்கன் ஒரு வேட்டுவகுலத்த வன் என்றும், அவன் பஞ்சவடியையாண்டிருந்தான் என்றும் கூறும்.

இதனைப்

''பரு தேர் குலத் துச்சிங்கவாகு விதவத்
தாயீன்ற மகவெனும் விசயன் தந்தை''
(ம. மா. செய். 7; பக். 10)

எனக் கூறுவதன்மூலம் வற்புறுத்தும். எனவே இவற்றில் எது உண்மை? மட்டக்களப்பு மான்மியம் சூசகமாக ஒரு புதிய வரலாற்றைச் சிங்கர் பரம்பரையினருக்குக் கற்பிக்கின்றதா? அன்றா?

மற்று, மகாவம்சம் எல்லாளனைச் சோழநாட்டினன் எனக் கூற, மட்டக்களப்பு மான்மியம் இவனை வங்ககுலத்த வன் என்கிறது. மா. இராசமாணிக்கனார் மனுநீதிச் சோழனே எல்லாளன் என்பார். சிலப்பதிகாரம் போற்றும் மனுநீதி சோழன் ஆண்ட ஊர் திருவாரூர். எனவே எல்லாளன் மனு நீதிச் சோழனின் தார்மீக தருமத்தைக் கடைப்பிடித்ததனால், அவன் என்று கருதுவது தவறு. வேறுசிலர் திருவள்ளுவருடன் தொடர்புகொண்டிருந்த மாணாக்கனாகிய எல்லாளன் ஒரு கடல் வாணிபன் என்றும், அவனே இலங்கையையாட்சிபுரிந்த எல்லாளன் என்றும் கருதுவர். மட்டக்களப்பு மான்மியம் எல்லாளனைப் பந்துவாசனுடன் வந்த வங்கதேசத்தவன் எனக் குறிப்பிடும். எனவே திருவள்ளுவருடன் தொடர்பு கொண்டிருந்த கடல் வாணிபன் இவன்தானா? என்பது புல னாகவில்லை. ஆனால் எவ்வாறு பந்துவாசனுடன் எல்லாளன் தொடர்புகொண்டு இலங்கைக்கு வந்தான் என்பனவற்றைக் குறிப்பிடாது அவனுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட தமிழ் எல் லைப் பிரிவுகளான வடமேற்கு, வடகிழக்கு இலங்கைப் பிரிவு

களை மட்டுமே குறிப்பிடும். மற்று, பந்துவாசன் விசயதுவீ பத்தையும், எல்லாளன் வடமேற்கு முதல் வடகிழக்கு பகுதி களையும், கூத்திகன் தென்கிழக்கிலங்கையையும் சமகாலத் தில் ஆண்டதாகக் குறிப்பிடும். இதனால் மகாவம்சத்தின் காலக்கணிப்புகளும், வரலாற்றுத் தகவல்களும் முற்றாகக் குழப்பமுற்றுக் காணப்படுகின்றன.

இவ்வாறான சில குறைபாடுகளைப் பொதுவாக நாம் பழைய நூல்களில் காண்பது இயல்பே. உண்மையென்ன வென்று கழிந்துபோன காலம்தான் அறிந்துகொள்ளும். எது எவ்வாறாயினும் கிழக்கிலங்கையில் இயக்கர், நாகர், இரகு வம்சத்தவர், கலிங்கர் ஆதியோர் எவ்வாறு அரசோச்சியிருந் தார்கள் என்பதனை விபரிக்கின்ற ஒரேயொரு வரலாற்று நூல் மட்டக்களப்பு மான்மியமாகும். அதனால் இலங்கை யோடு ஆதியில் தொடர்பாயிருந்த குடிகள் வரலாறுகளைப் புரிந்துணர முடியாதிருக்கும் ஆய்வாளருக்கும், பிறருக்கும் மட்டக்களப்பு மான்மியம் ஒரு வரலாற்றுப் புதையல் எனில் மிகையாகாது.

இயல் 2

மட்டக்களப்பு மான்மியம்

விபரிக்கும்

அரசகுடி வழிகள்

இயக்கர் குடிவழி அரசுகள்

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
(1) குபேரன்	அழகாபுரி	தமிழ் - வடமொழி	சைவம் சிறப்பாக முருக வழிபாடு.	குறிப்பிடப்பட வில்லை.

இவன் இன மொழித் தன்மைகள் பற்றி அறிந்து கொள்ளத் தெளிவான குறிப்புகள் இல்லை. மொனியர் உவில்லியம்ஸின் வடமொழி – ஆங்கில அகராதி குபேரன், இராவணனின் இளைய சகோதரன் என்றும், தாய்மார் வேறுபட்டவராகையால், குபேரன் தாய் இலவில என்றும், இராவணன் தாய் கேசினி என்றும், இருவரும் புலஸ்தியரின் பேரப் பிள்ளைகள் என்றும் குறிப்பிடும். இனி, பொதிய மலைக்குத் தெற்கே குமரிநாட்டில் எஞ்சியிருந்த நிலப்பகுதிகள் குபேரன், இராவணன் பாட்டனான புலஸ்தியர் (புலத்தி நகரம் எனப் பொல்லநறுவை ஆரம்பத்தில் பெயர்பெற்றிருந்ததென்றும், அதன் திரிபே பொல்லநறுவையாயிற்று என்றும் தெரிகின்றது) வசம் இருந்ததென்பர். இந்த நிலவுரிமையாற் போலும், இராவணன் சகோதரன் முறையினனாகக் கூறப்படும் குபேரன் அழகாபுரியைத் தலைநகராக வைத்தாண்டிருந்தான் எனத் தெரிகின்றது. பின் இராவணன் குபேரனை ஆட்சியால் நீக்கி இலங்காபுரியைத் தலைநகராக வைத்தாண்டான் என வால்மீகி இராமாயணம், மட்டக்களப்பு மான்மியம்

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
		முதலான நூல்கள் குறிப்பிடுகின்றன. மேலும் புராணங்கள் இலங்கையின் கிழக்குக்கரையிலமைந்திருந்த அழகாபுரியை மனுவும், தெற்கேயமைந்திருந்த இலங்காபுரியை மயனும், வடமேற்கிலமைந்திருந்த மாதுவட்டாபுரியை (மாந்தை) துவட்டா ஆகிய தச்சர்கள் இயற்றினர் எனக் கூறுகின்றன. குபேரனை 'இயக்கர் கோமான்' எனும் வழக்குண்டு. மட்டக்களப்பு மான்மியம் பன்னவர்க்கரசனாக (நாகருக்கு) விரும்பி இலங்கையையடைந்தான் எனும். இராமாயணம் இலங்கையில் இயக்கர், நாகர் குடிகளை விபரிப்பதனால், அயோத்தி நாகர் வருகைக்கு முன்னரே வேற்று நாகர் குடிகள் இலங்கையில் ஆதியில் வாழ்ந்திருந்தனர் என்பது புலனாகின்றது.		
(2) இராவணன்	இலங்காபுரி	தமிழ் – வடமொழி	சைவம் – சிவலிங்கத் திருமேனி வழிபாடு	கலியுக ஆரம்ப சகாப்தங்கள்
		இராவணன் விஸ்வசிரஸ் என்ற முனிவருக்கும், கைகசி என்ற அசுரப் பெண்ணுக்கும் பிறந்தவன் எனத் தட்சிணகைலாச மகாத்மியம் (5ம் அத்.) குறிப்பிட்டு, இவன் தாய், தந்தைவழி வமிசத் தொடர்புகளைக் குறிப்பிடும். மற்றுப் புலஸ்தியமுனிவர் இவன் பாட்டர்களில் ஒருவர் என்று வேறுசில மரபுகள் கூட்டுகின்றன. அதனாலே புலத்தியர் கார்த்தவீரியனால் சிறையிடப்பட்ட இராவணனை மீட்டவர் என்றும், பராசர முனிவர் அரக்கரைக் கொல்லச் செய்த வேள்வியைத் தடை செய்தவர் என்றும் தெரிகின்றது. (இரா. மாணிக்கவாசகம், நம்நாட்டுச் சித்தர்கள், 1982, பக். 217). இவ்வாறு இவன் தந்தைவழிப் பிராமணத் தொடர்புகளினால், இவன் அரசாளத் தகுதியற்றவன் என ஒதுக்கியதனாலே, இலங்கையரசைக் கைப்பற்றினான் எனச் சிலர் கருதுவர். அதனாலேதான் தமிழ் மூவேந்தர் மண்ணிலே தலைகாட்டக்கூடாதென அகத்தியர் ஆணையிட்டார் என்றும் தெரிகின்றது. எனினும் தமிழ் மரபுகள் இவனைத் 'தென்னன்' என்று பாண்டிநாட்டுடனும், சோழநாட்டில் திருச்சிராப்பள்ளியில் கோட்டையொன்றை வைத்திருந்தான் (ம. மா. பக் 31; சோழர் பூர்வீக பட்டயம்) என்று சோழநாட்டுடனும் தொடர்புபடுத்துகின்றன. அதனோடு காளிதாசரும் இரகுவமிசத்தில் பாண்டியரது சமகாலத்தவனாகத் தொடர்புகாட்டியுள்ளார். எனவே இவன் தமிழ்மொழித் தொடர்புகள் ஐயந்திரிபற்றவை. மேலும் இவனால் ஆளப்பட்ட அரக்கர், நாகர் குடிகளும் தமிழ்மொழித் தொடர்புகளினால், காலப்போக்கில் தமிழ்க் குடிகளுடன் இரண்டறக் கலந்து தமிழ்ச் சமூகமாக வளர்ந்த நிலைகளைப் பிற ஆய்வுகள் குறிப்பாக உணர்த்தியுள்ளன.		

அரசர் பெயர்	தலைநகரம்	மொழி	மதம்	காலம்
(3) இராவணன் ஆட்சியின் பின் ஒரு யுகம் வரை இலங்கை செழிப்பிழந்து நீரால் பாழ்பட்டிருந்தது. இராஜவலிய எனும் நூலும் இராவணன் ஆட்சிக்குப் பின் ஏற்பட்ட கடல்கோளைக் குறிப்பிடும்.	அரசிருக்கை இல்லை			
(4) அத்தினாபுரியிலிருந்து குருகுல நாகர் வருகை.	அரசிருக்கை இல்லை	தமிழ் – வடமொழி	வைதீகமதம் (முக்கியமாக முருக வழிபாடும், மற்றும் பாம்பு, பசாசுகள் வழிபாடும்)	(கலி 800)
(5) இயக்கரும், குருகுல நாகரும் இணைந்த ஆட்சி (அரசர் பெயர் குறிப்பிடப் படவில்லை).	உகந்தை நகர்	தமிழ் – வடமொழி	வைதீக மதம் (மறைமுறை)	(கலி 806. இக் காலம் முதல் 1400 வருடங்களுக்குத் தொடர்ந்து ஆண்டனர்)
(இலங்கையில் இவர்களுடன் ஆதியில் தொடர்பு பெற்றிருந்த ஊர்ப்பெயர் வரலாறுகள் தமிழ், வடமொழிச் செல்வாக்கை எடுத்துக்காட்டுகின்றன).				
(6) இயக்கர் - அத்தினாபுரி நாகர் இணைந்த ஆட்சி	விண்டு - அணை (விந்தனை)	தமிழ்மொழி — (மேலோங்கலாயிற்று)	சைவம் (நாகர் முருகன் வழிபாடு, இயக்கர் பத்திரகாளி வழிபாடு)	கலி 2860 – 3020
(7) இயக்கர் (அரசர் பெயர் குறிப்பிடப் படவில்லை)	தட்சணாபதி (இக்காலத்தில் இரஞ்சலன் படை இயக்கரை மேற்கு, வடக்கு மகாவலி கங்கையால் துரத்தி, எல்லைக்கல் நாட்டி, இயக்கர் இருந்தவிடமெல்லாம் கலிங்கநாட்டுக் குடிகளைக் குடியமர்த்தத் திட்டம் வகுத்திருந்தான். எனினும் அனுராதபுரியை அரசு செய்த சேரர் (சோர) நாகன் இயக்கர் துணைவனாக இருந்தபடியினால், இலங்கையைப் 12 பாகமாகப் பிரித்து தெட்சணாபதியை இயக்கருக்கு அளித்தார்கள். இக்காலத்தின் பின்	தமிழ்	சைவம் | பத்திரகாளி	கலி 3020

அரசர் பெயர்	தலைநகரம்	மொழி	மதம்	காலம்
	இயக்கர் ஆட்சிப்பிரிவுகள்பற்றிக் குறிப்புகள் இல்லை. நாகரே இயக்கருக்குப் பின் தெட்சணாபதியில் ஆட்சி செய்திருந்தார்கள் என ம. மா. குறிப்பிடும்.			

நாகர் குடிவழி அரசுகள்

(1) அத்தினாபுரி குருகுல நாகர் (இயக்கருடன் இணைந்த ஆட்சி)	உகந்தை	தமிழ் – வடமொழி	சைவம்	கலி 806 முதல் 1400 வருடங்கள் தொடர்ந்து ஆண்டனர்.
(2) குருகுல நாகர்	மணற்றிடர், முள்ளுத்தீவு	தமிழ் மேலோங்கல்	சைவம் (நாக வழிபாடும், சிவ வழிபாடும்)	கலி 2706 (இக்காலத்திலே தான் விசயன் படகு மணற்றிடரை அடைந்தது)
(3) மண்டுநாகன்	மண்டூர், நாகர்முனை	தமிழ்	சைவம் (முருக வழிபாடு)	கலி 2709
(4) நாகர் - இயக்கர் இணைந்த ஆட்சி (சேனனுக்கு வமிச மருகிப்போனதால் இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்).	விண்டு – அணை (விந்தனை)	தமிழ்	சைவம் (நாக வழிபாடு, முருகன் பத்திரகாளி)	கலி 2860 – 3020
(5) குருகுல நாகர்	மண்ணாறு, மணற்றிடர் (சேரர் நாகன் – இரஞ்சலன் செய்துகொண்ட உடன்படிக்கையினால் நாகருக்குக் கிடைத்த பிரிவுகள்)	தமிழ்	சைவம் (மு. கு.)	கலி 3020
(6) கொட்டாயன் (நாகசிற்றரசன் மந்திரி)	மணிபுரம் (யாழ்குடா) (ஆனால், இவன் திரிகோணமலைக்குச் சுவாமி தரிசனத்திற்கு வருகைதந்த புவனேயகயபாகுவை எதிர்த்தமையால், இக்காலத்தில் இயக்கராட்சியிலிருந்து நாகராட்சிக்	தமிழ்	சைவம்	கலி 3110 (மட்டக்களப்பில் பிரசின்னசித்து ஆட்சி)

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
	குத் திருகோணமலை கை மாறியிருந்தமை எனலாம்)			
(7) கொட்டியன் (நாகசிற்றரசன்)	கொட்டியனூர் (கொட்டியாபுரம்)	தமிழ்	சைவம்	கலி 3340 (ஆடக சவுந்தரி காலம்)
(8) நாகர்குலத் திரிதாட்டிக ஆரியன்	மணிபுரம்	தமிழ்	சைவம்	கலி 4220
(9) நாகர் அரசன் (பெயர் குறிப் பிடப்படவில்லை. மாகோன் இலங் கைக்கு வருகை தந்த காலத்தில் ஆண்டவன்)	மணிபுரம்	தமிழ்	சைவம்	கலி 4250

பரிதிகுல இரகுவமிசக் குடிவழி அரசுகள்

(1) காலசேனன் (காளிசேனன்) (விசயன் குவேனியின் துணைகொண்டு இவ னைக் கொன்றபின் இரகுவமிச ஆட்சி பரம்பரை முற்றாகி விட்டது)	காளிதேசம் (தென் னிலங்கையிலிருந்த இவ்விராசதானிக்கரு காகவே, பழைய மட் டக்களப்பு இராச தானியும் அமைய லாயிற்று)	வடமொழி ஆக இருக்காலம்	இரகுவமிசம்	கலி 2709
இரகுவமிசத்தவனாகையால், இராம வழிபாட்டை யுடையவனாகலாம். இயக்கர், நாகர் பத்திரகாளி ஆலயத்தையும், முருகையன் ஆலயம் இரண்டையும் (நாகர்முனை, மண்டூர்) உடைத்தவன்.				

கலிங்கர் குடிவழி அரசுகள்

(1) சிறிகுலசேனன்	விசயதுவீபம்	தமிழ்	சைவம்	கலி 2790 – 2806
(முதலியலில் கலிங்கர் தமிழ்மொழித் தொடர்புகள் ஆராயப்பட்டுள்ளன. ஊர்ப்பெயர் ஆய்வுகளும் கலிங்கரின் தமிழ்மொழித் தொடர்புகளை வலி யுறுத்துகின்றன)				
(2) கூத்திகன்	காளிதேசம் (இது இலங்கையை மூன்று பங்காகப் பிரித்து, வங்கர் குலத்து எல்லாள னுக்கு ஒரு பங்கும்,	தமிழ்	சைவம்	கலி 2806 – 2068

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
	சமித்துவின் மூன்றாம் புத்திரன் பந்துவாசனுக்கு ஒரு பங்கும் கொடுத்துவிட்டுச் சிறிகுலசேனன் தன் மகன் கூத்திகனுக்குக் கொடுத்த பிரிவு ஆகும். இதன் எல்லை வீசயதுவீபமிருந்து தென்மேற்குத் தொடங்கித் தென்கிழக்கு வரையுமுள்ள தென்கிழக்கிலங்கைப் பகுதி ஆகும்.			
(3) சேனன்	மட்டக்களப்பு (இன்றைய வீரமுனை, மலக்கம் பிட்டிக்கு அருகாய் அமைந்த முதல் மட்டக்களப்பு இராசதானம் இதுவே. மேலும் இவன் நான்கு தலைமுறை	தமிழ்	சைவம்	கலி 2868
	யினர் 230 வருடங்களாய் மட்டக்களப்பையாண்டனர்)	(கலிங்கத்தின் சுதேசக் குடிகள் ஆரியர் வருகையினால் இந்துவெளிப் பிரதேசத்திலிருந்து புலம் பெயர்ந்தோராவர். மேலும், பிற்கால வரலாறுகள் தமிழகத்திற்கும்-கலிங்கத்திற்குமிடையேயிருந்த அரசியல், சமய, சமூகத் தொடர்புகளைச் சுட்டுகின்றன. தென்கிழக்கிலங்கையையாண்ட கலிங்கரும் தமிழையும் சைவத்தையும் பேணுவதில் அக்கறையாகயிருந்தார்கள் என்பதனை மட்டக்களப்பு மான்மியம் வலியுறுத்தி நிற்கும்)		
(4) இரஞ்சலன்	மட்டக்களப்பு (சேனன் வமிசமருகநாகர், இயக்கர் தலையெடுத்ததனால், கலிங்கத்திலிருந்துவந்து நாகர், இயக்கரை அடக்கி கலிங்கர் ஆட்சியை உறுதிப்படுத்தினான். இக்காலத்தில் சேரர் நாகனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையினால் மட்டக்களப்பு அரசு திறை செலுத்துவதை நிறுத்திச் சுதந்திர அரசாக இயங்கலாயிற்று.)	தமிழ்	சைவம்	கலி – 3020
(5) சிறிகுலன் (படையாட்சிகுலம்) இவன் கலிங்கராட்சிப் படைத்தலைவன்.	மட்டக்களப்பு	தமிழ்	சைவம்	கலி 3020 – 3070

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
(6) வாகூரன்	மட்டக்களப்பு	தமிழ்	சைவம்	கலி 3070 – 3110
(7) பிரசின்னசித்து	மட்டக்களப்பு (இம் மன்னன் கலிங்கத் துப் புவனேயகய பாகு திருக்கோணேசு வரத்தின் ஆட்சி யுரிமையைப் பெற் றுக்கொடுத்ததனா லும், நாகர்முனைச் சுப்பிரமணியர் ஆல யத்தைச் செப்ப னிடச் சோழநாட் டுச் சிற்பிகளைத் தருவித்துக் கொடுத் ததாலும், மட்டக் களப்பின் தென்பகுதி யில் 'உன்னரசுகிரி' எனும் ஆட்சிப் பிரிவை உருவாக்கிப் புவனேயகயபாகு விற்குக் கையளித் தான். இக்காலம் முதல் உன்னரசுகிரி ஆட்சிப்பிரிவு, மட்	தமிழ்	சைவம் நாகர்முனை சுப்பிர மணியர் ஆலயத்தைச் செப்பனிட்டவன்.	கலி 3110
	டக்களப்பு அரசு களுக்கு அனுசரணை யாய் இருந்து கொண்டு, தனியர சாய் இயங்கிவந்தது. இது சமகாலத்தில் இயங்கிய அரசாகை யால் தனியாக விப ரிக்கப்படும்)			
(8) தாசகன் (நாசகன்)	மட்டக்களப்பு	தமிழ்	சைவம்	கலி 3150 (இக்காலத் தில் உன்னரசுகிரியை யாண்டவன் மனுநேய கயபாகு)
(9) தனசேனன்	மட்டக்களப்பு (இக் காலத்தில் ஆடக சவுந்தரி உன்னரசு கிரியில் ஆட்சி செலுத்தினாள்)	தமிழ்	சைவம்	கலி 3340

(புதிய அரசுப்பிரிவு உருவாகியபின் மட்டக்களப்பு அரசுகளின், மன்னர் பெயர்கள், ஆட்சியாண்டுகள் என்பனவற்றை ம. மான்மியம் தெளிவாக விபரிக்க வில்லை. எனவே உன்னரசுகிரி அரசர்களுக்குச் சம மான காலத்தில் மட்டக்களப்பை ஆண்டுவந்தோர் காலம் உன்னரசுகிரியரசர் ஆட்சியாண்டுகளைத் தொடர்புபடுத்திக் கால வரையறைகள் தரப்படு கின்றன)

(மனுநேயகயபாகு நாகர்முனையில் திருப்பணி களைச் செய்வதற்கு உதவியாக இருந்து இக்கோவி லின் இருபாகை முதன்மையாக மட்டக்களப்புக் கலிங்கரே வரவேண்டுமென வகுத்தவனும் ஆவன்)

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
(10) பிரசேது	மட்டக்களப்பு (ஆடகசவுந்தரி மகன் சிங்ககுமாரன் உன்னரசுகிரியில் ஆட்சி செலுத்தினான்)	தமிழ்	சைவம்	கலி 3420
		(சிங்ககுமாரன் உகந்தையிற் திருப்பணிகள் செய்து, பிரசேதுவே கடமைக்காரர் எனவும் வகுத்தான்)		
(11) தினகரசேனன்	மட்டக்களப்பு (இவனுக்குச் சந்தானமின்மையால், இவனுக்குப்பின் உன்னரசுகிரியும், மட்டக்களப்பும் ஒராட்சிக் குட்பட்டிருந்தது)	தமிழ்	சைவம்	கலி 3370 – 3420
(1) புவனேயகயபாகு (சோழரில் திருமணம் செய்து கொண்டவன்)	உன்னரசுகிரி இதன் எல்லைகளாவன: தெற்கு: மாணிக்கங்கை, வடக்கு: மக்கனல் வெட்டுவாய்க்கால், மேற்கு: கடவத்தை, கிழக்கு: சமுத்திரம்	தமிழ்	சைவம்	கலி 3130
		(நாகர்முனைக் கோவிலில் பிரசின்னசித்து திருப்பணிகள் புரிய உதவியவன்)		
(2) மனுநேயகயபாகு (மேகவர்ணன்)	உன்னரசுகிரி	தமிழ்	சைவம்	கலி 3150
		(நாகர்முனைச் சுப்பிரமணியர் ஆலயத்தில் சோழநாட்டுச் சிற்பிகளைத் தருவித்துத் திருப்பணிகள் செய்து பின் தான் தமிழ்மதம் ஓங்கச்செய்த பணிகளை வங்கதேசம், சிங்கபுரம், சோழநாடு, கலிங்கநாடு, இராமநாடு முதலான தன் தாய்தந்தையர் வமிசத்தாருக்கு அறிவித்து, குடமுழுக்கு விழாக் கொண்டாடி, ஆறுகாலப் பூசைகளுக்கும் திட்டங்கள் வகுத்தான்)		
(3) ஆடகசவுந்தரி	உன்னரசுகிரி (மனுநேயகயபாகுவின் வளர்ப்பு மகள்)	தமிழ் சூழலில் வளர்ந்தவள்	இராமகோத்திரம் இராமவழிபாடு	கலி 3180 – 3304
		(மகாசேனனை மணம்முடித்து சிவவழிபாடுடையவளானாள். மகாசேனன் திருக்கோணேசுவரத்தில் திருப்பணிகள் செய்தான்)		
(4) சிங்ககுமாரன் (மகாசேனன் ஆடகசவுந்தரி மகன்)	உன்னரசுகிரி (தட்சணாபதியும் இவனாட்சிக்குட்பட்டிருந்தது. கானிகட்டத்திலிருந்துவந்த கனகசுந்தரம் திரிகயிலைக்கதிபதியாக்கப் பட்டான். அவனுடன் வந்த குடிகள் மத்தங்கடவத்தையில் குடிபதிந்தனர்.	தமிழ்	சைவம்	கலி 3370
		(இக்காலத்திலே காலிங்கை ஆரியன் நாகருடன் சேர்ந்து படையெடுத்தான். உகந்தையிற் திருப்பணிகள் செய்தான்)		

அரசர் பெயர்	தலைநகரம்	மொழி	மதம்	காலம்
(5) சிறிசிங்கன்	உன்னரசுகிரி	தமிழ்	சைவம்	கலி 3420
(6) பானு (சிறிசிங்கன் மகன்) (பானு அனுராத புரியை ஆண்ட குமாரதீரன் மகளை மணஞ் செய்தான் என்பதனால் சிங்கர் தொடர்புகளை அவதானிக்கலாம்.	உன்னரசுகிரி (முதலில் பட்டம் கட்டப் படடது. பின்னர் தினகரசேனனுக்குச் சந்தானமில்லாமையால் மட்டக்களப்பு அரசும் இவனுக்குப் பட்டம் கட்டப்பட்டது). இதன் எல்லைகளாவன: தெற்கு: மத்தங்கடவத்தன வடக்கு: உறவுப் பெற்றானை மேற்கு: கவடாவை மன்னம்பிட்டி கிழக்கு: சமுத்திரம்	தமிழ்	சைவம்	கலி – காலம் குறிப்பிடப்பட வில்லை.
(7) அமரசேனன் (இவன் விசயதுவீ பத்தை அரசு புரிந்த குடக னுடைய மகளைத் திருமணம் செய் தான்)	மட்டக்களப்பு (உன்னரசுகிரி பற்றிய குறிப்புகள் இல்லை)	தமிழ்	சைவம்	கலி 3466 – 3500
		ஆனால் பௌத்த மதத்திற்கும் ஆதரவு காட்டியிருக்கலாம். (இக்காலத்திலே இராம நாட்டு ஏழு இராச குமாரிகள் மட்டக்களப்பில் வைதிக சைவத்தை மாற்றி, இராம வழிபாட்டைப் போதிக்கவந்தனர்) சிங்கருடன் திருமணத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்டான்.		
(8) குணசிங்கன்	மட்டக்களப்பு, உன்னரசுகிரி (இவன் காலத்தில் வந்த ஓரிசா நாட்டு உலக நாச்சிக்கு மண் முனைப் பிரிவை வழங்கினான். இவன் இப்பகுதியில் சிவ வழிபாட்டைப் பேணியிருந்தான். இவளுக்குப் பின் கலிங்கரே மண் முனையையும் ஆண்டனர்.)	தமிழ்	சைவம்	கலி 3500
(9) அதிசுதன்	மண்முனை	தமிழ்	சைவம்	கலி 3530

அரசர் பெயர்	தலைநகரம்	மொழி	மதம்	காலம்
(10) அதிசுதன் கனகசேனன் சந்ததியினர் (இலங்கையில் உள்ளவர்கள்)	மட்டக்களப்பு, மண்முனை	தமிழ்	சைவம்	2000 வருடங்கள் ஆண்டனர்.
(11) வங்கலாடன் (கலிங்கத்திலிருந்து படையெடுத்து வந்தவன்)	மட்டக்களப்பு (குதிரைமலை, அனுராதனபுரி விசயது வீபம், காளிதேசம் ஆகிய அரசுகளை எதிர்த்து வெற்றி கொண்டு மட்டக்களப்பை இராசதானமாக அமைத்தான்.)	தமிழ்	சைவம்	கலி 3735
(12) வங்கலாடன் பரம்பரை	மட்டக்களப்பு (இவர்களின் ஆட்சிப் பிற்பகுதியில் மட்டக்களப்பு 40 வருடங்கள் இரத்தினவல்லி அரசிற்குட்பட்டிருந்தது. இவ்வரசுகள் தொடர்பு சிங்கர் குடிவழியரசுகளுக்குள் ஆராயப்படும்).	தமிழ்	சைவம்	காலப்பகுதி குறிப்பிடப்படவில்லை.
(13) மாகோன் (மா – சிறப்பு – கோன் – அரசன். இவன் கலிங்கத்து அரசன் மனுவரதன் மகன்)	தோப்பாவை (இலங்கை முற்றிலும் இவனாட்சிக்குட்பட்டது. இவனாட்சியில் இராமேசுவரமும் வட இலங்கையுடன் இணைக்கப்பட்டிருந்தது.)	தமிழ் (இலங்கை முற்றிலும் தமிழ்மதம் (சைவம்) வளரச் செய்து, மட்டக்களப்பை மீண்டும் கலிங்கராட்சிக்குட்படுத்துவதற்காகவந்தவன். அவ்விதமே செய்து மட்டக்களப்பு முழுவதும் தமிழ்மதமே வளரச்செய்தான். இன்றுவரை தமிழும், சைவமும் மட்டக்களப்பில் நீடித்திருப்பதற்குக் காரணமாய் இருந்தவனும் இவனே). சிவாலயங்களை இடித்து நிதியங்களைச் சோழநாட்டிற்கு அனுப்பிவந்த சிங்கரை மட்டக்களப்பால் அகற்றியதோடு புத்தராலயங்களையும் இடிப்பித்தான். இதனை மகாவமிசமும் விபரிக்கும்.)	சைவம்	கலி 4250
(14) சுகதிரன் (மாகோனால் நியமிக்கப்பட்டவன்)	வட மட்டக்களப்பு மன்முனைப் பகுதி (புலியமாறன் மந்திரியாக இருக்கையில் இருந்த கோட்டையை செங்கலால் கட்டி இராசதானமாக்கப்பட்டது.	தமிழ்	சைவம்	(மாகனுக்குச் சமகாலம்)
(15) வரதகுணன்	தோப்பாவை	தமிழ்	சைவம்	கலி 4290 ஆகலாம்

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
(16) சமுகதிரன்	மட்டக்களப்பு	தமிழ்	சைவம்	40 வருடங்கள் ஆட்சி
(17) பரதசுந்தரன்	மட்டக்களப்பு	தமிழ்	சைவம்	60 வருடங்கள்
(18) இராசசந்திரன்	மட்டக்களப்பு	தமிழ்	சைவம்	16 வருடங்கள்
(19) யாகசேனன்	மட்டக்களப்பு	தமிழ்	சைவம்	50 வருடங்கள்
(20) குகசந்திரன்	மட்டக்களப்பு	தமிழ்	சைவம்	10 வருடங்கள்
(21) மட்டக்களப்பு நன்கு பாகமாகப் பிரிக்கப்பட்டது.				
(அ) படையாட்சிகுலம்	மண்முனை வட பகுதி	தமிழ்	சைவம்	70 வருடங்கள்
(ஆ) காலிங்ககுலம்	மண்முனைப் பகுதி	தமிழ்	சைவம்	70 வருடங்கள்
(இ) வங்கர்	மட்டக்களப்பு	தமிழ்	சைவம்	70 வருடங்கள்
(ஈ) சிங்கர்	உன்னரசுகிரி	சிங்களம்	பௌத்தம்	70 வருடங்கள்
(22) மாருதசேனன் (இவன் சிங்கர், வங்கர் துணையுடன் மேலெழும்பி விசயதுவீபத்தை நகராக்கி, வங்கர், சிங்கர், படையாட்சி குலத்தவரைத் திக்கதிபராய் வைத்து 38 வருடங்கள் ஆட்சிபுரிந்திருக்கையில், திக்கதிபர் துணைக்கொண்டு மத்திய நகரத்தரசனை எதிர்த்து தோப்பாவையை இராசதானமாக்கினான். அப்பொழுது மட்டக்களப்புத் திக்கதிபர் மட்டக்களப்பை இவனிடம் ஒப்படைத்தனர்)	தோப்பாவை மட்டக்களப்பு உன்னரசுகிரி மண்முனைப் பகுதிகள்	தமிழ்	சைவம்	கலி 4640 ஆட்சி முடிவு
(23) எதிர்மன்னசிங்கன் (கலிங்க குடிவழி அரசுகளின் இறுதி மன்னன்)	தோப்பாவை மட்டக்களப்பு உன்னரசுகிரி போரமுனை நாடு கோறளை நாடு	தமிழ்	சைவம்	கலி 4640 – 4680

(சிதைவுற்ற சிவாலயங்களைச் செப்பனிட்டு ஆறு காலமும் பூசை புரிவித்தான். தாதன் அற்புதமாய் பாண்டவர்க்கெழுப்பிய தீயில் தீக்குளித்து மீண்டதால் ''பாண்டுறுப்பு'' ஆலயத்தையும் உண்டாக்கினான்;

சிங்கர் குடிவழி அரசுகள்

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
1. விசயன்	விசயதுவீபம் (தென் னிலங்கையில் ஒரு மலைநாட்டில் அமைந்திருந்தது. கடல்மார்க்கமாக காளிதேசமிறங்கி அணுகினர். உள் நாட்டுப் பாதை யொன்று சொங்கு காசி அப்பன்பிட்டி யூடாக விசயதுவீ பத்திலிருந்து மட்டக்களப்புக்குச் செல்லக்கூடியதாக அமைந்திருந்தது. இன்றைய பிபிலையை யண்டிய மலைப் பாங்கரில் அமைந் திருக்கலாம் எனத் தெரிகின்றது.) (பார்க்கவும் இயல் 4. ஊரும் பேரும்)	பழைய சிங்களமொழி	சைவம்	கலி 2750 – 2790
		(இன்றைய வங்காள மொழியுடன் தொடர்பான பழைய மொழி வடமொழிச் செல்வாக்குடையது. காலப்போக்கில் தமிழ் மொழிச் செல்வாக்கையும் பெற்றது. ஈசர்பாதம் தொழுது, தன் படகைத் தென்னகர் முகமாய்த் திருப்பினான்.) (ம. மா., பக். 10, செய் 10, வரி 3 – 4)		
2. பந்துவாசன் (விசயன் தம்பி சமித்துவின் மூன் றாவது மகன், கலிங்க வமிசத்து சிறிகுலசேனன் ஆட்சி செலுத்தி யிருக்கையில் தன் வமிசத்துக்குரிய ஆட்சியுரிமை (பங்கு) கேட்டு வந்து, பெற்றுக் கொண்டவன்.)	விசயதுவீபம்	பழைய சிங்களமொழி	சைவம்	கலி 2806
3. சேரர் நாகன் (சோரநாகன்) (இவன் பின் விசயதுவீபத்து சிங்கர் வரலாறு கள் முறிந்து காணப்படுகின் றது).	அனுரதபுரம் (இவன் கலிங்கருக்கு தொல்லைகொடுத்த இயக்கருக்கு ஆதர வாய் இருந்தான். பின் கலிங்கத்திலி ருந்து வந்த இரஞ் சலனுடன் உடன் படிக்கை செய்து சிங்கரின் விசயதுவீ பத்திற்கு எட்டு ஆட் சிப்பிரிவுகளைப் பெற்றுக்கொண் டான்.	பழைய சிங்களமொழி	பௌத்தம் அறிமுகமாகி யிருக்கலாம்.	கலி 2030

அரசர் பெயர்	தலைநகரம்	மொழி	மதம்	காலம்
4. தெத்ததீசன் (இவன் ஆடகசவுந்தரி காலத்தவன் ம. மான்மியம் இவனைக் கலிங்கன் எனக் கூறும்)	அனுரதபுரி	பழைய சிங்களமொழி	பௌத்தம்	கலி 3340

மகாசேனன் இக்காலத்தில் வங்கநாட்டுச் சிவாலயமியற்றும் சிற்பிகளுடன் தட்சணாகயிலையில் இறங்கி அனுரதபுரியை அரசுபுரிந்த தெத்ததீசனுக்கு வைதீக சைவத்தைப் போதித்து தெட்சணாபதி ஆலயத்தை நேர்பண்ணி, புத்தாலயங்களையும், புத்த விகாரைகளையும் இடிப்பித்தான். ஆடகசவுந்தரி இதனைக் கேள்வியுற்று, வைதீகசைவன் நேர்பண்ணிய ஆலயத்தை இடித்துக் கடலில் தள்ளிவிடும்படி தன் மந்திரியை அனுப்ப, மகாசேனன் அச்செய்தியினைத் தெத்ததீசனிடம் தெரிவித்தான். தெத்ததீசன் அவள் இலங்கை முழுவதற்கும் சக்கராதிபதியாய் பூதப் படையுயையவள். ஆகையால் அவளுடன் சமாதானம் கொண்டு வாழவேண்டுமெனத் தெரிவித்தான். பின் மகாசேனனும், தெத்ததீசனும் அவளைக்கண்டு பேசியிருக்கையில் அவளும் வைதீக சைவத்தைக் கேட்டுத் தானும் சைவம் பேணினாள். ஆனால் தெத்ததீசன் பௌத்தமத விகாரைகளைத் திரும்பவும் நேர்பண்ணி, ஒவ்வொரு விகாரையிலும் கதிரேசனாலயமும் இயற்றுவித்தான்.

5. மேகவண்ணன் (இக்காலத்தில் மட்டக்களப்பை ஆண்டவன் குணசிங்கன்)	விசயதுவீபம்	சிங்களமொழி	பௌத்தம்	கலி 3500

(ஓரிசாநாட்டு உலகநாச்சி கௌதமபுத்தரின் பற்சின்னத்தைக் கூந்தலில் மறைத்துவைத்துக் கொண்டுவந்து, மேகவண்ணனிடம் கொடுத்தாள். அதனால் புத்தமதத்திற்கு அபாயமில்லையென்று மகிழ்ந்திருந்தான். (ம. மா., பக. 42)

6. மிகுந்தன்	அனுரதபுரி	சிங்களம்	பௌத்தம்	கலி 3895 ஆசலாம்
7. இலங்கை சிங்கன் (தரும சிங்கன் என்றும் இன்னோர் பெயரும் இருந்தது).	மட்டக்களப்பு (வங்கலாடன் பரம்பரை ஆட்சியிறுதியில் மட்டக்களப்பு ஆட்சி இரத்தினவல்லி நகரத்து அரசின் கீழிருந்தது. இரத்தினவல்லி நாட்டரசனின் வமிசங்கள் குறிப்பிடப்படவில்லை) அப்பொழுது இலங்கை சிங்கன் இரத்தினவல்லி நகரத்தரசனை எதிர்த்து மட்டக்களப்பைச் சிங்கராட்சிக்குட்படுத்தினான்.	சிங்களம்	பௌத்தம் சைவம்	கலி குறிப்பிடப்படவில்லை.

(இவன் பௌத்தனாயினும் மட்டக்களப்பை ஆள்கையில் புத்திரரில்லாமையால் கொக்குநெட்டியாலயத்தைக் கல்லினால் கட்டி, சோழதேசமிருந்து மூன்று ரதங்களும் எடுப்பித்துக் கொடுத்திருந்தசமயம் குமாரசிங்கனைப் பெற்றெடுத்தான்)

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
8. சேனன் (இவன் வரகுண பாண்டியன் IIன் மகனுக்கு படைகள் கொடுத்து உதவினான்)	தோப்பாவை	சிங்களம்	பௌத்தம்	கலி குறிப்பிடப் படவில்லை.
9. குமாரசிங்கன்	மட்டக்களப்பு	சிங்களம்	பௌத்தம் சைவம்	கலி 4080
10. கதிர்சுதன்	மட்டக்களப்பு மண்முனை உன்னரசுகிரி	சிங்களம்	பௌத்தம் சைவம்	கலி 4115
		(மதபேதமில்லாமல் பௌத்தாலயம், சிவாலயங்களைச் செப்பனிட்டான்)		
11. மதிசுதன்	மட்டக்களப்பு மண்முனை உன்னரசுகிரி	சிங்களம்	பௌத்தம் சைவம்	கலி குறிப்பிடப் படவில்லை.
		(மனுமுறைப்படி அரசுசெய்து தேவாலயங்களையும் நேர்பண்ணியிருக்கையில், புத்திரரில்லாமையால் இரகுவமிசத்தைச் சேர்ந்த காலசேனன் உடைத்த மண்டூர் முருகையன் ஆலயத்தைத் தொண்டைநாட்டுச் சிற்பிகளை அழைத்து, நேர்பண்ணி அபிடேகமும் செய்வித்தான். பின் அந்தணர் இருபாகையும், அவர்களுக்கு முதன்மையும், முதன்மைகளுக்குச் சிறைகளும் வகுத்து, பூசாரம்பம் நடைபெறச் செய்து சித்திரவேல் ஆலயமென்றும் பெயரிட்டான். அப்பொழுது அவனுக்குப் புத்திரபாக்கியமுண்டாயிற்று. பின் அவன் மகன் நாதன் பெயரில் அணையும் கட்டி, ஆயிரம் அவண நெற்கழனிகளும் சித்திரவேல் ஆலயத்திற்கு ஈர்ந்தான்)		
12. நாதன்	மட்டக்களப்பு (சோழநாட்டு குலசேகரன் படையெடுத்து வந்தபொழுது, நாதன் மட்டக்களப்புத் தமிழரைச் சோழன் நிழலில் மாற்றி ஆண்டு, தன் முதல் மகன் தினசிங்கனுக்கு சோழஇளவரசியைத் திருமணம் செய்து, மட்டக்களப்பைப் பட்டம் கட்டினான். இதுமுதலாக மட்டக்களப்பை யாண்ட சிங்கர், சோழர்குலத் தொடர்புகளை வைத்திருந்தனர்)	சிங்களம்	பௌத்தம் சைவம்	கலி 4780

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
13. லோகேஸ்வரன்	திசைமாறாமை	சிங்களம்	பௌத்தம்	கலி 4780
14. தினசிங்கன்	மட்டக்களப்பு	சிங்களம் (மனைவி தமிழ்)	பௌத்தம்	கலி 4820 ஆகலாம்
		மேலும் இவன் சிங்கர் குலத்தவர் கடைப்பிடித்து வந்த சமயப்பொறையற்றவனாய் மட்டக்களப்பில் கலிங்கர், வங்கர் இயற்றிய சிவ தேவாலயங்களை இடித்துச் சோழநாட்டுக்கு அனுப்பிவந்தான். இத் தருணம், இயக்கர், நாகரைத் துரத்தி மட்டக் களப்பைச் சுயதேசமென்று கலிங்கரே ஆட்சிபுரிந் தனர். அதனால் சிவாலயங்களை எக்குல அரசர்க ளியற்றினாலும் கலிங்கரே முதன்மை கொடுத்து வந்தனர். அதனால் சோழரைத் துணைகொண்டு, சிவாலய நிதிகளைச் சோழநாட்டிற்கு அனுப்புவ தனால் துன்பம் வரவிருக்கிறது எனப் படையாட்சி குல மந்திரிமார் தெரிவித்தார்கள்.		
15. அணிகங்கன் (தினசிங்கன் மைத்துனன்)	தோப்பாவை	சிங்களம்	பௌத்தம்	கலி 4820 ஆகலாம்
16. சிங்கர்குல ஆட்சி (பெயர் குறிப் பிடப்படவில்லை. மட்டக்களப்பில் சுகதிரன் பரம் பரை முடிவில் மட்டக்களப்பு நான்கு பாகமாகப் பிரிக்கப்பட்ட போது, சிங்கர் உன்னரசுகிரியை ஆண்டனர்)	உன்னசுகிரி	சிங்களம்	பௌத்தம்	கலி
17. சிங்கர் வங்கர் துணையுடன் விச யதுவீபத்தை மத் திய நகராக்கி ''கண்டி'' எனப் பெயரிட்டு ஆண் டனர்.	கண்டி (இதன் ஆட்சிப்பிரிவு கள் அனுராதபுரம், மட்டக்களப்புக் குடாநாடு, வதுளா, காளி, அம்மான் தோடை, இரத்தின வல்லிநாடு, முள் ளுத்தீவு, தட்சணா பதி, கொட்டியனூர் தோப்பாவை, நூரெ லியா, மண்ணாறு (இவற்றுள் மணற்றி டர் அடங்கவில்லை)	சிங்களம்	பௌத்தம்	இவ்வாட்சிமுறை 38 வருடங்களுக்கு இருந்தது.

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
18. இராசசிங்கன் (கி. பி. 1581–1593) (1ம் இராசசிங்கன் கண்டியை ஆண்ட பிற்கால அரசுகன் குடிவழி. சிங்கர் குடிவழியல்ல என் பதனைப் பிறவர லாற்றாய்வுகள் தெரிவிக்கின்றன).	கண்டி – எதிர்மன்ன சிங்கன் இறந்தபின் மட்டக்களப்பும் கண்டியரசுக்குட்பட் டது. (போர்த்துக் கேயர் இக்காலத்தில் மட்டக்களப்பை ஆதீனப்படுத்திக் கோட்டைகட்ட முயன்றனர்).	சிங்களம் தமிழ்	சைவம்	கலி 4680
		(சோழர் குலத்தவன் என்று கருதுவர் சிலர். பௌத் தத்தைப் புறக்கணித்துச் சைவம் தழுவினான் என வரலாற்றாய்வுகள் தெரிவிக்கின்றன. ''வெருகல் சித்திரவேலாயுதர் காதல்'' எனும் நூலின் உலாக் கண்ணிகள் இராசசிங்கன் சைவசமயப்பற்றுக் கூறு கின்றன. இதனை அவன் காலத்தில் எழுதப்பட்ட செவுல் சந்தேஸ நூலும் விபரிக்கும்)			
19. விமலதருமன் (சேனரத்தன் ஆட் சியை மாறிக் கூறு வதாகத் தெரிகின் றது).	கண்டி இவன் மலாய வீரர் துணைக்கொண்டு போர்த்துக்கேயரை மட்டக்களப்பால் அகற்றித் தன்னாட் சிக்குட்படுத்தினான்	சிங்களம்	பௌத்தம்	கலி 4722
		(இவன் காலத்தில் கந்தப்பர் எனும் யாழ்குடாவாசி மட்டக்களப்பில் தமிழ் மதத்திற்குப் பாதுகாப்பென நினைத்து கண்ணகையம்மன் விக்கிரகங்களுடன் வந்து, அவ்வழிபாட்டை மண்முனைக் கடுக்கான பகுதிகளில் கோவில்களை அமைத்துப் பூசைகளுக் கும் தாம் கொண்டுவந்த ஏழு நாடார் குடும்பங்களை யும், கோவியக் குடும்பங்களையும் அமர்த்தினார். ம. மா. பக். 61)			
20. இராசசிங்கன் (இவன் கி. பி. 1635-1687 ஆண்ட இராசசிங்கன் II ஆகலாம்.	கண்டி ஒல்லாந்தர், போர்த்துக்கேயரை எதிர்த்து, மட்டக் களப்பை மீட்டு இராசசிங்கனிடம் கொடுத்திருந்த போதிலும், பின் போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் தம் முள் செய்து கொண்ட ஒப்பந் தத்தால் மட்டக்க ளப்புக் கோட்டை போர்த்துக்கேயர் வசமானது. அத னால் இராசசிங்சன் போர்த்துக்கேய ருடன் போர் தொடுத்து, அகற்றி மட்டக்களப்பைக் கண்டி நகரோடு சேர்த்தான்.	சிங்களம்	பௌத்தம் (கிறிஸ்தவத்தைப் பரப்ப முயற்சிகள்)	கலி 4738 – 4758

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
21. ஸ்ரீ விசயராச சிங்கன் (கி. பி. 1739–1747)	சண்டி மட்டக்களப் பிலும் தன் ஆதிக் கத்தை வைத்திருந் தான் (பஸ்கோல் எனும் ஒல்லாத்தப் பிரதிநிதியின் கொடு மையால் துன்ப மடைந்த முக்குலத்த வருக்கு உதவி புரியு முகமாக ஒல்லாந்த ரின் மத்திய அரசுக்கு அதனை அறிவித்து விசாரித்து, இவர்க ளைப் புராதன இரா சர்கள் எனத் தீர்ப்பு வழங்கினான்).	சிங்களம் தமிழ்	பௌத்தம்	சலி 4830
		(நாயக்கர் வமிசத் தொடர்புடையவன். சைவம் பாதிப்படையவில்லை. பஸ்கோல் முதலி கிறித்த வத்தை மட்டக்களப்பில் பரப்ப முயற்சிகள் செய்து கொண்டிருந்தான்)		
22. கீர்த்தி ஸ்ரீ இராச சிங்கம் (கி. பி. 1747–1782)	கண்டி (இவன் காலத்தில் ஒல்லாந் தர் மட்டக்களப்பை இருபாகம் செய்து தெற்குப்பாகத் திற்கு கந்தப்போடி யையும், வடக்குப் பாகத்திற்கு அறு	சிங்களம் தமிழ்	பௌத்தம்	கலி குறிப்பிடப் படவில்லை.
		கிறித்தவ மதம் மட்டக்களப்பில் வளர்ச்சிபெறலா யிற்று. சைவ மக்கள் மதம் மாறினர்.		
	மக்குட்டிப் போடி யையும் நிலைன மாய் வகுத்தனர்)	சிங்களம் தமிழ்	பௌத்தம்	கலி 4880
23. இராசாதிராச சிங்கன் (கி. பி. 1782–1798)	கண்டி (ஒல்லாந்தர் மட்டக்களப்பைக் கண்டியரசனிடம் ஒப்படைத்ததாக ம. மா. குறிப்பிடும் இது உண்மையில் ஆங்கிலேயர் கைக்கு மாறிய காலமாகத் தெரிகின்றது.)	சைவமக்களில் பெரும்பாலானோர் கிறித்தவர்க ளாக மாறிய காலகட்டம் இதுவெனலாம். இருப் பினும் சைவம் முற்றாகத் தளர்ச்சியடையவில்லை.		

வங்கர் குடிவழி அரசுகள்

1. எல்லாளன் (திருவள்ளுவ ருடன் தொடர்பு கொண்டிருந்தவ னும், சோழ வங்க நாட்டுத் தொடர் புடைய தமிழ் வாணிபனுமாகிய எல்லாளனே இவன் ஆகலாம்.)	அரசுகள் பழைய அனுராத புரம் விசயனின் விசயதுவீப அரசின் வடமேற்குத் தொடங்கி வட கிழக்கு வரையுள்ள பகுதி இவனுக்கு அளிக்கப்பட்டது. ம. மா. பக். 19).	தமிழ்	சைவம் பௌத்தம்	கலி 2806
		(எல்+ஆளன்) எனும் பெயரினைக் கொண்டு, மகா வமிச வரலாறுகளையும் தொடர்புபடுத்திப் பார்க் கையில் இவன் தமிழன் எனத் தெரிகின்றது. சைவம், பௌத்தம் இரண்டு மதங்களுக்கும் ஆதரவாய் இருந் தான்.)		

அரசர் பெயர்	தலைநகரம்	மொழி	மதம்	காலம்
2. மகாசேனன் (மேல் வங்கர் குலம்)	(அ) அனுராதபுரம் (முதலில்) (ஆ) ஆடகசவுந்தரியின் உன்னரசுகிரி (பின்னர்)	தமிழும், வடமொழித் தொடர்புகொண்ட வங்காளி மொழி ஆகலாம்.	சைவன் என ம. மா. விபரிக்கையில் மகாவமிசம் மகாயான பௌத்தன் எனக் கூறும்.	

வங்கர் – கலிங்கர் கலப்புக்களும், சிங்கர் – வங்கர் கலப்புக்களும் மட்டக்களப்பு அரச குடிகளிடமிருந்ததற்கான குறிப்புகள் ம. மா. நிறைய உள. கலிங்கர் அரசகுடிகள் நலிவுற்ற காலகட்டத்தில் மட்டக்களப்புப் பிரதேசம் நான்கு ஆட்சிப்பிரிவுகளாகப் பிரித்து ஆளப்பட்டது. அப்பொழுது வங்கர் மட்டக்களப்புப் பிரிவை ஆட்சிபுரிந்தனர். பின் மாகன் வந்து கலிங்க அரசுகளை உறுதிப்படுத்தியபொழுது வங்கர், கலிங்க அரசுகளுக்கு மந்திரிகளாக வரவேணும் என்றும் திட்டம் வகுக்கப்பட்டது. போர்த்துக்கேயரும் கலிங்கருக்கும், வங்கருக்கும் நிலைமை உத்தியோகங்களை வழங்கினர். ஒல்லாந்தர் கலிங்கரோடு வங்கரை நிலைமைகளாய் வைத்ததோடு, ஒல்லாந்தர் சங்கத்திலும் நியமித்தனர். பஸ்கோல் முதலியால் துன்பமடைந்த முக்குலத்தவரை (கலிங்கர், வங்கர், சிங்கர்) விசாரித்து, அவர்களை ''புராதன இராச அதிகாரரென''த் தீர்ப்பிட்டு இராச பட்டயத்திலும் ஸ்ரீ விசயராசசிங்கன் வரைவித்தான். வங்கர், கலிங்கரைப் போல் தம் ஆட்சிகளை உறுதிப்படுத்தாவிடினும், அவர்களின் அரச பாரம்பரியங்களுக்குத் தொடர்ச்சியாக மதிப்புகள் வழங்கப்பட்டுவந்தன. ஆயினும் சிலசமயங்களில் வங்கர், கலிங்கருக்கெதிராகச் சிங்கருக்கு உதவிய சந்தர்ப்பங்களாலே கலிங்கரின் தென்கிழக்கிலங்கை அரசின் எல்லைகள் சிங்கரால் ஆக்கிரமிப்புப்செய்யக்கூடியதாய் இருந்துள்ளன என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

52

போர்த்துக்கேய, ஒல்லாந்தக் குடிவழி அரசுகள்

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
1. போர்த்துக்கேயர்	மண்ணாறு, மணற்றிடர்	போர்த்துக்கேயம்	கிறித்தவம்	கலி 4640 கி. பி. 1560
2. போர்த்துக்கேயர்	மட்டக்களப்பை ஆதீனப்படுத்தினர்	போர்த்துக்கேயம்	கிறித்தவம்	கலி 4680 கி. பி. 1626
3. போர்த்துக்கேயர்	புலிமாறன் கோட்டை (வட மட்டக்களப்பு)	போர்த்துக்கேயம்	கிறித்தவம்	கலி 4722 கி. பி. 1622
4. போர்த்துக்கேயர்	மணற்றிடர்ப் பண்ணை (விமலதருமன் மலாயர் துணையினால் போர்த்துக்கேயரை மட்டக்களப்பால் அகற்றியிருந்தான்)	(தம் மதத்தைப் பரப்ப முயன்றனர். முதன்முயற்சியாக காளி தேசத்தில் கிறித்தவ மதத்தைப் பரப்பி, தேவாலயங்களையும், புத்தாலயங்களையும் இடிப்பித்தனர்)		

53

அரசர் பெயர்	தலைநகர்	மொழி	மதம்	காலம்
5. போர்த்துக்கேயர்	மட்டக்களப்பு (முற்றும் போர்த்துக் கேயர் ஆதீனப்பட்டது).	போர்த்துக்கேயம்	கிறித்தவம்	கலி 4738
6. ஒல்லாந்தர்	ஒல்லாந்தர் இராச சிங்கன் II (கி. பி. 1635 – 1687) உடன் செய்துகொண்ட உடன்படிக்கைப் படி, போர்த்துக் கேயரை மட்டக் களப்பால் அகற்றிக் கண்டியுடன் சேர்த்து விட்டுத், தாம் மற் றக் கரைநாடுகளை ஆண்டனர்.	ஒல்லாந்தம்	கிறித்தவம்	கலி - குறிப் பிடப்பட வில்லை
7. போர்த்துக்கேயர்	மட்டக்களப்புக் கோட்டை (போர்த் துக்கேயரும், ஒல் லாந்தரும் செய்த உடன்படிக்கையால் மட்டக்களப்புக் கோட்டையும் கரை நாட்டுக் கோட்டை களும் போர்த்துக் கேயர் வசமானது)	போர்த்துக்கேயம்	கிறித்தவம்	
8. ஒல்லாந்தர்	யாழ்ப்பாணம் (ஒல்லாந்தர், இராச சிங்கனுக்குப் பயந்து போர்த்துக்கேயரை மட்டக்களப்பால் அகற்றி இராசசிங்க னிடம் கையளித்த னர்.	ஒல்லாந்தம்	கிறித்தவம்	கலி 4750
9. ஒல்லாந்தர்	யாழ்ப்பாணம் பண்ணை, மட்டக்களப்பு (மட்டக்களப்பில் பஞ்சம் ஏற்பட்ட பொழுது, கண்டியர சர்கள் மட்டக்களப் பைக் கைநெகிழ	ஒல்லாந்தம்	கிறித்தவம்	கலி 4810

அரசர் பெயர்	தலைநகரம்	மொழி	மதம்	காலம்
	விட்டனர். அத்தருணம் ஒல்லாந்தர் மக்களை ஆதரித்து ஆண்டனர்.			
10. ஒல்லாந்தர் பஸ்கோல் முதலி (ஒல்லாந்தன்)	யாழ்ப்பாணம் பண்ணை, மட்டக்களப்பு	ஒல்லாந்தம்	கிறித்தவம்	கலி 4830
	இவன் முப்பது கிறித்தவமதவாசிகளுடன் யாழ்ப்பாணம் பண்ணையிலிருந்து வந்து 'சொறிக்கல்' முனையில் கத்தோலிக்கக் கோவில் கட்டி, கிறிஸ்தவ குருமாரைத் திமிலத்தீவில் குடியிருத்தி சமயத்தைப் பரப்புமாறு பணித்தான். இதற்கு முக்குலத்தவர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.			
11. ஒல்லாந்தர்	யாழ்ப்பாணம் பண்ணை மட்டக்களப்பு (கண்டியரசன் பஸ்கோலின் சூழ்ச்சியை வெளிப்படுத்தியதனால், ஒல்லாந்தர் முக்குலத்தவரை ஆதரித்து ஆண்டனர்.)	ஒல்லாந்தம்	(கிறித்தவ மத மாற்றங்களின் தீவிரம் குறைவடைத்திருக்கலாம்)	கி.பி. 1747 – 82 இடைப்பட்ட காலம்
12. ஒல்லாந்தர்	மட்டக்களப்பு (இருபாகம் செய்து ஆண்டனர். இக்காலத்திலே ஒல்லாந்தர் முக்குலத்தவருக்காக முக்குக சட்டத்தை எழுதினர்)	ஒல்லாந்தம்	கிறித்தவம்	கி.பி. 1742–82
	(அறுமக்குட்டிப்போடி கலிங்க குலமானபடியால் மட்டக்களப்பு முழுவதும் முதன்மைபெற்று தேவாலயங்களைச் செழிப்புற நடத்தினார்)			
13. ஒல்லாந்தர்	மட்டக்களப்பு (மேலே குறிப்பிட்ட இருபாகத்திற்கும் நிலைமைப் போடிகளாய் இருந்த சுந்தப்போடி, அறுமக்குட்டிப் போடிகளின் சூழ்ச்சியினால், ஒல்லாந்தரின் இரு கணக்கப்பிள்ளைமார் கொலை செய்யப்படவே, ஒல்லாந்தர் மட்டக்களப்பை இராசாதிராசனிடம் கையளித்து நீங்கினர்.	ஒல்லாந்தம்	கிறித்தவம்	கலி 4815

இயல் 3

மட்டக்களப்பு மான்மியம்

குறிப்பிடுகின்ற

அரசியலமைப்பு,
சமூக வரலாறு,
முற்குகர் சட்டம்

இலங்கையிற் தூயதமிழ்ச் சொற்களில் ஊர்பேர்களை உருவாக்கியவர்களும், தமிழையும் சைவத்தையும் தொன்றுதொட்டுப் பேணிவருபவர்களுமான தமிழ்ச்சமுதாய வளர்ச்சிகளுக்குப் பங்களிப்புச் செய்த பற்பல குடியேற்றங்களை மட்டக்களப்பு மான்மியம் ஓரளவிற்கு விபரிக்கின்றது. இக்குடியேற்றங்கள் இழக்கிந்தியா, தென்னிந்தியா ஆகிய பிரதேசங்களின் வெவ்வெறு இனக் குழுவினரைச் சேர்ந்த குடியேற்றங்களாயிருப்பினும், காலப்போக்கில் காலமும், தமிழ் மொழியும், கலாசாரமும் இவற்றை ஓரியல்புடையனவாக நெறிப்படுத்திவிட்டன. இன்று இம்மக்கள் தூயதமிழ்க் கலாசாரத்தைப் பேணி மட்டக்களப்புத் தமிழகத்தைப் பெருமைப் படுத்திவருகின்றார்கள். இழக்கிலங்கையில் தனியரசொன்றை உருவாக்கிய கலிங்கர் இங்கு சிறப்பாக, தமிழ்க்கலாசாரத்தைப் பேணுவதே தம் கடனாகக் கொண்டிருந்தார்கள். அதனால் இன்றுவரை (சிங்கர்) கலாசார ஊடுருவல்களின் மத்தியிலும் தமிழும், தமிழ்க்கலாசாரமும் தளராது உறுதியாக வளர்ந்து வருகின்றன.

பழைய மட்டக்களப்பு அரசின் தென்னெல்லையில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்கள், கதிர்காமப் பிரதேசத்திற் பாண்டியச் சிற்றரசுகளின் ஆட்சியைக் குறிப்பாகச் சுட்டியிருக்கின்றன. திஸ்ஸமகாராமையிலும் பாக்கர் திராவிடக்குடிகள் கையாண்டிருந்த கறுப்புச் – சிவப்பு மட்பாண்டங்களை அவதானித்துள்ளார். ஆனால் மட்டக்களப்பு மான்மியம் இழக்கிலங்கையில் கலிங்கர் உருவாக்கிய அரசின் தென்னெல்லை மாணிக்ககங்கையின் இக்கரை என்று மட்டும் குறிப்பிடுகின்றது.

மற்று, இக்கலிங்க அரசின் வட எல்லை ஆரம்பகாலத்தில் உறவுப்பெற்றானை (ஹொராவுப்பத்தன) என்றும், காலப் போக்கில் தோப்பாவை, தட்சணாபதிவரை விரிபடைந்திருந்தது என்றும் கூறும். இனிக் கலிங்கரே கிழக்கிழங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகரைத் துரத்தி சுயதேசம் என்று அரசாண்டிருந்ததனால் கலிங்கரே தேசராசர்களாக உரிமை பெற்றவர்கள் என்னும் முன்னுரிமையைக் கைவிடாது கடைப் பிடித்திருந்தார்கள். அதனோடு சைவமும் தமிழும் பேணியாளுதலும் கடனாகக் கருதினர். எனவே நாம் மேலே குறிப்பிட்ட எல்லைக்குள் காலந்தோறும் இடம்பெற்ற அரசியல் பாரம்பரியங்களையும், மக்கள் குடியேற்றங்களையும் படிப்படியாக ஆராயும்பொழுது, அரச பாரம்பரியங்கள் மாறினாலும் சமூக பாரம்பரியங்கள் மாற்றப்படுவதில்லை என்ற உண்மையை நாம் உணரமுடியும்.

குபேரன், இராவணன் ஆட்சி:

கிழக்கிலங்கையின் அரசியல் பாரம்பரியங்கள் குபேரன், இராவணன் ஆகிய இயக்க அரசர்களுடன் ஆரம்பமாகின்றன. குபேரன் முருக வழிபாட்டையும், † இராவணன் சிவலிங்க வழிபாட்டையும் பேணியிருந்தனர். இராவணன் சிவவழிபாட்டினைத் தேவார திருவாசகங்களும் விதந்துரைக்கின்றன. இவன் தென்னாட்டு மன்னர்களில் சிறப்புமிக்கவனாக இருந்தான். காளிதாசன் தன் காவியமாகிய இரகுவமிசத்தில் (6.62) இராவணனும் தனக்குச் சமமானவர் என்று நினைக்கத்தக்க பெருமையுடையவர் பாண்டியர் எனும் வகையில் இராவணனை விதந்து காட்டியுள்ளார். சோழர் பூர்வபட்டயம் இன்றைய திருச்சிராப்பள்ளியிற் கோட்டையொன்றினை அமைத்து திருச்சிரனைக் காவலுக்கு வைத்தான் என்றும், பின் இராவணனை வென்ற இராமர் திருச்சிராப்பள்ளிக்கோட்டையுள் கணபதிமூர்த்தத்தையும் (இதுவே திருச்சி மலைக்

† இலங்கையில் கந்தன் படையெடுப்பு இராமாயணகாலத்திற்கு முற்பட்ட நிகழ்ச்சியாகும். காசிபரின் புதல்வராகிய சூரன், தாரகன் ஆகிய அசுரரை அழிக்கவே கந்தன் கதிர்காமத்தில் படையெடுத்திருந்தார் என்பது காலத்தால் முற்பட்ட வரலாறாகும். கந்தனின் தெய்வீகப்பெருமை இலங்கையில் நிலையூன்றியிருந்ததனாலே குபேரன் முருக வழிபாடுடையவனாக இருந்தான் எனத்தெரிகின்றது. பின் வந்த குருகுலநாகரும் முருகவழிபாட்டினையே பேணினர்.

கோட்டைப்பிள்ளையார் தலமாகும்) பின் கோட்டை வடபாகத்திற் சிவபூசைப் பெட்டியையும் வைத்துப் பிரதிட்டை பண்ணி ஸ்ரீரங்கத்தலமென்றும் (இன்றைய ஸ்ரீரங்கம்) பெயரிட்டார் என்றும் குறிப்பிடும். இக்குறிப்புகளிலிருந்து பாண்டியர், சோழர் நாடுகளுள் இலன் வைத்திருந்த தொடர்புகளையும், இக்காலத்தில் தென்னிலங்காபுரியில் திராவிடக் கலாசாரதாக்கங்களின் பரிமாணங்களையும் நாம் உய்த்துணரலாம்.

குருகுலநாகர் வருகையும் நாகர் இயக்கர் இணைப்பாட்சியும் :

இராவணன் ஆட்சிக்குப்பின் ஏற்பட்ட கடல்கோளுள் இலங்கையின் பேரூர்கள், சிற்றூர்கள் யாவும் அழிந்தன. அதன்பின்னர் சிலகாலம் சென்றபின் அத்தினாபுரக் குருகுல நாகர் தென்கிழக்கிலங்கையையடைந்து இயக்கருடன் இணைந்து உகந்தையைத் தலைநகராக்கி ஆண்டிருந்தனர்.

அயோத்தி இரகுவமிசத்து காளிசேனன் படையெடுப்பு:

குருகுல நாகரும், இயக்கரும் ஆண்டிருக்கையில் கி. மு. 6ம் நூற்றாண்டளவில் அயோத்தி இரகுவமிசத்தைச் சேர்ந்த காளிசேனன் (காலசேனன்) படையுடன் வந்து நாகர், இயக்கர்களை வென்று, மண்டுநாகனையும், போர்வீரர்களையும் அழித்து, நாகரது இரு முருகன் கோவில்களையும் இடித்து அரசாட்சியைக் கைப்பற்றினான். (ம. மா. பக். 48) இவன் தென்னிலங்கையில் அமைத்த இராசதானி காளிதேசம் ஆகும். இவன் காலம் முதலாகவே உகந்தைக்கருகாயிருந்த நாக தீவிலிருந்து நாகர்கள் முல்லைத்தீவு, மணற்றிடர், மன்னார் முதலான பகுதிகளுக்குப் புலம்பெயர்ந்து இப்பகுதிகளில் சிற்றரசுகளை ஏற்படுத்தியிருந்தார்கள். அத்தருணம் காளிசேனனைத் தம் முதலரசனாகவும் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

சிங்கபுரத்து விசயகுமாரன் வருகையும் விசயதுவீப இராச்சியமும் :

காளிசேனன் நாக அரசினைக் கைப்பற்றி ஆண்டிருக்கையில், சிங்கபுரத்து விசயனும் தோழரும் வந்த படகு மணற்றிடரின் கரையையடைந்து அங்கு வாழ் நாகரைக்கண்டு, அவர் தம் முதல் அரசர் காளிசேனன் என அறிந்து, அரசனிருப்பிடம் தேடி முள்ளுத்தீவையடைந்து நாகர்குலச் சிற்றரசனைக்கண்டு, முள்ளுத்தீவு நாகர் படகிலேறிக் காளிதேசம் வந்து, காளிசேனனைக்கண்டு காளிசேனன் படைவீரர்களாக இருந்து மண்ணினால் மாளிகையுமியற்றி வாழ்ந்துவந்தனர். தென்

னிலங்கையில் விசயன் இயக்கர் குலக் குவேனியை மணந்து வாழ்ந்திருக்கையில் காளிதேச பிரதானி வீட்டில் மணவிருந்துக்காகக் காளிசேனன் விசயன், குவேனி யாவரையும் அழைத்திருந்தான். அப்பொழுது விசயன் குவேனியின் மாந்திரிகத்தால் காளிசேனனையும் பிரதானிகளையும் உறங்கச்செய்கையில், தோழர்கள் அவர்களை வெட்டிக் கொன்று அரசாட்சியைக் கைப்பற்றினர். பின் தென்னிலங்கையில் ஒரு மலை நாட்டை விசயதுவீபமெனப் பெயரிட்டுத் தலைநகராக்கி சிங்கக் கொடியைப் பறக்கவிட்டு விசயன் ஆண்டிருந்தான்.

விசயதுவீப ஆட்சியைக் கலிங்கர் ஏற்று ஆளுதல்

விசயனுக்குப்பின் விசயதுவீபத்தை ஆள வாரிசில்லாமையால், தனது தந்தைக்கு தம்பி சமித்துவை விசயதுவீபத்துக்குப் பட்டம் கட்ட அனுப்பும்படி கோரித் தன்து தோழர் ஒன்பது பேரை அனுப்பினான். இவர்கள் மண்ணாற்றுப்பதி சென்று வங்கதேசப்படகிலேறிச் சிங்கபுரத்தையடைந்து, அப்பொழுது சிங்கபுரத்தையாண்டிருந்த சமித்துவிடம் விசயன் எழுதியனுப்பிய செய்திச் சுருளைக் கையளித்தனர். அத்தருணம் சமித்து தன் தந்தை இறந்துவிட்டதாகவும், அதனால் தந்தைக்குப் பின் சிங்கபுரத்தைத் தானாளுவதாகவும் கூறி, கலிங்க நகரத்தை யரசு செய்யும் சிறிகேசவசந்திரரின் இரண்டாவது புதல்வன் சிறிகுலசேனனை அனுப்பிவைத்தான். இச் சிறிகுலசேனன் விசயனின் ஆட்சியைப் பாரமேற்று, விசயதுவீபத்தை ஆண்டிருக்கையில் சமித்துவின் மூன்றாவது மகன் பந்துவாசன் வங்கர்குலத்து எல்லாளனுடன் சிங்கபுரத்தை விட்டு விசயதுவீபத்தையடைந்து, விசயதுவீப அரசாட்சியைத் தனக்கும், எல்லாளனுக்கும் இரு பங்காக்கவேண்டுமென்று வாதாடினான். இதனைச் சிறுகுலசேனன் சமித்துவிக்கு அறிவிக்கவே சமித்து ''மூன்று பங்காகப் பிரித்து சிறிகுலன் மகன் கூத்திகனையும் சேர்த்துப் பட்டங்கட்டும்படி'' அறிவித்திருந்தான்.

தென்கிழக்கிலங்கையில் கலிங்கர் சுய அரசு உருவாகல்:

சிறிகுலசேனன் † இலங்கையை மூன்றாகப் பிரித்து பந்துவாசனுக்கு விசயதுவீபத்தையும், வடமேற்குத் தொடங்கி

† மகாவம்சம் சேனன், குட்டன் என்போர் இரு தமிழ்க் குதிரை வியாபாரிகள் என்றும், அவர்கள் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்தனர் என்றும் கூறும்.

வடகிழக்கு வரையுமுள்ள பகுதியை எல்லாளனுக்கும், தன் மகன் கூத்திகனுக்கு விசயதுவீபமிருந்து தென்மேற்குத் தொடங்கித் தென்கிழக்குவரையுமுள்ள பகுதியையும் பட்டம் கட்டினான். இக்கூத்திகனே முதன்முதலில் தென்கிழக்கிலங்கையில் ''கலிங்கர் சுயராச்சியம்'' என கலிங்கருக்கு ஒரு அரசினை உருவாக்கியவன் ஆவான். இக்காலம் முதலாகக் கடைசி மன்னன் எதிர்மன்னசிங்கன் காலம்வரை (கி. பி. 16ம் நூற்றாண்டு) தென்கிழக்கிலங்கை, தென்னிலங்கைக் கலிங்கரின் சுயதேசமாக இருந்துவந்துள்ளது.

பழைய மட்டக்களப்பு நகரில் முதற்கட்டக் குடியேற்றமும் சமூகப் பின்னணிகளும்:

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் கூத்திகன் உருவாக்கிய கலிங்க அரசின் தலைநகரமாக காளிதேசம் அமைந்திருந்தது. இவன் தன் புதிய நாட்டிற்கும் தன் ஆட்சிக்கும் அனுசரணையாக இருக்கக்கூடிய குடிகளைக் குடியேற்றினான். இம் முதற் குடியேற்றத்தில் காளிநாட்டிலிருந்து (கிழக்கிந்திய பழைய ஊர்) தொண்ணூறு குடும்பங்களும், காலிங்கநாட்டிலிருந்து தொண்ணூறு குடும்பங்களும், காளிகட்டத்திலிருந்து (இன்றைய கல்கத்தாப் பகுதி) படையாட்சித் தலைவர்களும், செந்நெல் விளைவிக்கும் அறுபது குடும்பங்களும் இடம்பெற்றிருந்தன. தன் நகர்வலம் காலத்தில் தங்கியிருக்கும் சிங்காரத் தோப்பு (பூங்கா), சிங்கார மண்டபம் ஆகிய பகுதிகளில் இக் குடிகளைக் குடியமர்த்தி, வீரர்களை வீர முனையில் குடியமர்த்தினான். இக்குடிகள் சிங்காரத்தோப்புவிற்கு மேற்கிலிருந்த மட்டக்களப்பை வெட்டி, மூடி அமைத்துக்கொடுத்த மாளிகை அமைந்த இடத்திற்கு ''மட்டக்களப்பு'' எனப் பெயரிட்டு, தானும் மட்டக்களப்பை இராசதானியாக்கி கூத்திகன் ஆண்டிருந்தான். இவனைத் தொடர்ந்து இவன் மகன் சேனன் காலத்திலும் கலிங்கம், வங்கம், சிங்கபுரம் ஆகிய மூன்று பகுதிகளிலிருந்தும் குடிமக்கள் கொண்டுவரப்பட்டுக் குடியமர்த்தப்பட்டார்கள்.

நாகர், இயக்கர் ஆட்சி தலையெடுத்தலும், கலிங்கர் தம் நிலையை உறுதிப்படுத்தலும்:

சேனனுக்கு வமிசம் அற்றுப்போகவே நாகர், இயக்கர் தலையெடுத்து கலிங்கர், வங்கர், சிங்கர் ஆகிய முக்குலத்துக் குடிகளையும் அடக்கி விண்டு-அணையை (விந்தனை) இராச தானியாக்கி, முப்பது வருடங்கள் ஆட்சி செய்திருக்கையில்,

கலிங்கருலத்துத் தலைவர்கள் தம் முன் வரலாறுகளையும், நாகர், இயக்கர் தம்மை அடக்கியாள்வதையும் கலிங்கதேச அரசனுக்கு அறிவித்தனர். அப்பொழுது கலிங்கத்தையாண்டிருந்த மதிவாகுணன் தனது மூன்றாம் புத்திரன் இரஞ்சலனைக் கலிங்க அரசினை உறுதிப்படுத்தி வரும்படி படைவீரரைக் கொடுத்தனுப்பினான். இரஞ்சலன் சிங்காரத்தோப்பணையில் இறங்கி நாகரைத் தன்பக்கம் சேர்த்து, இயக்கரெனும் திமிலரை வாளுக்கிரையாக்கி, மற்றுமுள்ள இயக்கரை மகாவலிகங்கைக்கப்பால் துரத்தி மட்டக்களப்பைச் சுயதேசமாக்கினான். பின் விசயதுவீபத்தின் அரசனான சோரநாகனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி இலங்கையைப் பன்னிரண்டு பாகமாகப் பிரித்து விசயதுவீபத்திற்கு எட்டுப் பிரிவுகளும், குருகுலநாகருக்கு மன்னாறு, மணற்றிடர் இரண்டும், இயக்கர்குலத் திமிலருக்கு தட்சணாபதியையும் ஈந்து மட்டக்களப்பைத் திறையற்ற இராச்சியமாக்கினான். இக்காலம் முதலாக மட்டக்களப்பு அரசு திறையற்ற அரசானதால் கலிங்கரின் தனியுரிமைபெற்ற நாடாகத் திகழ்ந்தது. இக்காலத்தில் விசயதுவீபத்தின் தலைநகர் அனுராதபுரத்திற்கு மாற்றப்பட்டிருந்தமையும், நாகர், இயக்கர் சிற்றரசுகள் இன்னமும் நீடித்திருந்தமையும் அவதானிக்கத்தக்கன.

இரஞ்சலன், படையாட்சிகுலத் தலைவன் சிறிகுலனை மட்டக்களப்பிற்குப் பட்டம் கட்டல்:

கலிங்க அரசுகள் தமது ஆட்சியெல்லைகளை விரிவாக்கம் செய்தலைக் குறிக்கோளாகக்கொண்டு மட்டக்களப்பில் கலிங்கராட்சியை நிலைநிறுத்த விரும்பியபொழுது, தாம் நேரடியாக ஆட்சி செய்யவில்லை. தமது பிரதிநிதிகளையோ அல்லது இளவரசர்களைப் பட்டம் கட்டியோ தமது அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலைநாட்டிவந்தனர். இதற்கு முதல் எடுத்துக்காட்டாக இரஞ்சலன் மட்டக்களப்பில் கலிங்கரின் நிலையை உறுதிப்படுத்தியபின், படையாட்சி குலத்துச் சிறிகுலனை மட்டக்களப்பிற்குப் பட்டம் கட்டி முக்குலத்தவரை (கலிங்கர், வங்கர், சிங்கர்) அழைத்து, இயக்கர் குடிகளிருந்தவிடமெல்லாம், கலிங்கம் சென்று குடிகள் கொண்டுவந்து குடியேற்றவேண்டுமென்று கூறி, கலிங்கம் போனான் என்பதிலிருந்து புலனாகும். சிறிகுலன் மகன் வாகூரன் காலத்தில் மாணிக்ககங்கைவரை நெல்வயல்கள் செழித்தோங்கச் செய்யப்பட்டன. இவனும் படையாட்சி குலத்தைச் சேர்ந்தவனே.

சோழநாட்டுச் சமூகத்தொடர்புகள்:

வாகூரன் மகன் பிரசின்னசித்து ஆள்கையில் கலிங்க குமாரனாகிய புவனேயகயபாகு திருச்சோழனுடைய மகள் தம்பதி நல்லாளை மணந்து, மகப்பேறு விரும்பி தலயாத்திரையாக வந்து திருக்கேதீசுவரரைத் தரிசித்து, பின் திருக்கோணேசுவரரைத் தரிசிக்கையில் மணிபுரத்தை (யாழ்குடா) அரசுபுரியும் நாகர்குலச் சிற்றரசன் மந்திரி கொட்டாயன் புவனேயகயபாகு தன் அனுமதியின்றி திருக்கோணேசுவரத்திற்கு வந்தமை தவறு என எதிர்ப்புத் தெரிவிக்கவே புவனேயகயபாகு தன்னுடன் வந்த சோழவீரரை ஏவி நாகரை வெட்டிக்கொன்று தட்சணாபதியைச் சோழவீரர் காவலில் வைத்துவிட்டு, மட்டக்களப்பை அரசுபுரியும் பிரசின்னசித்து வைக்கண்டு, குலமுகமன் கொண்டாடி தட்சணாபதியின் ஆட்சியுரிமையை அவனிடம் கையளித்தான். அத்தருணம் பிரசின்னசித்து காளசேனனால் உடைக்கப்பட்ட நாகர்முனைச் சுப்பிரமணியர் ஆலயத்தைச் செப்பனிட்டுத் தரும்வண்ணம் புவனேயகயபாகுவிடம் கோரினான். புவனேயகயபாகுவும் திருச்சோழனுக்கு நாகர்முனை கோவிற் திருப்பணி வேலைகளுக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுக்க, திருச்சோழனும் திரவியங்களுடன் சோழநாட்டுச் சிற்பிகளை அனுப்பிச் செப்பனிட்டுக் கொடுத்தான்.

மட்டக்களப்பில் புதிய அரசியற்பிரிவு உருவாக்கல் (புன்னரசுகிரி - உன்னரசுகிரி)

புவனேயகயபாகு நாகர்முனைத் திருக்கோவிற்பணிகளை நிறைவேற்றித் ''திருக்கோவில்'' எனப் பெயரிட்டு பிரசின்னசித்துவிடம் கையளித்திருக்கையில் புவனேயகயபாகுவின் மனைவி தாய்மையடைந்ததனால், பிரசின்னசித்து மகிழ்ச்சியடைந்து ஒரு இராட்சியப்பிரிவை உருவாக்கிப் ''புன்னரசிகிரி'' என்று பெயரிட்டுக் கல்லிலும் பொறித்துப் புவனேயகயபாகுவிடம் கையளித்தான். இப் புன்னரசுகிரி அரசுக்கு வடக்கு முக்கனல் வெட்டுவாய்க்கால், தெற்கு மாணிக்ககங்கை, மேற்கு கடவத்தை, கிழக்கு சமுத்திரம் என்பன எல்லைகளாக இருந்தன. புவனேயகயபாகுவிற்குச் சோழவீரர்கள் படைத்தளங்களாய் இருக்க, சிறைக்குடிகள் கழனிகள் செய்து இருந்தனர்.

உன்னரசுகிரி ஆட்சி வளர்ச்சி நிலைகள்:

புவனேயகயபாகு தன் மகன் மனுநேயகயபாகு இராசபருவகாலமடைய வங்கதேசத்து குலசந்திரனுடைய மகள்

அழகுவல்லியை மணம்முடிப்பித்து உன்னரசுகிரியைப் பட்டம் கட்டினான். மனுநேயகயபாகுவும் தந்தையால் திருப்பணிகள் செய்த நாகர்முனை ஆலயத்தை அந்தணர் சொற்படி, தமிழ் மதம் ஓங்கத், திரும்பவும் சோழநாட்டுச் சிற்பிகளைத் தருவித்து, செப்பனிட்டு குடமுழுக்கு விழாவிற்குரிய தினத்தைத் தன் தந்தை தாய் வமிசத்தாருக்கு (வங்கதேசம், சிங்கபுரம், சோழநாடு, கலிங்கநாடு, இராமநாடு ஆகிய நாடுகளின் மன்னர்களுக்கு) அறிவித்தான். அத்தருணம் இவன் வமிசத்தார் தத்தம் சுற்றத்தவர்களைக் கொண்ட நாற்பது திறைக்குடிகளையும், பல்வகையான திரவியங்களையும் ஏழு இராசர் கையில் கொடுத்தனுப்பிவிட்டனர். அவர்கள் யாவரும் சேர்ந்து ஒரு படகிலே நாகர்முனைக் கருகாயிருந்த களப்புமுகத்தில் வந்திறங்கினர். அப்பொழுது மட்டக்களப்பு மன்னன் தாசகன் பிரதானிகளும், மனுநேயகயபாகுவின் பிரதானிகளும் எதிர் கொண்டழைத்தனர். பின் இவர்கள் யாவரும் நாகர்முனைக் கோவில் குடமுழுக்கு விழாவை நிறைவேற்றிக் கோவிலின் ஆறுகாலப்பூசை நிருவாகங்களுக்கும் திட்டம் வகுத்தனர். பரிபாலனகாரர் ஏழு இராசர்களும், படையாட்சிகுலத்து மூன்று வன்னியரும் ஆவர். ஆனால் இவர்களுக்கெல்லாம் மேலதிகாரமுடைய கவிங்கருலத்து பிரசின்னசித்துவின் சந்ததியினரே இருபாகையருக்கு (கருமகாண்டம், ஞானகாண்டம் ஆகிய கிரியைகளை நிகழ்த்தும் இரு பிராமணர்களுக்கு) முதன்மையாக இருப்பர். வேளாளரின் பதினாறு சிறைகளும் வேளாளர் ஏவல்படி தொண்டுபுரிவர். அந்தணர்களும் மற்றும் ஐந்து பண்டாரங்களும் முதன்மை இராசர்களுடைய ஊழியராகக் கடமையாற்றுவர் என மனுநேயகயபாகுவும், தாசகனும் வகுத்து, நித்திய நைமித்திய பூசைகளுக்கு வருவாய் தரும் வண்ணம் சங்குமண்கண்டுவிற்கும், தடைகிரிக்கும் (தலைக்கல்) இடையில் 24 ஏரிகளை வெட்டி, 32 மதகுகளால் தொடுத்து சமுத்திரக்கரைவரை நெற்கழனிகளும் திருத்தினர். இக்காலம் முதலாக இக்கோவில் தொழும்புகளுடன் சோழநாட்டுப் பதினெண்குடிகளும், அந்தணரும் இடம்பெறுவது சிறப்பியல்பாகும். எனவே இக்காலத்தில் இக்கோவிலையண்டிய பகுதிகளில் சோழநாட்டுப் பதினெண்குடிகளின் குடியேற்றங்கள் வெகுவாய் இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிகின்றது.

உன்னரசுகிரியில் ஆடகசவுந்தரி ஆட்சி :

தம்பதி நல்லாள் மகன் மனுநேயகயபாகு இவ்வாறு நாகர்முனைக்கோவிற் திருப்பணிகளைச் செய்து மட்டக்களப்பு மன்னன் தாசகனிடம் கையளித்துவிட்டு, உன்னரசுகிரி சென்று

மகப்பேறில்லாமல் வாழ்ந்திருக்கும் சமயம், ஒரு பேழை கரை சேர்வதைக்கண்ட உளவுகாரன் ஒருவன் அதனை மன்னனிடம் சென்று தெரிவித்தான். அதைக் கேள்வியுற்ற அரசனும் பிரதானிகளுடன் சென்று அப்பேழையைத் திறந்துபார்க்கையில் அதற்குள் ஒரு பெண் குழந்தை கலகல என நகைத்துக் கொண்டிருந்தது. அக்குழந்தையை மகிழ்ச்சியுடன் எடுத்துச் சென்று, தன் மனைவியிடம் கொடுத்து ஆடகசவுந்தரி எனப் பெயரிட்டு வளர்த்தான். பின் ஆடகசவுந்தரியின் வரலாற்றை வடநாட்டு வர்த்தகர்மூலம் அறிந்து, அவர் தனக்கு உரிமை உடையவளென்று கருதி உன்னரசுகிரியை அவளுக்குப் பட்டம் கட்டிவைத்தான்.

உன்னரசுகிரி ஆட்சியில் மகாசேனனின் பங்கு :

மட்டக்களப்பு மான்மியம் ஆடகசவுந்தரி காலத்தில், மகாவம்சம் இலங்கைப் பௌத்தமத வரலாற்றில் திருப்பம் ஏற்படுத்தியவனாக விபரிக்கும் மகாசேனனைத் தொடர்பு படுத்துகின்றது. இவ்வரலாற்றின்படி, மட்டக்களப்பை ஆண்ட தனசேனனுடைய சந்ததிகள் ஆடகசவுந்தரிக்குதவியாக இருக்க, ஆடகசவுந்தரி மட்டக்களப்பை உன்னரசுகிரியுடன் சேர்த்து ஆண்டுவந்தாள். இக்காலத்தில் மேல் வங்கர் குலத்தைச் சேர்ந்தவனான மகாசேனன் இலங்கைக்கு மன்னனாக வர அவாவுற்று, கலிங்கதேசம் ஆளும் சங்கமிகுந்தனைக் கண்டு தன் கருத்தைத் தெரிவித்தான். அத்தருணம் சங்கமிகுந்து ''இராவணன் காலம் முதலாகச் சிதைவுற்றிருக்கும் திருக்கோணேசுவரத்தைச் செப்பனிட்டு, இராவணன் வளர்த்திருந்த வைதூலிய சைவத்தை (யாகம், பூசைகள் முதலான வேதக்கிரியைகள் இணைந்த சிவவழிபாடு) நிலைநாட்டிப் பூசைகளை ஆரம்பித்துப் பேணிவரின் இலங்கையாட்சியதிகாரம் உன் கைவசப்படும்'' என்றான். அதனைக் கேட்டு மகாசேனன் மகிழ்ந்து, வங்கநகரம் சென்று சிவாலயமியற்றும் சிற்பிகளுடனும், திரவியங்களுடனும் வந்து தட்சணாகயிலைக்கப்பால் இறங்கி, அனுரதபுரத்தையாளும் தத்தீசனைக் (சங்கமிகுந்துவின் சகோதரன்) கண்டு, அவனுக்கு வைதூலிய சமயத்தைப் போதித்துத் தன்வசப்படுத்தி, தட்சணாகயிலை ஆலயமும் நேர்பண்ணி, அபிசேகம் செய்து பூசைகளையும் ஆரம்பித்துவைத்து, மீனேரி வாவியையும் ஏற்படுத்தி நெற்கழனிகளும் திருத்திக்கொடுத்தான். பின் புத்தாலயங்களையும், விகாரைகளையும் இடிப்பித்திருந்தான். அதனையறிந்த ஆடகசவுந்தரி, வைதூலிய சைவன் ஒருவன் தெத்தீசனைத் துணைக்கொண்டு, சிவாலயங்களை நேர்பண்

ணிப் புத்தாலயங்களை இடிப்பிக்கிறான். அவனையும் அடித்துத் துரத்தி, அவன் நேர்பண்ணிய ஆலயங்களையும் இடித்துக் கடலில் தள்ளுமாறு தன் படைவீரர்களுக்குக் கட்டளையிட்டான். அதனையறிந்த தத்தீசன் அவள் பூர்வீக வரலாறு களையும், அவள் இராமமந்திரத்தால் பெற்றிருக்கும் சித்தி களையும் மகாசேனனுக்கு எடுத்துக்கூறி, அவளுடன் சமாதானம் செய்வதே மேலான வழியென்று ஆலோசனைபண்ணி, மகாசேனனை அழைத்துச்சென்று ஆடகசவுந்தரியைக் கண்டு தம் முறையைத் தெரிவித்தனர். ஆடகசவுந்தரியும் தன் சந்ததியார் என்று மகிழ்ந்து அவர்களுடன் உரையாடி, வைதூரிய சைவத்தைப்பற்றியும் கேட்டறிந்து தானும் அச்சமயத்தைப் பேண விருப்பம் தெரிவித்தாள். அதையறிந்த தெத்தீசன் அவர்கள் இருவரையும் மணம் முடித்துவைத்து, மகாசேனனால் இடித்த விகாரைகளை நேர்பண்ணத் திட்டம் செய்து, ஒவ்வொரு விகாரைகளிலும் கதிரேசனாலயமும் இயற்றுவித்தான். (ம. மா. 32-35). ஆடகசவுந்தரி சிங்ககுமாரனைப் பெற்று மூன்று வருடத்தில் தேகவியோகமானாள். மகாசேனன் புத்திரனை வளர்த்து மட்டக்களப்பு, உன்னரசுகிரி, தட்சணாபதி மூன்றையும் பட்டம்கட்டிவிட்டுத் தானும் திரிகயிலையில் சென்று தங்கி கயிலைவாசனோடு கலந்து முத்தியடைந்தான்.

மகாவமிசத்திலும் இதே வரலாற்றுப் (ஆடகசவுந்தரி தவிர) பாத்திரங்கள் இடம்பெறினும், சமய வரலாறு திரிபுபட்டுக் காணப்படுகின்றது. மகாவம்சம் (அத். 36 : 112) வைதூலியக் (வைதேகநெறி பூசை, யாகநெறிகள்) கொள்கையுடையோர் புத்தருடைய போதனைகளுக்குக் கேடு பயப்பவர்களாக இருந்தார்கள். மகாசேனன் சங்கமித்தர் சொற் கேட்டு, மகாவிகாரைப் பௌத்தர் கோட்பாடுகளுக்கு எதிரானவனாய் மகாவிகாரையை அழித்து அபயகிரி விகாரையை வளம்படுத்தினான். கோகர்ணத்திலும், ஏரகவிலத்திலும், கலந்தன் பிராமணன் கிராமத்திலும் விகாரங்களை அமைத்தான். மேலும் தீவில் பாழடைந்த பல ஆலயங்களைப் புதுப்பித்தான். பதினாறு குளங்களையும் கட்டுவித்தான். இவ்வாறு இவன் பெரும் புகழும், பெரும் பாவமும் தேடிக்கொண்டான். இவற்றுள் மகாசேனன் தென்கிழக்கிலங்கையிலிருந்த சைவக் கோவில்களைத் தரைமட்டமாக்கியபின், அவற்றின்மீது பௌத்தக கோவில்களை எழுப்பினான் என மகாவமிசதீக குறிப்பிடுவதுதான் சமய வரலாற்றினைத் திரித்துக் கூறியதாகலாம்.

உன்னரசுகிரியில் கிழக்கிந்தியக் குடியேற்றம் :

ஆடகசவுந்தரி மகாசேனனுக்குப் பின், சிங்ககுமாரன் உன்னரசுகிரியிலிருந்து ஆளுகையில் கனகசுந்தரன் காளிகட்டத்திலிருந்து முப்பது சிறைக் குடிகளையும், நாற்பது குகன் வீரியக் குடிகளையும், ஏழு மாலிங்கப் பண்டாரக் குடிகளையும் சேர்த்துக்கொண்டு உன்னரசுகிரித் துறையில் வந்திறங்கிச் சிங்ககுமாரனைக் கண்டு, உன்னரசுகிரிக்குத் தெற்கிலுள்ள மத்தங்கடவத்தை நாட்டிற் குடியமர்ந்தான். பின், கனகசுந்தரத்தைச் சிங்ககுமாரன் திரிகயிலைக்கு அதிபதியாக்கினான்.

உன்னரசுகிரிமீது காலிங்கை ஆரியன் படையெடுப்பு :

உன்னரசுகிரியை சிங்ககுமாரன் ஆண்டிருக்கையில் சோழ நாட்டைச் சேர்ந்த காலிங்கை ஆரியன் தலயாத்திரையாக வந்து, கோணேசுவரர் கோவிலுக்குப் போகும் வழியில் மடுவோடையில் நாகர்குலப் பெண்ணைக் கண்டு, நாகர்கள் எவ்வாறு புவனேயகபாகுவினால் தட்சணாகையிலையிலிருந்து அகற்றப்பட்டார்கள் என்பதனையும், அதனால் நாகர்கள் வடகுடாவைச் சேர்ந்து (யாழ்குடா) நாகதீவெனப் பெயரிட்டு வாழ்ந்துவருவதையும் தெரிந்துகொண்டான். பின் நாகதீவையடைந்து ஆரியநாட்டுக் குடிகளைக் குடியமர்த்தி, அத்தீவுக்கு (யாழ்குடா) அரசனாகிப், பின் படை திரட்டி உன்னரசுகிரி சென்று, புவனேயகபாகுவின் வமிசத்தவனான சிங்ககுமாரனுடன் போரிட்டான். அத்தருணம் சிங்ககுமாரன் மட்டக்களப்பு அதிபதிகளோடும், தன் படையினரோடும் காலிங்கை ஆரியனைப் புறமுதுகிடச்செய்து, தட்சணாபதிக் கப்பால் விட்டுத் திரும்ப உறவு கொண்டாடி, தட்சணாகயிலை சென்று பூசித்து உன்னரசுகிரி திரும்பியபொழுது, தானும் தன் தந்தைபோல (மகாசேனன்) சிவாலயமியற்ற உளங்கொண்டான். அதனால் இராவணனால் ஆலயமியற்றிப் பூசிக்கப்பட்டதும், இராவணன் காலத்திற்குப்பின் பாழடைந்துபோனதுமான உகந்தைமலையிற் திருப்பணிகள் செய்து, இராவணேசுவரர் பேரில் தீபமும் ஏற்றி, ஆயிரம் அவண நெற்காணிகளும் திருத்தி, கலிங்க அரசுகளின் முன்னுரிமையையும் வகுத்திருந்தான். பின் தன் மகன் சிறீசிங்கனுக்கு உன்னரசுகிரியைப் பட்டம்கட்டிய சிலகாலத்தின் பின் பரமபதமடைந்தான். சிறீசிங்கன் பின், அவன் மகன் பாலு உன்னரசுகிரியை ஆண்டிருந்தான்.

மட்டக்களப்பு - உன்னரசுகிரி ஒன்றிணைந்த ஆட்சி:

இக்காலத்தில் மட்டக்களப்பையாண்ட பிரசேதுவிற்குப் பின், அவன் மகன் தினகரசேனனுக்கு வாரிசில்லாமையால், சிங்ககுமாரனின் பூட்டனாகிய பானு மட்டக்களப்பையும், உன்னரசுகிரியையும் ஒரு குடைக்கீழ் ஆண்டிருந்தான்.

இராமநாட்டு (பாண்டிநாடு) மறவர்குலத்தார் வருகை:

பானுவின் மகன் அமரசேனன் ஆளும் காலத்தில் இராம நாட்டு மறவர்குலத்து அரசவமிசத்தைச் சேர்ந்த கலைவஞ்சி, மங்கியம்மை, செட்டிச்சி, மகிளரசி, பாலம்மை, இராசம்மை, வீரமுத்து முதலான ஏழு பெண்கள், தத்தம் கணவன்மாருடனும், சிறைதளங்களுடனும், வவனியர் குலத்துக் குருகக் (குருமார்) குடும்பங்கள் ஐந்துடனும், மட்டக்களப்பின் பரிசுத்தங்களையறிந்து, வைதூலிய (வைதிகநெறி வழிபாடுகள்) சமயத்தை மாற்றி, இராம வழிபாட்டைப் போதிக்கக், கம்பராமாயணத்தை (கம்பராமாயணம் என்பது இங்கு இடைச் செருகலாக இருக்கலாம். அன்றேல் கம்பராமாயணத்தின் காலம் கி. பி. 12ம் நூற்றாண்டென்பதனால், இந்நிகழ்ச்சி முன் விபரிக்கப்பட்ட வரலாற்று நிகழ்ச்சியுடனும், பின்னர் தொடர்ந்து இடம்பெறுகின்ற உலகநாச்சியின் வரலாற்றுடனும் காலத்தால் பொருந்துவதாக இல்லை) எடுத்துக்கொண்டு மட்டக்களப்பிற்கு வந்து, அமரசேனனைக் கண்டு தம் வரலாற்றைக் கூறினர். அப்பொழுது, அமரசேனன் அவர்களை ''வன்னிச்சிமார்'' என விருது வழங்கி, ஊர்களும் வழங்கினான். இவர்களுள் கலைவஞ்சி களுவாஞ்சிக்குடியிலும், மங்கியம்மை மங்கிக்கட்டிலும் (வலையிறவு இருந்து ஆதித்திய மலைப் பாதையில் உள்ள ஊர்), செட்டிச்சி செட்டிகுளத்திலும் (செட்டிகுளம் இவள் பெயரால் ஏற்பட்ட பெயரே யன்றி சாதியடிப்படையானதன்று. செட்டிகுளம் எனப் பெயர் பெற்ற ஊர்கள் வழக்கிறந்து உள. படுவான்கரைப் பாங்கரான கன்னன்குடாவின் மாடுகட்டும் தரவையொன்று செட்டிகுளம் என அழைக்கப்பட்டு வருகின்றது.) மகிளரசி மகிழவெட்டுவான் அல்லது மகிழூரிலும், பாலம்மை பாலமின்கட்டிலும், வீரமுத்து முத்துக்கல்லிலும் (மன்னன்பிட்டியையண்டிய ஊர்), இராசம்மை இராசம்மாதறையிலும் (இதுவே இன்று அம்பாறையாகச் சுருக்கம் பெற்றுள்ளதாகத் தெரிகின்றது) குடியமர்த்தப்பட்டார்கள். இப்பெண்கள் இராமநாடு இருந்து, இராம வழிபாட்டை மட்டக்களப்பில் போதிக்கவந்தார்கள் என்பதனால், இராமர் குகனைச் ''சேதுபதி'' எனக் கௌரவித்துக், குகன் குடிகளை இராமநாதபுரப் பகுதியில் குடியமர்த்தினார் என்ற பூர்வீக வரலாறுகளின்படி, இப்பெண்கள் பழைய குகன் குடி மரபில் வந்தவர்கள் எனத் தெரிகின்றது. இவர்களுடன் வந்த சிறைக்குடிகள் பாண்டிநாட்டு வேளாளர் முதலான பதினெண் குடிகளாகலாம்.

மண்முனை அரசுப்பிரிவு உருவாகலும் புதிய குடியேற்றங்களும்:

அமரசேனன் மகன் குணசிங்கன் மட்டக்களப்பையாண்டிருக்கையில், ஓரிசா தேசத்து உலகநாச்சி புத்தருடைய தசனத்தைக் கூந்தலில் மறைத்துக்கொண்டு, குகன் வமிசத்தார் முன் கையிலையில் எடுத்துவந்த சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டுவந்து, அனுராதபுரத்தையாண்ட மேகவண்ணனைக் கண்டு புத்தருடைய தசனத்தைக் கொடுத்து மகிழ்வித்து, பின் அவனிடம் திருமுகம் பெற்றுச்சென்று குணசிங்கனைக் கண்டு, அம்பிளாந்துறைக்கப்பாலுள்ள மண்ணேறிமுனையைப் பெற்று மாளிகை உண்டாக்கி வாழ்ந்திருந்தாள். பின் ஓரிசா தேசத்திலிருந்து குகன் குடும்பம் நூற்றாறும், சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்துக், குகக் குடும்பங்களைத் தன் அருகாய் இருத்தி, அந்த இடத்தில் ஆலயமியற்றிச் சிவலிங்கத்தை நிறுவி வழிபட்டுவந்தாள். (இக்கோவில் அடையாளம் காணப்படவில்லை. தினசிங்கன் காலத்தில் அல்லது போர்த்துக்கேயர் காலத்தில் தரைமட்டமாக்கப்பட்டிருக்கலாம்). பின் அனேகம் குகக் குடும்பங்களை ஓரிசா நாட்டிலிருந்து தருவித்து, காப்பு முனைக்காட்டை அழித்துக் குடியிருத்தி, அப்பகுதிக்கு ''மண்முனை'' என்று பெயரிட்டு ஆட்சி செய்திருந்தாள். கொக்குநெட்டி ஆலயத்தையுமியற்றி, வடநாட்டுக் கொல்லடத்திலிருந்து பட்டர் (பூசகர்) மூவரை அழைத்துப் பூசைகளுக்குத் திட்டம் வகுத்து, கழனிகளும் திருத்தி, தந்தபுரத்திலிருந்து ஆரம் தொடுக்கும் (பூமாலை கட்டும்) குடிகள் பதின்மரைத் தருவித்து, இரு ஆலயங்களுக்கும் ஆரங்கட்டும் குடிகளாக வகுத்திருந்தாள். உலகநாச்சிக்குப் பின் மட்டக்களப்பையும், மண்முனையையும் குணசிங்கனின் பரம்பரையினரே இருநூறு வருடங்களாக ஆண்டிருந்தனர்.

கலிங்கன் வங்கலாடன் படையெடுப்பும் அரசாட்சியும்:

கலிங்ககுலத்தவனான வங்கலாடன் படை திரட்டிவந்து குதிரைமலை, அனுரதன்புரி, விசயதுவீபம், காளிதேசம் ஆகிய பகுதிகளை அரசுபுரியும் அரசர்களை வென்று, மட்டக்

களப்பைத் தனது இராசதானமாக்கி, மற்ற சிற்றரசுகளிடம் திறைவரி பெற்று ஆண்டிருந்தான். இக்காலத்திலே மதுரையை யரசுபுரியும் செகுணன் இலங்கையையடைந்து, மட்டக்களப் பிற்குச் சென்று வங்கலாடனைக் கண்டு, கொண்டாடிப் போனான். கால அடிப்படையில் நோக்கினால் வங்கலாடன் பரம்பரையில் வந்து அரசனையே கண்டுபோயிருக்கலாம் எனத் தெரிகின்றது. (இங்கு செகுணன் என்றது ஸ்ரீமாறசீவல்லபன் என்பான் தந்தை வரகுண மன்னன் I ஐக் (கி. பி. 800–830) குறிப்பதாகத் தெரிகின்றது. வரகுணன் I ன் பெயராலே வாகனேரி (வரகுணன்+ஏரி) என்ற பெயர் கிழக்குமாகாணத்தில் எழுந்திருக்கலாம் என்பதற்கும் இந்த வருகையே காரணமாகலாம்).

சிங்கமரபினர் ஆட்சி:

வங்கலாடன் பரம்பரையினர் நூற்றிருபது வருடங்கள் ஆண்டபின் மட்டக்களப்பு இரத்தினவல்லி அரசின்கீழ் நாற்வருடங்களாக இருந்தது. அத்தருணம் அனுராதபுரத்தையரசு புரியும் மிகுந்தனின் (இது மகிந்தன் III கி. பி. 797 – 801 ஆக இருக்கலாம்.) படைத்தலைவன் மகன் இலங்கசிங்கன் (தருமசிங்கன்) மட்டக்களப்பை இரத்தினவல்லி நகர அரசிடமிருந்து விடுவித்துத் தான் ஆண்டிருந்தான். அப்பொழுது தோப்பாவையைச் சேனன் (இரண்டாம் சேனன் கி. பி. 851 – 855) ஆண்டிருந்தான். அச்சமயம் பாண்டியகுமரன் புனந்துறுவன் தன் தந்தை வைப்பாட்டி மகனுக்குப் பட்டம்கட்டி, பட்டத்தரசி மகனான தன்னை உதாசீனம் செய்தமைக்காகத், தன் தந்தையைக் கொன்று தான் ஆட்சியைக் கைப்பற்ற படை உதவி செய்யுமாறு கோரினான். சேனனும் தன் தந்தை சேனன் I க்கு நடந்தவற்றுக்குப் பழிவாங்கக் கருதி மட்டக்களப்பையரசுபுரியும் தருமசிங்கனோடு மூவாயிரம் படைவீரரையும் கொடுத்துப் புனந்துறுவனை மதுரைக்கனுப்பிவிட்டான். (இங்கு குறிப்பிட்ட பாண்டிநாட்டு அரசியல் வரலாற்றுப் பின்னணி யாதெனில் வரகுணபாண்டியன் I ன் (கி. பி. 800 – 830) மகனே ஸ்ரீமாறன் சீவல்லபன் (கி. பி. 835 – 862). இச் ஸ்ரீமாறன் சீவல்லபனே சேனன் I ன் காலத்தில் ஈழத்தை வென்றவன். இனி இச் ஸ்ரீமாறன் சீவல்லபன் பட்டத்தரசி மகனே வரகுணபாண்டியன் II ஆவன். ஸ்ரீமாறன் சீவல்லவன் வைப்பாட்டி மகனே வீரநாராயணன் ஆவன். எனவே சேனன் II இடம் படை உதவி கோரிய புனந்துறுவனே வரகுணபாண்டியன் II (கி. பி. 862 – 885) ஆவன். இலங்கையிலிருந்து தருமசிங்கன் தலைமையிற் சென்ற படை பாண்டிய மன்னனை

(ஸ்ரீமாற சீவல்லபனை) வாளுக்கிரையாக்கி, வரகுணன் II ஐ (புனந்துறுவனை) ஆட்சியிலிருத்தித் திரும்பியது.

நாடு திரும்பிய தருமசிங்கன் கொக்குநெட்டி ஆலயத்தைக் கல்லாற் கட்டி, மதில் மண்டபங்களும் அமைத்துச் சோழதேசமிருந்து மூன்று இரதங்களும் தருவித்து, குடமுழுக்கு விழாவும் நிறைவேற்றிச் சிறைகளும் வகுத்து ஆண்டிருந்தான்.

சிங்கர் வமிசத்து ஆட்சியில் தருமசிங்கன் மகன் குமாரசிங்கனும், அவன்பின் அவன் மகன் கதிர்சுதனும் ஆண்டனர். இவர்களுள் கதிர்சுதன் மட்டக்களப்பு, மண்முனை, உன்னரசுகிரி ஆகிய பகுதிகளை மனுநீதி முறைப்படி, நீதி தவறாமலும், புத்தராலயம் சிவாலயங்களைச் செப்பனிட்டு அரசர், குடிகள் என்று வேறுபாடில்லாமலும் ஆண்டிருந்தான். இவனுடைய மனுநீதி தவறாத ஆட்சிக்குதவியாக வவுணசிங்கம், புளியமாறன், சத்துவண்டன், கொட்டகக்கச்சன், நீலவண்ணசேனன், அகுராகு, கட்டகமன் ஆகிய மந்திரிமார் இருந்தனர். இக்காலத்தில் மகமது சூசினி (Mahmud Ghazni) (கி. பி. 998 – 1030) கொடுமையால் வட மதுரையிலிருந்து மூன்று படகுக் குகன் குடிகன் வந்து கதிர்சுதனைக் கண்டு தோப்பாவை, தட்சணாபதி, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் குடியமர்ந்தனர்.

கதிர்சுதனுக்குப் பின் அவன் மகன் மதிசுதனும் மட்டக்களப்பை மனுநீதி தவறாமல் ஆட்சி செய்தான். மதிசுதன் பொல்லநறுவையை ஆட்சிபுரிந்த மிகுந்தன் (மகிந்தன் V கி. பி. 982 – 1029 என்பவன்போலும்) மகளைத் திருமணம் செய்து தேவாலயங்கள் செழிப்புறவும், குடிமக்கள் வாழ்வுயரவும் தானதருமங்கள் செய்து மட்டக்களப்பு, உன்னரசுகிரி, மண்முனைப் பகுதிகளையாண்டிருக்கையில், மகப்பேறில்லாமையால், காளசேனனால் உடைக்கப்பட்டுப் பாழடைந்திருந்த மண்டுநாகன் முருகையன் ஆலயத்தைத் தொண்டைநாட்டுச் சிற்பிகளைத் தருவித்துத் திருப்பணிகள் செய்து, நித்திய பூசைகளுக்கும் திட்டங்கள் வகுத்திருந்தான். அதன்பின் மகப்பேறு கிடைத்தபொழுது, மகன் நாதன் பெயரிலும் அணைகள் கட்டி நீரைத் தேக்கி ஆயிரம் அவணக் கழனிகள் திருத்தி ஆலயத்திற்கு ஈந்தான்.

இவன் மகன் நாதன் மனுநீதி தவறாது அரசு செய்திருக்கையில் சோழர்குலத்துக் குலசேகரன் பாண்டிநாட்டைக் கொள்ளையடித்துப் பாண்டியனையும் வாளுக்கிரையாக்கி, இலங்கையிலும் மண்ணாறு, முள்ளுத்தீவு, கொட்டியனூர்

ஆகிய ஊர்களிலுள்ள தமிழர்களைத் தன் ஆட்சி நிழலில் இருத்தி, மட்டக்களப்பில் நாதனையும், பிரசைகளையும் தன்னாட்சிக்குக்கீழ் வைத்தான். பின் திசைமாறாமை சென்று லோகேஸ்வரனைக் (இவன் லோகேஸ்வரன் II கி. பி. 1210 – 1211 எனத் தெரிகின்றது) கண்டு, விருந்துண்டு தன்னதி காரத்தை ஏற்கச்செய்து திரும்பினான். நாதனும் மட்டக் களப்புத் தமிழர்களைச் சோழர் அதிகாரத்தை ஏற்கச்செய்து, தனது புத்திரர்களைச் சோழ இளவரசிகளுக்கு மணம்முடித்து வைத்து மூத்த புதல்வன் தினசிங்கனுக்கு மட்டக்களப்பைப் பட்டம் கட்டிவைத்தான்.

நாதன் காலத்தில் படையெடுத்துவந்த சோழன் யார் என்பதனைச் சுருக்கமாக ஈண்டு குறிப்பிடுதல் உகந்ததாம். பராக்கிரமபாகு I ன் காலம் கி. பி. 1153 – 1186 ஆகும். குலோத்துங்க சோழன் III ன் காலம் கி. பி. 1163–1216 ஆகும். இனி, பராக்கிரமபாகு I பர்மாமீது படையெடுத்திருக்கையில், பாண்டிநாட்டிற் பராக்கிரம பாண்டியனின் தலைநகரான மதுரையைக் குலசேகரன் (கல்வெட்டுக்கள் குலோத்துங்கள்) அழித்தான் என்பதனால், இதனைச் செய்தவன் குலோத் துங்க சோழன் III என்பது தெளிவாகின்றது. காலப்போக் கில் இவன் இலங்கையிலும் வெற்றி ஈட்டினான் என்று தெரி கின்றது. இதனை அவனது மெய்க்கீர்த்திகள்

''சிங்களவன் தலைமலையாற் தென்னீழங்
கொள்க வென்னத் திரைகடலை அடைக்க வென்ன''

என்று கூறுவதிலிருந்து உணரலாம். சூளவம்சமும் (அத். 80:43) சோழநாட்டுப் படையெடுப்பொன்றைக் குறிப்பிடும். இவ்வரலாற்றுப் பின்னணிகளின்படி நாதன் காலத்தில் படை யெடுத்துவந்த குலசேகரன் என்பவன் குலோத்துங்கள் III ஆவன். இவனே திஸ்ஸமாறாமை சென்று லோகேஸ்வரனைக் கண்டு (கி. பி. 1210 - 1211) விருந்துண்டு சென்றவனும் இவனே ஆவன்.

சிங்கராட்சியில், தினசிங்கன் ஆட்சியில் தமிழ்மதமருகிச் சமணம் (பௌத்தம்) தளைத்தது. தினசிங்கன் சோழநாட்டு இளவரசியைத் திருமணம் செய்தமையாலும், சிங்கர்குல மானபடியாலும், மட்டக்களப்பில் முற்காலத்தில் கலிங்கர், வங்கர் எடுப்பித்த சிவாலயங்களையிடித்து, நிதிகளைச் சோழநாட்டுக்கு அனுப்பி முகமன் பெற்றுவந்தான். தினசிங் கன் மைத்துனன் அணிகங்கன் (கி. பி. 1209) தோப்பாவைக்கு அரசனானபோது அவனையும் சினேகம்பிடித்துத் தமிழ் ஆலய நிதிகளைச் சோழநாட்டிற்கு அனுப்பினான். இதனால் மன

வருத்தமுற்ற கலிங்கர், வங்கர் பீதியடைந்திருந்தனர். அணி கங்கன், தினசிங்கன் இருவரதும் மந்திரிமார் படையாட்சி குலத்தவர். தினசிங்கன் நாட்டுவளப்பம் கேட்கும் சமயம் பார்த்து, அவர்கள் அவனுக்குப் பின்வருமாறு எடுத்துக்கூறி னர்: ''இந்த மட்டக்களப்பை உருவாக்கியவர் காலிங்கர் குலத்தவர். அவர்களே இயக்கர், நாகரைத் துரத்திச் சுய தேசமென்று அரசுபுரிந்தனர். அதனால் சிவாலயங்களை எந் தக் குலத்து அரசர்களியற்றினாலும் கலிங்ககுலத்ததிபருக்கே முதன்மை (முன்னுரிமை) கொடுத்து வாழ்ந்தவர்கள். இப் போது நீர் தமிழ் மதங்களை மாற்றி, ஆலய நிதிகளைச் சோழநாட்டுக்கு அனுப்பிவிட்டீர். அதனால் கலிங்கரால் துன் பம் வரவேண்டியுள்ளது'' என்று கூறினர். பின்னர் இவ்விட யத்தைக் கலிங்கனான சுகதிரன்கலிங்கதேச வர்த்தகப் படகில் வேவுகாரரை அனுப்பிக் கலிங்கமன்னனுக்கு அறிவித்தான்.

கலிங்கமாகோன் வருகையும், அவன் பணிகளும் :

சுகதிரன் செய்தியைக் கலிங்கதேசத்தை அரசுபுரியும் மனுவரதன் வாசித்தறிந்து தன் மூன்றாம் புத்திரன் மாகோன் (கி. பி. 1215 – 1255) அழைத்து இலங்கை முற்றிலும் தமிழ் மதம் வளரச்செய்து மட்டகளப்பைச் சுகதிரனுக்குப் பட்டம் கட்டி வரும்படி இரண்டாயிரம் படை வீரர்களைக் கொடுத் தனுப்பினான். மாகோன் மணிபுரத்திலிறங்கி நாகர்குல அர சனைக்கண்டு சோழர் செய்த நிபந்தனைகளைக் கேட்டறிந்து (குலோத்துங்கன் I கி. பி. 1076 – 1118) கலிங்க நாட்டரச னாகிய சோடகங்கன் அனந்தபதுமன் திறை கொடுக்க மறுத் தமையினால் கருணாகரத் தொண்டமானை அனுப்பிக் கலிங் கத்தைத் தன்கீழ்ப்படுத்தினான். இப்போரின் பின் சோழர் - கலிங்கர் உறவுகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. அதன் எதிரொலியே இங்கும் தொனிக்கிறது.

மட்டக்களப்பில் சுகதிரனையும் கண்டு, தினசிங்கன் குடும்பத்தினரை வாளுக்கிரையாக்கிப், பின் திரண்டெழுந்த சிங்கரையும் வாளுக்கிரையாக்கி மட்டக்களப்பால் அகற்றி, மட்டக்களப்பைச் சுகந்திரனுக்குப் பட்டம் கட்டினான். பின் தோப்பாவைக்குச் சென்று அணிகலங்கனையும் வாளுக்கிரை யாக்கித் தோப்பாவையிலிருந்த புத்தவிகாரைகளையும், ஆல யங்களையும் இடிப்பித்து, தோப்பாவையை இராசதானி யாக்கி ஆண்டிருந்தான். இராமேஸ்வரத்தையும் வட இலங்கை யென இலங்கையுடன் சேர்த்து அரசுபுரிய, மனுவரதன் தன்

முகன் மனுவரசனுக்குத் (மாதோனுக்கு) தன் சகோதரி மகள் அதிமதியைத் திருமணம் செய்துவைத்தான். மாகோனும் மட்டக்களப்பு முழுவதும் தமிழ்மதம் வளரச்செய்து குல வரிசைகளும் ஏற்படுத்தியிருந்தான்.

மாகோனுக்குப் பின் அரசியல் நிலை:

மாகோன் சுகதிரன் ஆட்சியின் முடிவில் மாகோன் தன் மகன் வரதகுணனுக்குத் தோப்பாவையை பட்டம்கட்டினான். சுகதிரன் பரம்பரையினர் ஏறக்குறைய இருநூறு வருடங்கள் மட்டக்களப்பையாண்டிருந்தனர். (மாகோன் ஆட்சியாண்டுக் கணக்குப்படி கி. பி. 1255 + 200 = கி. பி. 1455 வரை.) பின் மட்டக்களப்பை நான்கு பாகமாகப் பிரித்து படையாட்சிகுலம் மண்முனை வடபகுதியையும், வங்கர் மட்டக்களப்பையும் (பழையநகர்), சிங்கர் உன்னரசுகிரியையும் எழுபதுவருடங்களாகச் சம்மதமுற்று ஆண்டிருந்தனர்.

இக்காலம் முதலாகச் சிங்கர் தமது அரசியல் சமூக நிலைப்பாடுகளைத் தென்னிலங்கையில் திரும்பவும் உறுதிப்படுத்தலாயினர். மேலும் கலிங்கரின் நலிவுற்ற அரசியல் சூழ் நிலைகளைச் சாதகமாகக் கொண்டு, வங்காரைத் துணைப் பிடித்து மேலாதிக்கம் பெற்று, விசயதுவீபத்தை இலங்கை முற்றுக்கும் மத்திய நாடாக்கினர். இதற்குடந்தையாக மட்டக்களப்பு, அனுரதன்புரம், வதுளா, மண்ணாறு, காளி, அம்மான்தோடை, இரத்தினவல்லிநாடு, முள்ளுத்தீவு, தட்சணாபதி, கொட்டியனூர், தோப்பாவை, நூரெலியா நாட்டதிபர்கள் கைச்சாத்திட்டனர். அதற்காகச் சிங்கதுவீபம் என்ற பெயரை மாற்றிக் கண்டி நகரென ஆண்டனர். (மணற்றிடர் இந்த இணைப்பாட்சிகு உடந்தையாக இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது). இவ்வாறு முப்பத்தெட்டு வருடங்கள் ஆண்டிருந்தனர்.

கலிங்க அரசுகள் எழுச்சி:

இவ்வாறு சிங்கர் குலத்தவர் ஆட்சி புரிந்திருக்கையில், இவர்களுள் கலகம் உண்டாகவே, தோப்பாவையில் அதிகாரம் செலுத்தியிருந்த கலிங்ககுலத்து மாருதசேனன், இலங்கையின் பல பகுதிகளிலுமிருந்த திக்கதிபர்களின் துணைக்கொண்டு, கண்டி மத்தியநகரத்தரசனை எதிர்த்து மீண்டும் தோப்பாவையை இராசதானமாக்கி ஆண்டான். (இவனது ஆட்சிக்

காலம் முன் கணித்ததன்படி கி. பி. 1455 + 108 = கி. பி. 1563 ஆகலாம்). இவன் இவ்வாறு ஆண்டிருக்கையில் போர்த்துக்கேயர் (கி. பி. 1560 – 1591) மண்ணாறு, மணற்றிடர்ப் பகுதிகளைக் கைப்பற்றினர். இலங்கையில் போர்த்துக்கேயர் தொடர்புகொண்டிருந்த காலம் (கி. பி. 1505 – 1658) வரையாகும். போர்த்துக்கேயர் மண்ணாற்றுப்பகுதிகளைக் கைப்பற்றியதை அறிந்த மட்டக்களப்புத் திக்கதிபர்கள், மட்டக்களப்பின் ஆட்சிப் பொறுப்பை மாருதசேனனிடத்தில் ஒப்படைத்தனர். மாருதசேனன் தனக்குப்பின் தன் மகன் எதிர்மன்னசிங்கனுக்கு தோப்பாவை, மட்டக்களப்பு, உன்னரசுகிரி, மண்முனை, கோறளைப் பகுதிகளைப் பட்டம் கட்டிவிட்டான். எதிர்மன்னசிங்கன் ஆட்சியில் கலிங்கரின் இறுதி மறுமலர்ச்சிக்காலம் இடம்பெற்றிருந்தது. இவன் நாட்டின் பொருளாதார விருத்திக்காக விவசாயம், வர்த்தகம் முதலான் துறைகளில் பல திட்டங்களைச் செயற்படுத்தினான். தினசிங்கன் காலத்தில் சிதைக்கப்பெற்ற சிவாலயங்களைப் புனருத்தாரணம் செய்து ஆறுகாலப் பூசைகளுக்கான விதிகளையும், சட்டதிட்டங்களையும் வகுத்து சைவ மறுமலர்ச்சிக்கும் வழிவகுத்தான். கொங்குநாட்டுத் தாதன் அறிமுகப்படுத்திய திரௌபதை, மாயோன் வழிபாடுகளை மத சமரசக் கோட்பாட்டுடன் அறிமுகம் செய்துவைத்தான். அண்ணாமலைச் செட்டிகளை நாப்புட்டிமுனைக்கு மேற்கில் வர்த்தகத்திலீடுபட்டிருக்க ஊக்கப்படுத்தினான். இவன் காலத்திலேதான் காட்டான், பட்டாணி (படைவீரர்), சுல்தான், சீகந்தர், துலுக்கர் முதலான முஸ்லீம் குடிகளும் மண்முனைக்கடுக்காப்பாளையம் போட்டு வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். எதிர்மன்னசிங்கன் நாற்பத்து நான்கு வருட ஆட்சியின்பின் தேகவியோகமாக, மட்டக்களப்பு கண்டியரசாட்சிக் குட்பட்டலாயிற்று. அப்பொழுது கண்டியை ஆண்டிருந்தவன் இராச சிங்கன் I (கி. பி. 1581 – 1593).

கண்டி அரசினர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் தலையீடுகள்:

போர்த்துக்கேயர் கி. பி. 1626ல் மட்டக்களப்பைக் கைப்பற்றி கலிங்கர், வங்கர் குலத்தவருக்கு நிலைமை பதவிகள் வழங்கி ஆண்டிருந்தனர். பின் காளிசேனனுடைய கோட்டைக்கருகாயிருந்த களப்பிலிருந்து கற்கள் எடுப்பித்து, புலியமாறனுடைய பழைய கோட்டையைக் கட்டிமுடித்தனர். இவ்வாறு போர்த்துக்கேயர் மட்டக்களப்பில் எடுத்த நடவடிக்கை

களை கண்டியரசன் சேனரதன் (கி. பி. 1605 – 1635) எதிர்க் கவே, போர்த்துக்கேயர் மணற்றிடர்ப் பண்ணையில் கோட்டை கட்டி மண்ணாறு, திருகோணைப்பதி, முள்ளுத்தீவு, காளி தேசம், மட்டக்களப்பு முதலான தமிழ்ப்பிரதேசங்களைத் தமதாட்சிக்குட்படுத்தி, பண்ணையிலும், காளிதேசத்திலும் கிறித்தவ சமயத்தைப் பரப்பிவந்தனர். மட்டக்களப்பு நிதிய அதிபர்கள் இதனைச் சேனரதனுக்குத் தெரிவிக்கவே சேன ரதன் முஸ்லீம் படையினரைத் துணைக்கொண்டு போர்த்துக் கேயரை பட்டக்களப்பால் அகற்றிவிட்டான் (மா. மா. சேன ரதனுக்குப் பதிலாக விமலதர்மன் என்று குறிப்பிடும். அது தவறு என்பதனைப் பிற வரலாற்று மூலங்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம்). ஆனால் இராசசிங்கன் II (கி. பி. 1635 – 1687) காலத்தில் மட்டக்களப்பு முற்றும் போர்த்துக்கேயர் வசமானது. பின் இராசசிங்கனும் ஒல்லாந்தரும், ஒல்லாந்த ரும் போர்த்துக்கேயரும், உடன்படிக்கைகள் செய்து மட்டக் களப்பின் அரசியல் அதிகாரங்களைக் கைமாறிக்கொண்டனர். ஒல்லாந்தர் இராசசிங்கனுடன் செய்துகொண்ட உடன்படிக் கையை மீறிப், போர்த்துக்கேயர் அதிகாரத்தில் கோட்டையை விட்டதனால், இராசசிங்கன் கோபமுற்று ஒல்லாந்தரோடு போர்தொடுத்து, ஒல்லாந்த தலைவனின் சிரசை வெட்டி யாழ்ப்பாணத்து பண்ணைக்கு அனுப்பிவிட்டான். அதனால் பயமுற்ற ஒல்லாந்தர் இராசசிங்கன் விருப்பத்திற்கிணங்க, போர்த்துக்கேயரை இலங்கையால் அகற்றி மட்டக்களப்பைக் கண்டியரசனிடம் கையளித்துவிட்டுக், கரைநாடுகளில் தமதது காரத்தைச் செலுத்திவந்தனர். இராசசிங்கன் தேகவியோக மடைந்தபின் ஏற்பட்ட வரட்சியினால் கண்டியரசர்கள் மட் டக்களப்பைக் கைநெகிழவிட்டனர். அத்தருணம் ஒல்லாந்தர் குடிமக்களைத் தாபரித்ததனால் திக்கதிகாரிகள் ஒல்லாந்த ரையே அரசு செய்வோராக ஏற்றிருந்தனர்.

யாழ்குடாக் குடியேற்றங்கள்:

போர்த்துக்கேயர் யாழ்குடாப் பண்ணை இராசதானிப் பகுதியை அறுபந்துநான்கு கிராமங்களாகப் பிரித்து கிறித்தவ மத ஆலயங்களை இக்கிராமங்களில் எழுப்பி, புத்தராலயங்க ளையும், சைவாலயங்களையும் இடிப்பித்துக் கிறித்தவ மதத் தைப் பரப்பிவந்தனர். இச்சமயம் மட்டக்களப்பில் கிறித்தவ மதப் பரப்புகைக்கு எதிராகக் கண்டி மன்னன் மலாயவீரர் துணைக்கொண்டு போர்த்துக்கேயரை அகற்றிக் காவல் வைத் திருந்தான். இதனையறிந்த யாழ்குடா நாடாரும், நம்பிகளும்,

கந்தப்பர் என்பவருடன் ஆலோசித்து, மட்டக்களப்பிற்குப் புலம்பெயர்ந்து வந்தனர். இவர்களுள் ஏழு நாடார்க் குடும்பங் களும், ஏழு ஆலய ஊழியக் கோவியக் குடும்பங்களும், மூன்று நம்பி குடும்பங்களும், கந்தப்பரும், சகோதரிமார் இருவரும், புதல்வியரும் இடம்பெற்றிருந்தனர். நாடார் குடும்பங்கள் ஏழு கண்ணகி அம்மன் விக்கிரகங்களையும், நம்பி குடும்பங்கள் அவ ரவர் வயிரவர் விக்கிரகங்களையும் எடுத்துவந்திருந்தனர். இவ் வாறு வந்த நாடார் குடிகள் மண்முனைக்கடுக்காகவும், நம்பி குடும்பங்கள் ஊறணிக்கருகாயும் குடியமர்ந்தனர். நம்பி குடும் பங்கள் கொண்டுவந்த வயிரவர் விக்கிரகம் வைத்து வழிபட்ட இடமே இன்றைய நரசிங்கவயிரவர் கோவிலாகலாம். நாடார் குடியேற்றங்கள் மட்டக்களப்பில் கண்ணகியம்மன் வழிபாட் டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கலாம். வெடியரசன் காலத்தில் (கி. பி. 2ம் நூற்றாண்டு) கண்ணகையம்மன் வழி பாடு மட்டக்களப்பில் பரவியிருந்தது என்பதினைச் சமய, சமூக வரலாற்றாய்வுகள் வலியுறுத்தியுள்ளன. இன்று மட்டக் களப்புப் பிரதேசத்தில் ஏறக்குறைய இருபத்தைந்து கண்ண கையம்மன் கோவில்கள் உள. இவற்றுள் ஏழு கோவில்களின் விக்கிரகங்கள் யாழ்குடாவிலிருந்து கந்தப்பர் கொண்டுவந்த தவை. எனவே மற்றயவை பெரும்பாலும் பழைய மரபில் வந்தவை என்பது உறுதியாகின்றது.

ஒல்லாந்தரின் இறுதிக்காலம்:

ஒல்லாந்தர் காலிங்கர், வங்கர், சிங்கர் ஆகிய முக்குலத் தவரை நிலைமைகளாய் வைத்து இருபது வருடங்கள் ஆண் டிருந்தனர். பின் இம்முக்குலத்தவரில் நம்பிக்கையிழந்து பண் ணையிலிருந்து பஸ்கோல் முதலியை அனுப்பியாண்டனர். பஸ்கோல் முதலி கிறித்தவ மதகுருமாருடன் வந்து கிறித்தவ தேவாலயமும் எடுப்பித்து (இது சொறிக்கல்முனையில் 1807ல் பஸ்கோல் முதலி கட்டிய கோயிலாகும்), பின் திமிலத்தீவில் கிறித்தவ குருமாரை வைத்து சமய விருத்தியைச் செய்திருந் தான். அதனை முக்குலத்தவர் எதிர்த்துத் தடுத்து நிறுத்தினர். பின் கண்டியரசன் தலையீட்டால் முக்குலத்தவரை நிலைமை களாய் வைத்து ஒல்லாந்தர் ஆண்டுவந்தனர். கீர்த்திசிறிராச சிங்கன் (கி.பி. 1747 - 1782) கண்டிக்கு அரசனாயிருந்தபொழுது ஒல்லாந்தர் மட்டக்களப்பை இரு பிரிவாகப் பிரித்து தெற்குப் பிரிவிற்குக் கந்தப்போடியையும், வடக்குப் பாகத்துக்கு அறு மக்குட்டிப் போடியையும் நிலைமைகளாய் வைத்தாண்டனர். அப்பொழுது பண்ணையிலிருந்து வந்து திறைவரி பெற்ற இரு

கணக்காளரை வெட்டிக் கொலை செய்வித்ததனால், ஒல்லாந்தர் மட்டக்களப்பால் விலகிக்கொண்டனர். இதன்பின்னர் மட்டக்களப்பு ஆங்கிலேயர் வசமாயிற்று. ஆனால் மட்டக்களப்பு மான்மியம் கண்டியரசனிடம் கொடுத்ததாகக் குறிப்பிடும். ஆங்கிலேயர் முற்றுமுழுதாக மட்டக்களப்பைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்வரை கண்டியரசுகளின் தலையீடுகள் இருந்திருக்கலாம்போற் தெரிகிறது.

முற்குகர் சட்டம் (முக்குலச் சட்டம்) :

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவரும் மலபார்வாசிகளுக்கு (மலையாளத்தார்) நாட்டின் வழக்குகள்–வழக்காறுகள் என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு ஒல்லாந்தரால் கோவைப்படுத்தப்பட்ட சட்டமே தேசவழமைச் சட்டமாகும். அத்தருணம் மட்டக்களப்பில் வழக்கிலிருந்த வழக்காறுகளையும் ஒல்லாந்தரே கோவைப்படுத்தி முற்குகர் சட்டமென வகுத்தனர். பெண்ணடி முதிசத்தையும், உரிமையையும் வற்புறுத்தும் முற்குகவழமை காலத்தால் மிகவும் பழமை வாய்ந்ததாகும். இது கலிங்ககுலத்துக்குப், பெண்சந்ததி இரண்டும் இராசகுலம் (ம. மா. பக். 92) என்பதனாலும், ஆடகசவுந்தரி, உலகநாச்சி முதலான பெண் அரசிகள் வைத்திருந்த அதிகார உரிமைகளினாலும், மற்று இராமநாதபுரத்தைச் சேர்ந்த மறவர்குலத்து அரசவமிசத்தைச் சேர்ந்த ஏழு பெண்களுக்கு ''வன்னிச்சிமார்'' என வழங்கப்பட்ட விருதுகளினாலும் இப்பெண்ணடி உரிமைகள் தோன்றியிருக்கவேண்டும். இப்பெண்ணடி உரிமைக்கு இன்னோர் காரணமும் உண்டு. தொல்லியல், வரலாற்று ஆய்வுகள் சேரநாட்டுச் சமூக பாரம்பரியங்களைப் பேணிய மக்கள், யாழ்குடா முதல் அனுராதபுரம் வரை கிறித்து சகாப்தத்திற்கு முற்பட்டகாலம் முதலாகவே வாழ்ந்துவந்துள்ளனர் என்பதனை அறிவுறுத்தியுள்ளன. இவர்களது கலாசாரப் பரவுகை தென்கிழக்கிலங்கைவரை இயல்பான குடியேற்றங்களால் காலந்தோறும் இடம்பெற்றிருக்கலாம். இதற்கு எடுத்துக்காட்டாக வெடியரசன் குடியினர் புலம்பெயர்ந்து மட்டக்களப்பு, புத்தளப்பகுதிக் கரைகளையடைந்த வரலாறுகளை நாம் சீர்தூக்கலாம். ஆயினும் கி. பி. 13ம் நூற்றாண்டில் படையெடுத்துவந்த கலிங்கத்து மாகோன் இருபத்து நாலாயிரம் கேரளப் படைவீரர்களுடன் வந்தான் என்றும், சிங்களமக்கள் காணி, பூமிகளை அபகரித்து இக் கேரள வீரர்களைக் குடியமர்த்தினான் என்றும் சூளவம்சம் கூறுவதனால், யாழ்ப்பாணத்தைப்போல, மட்டக்களப்பு நாட்

டிலும் மலையாளநாட்டுச் சம்பிரதாயங்கள் மேலோங்கலாயிற்று. எனவே யாழ்ப்பாணத்துச் தேசவழமைச் சட்டத்தில் பெண்ணின் சீதனம் அப்பெண்ணின் பிரத்தியேகச் சொத்தாகும். அதை அவள் முழுமையாகக் கட்டுப்படுத்தலாம். மனைவி இறக்குமிடத்து அச்சொத்து அவளின் பிள்ளைகளுக்கே சேரும் ஒழிய கணவனுக்கு எந்த உரிமையும் இல்லை. இவ்விதமே முற்குகச் சட்டத்திலும் சீதனச் சொத்து கணவனுக்குச் சேராது. அவன் பிள்ளைகளுக்கே சேரும் என்பதனாலும், பிள்ளைகளில்லாவிடில் பெண்வழிச் சந்ததியினருக்கே என்பதனாலும் பெண்ணடி உரிமைகள் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இனி ''தேசவளமை'' என்று யாழ்ப்பாணத்தில் இருக்க மட்டக்களப்பில் முற்குகர் சட்டமென ஒரு சாதியினரைக் குறித்துப் பெயர்பெற்ற பின்னணிகளை ஆராய்வோம். சாதியமைப்பு என்ற இயலில் குகன், முன்குகன், முற்குகன் என்று பெயர்பெற்ற பல குடியேற்றங்களைப்பற்றியும், முற்குகருடன் தொடர்பான பல இன வரலாறுகளையும் விரிவாக ஆராய்ந்துள்ளோம். அந்தச் சமூகப் பின்னணிகளை இங்கும் கருத்திற் கொள்ளல் அவசியம். சுருக்கமாக ஈண்டுக்குறிப்பிடின் கங்கைக்குகன் குடிவழியில் வந்தோராக மட்டக்களப்பு மான்மியம் நான்கு சந்தர்ப்பங்களிலே தெளிவாகச் சுட்டியுள்ளது. முதலாவதாகப் படையாட்சி குலத்தார் கலிங்க அரசுகளுக்குப் பாதுகாப்பளிக்கத் தருவிர்க்கப்பட்டிருந்தனர். இரண்டாவதாக சிங்ககுமாரன் காலத்தில் காளிகட்டத்திலிருந்து நாற்பது குகன் வீரியக்குடிகள் தென்கிழக்கிலங்கையில் மத்தங்கடவத்தையிற் குடியமர்த்தப்பட்டனர். மூன்றாவதாக உலகநாச்சி ஓரிசாவிலிருந்து தருவித்து மண்முனைப் பகுதியிற் குடியமர்த்திய குடிகள் குகன் மரபினர். நான்காவதாக மகமது சூசினியின் கொடுமையால் வடமதுரையிலிருந்து மூன்று படகுக் குகன் குடிகள் புலம்பெயர்ந்து வந்தபொழுது, இவர்கள் தோப்பாவை, தட்சணாபதி, மட்டக்களப்புப் பகுதிகளிற் குடியமர்த்தப்பட்டனர். இவர்களைத் தவிர பிறர் எவரையும் மட்டக்களப்பு மான்மியத்தின் முன்வரலாற்றுப் பகுதியில், குகன் குலத்தார் என்று குறிப்பிடவில்லை. மாகோன் ஆட்சிக்காலத்தின் பின், கலிங்க அரசுகள் நலிவுற, சிங்கரே தலையெடுத்து வங்கர் துணையுடன் கலிங்கரை வென்று அரசாட்சியைக் கைப்பற்றினர். இச்சமயம் முதன்முதலாகச் சிங்கர் தம்மைக் குகன் குலத்தார் என இனம்காட்டி, மற்று படையாட்சி, வங்கரையும் சேர்த்து ''குகன் குலத்தவர்'' எனத் திட்டம் செய்து ஆண்டனர். இத்தருணம் மகாவமிசத்தவராகிய கலிங்கர்

குகன் குலத்தாருள் சேர்க்கப்படவில்லை. ஆனால் காலப் போக்கில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் தலையீடுகளினால் கலிங்கர் நிலை இன்னும் மோசமாகிக்கொண்டிருந்தது. இத் தருணம் கண்டியரசன் தெரிந்தோ, தெரியாமலோ தெரிய வில்லை, கலிங்கரைக் குகன் குலத்தார்'' என்று கூறி நிலை மையாய் வைத்து ஆளும்படி போர்த்துக்கேயருக்குக் கூறி யிருந்தான்.

''செகமதில் திருச்சிரார் சேர் நகரோரிவர்
தலைமையிலுயர்ந்தோர் இராமநாட்டதிபர்
நிலையாய் வைத்து நீயிவை யாளென
விசையன் குலத்து வேந்தனுமுரைத்து
திசைகளையா ளெனச் சென்றனர் குகன்நகர்
பார்த்து மகிழ்ந்து பரிவொடு கலிங்கரை
சேர்த்து நிலைமையாய்ச் செய்திட இணங்கி
சங்க மொன்றியற்றித் தலைமையாய் வைத்து
போத்து நாட்டரசன் குகன் புகழ்பரப்பி''

(ம. மா., போடிக்கல்வெட்டு, வரி 41-50)

மேற்குறிப்பிட்டவாறு கலிங்க அரசர்கள் எக்காலத்தா வது இராமநாட்டதிபர், திருச்சிரா நகரோர் என்று தம்மை முன்பு இனம்காட்டியிருக்கவில்லை. இது சமுதாயத்தில் தாழ் வுற்றுச் சென்றுகொண்டிருந்த கலிங்கரை மீண்டும் உயரிய நிலையில் வைக்க எடுத்த முயற்சியாகும். எனவே இக்காலத் தில் கலிங்கர், வங்கர், சிங்கர் ஆகிய மூன்று குலத்தவரும் (முக்குலம்) சமமாகக் கருதப்பட்டார்கள். இம்மூன்று குலத்த வரின் வழக்காறுகளைக் கோவைப்படுத்திய சட்டமாகையால் இச்சட்டம் முக்குலச் சட்டம் எனப் பெயரிடப்பட்டது. காலப் போக்கில் முக்குலச் சட்டம், முற்குகர் சட்டமென்றும், முக்குல தேசம், முக்குல தேசமெனவும் திரிவுபடலாயிற்று. இதற்குக் காரணம் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் முற்குகராக இருந்தமையாம். இன் னோர் காரணம், ஒல்லாந்தர் இம்முக்குலச்சட்டத்தைத் தயா ரித்தபொழுது எழுவில், போரதீவு, மண்முனை, கோறளைப் பற்று எனும் பகுதிகளுக்குப் போடியாக இருந்த அறுமக் குட்டி சாதி முக்குவனாக இருந்தபடியினால், தன் பதவியின் செல்வாக்கைப் பயன்படுத்தி முக்குவரின் சமுதாய பாரம் பரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்தமையாம். இத்தகைய பின்னணியொன்று யாழ்குடாவிலும் அவதானிக்கப்பட்டுள் ளது. ஒல்லாந்தர் தம் உளவுகளுக்கு உடந்தையாக வரக் கூடிய வேலனை அதிகாரத்தில் வைத்து, விரும்பிய காணி

பூமிகளை எழுதிக்கொள்ளும்படி கூற, அவனும் தன் இனத் தவரை வேளாளர் பதிவேட்டிற் பதிந்து முதலிப் பட்டத் தினையும் சேர்த்துக்கொண்டான். அப்பொழுது ஊர்களில் கலகம் எழவே ஒல்லாந்தர் பழைய பதிவேடுகளை எரித்து விட்டுப் புதிய பதிவேடுகளைக் கச்சேரியில் வைத்தனர். (மு. கு. சிவப்பிரகாசம், மி. கு. பக். 161-162). மூன்றாவ தாக அறுமக்குட்டிப்போடி ஏற்படுத்திய குலவிருதுகளில் வேளாளருக்கு மேழிசுளியும், முற்குகர்க்கு எழுத்தாணி சுளி யும் வகுக்கப்பட்டிருந்தது. இதுவும் முற்குகர் குலத்தை முக் கியப்படுத்துவதற்காக எடுத்த முயற்சியாகும். முற்குகர் வரலாறுகள் அவர்கள் நெஞ்சுரம்மிக்க வீரர்களாகவும் சங்கு, முத்துக்குளிப்போராகவும் இருந்ததனால் சேதுபதி மன்னர் கொடிகளில் மகாவிஷ்ணு, இராமருடன் தொடர்புடைய கருடன், அனுமன் உருவங்களே பொறிக்கப்பட்டிருந்தன. யாழ்குடா வெடியரசன் முற்குகர் சின்னம், சங்கும் கருடனு மாம். இவ்வாறிருக்க மட்டக்களப்பில் முற்குகர் எழுத்தாணி சுளியைச் சின்னமாகக் கொண்டது சமுதாய அடிப்படைகளை மாற்றியமைக்க எடுத்த முயற்சியேயென்று இது தோன்று கிறது.

இயல் 4

மட்டக்களப்பு மான்மியம்
ஊரும் பேரும் -

ஒரு நாட்டின் ஊர்ப்பெயர் வரலாறுகளை ஆராய்வ தன்மூலம், அந்நாட்டின் பூர்வீக வரலாறுகளும், கலாசாரங் களும் துலக்கம்பெற வாய்ப்பேற்படுகின்றது. இந்நோக்கத் துடன் நாம் மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்ற ஊர்ப் பெயர்களை ஆராய்ந்தபொழுது ஒரு உண்மை பெறப்பட லாயிற்று. இராவணன் ஆண்டாலென்ன அல்லது அத்தினா புரத்துக் குருகுலநாகர் ஆண்டாலென்ன அல்லது அயோத்தி இரகுவமிசத்து சுாளிசேனன் ஆண்டாலென்ன அல்லது தென் னிலங்கைக் கலிங்கர் ஆண்டாலென்ன, குடிகள் பேசிய மொழி தமிழ் என்பதேயாம். மணற்றிடர், முள்ளுத்தீவு, மண்ணாறு, திருக்கோணப்பதி, மட்டக்களப்பு, மண்டூர், விண்டு அணை, கொட்டியனூர், சிங்காரத்தோப்பு, மண்கல் புட்டி, தம்பதிவில், நாகர்முனை, சங்குமண்கண்டு, மன்னன் பிட்டி, வேலாயுதர்வெளி போன்ற இன்னோரன்ன பழைய ஊர்ப்பெயர்கள் யாவும் தூயதமிழ் சொற்களேயாம். ஆதி நாகர்கள் தமிழையே வளர்த்திருந்தனர் என்பதனை இப் பெயர்கள் சுட்டி நிற்கின்றன. இராவணன் தென்னன், முற் பாண்டியர் சமகாலத்தவன் என்று பிறநூல்கள் குறிப்பிடுவத னாலும், மட்டக்களப்பு மான்மியம் சைவன் என்பதனாலும் தமிழையே அவனும் வளர்த்திருந்தான் எனத் தெரிகின்றது. மட்டக்களப்பு மான்மியத்தில் உள்ள சொற் பிரயோகத்தின் படி தமிழ்மதம் எனில் சைவம் என்பது பொருளாகும். மனு நேயகயபாகு ''தமிழ்மதம் ஓங்கச் சோழநாட்டுச் சிற்பி களை அழைத்துச் செப்பனிட்டான்'' (பக். 26) என்றும்,

தினசிங்கன் சிங்கர்குலமானபடியால் அவனாட்சியில் மட்டக்களப்பில் தமிழ்மதம் அருகிப்போகச் சமணம் பெருகியது (பக். 51-52) என்றும், மாகோன் மட்டக்களப்பு முழுவதும் தமிழ்மதமே வளரச்செய்தான் (பக். 54) என்றும் கூறுவதனால் தமிழ்மொழியின் சிறப்புநிலை புலனாகின்றது. இன்னும் கி. பி. 11ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழர் படையெடுத்து வந்தபொழுது தமிழர்கள் பரவிவாழ்ந்த இடங்களை மட்டக்களப்பு மான்மியம் பின்வருமாறு குறிப்பிடும்.

''குலசேகரன் (மூன்றாம் குலோத்துங்க சோழனாயிருக்கலாம் கி. பி. 1163 – 1216) இலங்கையில் வந்து மண்ணாறு, முள்ளுத்தீவு, கொட்டினூர் இவைகளிலுள்ள தமிழர்களை அதட்டிப் பயமுறுத்தி நாமதாரியாக்கி அந்நாட்டு அரசினர்களையும் அஞ்சச்செய்து மட்டக்களப்பில் வந்து நாதனைக் கண்டு பின்பு / நாதன் மட்டக்களப்பைச் சோழகுலத்துக் குலசேகரன் நிழலில் மாற்றி அரசுபுரியுமாப்போல தமிழர்களை நாமதாரியாயிருக்கவைத்து (பக். 50)'' இக்குறிப்புகளிலிருந்து இலங்கையில் தமிழ்மக்கள் வரலாறு எவ்வளவு நீண்டகாலத்தைத் தழுவியுள்ளதென்பதனை நாம் உய்த்துணரலாம்.

இனி வெவ்வேறு கட்டங்களில் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து குடிமக்கள் தருவிக்கப்பட்டுக் குடியமர்த்தப்பட்டார்கள் என மட்டக்களப்பு மான்மியம் விபரிக்கும். அத்தகைய குடியேற்றங்கள் தொடர்பான ஊர்ப்பெயர்கள், ஒன்றில் புவியியல் அமைப்பின் இயல்புகளைச் சுட்டுவதாகவோ அன்றேல் குடியேறிய குடிகளின் சாகித்தியங்களைச் சுட்டுவதாகவோ அன்றேல் வரலாற்று நிகழ்ச்சிகளைச் சுட்டுவதாகவோ அமைந்துள்ளன. இக்குடியேற்றங்களுடன் தொடர்பான ஊர்ப்பெயர்கள் யாவும் தூயதமிழ்ப் பெயர்களாகவே காணப்படுகின்றன. ஓரிரண்டு திரிபுபெற்றுச் சிதைவடைந்திருக்கின்றன என்ற உண்மையை நாம் அறிய உதவுவது மட்டக்களப்பு மான்மியக் குறிப்புகளேயாம். இத் தமிழ்க் குடியிருப்புக்களிடையே 16ம் நூற்றாண்டளவில் இடம்பெற்ற இஸ்லாமியக் குடியேற்றங்கள்கூட தூயதமிழ்ப் பெயர்களையே கொண்டமைந்தமைக்குக் காரணம், இஸ்லாமியரும் தமிழ் மொழிப் பற்றுடையவர்களாக, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தமையேயாம். இவ்வூர்ப் பெயர்கள் காலவெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்ட பல சுவைமிக்க வரலாறு களை மீளக் கட்டியெழுப்பவல்லனவாகக் காணப்படுகின்றன. இனி மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்ற ஊர்ப்பெயர் களின் பழைய வரலாறுகளை நோக்குவோம்.

இலங்கை :

''எல்'' எனும் அடியிற் பிறந்த இப்பெயர் இலங்குதல் எனும் பொருள் தரும். இப்பெயர் தொடக்கநிலையில் திருக்கோணமலை முதல் தெற்கே இராவணன் கோட்டைகள் வரையுள்ள பிரதேசத்தையே குறித்தது. (பார்க்கவும்: எமது இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும் பக். 44–54). மட்டக்களப்பு மான்மியம் இவ்விலங்கைப் பிரதேசத்தை முதலில் ஆண்டவன் குபேரன் என்றும், பின் இராவணன் அவனை அரசால் நீக்கி ஆண்டிருக்கையில் இராம – இராவண யுத்தத்தால் இலங்கை செழிப்பிழந்து நீராற் பாழ்பட்டிருக்கையில், அத்தினாபுரியைச் (ஹஸ்தினாபுரம்) சேர்ந்த குருகுல நாகர்கள் இலங்கையையடைந்து இயக்கரோடு சேர்ந்து உகந்தையைத் தலைநகரமாக அமைத்து ஆட்சிபுரிந்தனர் என்றும் மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடும். இதனால் இராவணன் தலைநகரான இலங்காபுரி அழிவுற்றபின் உகந்தை இலங்கையின் இரண்டாவது தலைநகராக அமைக்கப்பெற்றிருந்தது என்பது புலனாகின்றது. இலங்கையின் மூன்றாவது தலைநகராகக் காளிதேசம் அமைந்திருந்தது என்பதனையும் மட்டக்களப்பு மான்மியம் விபரிக்கும். அயோத்திநாட்டு இரகுவமிசத்தைச் சேர்ந்த காளிசேனன் (காலசேனன்) படையுடன் வந்து இயக்கர் நாகரை வென்று காளிதேசத்தைத் தலைநகராக அமைத்து ஆண்டிருந்தான். இவன் காலத்திலேயே விசயனும், தோழரும் மணற்றிடரையடைந்து அங்கு நாகர் தெரிவித்த தகவல்களைக்கொண்டு முள்ளுத்தீவினூடாக காளிதேசத்தையடைந்தனர். பின், தன்னையாதரித்த காளிசேன மன்னனையும், அவன் பிரதானிகளையும் குவேனியின் சூழ்ச்சியினால் உறங்கச்செய்து, அவர்களைக் கொன்று, மலைநாட்டில் ''விசயதுவீபம்'' எனும் அரசினை உருவாக்கிச் சிங்கக்கொடியும் உயர்த்தி ஆண்டிருந்தான். இவனுக்குப்பின் வாரிசின்மையினால், சிங்கவமிசத்தாரின் வேண்டுகோட்கிணங்கி கலிங்கமிருந்து வந்தவனே சிறிகுலசேனன் ஆவன். சிறிகுலசேனன் கலிங்கரிற் கலந்த வங்ககுலத்தவன். (காலப்போக்கில் இவன் பரம்பரையினர் இலங்கையிற் தம்மைக் காலிங்கரென அடையாளம் காட்டிப் பிற வங்கரைத் தமக்கடுத்த நிலையிலே வைத்திருந்தனர்).

சிறிகுலசேனன் மகன் கூத்திகன் இளவரசுப் பட்டம் பெற்று ஆண்டிருக்கையில் சமித்துவின் மூன்றாவது புதல்வன் பந்துவாசன் வங்கர் குலத்து எல்லாளனையும் துணைசேர்த்

துக்கொண்டுவந்து விசயனின் ஆட்சியுரிமையைக் கோரினான். அத்தருணம் சிறிகுலசேனன் சமித்துவின் வேண்டுகோட்கிணங்கி இலங்கையை மூன்று பங்காகப் பிரித்து பந்துவாசனுக்கு விசயதுவீபத்தையும், வடமேற்குத் தொடங்கி வடகிழக்கு வரையுமுள்ள பங்கை எல்லாளனுக்கும் பட்டம் கட்டிவிட்டுத் தனது மகன் கூத்திகனுக்கு விசயதுவீபமிருந்து தென்மேற்குத் தொடங்கித் தென்கிழக்கு வரையுமுள்ள தென்கிழக்கிலங்கையைப் பட்டம் கட்டினான். இந்நாள் முதலாக தென்கிழக்கிலங்கையில் கலிங்கருக்கென ஒரு தனியாட்சிப் பிரிவு இருந்துவந்துள்ளது. இப்பிரிவினையாட்சிபுரிந்த கலிங்கர் தம்மைத் தென்னிலங்கைக் கலிங்கரென இனங்காட்டி ஏறக்குறைய இருபது நூற்றாண்டுகளுக்குத் தென்கிழக்கிலங்கையை ஆண்டுவந்துள்ளனர். தென்னிலங்காபுரியில் உருவாகியிருந்த கலிங்கரின் சுயாதீன ஆட்சியானது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் தலையீடுகளினால் தனித்துவத்தை இழக்கலாயிற்று. இந்நிலையில் மட்டக்களப்பு மான்மியமே இவ்வரசின் வரலாறுகளைப் பேணி எமக்களித்துள்ளது எனில் மிகையாகாது.

தட்சணாபதி :

திருகோணமலையை மட்டக்களப்பு மான்மியம் தட்சணாபதி, தட்சணாகிரி, தட்சணாகயிலை, திரிகோணப்பதி எனும் பெயர்களாற் குறிப்பிடும். இராவணன் இத்தட்சணாகிரியில் முக்கோண வடிவுள்ள ஒரு இலிங்கத்தை நிறுவிக் கன்னியாகுமரியெனும் ஏழு தீர்த்தங்களையும் வெட்டுவித்து சிவபூசை செய்திருந்தான். அவன் இறந்தபின் இச்சிவாலயம் பாழ்பட்டிருந்தது. இவ்வாறிருக்கையில் மேல்வங்கர் குலத்து மகாசேனன் இலங்கைக்கு மன்னனாக வர ஆவல்கொண்டவனாய், அக்காலத்தில் அனுராதபுரத்தையாண்டிருந்த கலிங்க குலத்துத் தத்ததீசனுடைய சகோதரன் சங்கமிகுந்தனைக் கலிங்கதேசம் போய்க் கண்டு, அவனிடம் தன் கருத்தினைத் தெரிவித்தான். அப்பொழுது சங்கமிகுத்து இராவணன் வைதூலிய சைவத்தைப் (வேதக்கிரிகை வழிபாட்டுமுறைகள்) பேணி வழிபட்டுவந்த தட்சணாகயிலை சிதைவுற்றிருப்பதனால், அந்த ஆலயத்திற் திருப்பணிகள் செய்து பூசைகளை ஆரம்பித்து வைதூலிய (வைதீக) சமயத்தை வளரச்செய்தால் இலங்கை முழுவதும் ஆளும் பலன் கிடைக்குமென்று கூறவே, மகாசேனன் வங்கநாட்டுச் சிவாலயமியற்றும் சிற்பிகளுடன் வந்து, தட்சணாகயிலைக்கப்பாலிறங்கி அனுராதபுரத்தில் தத்தீசனைக் கண்டு வைதூலிய சமயத்தைப் போதித்து,

அவனைக் கைவசப்படுத்தி தட்சணாபதி ஆலயத்தையும் நேர்பண்ணி, பூசைகள் ஆரம்பித்து, மீனேரி (மகர) வாவியையும் வெட்டுவித்து, நெற்கழனிகளையும் திருத்தி இவ்வாலயத்திற்கு வழங்கிப் புத்தராலயங்களையும், விகாரைகளையும் இடிப்பித்திருந்தான். இக்காலத்தில் உன்னரசுகிரியையாண்டிருந்த ஆடகசவுந்தரி இதனைக் கேள்விப்பட்டு மகாசேனன் நேர்பண்ணிய சிவாலயங்களை இடித்துக் கடலில் தள்ளிவிடும்படி தன் படையினருக்குக் கட்டளையிட்டாள். அவளுடன் போரை விரும்பாத தெத்தீசன் மகாசேனனுடன் சென்று, அவளைக் கண்டு சமாதானமாகினர். பின் மகாசேனன் அவளையும் வைதூலிய சமயத்தைப் பேணவைத்துத் திருமணம் செய்துகொண்டான். தெத்தீசன் மகாசேனனாலிடித்த விகாரைகளை நேர்பண்ணி, ஒவ்வொரு விகாரைத் தளங்களிலும் முருகனாலயங்களை இயற்றுவித்துப் பூதங்களால் ஏரியுமுண்டாக்கிக் 'காந்தளை' (கந்தளாய்) எனப் பெயரிட்டான். மகாசேனன் தன் இறுதிக்காலத்தில் திரிகயிலையில் வாழ்ந்து முத்தியடைந்தான். (ம. மா. பக். 32–35).

இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் மகாசேனனைத் திரிகயிலையுடன் தொடர்புகாட்டுகையில், மகாவம்சம் மகாசேனனை வேறோர் வகையில் தொடர்புபடுத்துவதனை ஈண்டு நோக்குவோம். மகாவம்சம் (37:41) கோகர்ணத்திலிருந்த சிவதலத்தையிடித்து கோகர்ண விகாரையைக் கட்டியவனாகக் குறிப்பிடினும், இன்னோரிடத்தில் (மகாவம்சம் 36 : 112) வைதூலியக் கொள்கையுடையோர் புத்தருடைய போதனைகளுக்குக் கேடு பயப்பவர்களாக இருந்தார்கள் எனும். இவ்வாறு இரு நூல்களும் முரண்பட்டு நிற்பதனால், வரலாற்றினைத் திரிவுபடுத்திக் கூறும் நூல் எது என்பது கேள்விக்குறியாக உளது.

இனி, தட்சணாபதி நகரின் அரசியல் வரலாறுகளை நோக்குவோம். மட்டக்களப்பு மான்மியம் ஆதியில் தட்சணாபதியை இராவணன் ஆண்டிருந்தான் என்றும், அவன்பின் கைவிட்டப்பட்டிருந்த நகராய் இருக்கையில், கலிங்கத்து இரஞ்சலன் வந்து தென்கிழக்கிலங்கையில் இயக்கர் நாகர் அமைத்திருந்த விண்டு அணை (விந்தனை) இராசமாளிகையுடைத்து இயக்கர் குலத்தவரை வடக்கு மாவலிகங்கைக்கப்பால் துரத்தியபின், அனுரதபுரத்தையாண்டிருந்த சோரநாகனுடன் உடன்படிக்கை செய்து தெட்சணாபதியை இயக்கர் குலத்திமிலருக்கீந்தனர் என்றும் குறிப்பிடும். இயக்கருக்குப் பின் தட்சணாபதியை மணற்றிடர், மஞ்ணாறுப் (மன்னார்) பகுதிகளையாண்டிருந்த குருகுலநாகரும், இவர்பின் மட்டக்களப்பை

யாட்சிபுரிந்த கலிங்கரும் ஆண்டிருந்தனர் என்பதும் மட்டக்களப்பு மான்மியம் (பக். 24-25) தரும் வரலாறுகளாம். உண்மையில் திருகோணமலையின் வரலாற்றை ஆராய்ந்தோர் மகாசேனன் காலத்திற்கு முன்பின் அங்கு என்ன நடந்தது என்று அறியமுடியாது இருந்தனர். ஆனால் இக்காலப்பகுதியில் திருகோணமலையில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிப்பது மட்டக்களப்பு மான்மியம் ஆகும். அதனால் தட்சிணகலையுடன் தொடர்புகொண்டிருந்த இயக்கர், நாகர், கலிங்கர் வரலாறுகளையும் நன்கு விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

உகந்தை, உகந்தகிரி :

இராவணன் வரலாற்றுக்கு முற்பட்ட கந்தன் படையெடுப்புடன் இம்மலை தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. மரபுக் கதைகளின்படி முருகன் சூரனுக்கெதிராக நடத்திய போரில், இம்மலையில் உகந்து படைவீடு அமைத்திருந்தபடியினால், இம்மலை உகந்தை என அழைக்கப்படலாயிற்று எனத் தெரிகின்றது. இன்னோர் மரபுக்கதை முருகனுக்கும், சூரனுக்குமிடையே நடந்த போரில் முருகனின் வேல் சூரனின் நெஞ்சைத் துளைத்து வரும் வழியில் எதிர்ப்பட்ட வாகூர மலையைப் பிளந்து கடலில் வீழ்ந்தபின் வேலுருக்கொண்ட மூன்று கதிர்களைச் சிந்தியதென்றும், அவற்றிலொன்று உகந்தமலையில் பதிந்ததென்றும் குறிப்பிடும். ஆனால் இராவணன் காலத்து உகந்தை வரலாற்றை மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகையில், இராவணன் இங்கு சிவனுக்கு ஆலயமியற்றி வழிபட்டிருந்தான் என்றும், பின் இக்கோவில் பாழடைந்திருக்கையில் உன்னரசுகிரியையாண்ட சிங்ககுமாரன் (மகாசேனன் ஆடகசவுந்தரி மகன்) தந்தையைப்போல் தானுமொரு சிவாலயமியற்ற விரும்பி உகந்தமலையுச்சியில் வடநாட்டுச் சிற்பிகளைத் தருவித்து சிவாலயம், விஷ்ணுவாலயம், பிரமாவாலயம் இயற்றுவித்து, மலையடிவாரத்தில் எட்டுத்திக்கிலும் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் முதலானோருக்கும் ஆலயமும், செப்புக் கொடித்தம்பமும் எடுப்பித்து மலையுச்சியில் ஒரு தங்கக் கொடித்தம்பமும் நிறுத்தினான். பின் நெல்வயல்கள் திருத்தி, குமுகனல் வாய்க்காலிலிருந்து மூன்று ஏரிகளில் நீரைத் தேக்கிப் பயிர்செய்த நெல் வருவாயில் உகந்தை நித்திய திருப்பணிக்கென ஐந்நூறு அவண நெல்லும், அந்தணர் முதலான ஊழியர்களுக்கு இருநூறு அவண நெல்லும் வழங்க ஏற்பாடுகள் செய்தான். அதனோடு ஆடித்திங்கள்,

அமாவாசை ஆகிய இரு தினங்களிலும் இராவணேசுவரருக்குத் தீபமேற்ற வகுத்து, புவனத் திருப்பணி அதிகாரரே (கலிங்ககுல அரசர்கள்) இக்கோவிற் கடமைக்காரர் (ம. மா. பக். 39) என்பதனையும் வகுத்திருந்தான். இவ்வாறு காலத்தால் முற்பட்ட வைதீக சைவநெறி வழிபாடுகள் உகந்தையிற் பேணப்பட்டிருந்தது. ஆனால் உகந்தையில் இம்மரபுகள் எவ்வாறு கைவிடப்பட்டன என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் இல்லை. எனினும் சிங்கர் மரபினனான தனசிங்கன் மட்டக்களப்பையாண்டிருக்கையில் சிவாலயங்களை இடித்து நிதிகளைச் சோழநாட்டிற்கு அனுப்பிவந்தான் (ம. மா. பக். 51-53) என்பதனால் இக்காலத்தில் இக்கோவில் அழிக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது. எனினும் இப்பழைய பதியில் இன்று எழுப்பப்பட்டுள்ள கோவிலின் தொடக்க நிலைகள், அறக்கட்டளைகள், நிருவாக முறைகள் பற்றி திரு. வி. சி. கந்தையா, மட்டக்களப்புச் சைவக் கோவில்கள் எனும் நூலில் விபரித்துள்ளார். இது தற்கால உகந்தையின் பெருமையை நாம் உணரவைக்கும்.

காளிதேசம் :

அயோத்திநாட்டு இரகு வமிசத்தில் வந்தவனாகிய காளிசேனன் (காலசேனன்) படை திரட்டிவந்து இலங்கையில் இயக்கர், நாகர்களை வென்று தென்கிழக்கிலங்கையையாண்டிருந்தான். அவனுடைய இராசதானம் ''காளிதேசம்'' என அவன் பெயரால் அழைக்கப்பட்டது. விசயனும், தோழரும் மணற்றிடக்கரையிலிறங்கி, அங்கு வாழ்ந்திருந்த நாகர் குடிகளைக் கண்டு அவர்களது முதலரசனை வினவ, அவர்கள் தமது முதலரசன் அயோத்திநாட்டு இரகு வமிசத்தோன்றலான காளிசேனன் என்றும், அவனுடைய தலைநகர் தென்கிழக்கிலங்கையிற் 'காளிதேசம்' என்று தெரிவித்ததனால் காளிதேசத்தின் உருவாக்கம் வலியுறுத்தப்படுகின்றது. மட்டக்களப்புப் பிரதேசத்தை முதலில் ஆண்டிருந்த கலிங்க மன்னனாகிய கூத்திகனும் காளிதேசத்தையே தன் இராசதானியாக வைத்திருந்தான். (ம. மா. பக். 20). தென்கிழக்கிலங்கையில் காளிதேசத்தின் பெருமை ஒல்லாந்தர் காலம்வரை நீடித்திருந்தது. போர்த்துக்கேயர் கி. பி. 1626ல் புலியமாறனுடைய கோட்டையை முற்றுகையிட்டுப் பின் தம் கோட்டையை அங்கு கட்டும்பொழுது காளிதேசத்தில் காளிசேனனுடைய கோட்டைக்கருகிலிருந்த களப்பிலிருந்த கல்லை எடுப்பதற்காக மண்முனையிலும், போரமுனையிலுமிருந்த மேட்டை வெட்டிக் களப்பில் ஓடங்கள் விட்டு எடுப்பித்தனர்

என்பதனாலும், ஒல்லாந்தப் பிரதிநிதியான பஸ்கோல் முதலி (கி. பி. 1807) மட்டக்களப்பை நிருவகித்திருக்கையில், போர்த்துக்கேயப் பிரதானியொருவன் காளிதேசத்தில் வர்த்தகம் செய்தான் என்பதனாலும் காளிதேசத்தின் பெருமை பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை நீடித்திருந்தது என்பது புலனாம். இவ்விராசதானியை எருவில் போரதீவுப்பகுதியெனவும், காளிசேனன் மாளிகை கோட்டைக்கல்லாற்றிலிருந்ததென்றும் சி. கணபதிப்பிள்ளை கருதுவார். (பூர்வீக சப்தஸ்தலங்கள் பக். 23) கூத்திகன் நகர்வலம் வந்து இருந்து போவதற்காக ஒரு சிங்காசன மண்டபமியற்றி சிங்காரமண்டபமெனறும், அதனருகில் தோப்பொன்றை உண்டாக்கிச் சிங்காரத்தோப்பு என்றும் பெயரிட்டு அவற்றின் அருகுள்ள இடங்களையும் திருத்துவித்து வீரர்முனை, மட்டக்களப்பு, மண்கல்புட்டி எனப் பெயரிட்டுக் குடிகளைக் குடியேற்றினான் என்பதனால் 'காளிதேசம்' இப்பகுதிகளையண்டிய பிரதேசமென்பது தெளிவாகின்றது. எனவே காளிதேசம் எனும் பழைய இராசதானி இன்றைய மாளிகைக்காடு, நிந்தாவூர், அட்டப்பள்ளம், சிங்காரத்தோப்பு முதலான ஊர்களையுள்ளடக்கியிருந்தது எனில் தவறாகாது.

காளிகட்டம்:

காளிசேனனின் இராசதானமாகிய காளிதேசத்தைக் கூத்திகன் தலைநகராக வைத்திருந்த காலத்து அதனையண்டிய பகுதிகளில் காளிகட்டத்திலிருந்து குடிகளைத் தருவித்துக் குடியமர்த்தினான் என்பதனால் காளிதேசம், காளிகட்டம் (காளிநாடு) என்பன வெவ்வேறு ஊர்ப்பெயர்கள் என்பது புலனாகின்றது. இக் காளிகட்டம் இன்றைய கல்கத்தா (கிழக்கிந்தியப்பகுதி) என அடையாளம் காணமுடிகின்றது. ஏனெனில் தேசமென்று கூறிப் பங்குவாங்கிய கலிங்கர் தம் முன்னோரிருந்த தேசம்பற்றிக் கூறுகையில்,

''பேர்பெரிய வெனது முன்னோரிருந்த தேசம்
பிரமபுத்ரா நதிதனக்குப் பக்கமாகும்
ஆரெதிரி யில்லாமல யோத்தி வங்கம ரிபுரம்
காளிகட்டஞ் சேர் ஒறிசாதேசமது
ஏரணிகள் முன்பின் படைகள் சூழ சிவகோத்திரத்
திறமையுடன் செங்கோலோச்சி
நீர்சூழுமிலங்கை முற்றுமிராவணன் பின்
நிலையரசு புரிகலிங்க ராசனானே''
(ம. மா. பக். 104)

என்பதனால் காளிகட்டம் கிழக்கிந்தியப் பிரதேசம் என்பது

புலனாகின்றது. எனவே காளிதேசம், காளிகட்டம் எனும் பெயர்கள் கூட்டும் வரலாற்றுப் பின்னணிகளை வைத்து வரலாறுகளைப் பிரித்தறிதல் வேண்டும்.

விசயதுவீபம்

விசயன் தென்கிழக்கிலங்கையில் காளிதேசம் எனும் இராசதானியையியற்றி ஆண்டிருந்த காளிசேனனையும், அவனது பிரதானிகள், படைவீரர் யாவரையும் குவேனியின் மாயையால் உறங்கச்செய்து வெட்டிக் கொன்றபின் தென்னிலங்கையில் ஒரு மலைநாட்டைப் பட்டினமாக்கி ''விசயதுவீப''மெனப் பெயரிட்டுத் தந்தையின் சிங்கக்கொடியைப் பறக்கவிட்டு ஆட்சிபுரிந்தான் என்பதனாலும், விசயனுக்குப்பின் ஆட்சிபாரத்தை ஏற்கவந்த கலிங்கனான சிறிகுலசேனன் வங்ககுலப் படகிலேறிக் காளிதேசமிறங்கி விசயதுவீபத்தை அணுகினான் (ம. மா. பக். 17) என்பதனாலும் விசயனுரு வாக்கிய விசயதுவீபம் தென்னிலங்கையில் காளிதேசத்தினூடாக அணுகக்கூடிய் மலைநாட்டுப்பகுதியென்று தெரிகின்றது. இது பிபிலை, வதுளைப் பாங்கரில் அமைந்திருக்கலாம். குவேனியின் மக்கள் மாமன்மாருக்குப் பயந்து விந்தனைக்காட்டுக்குள் ஓடிமறைந்தனர் என்ற மகாவம்சக்கூற்றுக்களும் இதனையே வலியுறுத்துகின்றன. விசயதுவீபம், காளிதேசம் ஆகிய அரசுகளை முறையே சிங்கரும் (சிங்களவரும்) கலிங்கரும் ஆட்சிபுரிந்தனர் என்பதனால் இவ்விரு இனத்தாரும் வேறுபட்ட குலங்கோத்திரத்தார் என்பது புலனாகின்றது. அவ்விசயதுவீப வரலாற்றில், சேரநாகன் (சோரநாகன்) அனுராதபுரத்திலிருந்து ஆட்சிசெய்திருக்கையில், தென்னிலங்கைக் கலிங்கர் ஆட்சியை உறுதிப்படுத்திய இரஞ்சலன் சோரநாகனுடன் உடன்படிக்கை செய்து இலங்கையைப் பன்னிரண்டு பாகமாகப் பிரித்து எட்டுப் பங்கை விசயதுவீபத்திற்கவித்து மட்டக்களப்பைத் திறையற்ற இராச்சியமாக்கினான் என்பதனால், சோரநாகன் காலத்தில் விசயதீவத்தின் தலைநகர் அனுராதபுரத்திற்கு மாற்றப்பட்டிருந்தமை புலனாகின்றது. இக்காலத்தில் விசயதுவீபத்தின் பகுதிகளாக அனுராதபுரம், நுவரை, கழனி, நுவரெலி, மாத்தளை, காலி, விந்தனை, வதுளா என்பன இருந்துள்ளன. பின், மாகனுக்குப்பின் மட்டக்களப்பில் கலிங்கர் ஆட்சிகள் தளரவே, சிங்கர், வங்கர் துணையுடன் மட்டக்களப்பு, குடாநாடு, மண்ணாறு, காளி (காளிதேசம்), அம்மான்தோடை, இரத்தினவல்லிநாடு, முள்ளுத்தீவு, தட்சணாபதி, கொட்டியனூர், தோப்பாவை முதலான பிற ஆட்சிப்பிரிவுகளையும் விசயதுவீபத்தின் ஆட்சிக்

குட்படுத்தி குற்றவாளிகளை விசாரித்தனர். (மணற்றிடர் உட்படவில்லையென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது). மற்று, இக்காலத்திலேதான் விசயதுவீபம் எனும் பெயர், கண்டி நகரெனப் பெயர்மாற்றஞ் செய்யப்பட்டதென ம. மா. குறிப் பிடும். கலிங்ககுலத்து மாருதசேனன், அவன் மகன் எதிர்மன்ன சிங்கன் காலத்தில் தோப்பாவை, மட்டக்களப்பு, உன்னரசு கிரி, கோறளைப்பற்று என்பன கலிங்கராட்சிக்குட்பட்டிருந் தன. போர்த்துக்கேயர் கி.பி. 1626ல் மட்டக்களப்பைக் கைப் பற்றி சிவாலயங்களையும், பௌத்தராலயங்களையும், இடித் துக் கிறித்தவ ஆலயங்களை நிறுவியதனால், மட்டக்களப்பு நிதிய அதிபர்கள் கண்டியரசரின் (விசயதுவீபம்) உதவியை நாடினர். அத்தருணம் கண்டியரசுகள் முஸ்லீம் வீரர்களினுதவி யுடன் போர்த்துக்கேயரை அகற்றி மட்டக்களப்பைத் தம தாட்சிக்குட்படுத்தினர். இக்காலத்திலேதான் மட்டக்களப்பி லிருந்து கண்டிக்கொரு பாதை அமைக்கப்படலாயிற்று. (இப் பாதை சம்மாந்துறையூடாயிருந்ததென வி. சி. கந்தையா கருதுவர். 'வேறுசிலர் பட்டிருப்பூடாக இருந்ததென்பர்). இக் காலம்முதல் ஆங்கிலேயர் காலம்வரை மட்டக்களப்பு ஆட்சி பீடம் போர்த்துக்கேயர், கண்டியரசர், ஒல்லாந்தர் ஆட்சி களுக்கு மாறிக்கொண்டிருந்தது. (ம. மா. 63-69). இவ்வாறு விசயதுவீப அரசுகளுக்கும், மட்டக்களப்பு அரசுகளுக்கு மிடையேயிருந்த அரசியற் தொடர்புகளை மட்டக்களப்பு மான்மியம் எடுத்துக் காட்டியிருக்கின்றது.

மட்டக்களப்பு

'மட்டம்' மட்டமானது எனும் பொருள்தரும் சொல். 'களப்பு' நீர் தேங்கிநிற்கும் நிலைகள் எனப் பொருள்தரும். எனவே மட்டமான நீரினையுடைய கடலேரி அல்லது சேற்று வாவியையே மட்டக்களப்பு என அழைக்கப்படலாயிற்று. இத் தகைய புவியியல் தோற்றங்களை 'கழிகுடா' என்றும் அழைப் பர். மடை என்ற தமிழ்பதம் சேறு எனும் பொருள்தரும். இம்மடையெனும் தமிழ்ப்பதத்திலிருந்து திரிபடைந்த சொல்லே 'மட' என்னும் சிங்களப் பதமாகும். அதனால் சிங் களத்திலும் 'மடகளப்பு' என்பது சேற்று வாவியையே குறிப் பதாகும்.

பழைய மட்டக்களப்பு நகர்

மட்டக்களப்பு மான்மியம் எவ்வாறு முதலில் மட்டக் களப்பு எனும் நகர் உருவாக்கப்பட்டதென்பதனை விபரிக் கையில், கூத்திகன் சிங்காரத்தோப்பிற்கு மேற்கிலிருந்த மண்

கல் மலையாயிருந்த புட்டியை காவிநாட்டால் வந்த குடிகள் மட்டம்மட்டமாய் வெட்டி மூடிக்கொடுக்க, அந்த இடத்தில் மாளிகை உண்டாக்கி ''மட்டக்களப்பு'' எனப் பெயரிட்டான் என்றும், அக்களப்பு முனையில் சாலைகளமைத்து வீரர்களை இருத்திய இடத்திற்கு 'வீரர்முனை' என்று பெயரிட்டான் என்றும் விபரிக்கும். (பக். 20). எனவே இப்பெயர் ஆய்வி லிருந்து எமக்கு என்ன புலனாகின்றதெனில் தென்கிழக்கிலங் கையில் மட்டக்களப்பு இராசதானியை உருவாக்கிய கலிங்க ரும், அவர்களாண்ட குடிமக்களும் பேசிய மொழி தமிழ் என் பதேயாகும். மற்று, ஆதியில் மட்டக்களப்பு இராசதானமாய் அமைந்தவிடம் இன்றைய வீரமுனைக்கும், மலக்கம்பிட்டிக்கும் (மண்கல்பிட்டி) அருகாய் இருந்தது என்பதும் புலனாகின்றது. இம்மட்டக்களப்பினையே வீரமுனைச் செப்பேடு, சீர்பாதர் வரன்முறைக் கல்வெட்டு, கண்ணகி வழக்குரைகாதை (துரி யோட்டுகாதை செய். 151, 152) என்பனவும் குறிப்பிட்டுள்ளன.

புதிய மட்டக்களப்பு நகர்

காலப்போக்கில் போர்த்துக்கேயர் தம் கோட்டையை மண்முனைக்கு வடக்காகக் கட்டியிருக்க, அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்தரும் போர்த்துக்கேயர் கோட்டையைப் பூர்த்தி செய்து ஆட்சி புரிந்தனர். (இக்கோட்டையே இன்றைய கச் சேரிச் செயலகமாக இயங்கிவருகின்றது). இக்காலப்பகுதியிலே தான் வடக்கே உருவாகிய மட்டக்களப்பு நகர் ''மண்முனை மட்டவாழ்வுறு களப்பு'' எனப் புகழ்பெறலாயிற்று. இன்று இம்மட்டக்களப்பு நகர் கோட்டமுனை, புலியந்தீவு (புலிய மாறன்தீவு), ஆனைப்பந்தி, தாண்டவன்வெளி, சிங்களவாடி, தாமரைக்கேணி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய நகராகக் காணப்படுகின்றது. ஆனால் ''மண்முனை'' மட்டக்களப்பு வாவிற்குத் தெற்காய் தனிப்பிரிவாக அமைந்துள்ளது. ''மட் டக்களப்பு'' போர்த்துக்கேயர் பேச்சில் ''வற்றிகலோ'' எனத் திரிபடையலாயிற்று. ஏரியெழும் மட்டமெனும் களப்பின் வர லாறு இவ்வாறு பல வரலாற்றுப் பின்னணிகளைத் தன்னகத் தில் அடக்கியுள்ளதென்பதனை இப்பெயர் வரலாற்றினைப் படிப்போர் உணர்வர்.

வீரர்முனை

''வீரர்முனை'' எனும் ஊர் உருவாகிய வரலாற்றை ம. மா. விபரிக்கையில், கூத்திகமன்னன் மட்டமான களப்பின் மீது தனக்கமைக்கப்பட்ட மாளிகைக்கருகாய் களப்புமுனையில் சாலைகளை அமைத்து வீரர்களைக் குடியமர்த்திய பகுதிக்கு

''வீரர்முனை'' எனப் பெயரிட்டான் என்று விபரிக்கும். இது சம்மாந்துறைக்கு அருகாயுள்ள வீரர்முனை என அடையாளம் காணமுடிகின்றது. பிற்காலத்தில் (கி. பி. 9ம் நூற்றாண்டின் முற்பகுதியில்) சோழ இளவரசி சீர்பாததேவியும், அவளுடன் வந்த பிராமணக்குடிகள், வேளாளர் குடிகள், செட்டிகுடிகள், பரதவர் குடிகள் முதலானோர் வந்த படகு இவ்வீரமுனையில் தான் கரைசேர்ந்தது எனச் சீர்பாதகுலர் வரலாற்றைக் கூறும் செப்பேடுகள், கல்வெட்டுகள் என்பன குறிப்பிடுகின்றன. இச் சீர்பாதகுலர் வரலாற்றினை ஆய்வுசெய்த அருள். செல்வ நாயகம் சீர்பாதகுலத்தவரின் ஆதிக்குடியேற்றம் வீரமுனை, துறைநீலாவணை ஆகிய பகுதிகளிலிடம்பெற்றதென்றும், இவர்களுக்கு மன்னன் வழங்கிய மானிய நிலங்கள் மல்வத்தைப் பூங்காவில் இருந்ததென்றும், வீரர்முனையில் இவ்வாறு இடம் பெற்ற புதிய குடியிருப்புக்களை ஆராய்ந்துகாட்டுவர். (சீர் பாதகுல வரலாறு, திருவருள் வெளியீடு, 1982). மேலும், வீரர்முனைச் செப்பேடு, கொக்கட்டிச்சோலைச் செப்பேடு, துறைநீலாவணைச் செப்பேடுகள் யாவும் மட்டக்களப்பு, வீரர் முனை ஆகிய பகுதிகளில் சோழநாட்டுக் குடிகளின் குடியிருப் புகளைக் குறிப்பிடுவதனால் கூத்திகன் காலத்து கிழக்கிந்தியச் சமூகங்களும், சோழநாட்டுக் குடிகளும் கி. பி. 9ம் நூற்றாண் டளவில் ஒன்றுகலக்கின்ற சமூகப் பின்னணிகளை நாம் அவ தானிக்கலாம். சோழநாட்டுக் குடிகள் காரைவளநாடு, பழை யாறை முதலானவிடங்களிலிருந்து வந்தவர்கள் ஆவர். இன் னும், வீரமுனை துறைநீலாவணைப் பகுதிகளில் குடியேற்றப் பட்ட சீர்பாதர் குடிகள் காலப்போக்கில் புலம்பெயர்ந்து குருமண்வெளி, மண்டூர், மகிழூர்முனை, பாலமுனை முதலான விடங்களில் பரவி வாழலாயினர். இப்புதிய சீர்பாதர்குலச் சமூகவளர்ச்சிக் கட்டங்களை ம. மா. குறிப்பிடுவதாகவில்லை.

சிங்காரத்தோப்பு, சிங்காரமண்டபம்

கூத்திகன் தன் நகர்வலத்தின்போது தங்கியிருப்பதற்கு அமைத்ததோப்பும், மண்டபமும், சிங்காரத்தோப்பு, சிங்கார மண்டபம் எனப் பெயர்பெற்றன. இன்றைய சிங்காரவத் தைப் பகுதியே பழைய சிங்காரத்தோப்பும் மண்டபமும் என அடையாளம் காணமுடிகின்றது.

மண்கலிபுட்டி

சிங்காரத்தோப்பிற்கு மேற்பகுதியிலிருந்த மட்டக் களப்பை மூட மண்கல் எடுத்த புட்டியே மண்கல்புட்டி என அழைக்கப்பட்ட பகுதியாகும். காலப்போக்கில் மண்கல்புட்டி, மலக்கம்பிட்டியெனத் திரிபடையலாயிற்று.

மணற்றிடர், மணிபுரம்

யாழ்குடாவின் சிலபகுதிகள் மணற்பூமியாக இருந்தமை யினால் ஆதியில் மணற்றி, மணற்றிடர் என்ற பெயர்கள் யாழ்குடாவிற்கிருந்ததாகத் தெரிகின்றது. வரகுணபாண்டி யன் 1ன் மகன் ஸ்ரீமாறன்சீவல்லவன் (கி.பி. 835) யாழ்குடாவை வென்றான் என்பதனை இறையனார் அகப்பொருளில் எடுத் தாளப்பட்டுள்ள கோவைச்செய்யுள் ஒன்று அவனை ''மணற்றி வென்றான்'' எனக் குறிப்பிடும். தென்னிந்தியக் கல்வெட்டுக் களும், சூளவமிசமும் இந்நிகழ்ச்சியை உறுதிப்படுத்தியுள்ளன. யாழ்குடாவிற்கு நாவலந்தீவு, ஜம்புத்தீவு, நாகதீவு எனும் பழம் பெயர்கள் இருக்கையில் ம. மா. மணற்றிடர் என்ற பெயரையே குறிப்பிடும். இது தூய தமிழ்ச்சொல். விசயன் படகு மணற்றிடர்க் கரையையடைந்தபோது, விசயன் அங்கு வாழ் நாகரைக்கண்டு அவர்கள் முதலரசனை வினாவினான் என்கையில் அங்கு நாகர் வாழ்ந்ததனால் ''நாகதீவு'' எனப் பெயரை ஈட்டிக்கொண்ட யாழ்குடாவில் வாழ்ந்த நாகர் பேசிய மொழியும் தமிழே என்பதனை ''மணற்றிடர்'' என்ற பெயர் ஆய்வு உறுதிசெய்கின்றது. யாழ்குடாவின் இன்னோர் பெயரான மணிபுரத்தையும் ம. மா. இடையிடையே குறிப் பிடும். மகாபாரதம் எழுதப்பட்ட காலம் முதல் கி. பி. 12ம், 13ம் நூற்றாண்டுகள் வரை யாழ்குடா இப்பெயராலும் அழைக் கப்பட்டுவந்ததாக முதலியார் C. இராசநாயகம் ஆராய்ந்து காட்டியுள்ளார். (பூர்வீக யாழ்ப்பாணம். ஆங்கிலமூலம் பக். 36 – 39). இனி தெற்கே தலயாத்திரையாக வந்த அர்ச்சுனன் மணலூரில் (மணிபுரம்) சித்திராங்கதையை மணந்தான் என்ற வரலாறு குறிப்பிடும் மணலூர் (மணிபுரம்) பாண்டியன் தலை நகரான மணலூர் என் மு. இராகவையங்கார் (ஆராய்ச்சித் தொகுதி. 2ம் பதிப்பு 1964, பாரி நிலையம், பக். 70 – 78) ஆராய்ந்து காட்டுவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

கொட்டியஞர்

திருகோணமலைப் பகுதியையாண்ட நாக சிற்றரசன் கொட்டியன் பெயரால், இவ்வூர் இப்பெயரைப் பெற்றதாகத் தெரிகின்றது. கொட்டியன் + ஊர் என்பதும் தமிழ்மொழியின் செல்வாக்கையே எடுத்தியம்பும். இதனால் வடகரை முதல் தென்கிழக்கிலங்கைக் கரையோரமாக வாழ்ந்த நாகரும், கலிங் கரும் பேணிவளர்த்த மொழி தமிழேயென்பது மேலும் உறுதி யாகின்றது. கோணேசுவரர் கல்வெட்டு எழுதப்பட்ட காலத் தில் இவ்வூர் கொட்டியாபுரம் என அழைக்கப்படலாயிற்று. குளக்கோட்டமன்னன் இவ்வூர்மக்கள் கோணேசர் கோவிலுக்கு

பாக்கு, வெற்றிலை, வாழைப்பழம், சந்தனம், பால், தயிர், நெய், நூறு அவணம் அரிசி முதலானவை வழங்கவேண்டு மென்று விதித்ததாக இக்கல்வெட்டுக் குறிப்பிடும்.

உன்னரசுகிரி (புன்னரசிகிரி)

பிரசின்னசித்து மட்டக்களப்பை ஆட்சிபுரிகையில், சோழ இளவரசி தம்பதி நல்லாளைத் திருமணம் செய்து கொண்டு, தலயாத்திரையாக வந்த கலிங்க இளவரசனான புவனேயகயபாகு திருக்கோணேசுவரரைத் தரிசித்திருக்கையில், மணிபுரத்தை அரசுபுரியும் நாகர் சிற்றரசனுடைய மந்திரி, தனது அனுமதியின்றி திருக்கோணேசுவரத்தையடைந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தான். அப்பொழுது புவனேயகயபாகு தன்னுடன் வந்த சோழப்படையினரை ஏவி நாகர் பிரதானிகளைக் கொன்று, சோழப்படையினர் காவலில் திருக்கோணேசுவரத்தை வைத்திருந்தான். பின் பிரசின்னத்துவைக் கண்டு குலமுகமன் கொண்டாடி, தட்சணாபதியைக் கையளித்து, நாகர்முனையில் (இன்றைய திருக்கோவில் பகுதி) காளிசேனனின் படையெடுப்பால் பாழடைந்திருந்த சுப்பிரமணியர் ஆலயத்தையும் சோழ நாட்டுச் சிற்பிகளைத் தருவித்துச் செப்பனிட்டுத் திருக்கோவிலெனப் பெயரிட்டு பிரசின்னத்துவிடம் கையளித்திருக்கையில் தம்பதி நல்லாள் கருவுற்றிருந்தாள். அதனால் மகிழ்ச்சியுற்ற பிரசின்னசித்து, தனது ஆட்சிப்பிரிவின் தென்பகுதியைத் தனியாட்சிப்பிரிவாக வகுத்து உன்னரசுகிரி (உன் அரசாட்சிப் பிரிவு) எனப் பெயரிட்டுக் கொடுத்தான். இதன் எல்லைகளாவன :-

வடக்கு — மக்கனல் வெட்டு வாய்க்கால்.
தெற்கு — மாணிக்ககங்கை.
மேற்கு — மத்தங்கடவத்தன (இன்றைய மொனறாகலை, வெல்லவாய எல்லைகளில் இவ்வூர் அமைந்திருக்கலாம்.
கிழக்கு — சமுத்திரம்.

இவ்வாட்சிப்பிரிவு உகந்தைக்கும் பாணமைக்குமிடையிலுள்ள அன்னாசி மலை என வி. சி. கந்தையா கருதுவர். சி. கணபதிப்பின்னை சலவைக்களப்பிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள குடும்பிமலையே உன்னரசுகிரி என்பர். (மு. கு. பக். 34). ஆனால் ம. மா. விபரிப்பதன்படி இப்பிரிவு குமுக்கன் ஆற்றுக்கும், மாணிக்ககங்கைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தைக் கொண்டமைந்திருந்ததென்பது புலனாகின்றது.

கவடாமலை

''கவடா'' எனும் சொல் கடவை அல்லது கபாடம் (வாயில்) எனும் சொற்திரிபாகும். மட்டக்களப்பு அரசின் தென்னெல்லையாகவிருந்த கவடா மலையிலேயே உன்னரசுகிரியின் இராசதானி அமைக்கப்பெற்று ''உன்னரசுகிரி'' எனப் பெயரிடப்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது. பாண்டியரது இடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த கபாடபுரம் முத்துமணிகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய வாயிலைக் கொண்டிருந்தினாலே கபாடபுரம் என்ற பெயரைப் பெற்றிருந்தது என்பது ஒப்புநோக்கத்தக்கது.

நாகர்முனை (திருக்கோவில்)

ஆதியில் நாகர் வாழ்ந்திருந்தமையால் இன்றைய திருக்கோவிற்பகுதி நாகர்முனை எனப் பெயர் பெற்றிருந்தது. ஆனால் நாகர்முனையில் காளசேனனால் அழிக்கப்பட்ட சுப்பிரமணியர் ஆலயம் கந்தன் படையெடுப்புடன் தொடர்புடையதாய் காணப்படுகின்றது. கந்தனது பாணம் வேகமாய் வந்து வாகூரமலையைப் (வாகூரமலை உகந்தைக்கும் கதிரைமலைக்குமிடையில் இருந்ததாக நம்பப்படுகின்றது) பிளந்து வந்து, இங்குள்ள வெள்ளை நாவலில் தங்கியதனால், ஆதியில் கண்டபாணத்துறை என்ற பெயரைப் பெற்றிருந்ததாகத் தெரிகின்றது. நாகர் குருகுல வமிசமாதலால் முருகையன் ஆலயம் இங்கு உருவாக்கினர் என்பதனால், நாகரே முதலில் இங்கு சுப்பிரமணியர் ஆலயத்தையமைத்தனர் என்பது புலனாகின்றது. இக்காலத்திலே கந்தபாணத்துறை, நாகர் முனையெனப் பெயர்பெறலாயிற்று என்றும் தெரிகின்றது. பின் இக்கோவில் காளிசேனனால் உடைக்கப்பெற்றுப் பாழடைந்திருக்கையில் மட்டக்களப்பு மன்னன் பிரசின்னசித்து, புவனேயகஜபாகுவின் உதவியினால் செப்பனிட்டுப் பூசைகளை ஆரம்பித்துவைத்தான். இக்காலத்திலே இக்கோவிலும் ஊரும் திருக்கோவில் எனப் பெயர் பெற்றன. பின் புவனேயகயபாகுவின் மகன் மனுநேயகஜபாகுவும் சோழநாட்டுச் சிற்பிகளைத் தருவித்து ஏழுதட்டுத் தூபி, மதில், மண்டபங்கள், மாதர் சாலை, வாகன வீடு, கோபுரவாசல், தங்கத்தகடு பூட்டிய கொடித்தம்பம், தூபியின் மேலே ஏழு தங்கக்குடமும் வைத்து, ஆறு வீதிகள் அலங்கரித்து குடமுழக்கு விழாவும் செய்தான். பின் ஆறுகாலப் பூசைகளுக்கும் ஊழியர்களை வகுத்து, திருப்பணிகளுக்கென நெற்கழனிகளையும் திருத்தி, ஏரிகளையும் அமைத்துக்கொடுத்தான் எனவும் ம. மா. விபரிக்கும். கந்தஉபாத எனும் நூல் இலங்கையைச் சோழநாட்டியிலிருந்து விடுவித்தவனான முதலாம் விஜயபாகு (கி. பி. 1059 – 1114)

திருக்கோவிலுக்கு வேவெல எனும் நெற்காணியைத் தருமம் செய்து, சோழரை வென்றான் எனக் குறிப்பிடும். இதனைத் திருக்கோவிலிலுள்ள கல்வெட்டும் அரண்செய்கின்றது. ஆனால் இக்கல்வெட்டினை ஆய்வுசெய்த ஆய்வாளர்கள் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள விஜயபாகுவை இனம் காண்பதில் அபிப்பிராயபேதமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். (க. தங்கேஸ்வரி. குளக்கோட்டன் தரிசனம் 1993 பக். 43-47). கூளவம்சம், கந்தஉபாத எனும் நூல்கள் ஐந்தாம் மிகுந்தனின் பேரனாகிய முதலாம் விஜயபாகு சங்கமக்கண்டியில் மாளிகை அமைத்து மறைந்து வாழ்க்கையிலே சங்கமக்கண்டிக்கு வடக்கேயுள்ள வேவெல எனும் நெற்காணியைத் திருக்கோவிலுக்கு வழங்கினான் என்று, இவனது அரசியற் பின்னணிகளையும் விபரித்துள்ளன. சங்குமண் கண்டிக்கணிதாயுள்ள பகுதியில் அரண்மனையொன்றின் அழிபாடுகள் காணப்படுவதனால் அது விஜயபாகுவின் அரண்மனையின் எச்சங்களாக இருக்கலாம் என்று வி. சி. கந்தையா (மட்டக்களப்புச் சைவக் கோவில்கள் 1083 – பக். 47) கருதுவர். திருக்கோவிலுக்கு மானியமாக வழங்கப்பட்ட இன்னோர் நிலத்தின் எல்லையை கிழக்கே கடலும், மேற்கே தலைக்கல் என இக்கோவிலிற் கிடைக்கப்பெற்ற இன்னோர் கல்வெட்டுக் குறிப்பிடும். இது முதலாம் விஜயபாகுவின் வெற்றிக்குப் பின் வழங்கப்பட்டதாகலாம் எனத் தெரிகின்றது. ம. மா. குறிப்பிடுகின்ற தாடைகிரிதான் இங்கு தலைக்கல் எனக் குறிக்கப்பட்டிருக்கலாம். இத்தகைய பழமைமிக்க கோவிலை அழித்தவன் அசவிடோ எனும் போர்த்துக்கேயத் தளபதியென குவெய்ரோஸ் பாதிரியார் குறிப்பிடுவர்.

தம்பட்டார் ஊர்

இறைவனுக்குத் திருப்பணிகளாற்றுவதற்குரிய தன்மையான குணங்களையுடைய குருமாரை தம்பட்டார், அந்தணர் என அழைப்பர். இவ்வாறு திருப்பணியாற்றிய தம்பட்டார் குடிகளைக் குடியமர்த்திய பகுதிக்கே ''தம்பட்டார் ஊர்'' எனும் பெயர் எழலாயிற்று. நாகர்முனைக் கோவிலின் குடமுழுக்கு விழாவிற்கு சோழநாடு, கலிங்கநாடுகளிலிருந்து வந்த அரசர்களையும், குடிகளையும், எதிர்சென்று வரவேற்க நாகர்முனைக் களப்பிற்குச் சென்றிருந்த அந்தணர்களையே அவ்விராசர்கள் ''தம்பட்டரென'' வாழ்த்தி உரையாடினர் என்றும், பின் இவ்விராசர்கள் தம்மை எதிர்கொண்டு வரவேற்றகளப்புமுனையில் அவர்களைக் குடியமர்த்தி ''தம்பட்டார்'' ஊரெனப் பெயரிட்டனர் என, இவ்வூர் வரலாற்றை ம. மா.

விபரிக்கும். இன்று இவ்வூர்ப் பெயர் ''தம்பட்டை'' எனத் திரிபுபெற்றுள்ளது.

தம்பதிவில்

தம்பதி-தம்பதி நல்லாள் எனும் சோழ அரசியின் பெயரையும் வில்-குளத்தையும் குறிக்கும். தனது தாய் தம்பதி நல்லாள் நினைவாக அவள் மகன் மனுநேயகயபாகு தம்பட்டார் ஊருக்கருகாய் ஒரு குளம் வெட்டித் ''தம்பதிவில்'' எனப் பெயரிட்டிருந்தான். இக்குளத்தையண்டி உருவாகிய ஊரானபடியினால், இவ்வூர் தம்பதிவில் எனப் பெயர்பெற்றது. இன்று ''தம்பிலுவில்'' எனத் திரிபடைந்துள்ளது.

சங்குமண்கண்டு - சங்குமண்கண்டி

சிறிய ஊரிகள் நிறைந்த மண்ணைக்கொண்ட நிலமாய் இருந்ததனால், இவ்வூர் இப்பெயரைப் பெற்றிருக்கலாம். திருக்கோவிலிலிருந்து தெற்கே நான்கு மைல் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. திருக்கோவிற் திருப்பணிகளுக்கென தாசகனும், மனுநேயகயபாகுவும் ஏரிகளை வெட்டிக் கழனிகளைத் திருத்தியபொழுது, இவ்வேரிகள் சங்குமண்கண்டு முதற் தாடைகிரிவரையுள்ள இருபத்துநான்கு ஏரிகளையும் ஒன்றாக இணைத்தன என ம. மா. குறிப்பிடுவதனால், தென்கிழக்கிலங்கையில் தொல்லியலாய்வுகளைச் செய்பவர்களுக்கு, ஆதித் தமிழ்க்குடிகளால் கைவிடப்பட்டுக் காடுகளால் மூடி மறைக்கப்பட்டிருக்கும் இவ்வேரிகளை இனம்காணக்கூடியதாகவுளது. மற்று, சங்கமக்கண்டியில் முதலாம் விஜயபாகு மாளிகையமைத்து வாழ்ந்திருந்து, சோழர்களை வென்றான் என்ற குறிப்புகளையும் இவ்வூர் வரலாற்றுடன் தொடர்பு காட்டல் அவசியமாம். கோணேசர் கல்வெட்டு, கஜபாகு மன்னன் II (கி. பி. 1132 – 1153) சங்கமக்கண்டிவரை கோணேசர் கோவிலுக்கு எல்லை வகுத்தான் எனக் கூறும். இவ்வூர்ப் பெயர் ''சங்கமர்'' எனும் பூசகர் இங்கு வாழ்ந்ததனால் உருவாகிற்று என்பர் சிலர். 'சங்கமர்கள்' பூசாரிகளாகத் தருவிக்கப்பட்டு முதலில் தம்பட்டையில் குடியமர்த்தப்பட்டனர். அதனால் இப்பகுதியிலிருந்த சங்கமர் செல்வாக்கினால் ''சங்கமர்கண்டி'' எனப் பெயர்பெற்றுப் பின் சங்குமண்கண்டி எனத் திரிவுபெற்றிருக்கலாம் என்றும் சிலர் கருதுவர்.

உறவுப்பெற்றானை :-

இரஞ்சனும், சோரநாகனும் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி தட்சணாபதியாட்சியுரிமை இயக்கர்குலத்

திமிலருக்கு வழங்கப்பட்டதாக முன்னர் அவதானித்தோம். ஆனால் காலப்போக்கில் நாகர் இப்பிரிவினையாண்டிருந்தார்கள் என்பது, புவனேயகயபாகு வரலாறுமூலம் உணரப்பட்டது. புவனேயகயபாகு தன்னை எதிர்த்த நாகர்குலச் சிற்றரசன், மந்திரி பிரதானிகளைத் தன்னுடன் வந்த சோழர் படையினை ஏவி, வெற்றிகொண்டு நாகர்களைத் தட்சணாபதியால் அகற்றித் தன்னதிகாரத்தை ஏற்படுத்திப், பின் மட்டக்களப்பையாண்டிருந்த பிரசின்னசித்துவிடம் கையளித்தான் என்பதனால், தட்சணாபதியால் எவ்வாறு நாகர்கள் அகற்றப்பட்டார்கள் என்ற வரலாறும், இக்காலத்தின் பின்னரே திருகோணமலையிலிருந்த நாகர்களும் வடகுடாவைச்சேர்ந்து குடியேறித் தாம் வாழ்ந்த யாழ்குடாவை நாகதீவென்று பெயரிட்டார்கள் என்பதும் புலனாகின்றது.

இனி, இவ்வாறான அரசியற், சமூகப் பின்னணிகளை வைத்தே ''உறவுப்பெற்றானை'' என்ற ஊர் உருவாகிய தாகத் தெரிகின்றது. சிங்ககுமாரன் (மகாசேனன் மகன்) உன்னரசுகிரியை ஆண்டிருக்கையில், சோழவமிசத்துக் காலிங்கை ஆரியன் என்பவன் சுற்றத்தாரோடு சேதுநதியில் தீர்த்தமாடி இராமேசுவரரைத் தரிசித்துக்கொண்டு, மண்ணாற்றிலிறங்கி திருக்கேதீசுவரரையும் தரிசித்துக்கொண்டு, கோணேசுவரரைத் தரிசிக்க வரும்போது, மடுவோடையில் ஒரு நாகர் பெண்ணைக்கண்டு, அவள் ஊர், வரலாறுகள்பற்றி விசாரிக்கவே, அவளும் தம் ஆதீன ஊர் உகந்தைகிரிக்கு அருகாயுள்ள நாகதீவு என்றும், பின் புவனேயகயபாகுவினால் நாகர்கள் தட்சணாபதியிலிருந்து அகற்றப்பட்ட வரலாற்றையும், அதனாலே தாம் வடகுடாவையடைந்து (யாழ்குடா) நாகதீபத்தை உருவாக்கிய வரலாற்றையும் விபரிப்பாள். (இத்தருணம் இவளால் உகந்தையிலிருந்து நாகர்கள் எவ்வாறு காளிசேனனால் அகற்றப்பட்டுக், கிழக்குக் கடலோரமாகத் திருகோணமலை, முள்ளுத்தீவு, யாழ்குடா, மன்னார் வரை பரவிய வரலாறு விபரிக்கப்படாதது கவனிக்கத்தக்கது). இதனைக் கேள்வியுற்ற காலிங்கையாரியன் தன்னாட்சியை அங்கு நிறுவிக்கொண்டு நாகருடன் சேர்ந்து, உன்னரசுகிரிக்குப் படையெடுத்தானென்றும், அப்பொழுது சிங்ககுமாரனும் மட்டக்களப்பு அதிபதிகளோடும், தன் படையுடனும் சென்று, காலிங்கையாரியனையும், நாகரையும் புறமுதுகிடச்செய்து, தட்சணாபதிக்கப்பால் துரத்தித் திரும்ப அவர்களுடன் உறவுகொண்டாடி, அந்த இடத்தில் எல்லைக்கல் நாட்டி ''உறவுப்பெற்றானை'' எனப் பெயரிட்டுத் திரும்பினான் என்பதும் இவ்வூர்பற்றிய வரலாறாகும். இன்று இவ்வூரே ஹொரவுப்பொத்தன (Horowupatana) என உருக்குலைந்து, திரிவுபட்டுக்கிடக்கின்றது. இப்பெயர் வரலாற்றிலிருந்து நாம் நாக அரசுகள்பற்றித் தெளிவான கருத்துக்களைப் பெறமுடிந்தது எனில் மிகையாகாது. மற்று, வடக்கு முதல் கிழக்குக்கரையோரமாக இருந்த கிற்றரசுகளும் தமக்குள்ளே மேலாதிக்கத்தை விரும்பிப் போரிட்டு, சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்தின என்பதும் புலனாகின்றது.

நாகதீவு, நாகர்முனை, நாகபுரம்:

ஆதியில் இலங்கையில் ஆட்சிசெலுத்திய நாகர்கள் அத்தினாபுரத்துக் குருகுல வம்சத்து வழிவந்தோர் எனத் தெரிகின்றது. இவர்கள் முதலில் உகந்தையைத் தலைநகராக வைத்திருந்தனரென்றும், பின் காளிசேனன் இவர்களுடன் போரிட்டகாலத்தில் மண்டுநாகன் மண்டூரை ஆண்டிருந்தான் என்றும், பின் சேனனுடைய வமிசம் அற்றுப்போக நாகர், இயக்கர் மேலெழும்பி, விண்டு அணையை இராசதானியாக்கி ஆண்டிருந்தனர் என்றும் ம. மா. நாகரின் ஆதிவரலாற்றை விபரிக்கும். பின் கலிங்கத்து இரஞ்சலன் கலிங்கமிருந்து படைதிரட்டிவந்து நாகரைச் சினேகிதம்பிடித்து, இயக்கரை மாவலிகங்கைக்கப்பால் துரத்தி, அனுராதபுரத்தையரசுசெய்த சோர நாகனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி மண்ணாறு, மணற்றிடர் இரண்டும் இக்காலத்தில் நாகருக்கு வழங்கப்பட்டன. இதன்பின் நாகர் செல்வாக்கு தட்சணாபதியிலும் இருந்ததாக புவனேயகயபாகு வரலாறு சுட்டும். பின் காலிங்கையாரியன் வரலாற்றினால் மணற்றிடர், நாகர் செல்வாக்கிற்குட்பட்டதனால் ''நாகதீவு'' எனப் பெயர்பெறலாயிற்று என்பதும் புலனாகின்றது. மேலும் உகந்தைக்கருகாயும் ஒரு நாகதீவு இருந்துள்ளது. நாகரின் ''நாகர்முனை'' பிற்காலத்தில் திருக்கோவிலெனப் பெயர் மாற்றமடைந்தது என்றும் மேலே அவதானித்துள்ளோம். முள்ளுத்தீவிலும் (முல்லைத்தீவு) ஒரு நாகதீவு இருந்துள்ளது. ஜே. ஆர். சின்னத்தம்பி முள்ளைத்தீவிற்கும் கொக்கிளாய்க்குமிடையிலிருந்த நாகதீவிற்கே புத்தர் வருகைதந்தார் என்று கருதுவர். மேலும், தட்சணாபதியிலிருந்து ஆண்ட கொட்டியன் எனும் நாக சிற்றரசன் ஆட்சிப்பிரிவு, வெருகல் கங்கைக்கும் குருக்கள் கங்கைக்கும் இடையிலிருந்த நாகதீவு என்பர். சி. கணபதிப்பிள்ளை (பூர்வீக சப்த ஸ்தலங்கள், விபுலாநந்த அச்சகம், யாழ்ப்பாணம், 1979 பக். 27). இவ்வாறு இலங்கை வரலாற்றில் முக்கிய பங்களித்த நாகர் வரலாறுகளை விரிவாக எடுத்துரைப்பது மட்டக்களப்பு மான்மியம் ஆகும். எனவே இனிவரும் ஆய்வாளர்கள் இலங்கை வரலாற்றில் நாகர், இயக்கருக்குரிய முக்கி

யத்துவத்தினை உரியமுறையில் மதிப்பிட்டுக் காட்டவேண்டிய வர்களாவர். மேலும் இலங்கையில் நாகர் வரலாற்றுக்கு பார்க்கவும் (ஜி. தனபாக்கியம், இலங்கையிற் தொல்லிய லாய்வுகளும் திராவிடக் கலாசாரமும், 1988 பக். 28–39).

விண்டு அணை (விந்தனை):

வெளியே தள்ளிப் பிளந்து நிற்கும் பாறைகளாலான ஒரு அணைகட்டிற்கு இப்பெயர் இடப்பெற்றிருக்கலாம். தூயதமிழ்ப் பெயரான இவ்வூரின் பெயர் பேச்சுவழக்கில் விந்தனையாகத் திரிபு பெறலாயிற்று. விந்தனையெனும் ஊருக்குப் 'பம்பராகல' எனும் சிங்களப்பெயரும் இருந்த தாகத் தெரிகின்றது. கலிங்கத்துச் சேனனுக்கு வமிசமருகிப் போக இயக்கர், நாகர் விண்டு அணையை இராசதானியாக அமைத்து ஆண்டிருந்தனர். இரஞ்சலன் படையெடுத்துவந்து இந்த இராசதானியையும் உடைத்து, இயக்கரையும் மாவலி கங்கைக்கப்பால் துரத்தினான் என மட்டக்களப்பு மான்மியம், இங்கிருந்து இயக்கர் அகற்றப்பட்ட வரலாற்றினைக் கூறும். இனி இயக்கர், நாகர் காலத்து தமிழ்மொழி பெற்றிருந்த கிறப்பினையும் இப்பெயர் உணர்த்தி நிற்கும்.

மண்டூர்:

மண்டு மரங்கள் நிறைந்திருந்ததனால் 'மண்டூர்' என இப்பெயர் பெற்றதாக அருள். செல்வநாயகம் கருதுவர். இதன் பழமை கந்தன் படையெடுப்புடன் தொடர்புபட்ட தாகும். சூரனைச் சம்காரஞ்செய்த கந்தனின் வேலாயுதத்தி லிருந்து வெளியேறிய சுதிர் ஒன்று மண்டூரில் தில்லைமரத் தில் தங்கியபோது, அப்பகுதி வேடர்கள் அதனைப் பூசித்து வரலாயினர். அதன்பின் ஆதி நாகர்கள் இப்பகுதியையாண்டு, முருகனாலயத்தை எடுப்பித்தனர். இவ்வாறு இப்பகுதியை முதலில் ஆண்ட மண்டுநாகன் எனும் நாக அரசனின் பெய ரால், இவ்வூரின் பெயர் உருவாகியிருக்கலாம் எனக் கருது வதிற் தவறில்லை. பிற்காலத்தில் சீர்பாததேவியுடன் வந்த கப்பலோட்டியான சிந்தன் தன் குலத்தவருடன் கருத்து வேற்றுமை கொண்டு மண்டூரையடைந்து, தில்லைமரத்தில் தன் வேலினைப் பதித்துப் பூசை செய்தான் எனச் சீர்பாத குலக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. சிந்தன் பரம்பரை யினரே இன்றும் தில்லை மண்டூர் முருகன் (வாய்கட்டிய பூசகர்) ஆலய அர்ச்சகராக இருந்துவருகின்றார்கள். சிந்தன் தில்லை மரத்திற் பதித்த வேலானது இன்றும் ஒளி வீசிக்

கொண்டிருப்பதனால் தில்லை மண்டூர் என அழைக்கிறார் கள். திருப்படைக் கோயில்களின் நிருவாகம், பராமரிப்பு, பூசனை முதலானவை, மன்னர்கள் இட்ட முறைப்படி சாதி யடிப்படையில் இங்கு நடைபெற்றுவரினும், குளக்கோட்டன் திருப்பணிகள் இங்கு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

மண்டுநாகன்சாலை, வேலாயுதர்வெளி, நாதனணை, போர்முடை நாடு:

மேலே நாம் ஆராய்ந்த மண்டுநாகன் ஆட்சிப் பிரிவும், மண்டூர் முருகனாலயமும் காளிசேனனால் அழிக்கப்பட்டபின், இப்பகுதியும், கோயிலும் பலகாலமாகப் பாழடைந்திருந் தன. மதிசுதன் மட்டக்களப்பையாண்டிருக்கையில் (கி. பி. 10ம் நூற்றாண்டு) தொண்டைநாட்டுச் சிற்பிகளை வர வழைத்துப் போரதீவு முருகனாலயத்தைச் செப்பனிட்டு அந் தணர் இருபாகையும், முதன்மையும், மற்றும் திருத்தொண் டர்களையும் வகுத்துச் சித்திரவேலாயுதர் கோவிலெனப் பெயருமிட்டான். மேலும், அவன் நித்திய, நைமித்திய பூசை களுக்கு ஆயிரம் அவணக் கழனிகளும் திருதீதிக்கொடுத்து மண்டுநாகன் ஆண்ட பகுதியை மண்டுநாகன்சாலையென்றும், இவ்வாலயத்திற்கு நிவந்தமாக விடப்பட்ட வயல்வெளியை ''வேலாயுதர்வெளி'' என்றும், இக்கழனிகளுக்கு நீரைத் தேக்கிவைத்திருக்கும் அணைக்கட்டினைத், தன் மகன் நாதன் பெயரால் ''நாதனணை' என்றும், போரால் அழிந்த பகுதி யைப் போர்முடை நாடென்றும் பெயரிட்டான். இன்று வேலாயுதர்வெளி, வெல்லாவெளியென்றும், நாதனணை, நாதணாவெளியென்றும், போர்முடைநாடு, போரமுனை யென்றும் திரிபுபெற்றுக் காணப்படுகின்றன. மண்டூர் நாகன் சாலை இன்று மண்டூர், நாகஞ்சோலையென இரு ஊர்களாக வும் உருவாகியுள்ளன என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

பாணமை:

ஆடகசவுந்தரியின் பிறப்பு வரலாற்றுடன் இவ்வூர்ப் பெயர் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. உன்னரசு கிரியையாண்ட மனுநேயகபாகு மகப்பேறில்லாமல் கவலை யுற்றிருந்த சமயம், பேழையொன்று கரைசேர்ந்திருந்த செய் தியைக் கேள்வியுற்று, அங்கு சென்று அப்பேழையைத் திறந்த பொழுது, அதிலிருந்த பெண் குழந்தை கலகல என நகைத் ததைக் கண்டு, மன்னன் மகிழ்ச்சியுடன் அக்குழந்தையை எடுத்துச்சென்று ''ஆடகசவுந்தரி'' எனப் பெயரிட்டு வளர்த்

தான் என்றும், பின் அக்குழந்தை கரை சேர்ந்த இடத்திற் குப் ''பாலர்நகை'' என்றும் பெயரிட்டு, அப்பகுதி மட்டக் களப்பு அரசின் எல்லைக்குட்பட்டிருந்தமையினால் தாசக மன்னனிடம் ஒப்படைத்தான் என்றும் இவ்வூர் வரலாற்றை ம. மா. விபரிக்கும். இப்பாலர்நகையே ''பாணகை''யென்று திரிந்து காலப்போக்கில் பாணமையென்று சுருக்கம் பெற லாயிற்று.

மாமங்கை நதி :

மா, பெரியதென்றும், மங்கை, மங்கலம் என்றும் நதி, தீர்த்தமென்றும் பொருள்தரும். பெரும் மங்கலம் பொருந்திய தீர்த்தம் எனப் பொருள்தரும். இத்தீர்த்தக்கரையில் சீதையை மீட்டுத் திரும்பிய இராமர் சிவலிங்கம் அமைத்து வழிபட் டார் என மரபுக்கதைகள் குறிப்பிடுகின்றன. பின் ஆடக சவுந்தரி உன்னரசுகிரியில் ஆட்சி செய்திருக்கையில், ஓரிரவு இராமமூர்த்தி அவள் கனவில் தோன்றி அவள் முற்பிறப்பு வரலாற்றையும், அவளாட்சிப் பிரிவிலுள்ள காசி அவிமுத்தி நீர்கலந்த நதிபற்றியும் கூறி மறைந்தார். அதனால் ஆடக சவுந்தரி இந்நதியைத் தேடிக் கண்டறிந்து 'மாமங்கைநதி' எனப் பெயரிட்டு ஆண்டுதோறும் ஆடி அமாவாசையில், இந் நதித்தீர்த்தமெடுத்துத் திருக்கோவிற் சமுத்திரத்தில் விட்டு, நீராடி வந்தாள் (ம. மா. பக். 32). இத்தீர்த்தவிழா நெடுங் காலமாகப் பேணப்பட்டிருந்ததென்றும், அண்மைக்காலங் களிலே கைவிடப்பட்டதென்றும் வி. சி. கந்தையா குறிப் பிடுவர். (மு. கு. பக். 13). தமிழகத்தில் காஞ்சிபுரத்திற் கருகாமையிருந்த அவிநாசித்தலத்திலும் மாமங்கைத் தீர்த்த மொன்று இருந்ததென்றும், அதன் தூருவைச் சேரமான் பெருமான் எடுப்பித்துக் கட்டுவித்தான் எனச் சோழர் பூர் வீகப் பட்டயம் குறிப்பிடும் (பக். 26). இன்று மட்டக்களப்பி லுள்ள மாமாங்கம் என்ற பகுதியிலே தீர்த்தம் – அமிர்தகழி என்றும், சிவலிங்கம் பிரதிட்டை பண்ணிய கோவில் மாமாங் கப் பிள்ளையார் எனவும் அழைக்கப்பட்டு வருகின்றது.

இராட்சதக் கல்

ஆடகசவுந்தரியின் ஆட்சிப்பிரிவில் ஒரு கற்குகையில் பருத்த உடல்களையுடைய மனிதர்கள் வாழ்வதைக் கண்ட எயினன் ஒருவன், அதனை அரசிக்குத் தெரிவித்தான். அன் றிரவு இராமமூர்த்தி அவள் கனவில் தோன்றி, அப்பூதங்கள் இராவணன் இயற்றிய நிகும்பலையாகத்திற் தோன்றியவர் கள் என்றும், இராமமந்திரத்தைத் தியானிக்க, அப்பூதங்கள்

அவளுக்கு அடிமையாய் வாழும் என்றும் தெரிவித்தார். அவ் விதமே ஆடகசவுந்தரியும் செய்து, பூதங்களைத் தனக்கடிமை யாக்கி, அவை வாழ்ந்த கற்குகைக்கு ''இராட்சதக் கல்'' என வும் பெயரிட்டாள். இவ்வாறே இவ்வூர் இப்பெயரைப் பெற் றது. இன்று இப்பகுதி தென்னிலங்கையில் ''யக்கல'' அல் லது குருகொட என்ற பெயரால் அழைக்கப்பட்டுவருகின்றது.

மீனேரி :

மீன்களைக்கொண்ட ஏரி என்பது இதன் பொருள். வடமொழியில் ''மகரவாவி'' என அழைக்கப்பட்டது. இன்று ''மின்னேரிய'' என்று திரிபுபெற்றுக் காணப்படுகின்றது: மகாசேனன் திருப்பணி செய்த தட்சணாபதி ஆலயத் திருப் பணிகளுக்குதவுமுகமாக மகாசேனன் வேண்டுகோட்கிணங்கி தெத்ததீசன் இயற்றிய ஏரியே மீனேரி எனப் பெயரைப் பெற் றது. ஆனால் மகாவம்சம் மகாசேனனைப் பதினாறு ஏரி களை வெட்டினான் எனக் குறிப்பிட்டு, பதினாறு ஏரிகளின் பெயர்களைக் குறிப்பிடும். இவற்றுள் ''மணிஹிரவாபி''யையே ''மின்னேரிய'' என வரலாற்றாசிரியர்கள் அடையாளம் காண் பர். கி. பி. 3ம் நூற்றாண்டளவில் தட்சணாபதியை நேர் பண்ணி, மீனேரியை மகாசேனன் இயற்றுவித்த மரபானது, கி. பி. 13ம் நூற்றாண்டில் மககோன் அரனூழியம் (சிவத் தொண்டுகள்) குடிகள் சாதியியல் வகுத்த காலமெல்லாம் தாண்டி, கண்டியரசன் விமலதருமன் (கி. பி. 1592 – 1604) காலம் வரை பேணப்பட்டிருந்ததற்கான ஆதாரங்களை ம. மா. குறிப்பிடும். விமலதர்மன் I கண்டிக்கு அரசனானபோது வன்னிபங்களுக்கும், வெள்ளாளருக்கும் முறைதவறிக் கொந் தளிப்பேற்பட்டபோது, வன்னிபங்கள் பண்டைக்காலத்தில் கலிங்கராசன் இட்ட முறைப்படி பங்கு வாங்குவோரும், அவர் மரபுகளையும் செப்பேட்டை எடுத்து வாசித்துக்காட்டி அம் முறைகளைச் செய்துகாட்டினர். அப்பொழுது கந்தளையி லிருந்து பங்கு வாங்கவந்த குடிகளை அழைக்கையில் வரிசை கூறியவன்,

''வந்துகரம் நீட்டமுன்னுன் பேருமூரும்
மகரவேரி செய்வன்றன் நாமந்தானும்
விந்தையொடு யவர்மணந்த மூன்றுபேரும்
விறலரசு புரிந்தாண்ட திசைகள் யாவும்''

கூறு, என அழைக்க, எழுந்துசென்ற கந்தனைக் குடித்தலைவன்,

''பேசரியவங்க மகா சேனன்றானும்
தன்செயலை நிலைநாட்டவெண்ணி முன்னாட்
சதுரங்க சேனையொடு இலங்கைசேர்ந்து
அன்போடு முக்கோணா லத்தைய
ருளொக்கச் செய்தேதானா டகத்தை
இன்பமொடு மணந்த மங்கை வங்கர்குலம்
நானுமக்குலத்தான் வரிசை கேட்டேன்''
(ம. மா. பக். 111)

என்று மகாசேனன் வமிசத்து உரிமைகோரிப் பங்கு வாங்கினர்.

இனித் திருக்கோணேசுவரர் ஆலயத்தில் கி. பி. பதின் மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வந்து திருப்பணிகள் புரிந்த உபராஜன், மாகோன் சகோதரர்களில் ஒருவனாவான். இவ்வுபராஜனைக் குளக்கோட்டன் எனும் சோழகங்கன் எனத் தட்சணகைலாய புராணம் கூறும். இவன் சமயப்பணிகளைப் போற்றிய கவிராஜவதோயர் கி. பி. 14ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பாடிய கோணேசர் கல்வெட்டில், ''மனு நீதி கண்ட சோழன் மரபில் வந்த வரராமதேவன் (பார்க்க: மனுவரதன், அரும்பத விளக்கம்). திரிகயிலையின் பெருமை கேட்டு இத்தலத்துக்கு வந்ததனையும், பின்பு அவன் மகன் வந்து செய்த திருப்பணிகளையும் கூறுவோம்'' என்று கூறியே இவன் திருத்தொண்டுகளை விபரிப்பர். காலப்போக்கில் இக்கல்வெட்டு இடைச்செருகள்களைக் கொண்டதாய் மூன்று பதிப்புக்களில் இருந்ததாய்த் தெரிகின்றது. இக்கல் வெட்டுக்கு உரையெழுதிய பண்டிதர் இ. வடிவேல் இப்பதிப் புக்களைக் கண்ணோட்டமிட்டு ஐம்பது பாடல்களே கவிராஜ வரோதயரால் இயற்றப்பட்டவை என்று இனம்கண்டு, ஏனையவற்றை இடைச்செருகல்கள் என்று கழித்துள்ளார். இவ்வாறு இடைச்செருகல்கள் என்று அவர் கழித்துவிட்ட பாடல்களிலேதான் குளக்கோட்டன் ஆடகசவுந்தரியைத் திருமணம் முடித்ததான வரலாறு காணப்படுகின்றது. இதே போன்றதொரு வரலாறு திருக்கோணாசல வைபவத்திலும் இடம்பெறுகின்றது. மட்டக்களப்பு மான்மியத்தில் இடம்பெற் றுள்ள ஆடகசவுந்தரியுடன் தொடர்புபட்ட மகாசேனன் வர லாற்றை, மகாவம்சம் மகாயானப் பௌத்தனாகக் குறிப் பிடும். இவ்வாறு ஆடகசவுந்தரியைப் பௌத்தனாகிய மகா சேனனுடன் தொடர்புபடுத்துவது தவறு என்று கருதிய பிற் காலப் புலவரே ஆடகசவுந்தரிக்கும் குளக்கோட்டனுக்கும் உறவுகளை ஏற்படுத்தியவராவர். கலிங்கத்து மன்னன் மனு வரதன், அவன் மகன் மாகோன் (மனுவரசன் என்று இன்

னோர் பெயரும் இவனுக்கிருந்தது), சோழகங்கன் ஆகியோர் வரலாற்றுப் பின்னணிகளை ஆராயும்பொழுது மாகோன் இலங்கையில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் கலிங்கராட்சியை உறுதிப்படுத்திய காலத்திலே, அவன் தந்தை மனுவரதன் கோணேசர் பெருமைகளைக் கேள்வியுற்றுத் திருப்பணிக்குப் பொன் கொண்டுவந்திருந்தான் எனப் புல்னாகின்றது. பின் தன் தந்தை விரும்பிய சமயப்பணியை நிறைவேற்ற வந்த வனே உபராஜனாகிய சோடகங்கன் ஆவன். சோழர், கங்கக வமிசத் தொடர்புகளை நினைப்பூட்டும் வகையில் இவனுக்கு இப்பெயரை இட்டிருக்கலாம். இவன் மாகோனைப்போன்று அரசியல் வாழ்விலோ, அல்லது இல்லற வாழ்விலோ ஈடு பட்டவனல்ல. இவன் திருக்கோணாலயத்தில் தொடங்கிய சமயப்பணி, கிழக்குமாகாணத்திலுள்ள சிவதலங்கள் யாவற் றிலும் பரவிச் சென்றதற்காகிய குறிப்பொன்று திருக்கோவி லுடன் தொடர்பான பாடலில் காணக்கிடக்கின்றது.

.....
.....
சிவாலயமும் சிவபூசை தேவாரமும்
செய்திருமுறைகள் என்றென்றும் நீடுழி காலமும்
தேசம் தளம்பாமலும்
ஏர் பெருகு பருதிகுலராசன்
குளக்கோட்டன் எவ்வுலகுமுய்வதாக
ஏழுகோபுரம் கோவில் தொழுவார் தினம்
தேட எங்கெங்கு மியற்றினரே

என்றும், தட்சணகைலாய புராணத்திலும், கோணேசர் கல் வெட்டிலும் கோணேசர் கோவிலில் அவன் செய்த திருப் பணிகளும் அற்புதமான முறையில் விபரிக்கப்பட்டுள்ளன. இறுதியில், ''கோணேசர் கோவிலுட் போய் வணங்கக் கண் டார், போன ராசன் திரும்பிவாரப் புதுமையென்ன என்று பாசுபதர் வாயிற்படிநின்று எட்டிப்பார்க்கையில், கோணேசர் பெருமானின் பாதங்களில் சிவப்பிரகாசம் நிறைந்த மல ரொன்று மலர்ந்து நிற்கும் புதுமை கண்டு, இருந்தோரெல் லாம் கண்ணீர் சொரிந்தனர் (கோணேசர் கல்வெட்டு – 48,49) என்று அவன் பிறப்பற்றநிலை விபரிக்கப்பட்டுள்ளது. திரு கோணமலையில் பிரடரிக்கோட்டையில் கிடைக்கப்பெற்ற சிதைந்த சமஸ்கிருதக் கல்வெட்டு, புனித தலங்களின் திலக மாய் விளங்கும் கோகர்ணதலத்திலுள்ள சம்புநாதரை அன்ற லர் மலரெடுத்துச் சென்று பூசனைபுரிந்து சாஸ்தவநிலையை (பிறப்பற்ற நிலையை) யடைந்த தேவனாகிய சோடகங்க னுக்கு மங்கலம் பொலிக! என அவன் பரமுத்தியடைந்த

நிலையையே குறிப்பிடுவதாகும். எனவே சோடகங்கன் சமயத்திருப்பணிகளில் மனங்கொண்டவனாய், சமய ஞானியாக வாழ்ந்து மக்கள் மனதில் நிலைபெற்ற ஒருவனாகவே காணப்படுகின்றான். எனவே ஆடகசவுந்தரியுடன் இவன் தொடர்பு பட்டவன் அல்ல என்பது உறுதியாகின்றது. இதனை அறிய உதவுவது மட்டக்களப்பு மான்மியம் விபரிக்கின்ற பங்கு வாங்கும் குலமரபுகளும், மற்றுச் சோடகங்கனுடைய சமயவாழ்வைப் போற்றுகின்ற நூல்களுமேயாம். எனவே மீனேரிபற்றிய ஆய்வுகள் பிற்காலத்தில் மயக்கத்தினையேற்படுத்திய மகாசேனன், குளக்கோட்டன் வரலாறுகளைத் தெளிவுபடுத்த உதவின எனில் மிகையாகாது.

காந்தளை ஏரி, கந்தளை

இப்பெயர்கள் ஏரியையும், ஊரையும் முறையே குறிப்பிடும் பெயர்கள் ஆவன. மகாசேனனால் இடிப்பித்த விகாரைகளைத் தெத்ததீசன் நேர்பண்ணி, ஒவ்வொரு விகாரையிலும் கதிரேசன் ஆலயங்களையும் இயற்றுவித்து, பூதங்களைக் கொண்டு ஏரிகளையும் வெட்டுவித்தான் என ம. மா. குறிப்பிடும். இவ்வேரிகளுள் ஒன்றே காந்தளை ஏரியெனப் பெயர் பெற்றிருந்தது.

பின் சோழர் திருகோணமலையைத் தம் ஆதிக்கத்திற் குட்படுத்தியிருந்த காலத்தில் கந்தளாயில் ஒரு சிவன் கோயிலைக் கட்டிப் பிராமணர் குடியேற்றங்களைச் செய்திருந்தனர் எனக் கந்தளாய் சிவன்கோயிலிற் கல்வெட்டுக் குறிப்பிடும். இக்குடியேற்றம் பற்றி முதலாம் விஜயபாகுவின் (கி. பி. 1059 – 1114) பளமோட்டைச் சாசனம், சஜபாகு IIன் கந்தளாய்ச் சாசனம், நிஸ்ஸங்க மல்லனின் (கி. பி. 1187 – 1196) கந்தளாய்ச் சாசனம் ஆகியனவும் குறிப்பிடுகின்றன. பிற்காலத்தில் இக்குளத்தையே கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வந்து கோணேர் கோவிற் திருப்பகணிகளை நிறைவேற்றி விட்டு, கோயில் நித்தியநைமித்திய பூசைகளுக்கு வேண்டிய வருவாய்க்காக இரண்டாயிரத்து எழுநூறு அவணம் நெல் விதைப்பதற்குரிய விளைநிலத்தை வெட்டித் திருத்தி, நான்கு வருடங்களில் கந்தயாய்க் குளத்தையும் குளக்கோட்டன் கட்டிமுடித்தான் எனக் கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிடும். இப்பாரிய செயலைச் செய்ய இறையருளே காரணமாக இருந்ததென்றும் கல்வெட்டுக் குறிப்பிடும்.

இவ்வாறு காலந்தோறும் கந்தளாயில் புதிய சமூக அமைப்புக்கள் ஏற்பட்டிருந்தபொழுதும், பழைய சமூக மரபு

கள் கைவிடாது பேணப்பட்டிருந்தன என்பதற்கு விமலதருமன் I (கி. பி. 1592 – 1604) காலத்தில் பங்குவரிசை வாங்கிய கந்தளாய்க் குடிகள் மகாசேனன், ஆடகசவுந்தரி மரபுகள் கூறியே வாங்கினர் என்பதனால் புலனாகும்.

மண்ணாறு, மண்ணாற்றுப்பதி

தரைத்தோற்றம் மணல் நிறைந்து காணப்பட்டதனால் மண்ணாறு எனப் பெயர் பெற்றதாகலாம். இன்று மன்னார் எனத் திரிபுபெற்றுக் காணப்படுகின்றது. தமிழகத்திலும் இராமநாதபுர மாவட்டத்தில் ஒரு மன்னார்குடி எனும் ஊர் இப்பெயரைப் பெற்றிருக்கின்றது. மாந்தையை (மன்னார்ப் பகுதியை) இராவணனின் பாட்டர்களில் ஒருவனான சுமாலி இராசதானியாக்கியாண்டிருந்தான் என்ற மரபுக்கதை ''அகத்தியர் இலங்கை'' எனும் நூலில் இருப்பதனால், குருகுல நாகருக்குமுன் இங்கு இயக்கர் தொடர்புகள் காட்டப்பட்டுள்ளன. காளசேனன் வருகைக்குப்பின் குருகுலநாகர் மணற்றிடர், மண்ணாற்றுப் பகுதியிற் பரவியதாற்போலும் மா. மா. மண்ணாற்றுப்பகுதியும், மணற்றிடரும் குருகுலநாகராட்சிக்குட்பட்டிருந்தன என்று குறிப்பிடும். இனி சோழநாட்டுக் குலசேகரன் (இது மூன்றாம் குலோத்துங்க சோழனைக் குறிப்பிடுவதாகலாம் (கி. பி. 1163–1216). படைவீரரோடு வந்து, மண்ணாறு, முள்ளுத்தீவு, கொட்டியனூர் முதலான ஊர்களில் வாழ் தமிழர்களைத் தன்னாட்சிப்படுத்திக்கொண்டு, பின் மட்டக்களப்பையாண்டிருந்த நாதனையும் (இவன் சிங்கள மரபினன்) தன்னாட்சிக்குட்படுத்த, அவனும் மட்டக்களப்புத் தமிழரைக் குலசேகரன் நிழலில் மாற்றி அரசுசெய்தான் என்பதனால் இதுவரைகாலமும் இப்பகுதிகளில் வாழ்ந்தவராகக் குறிப்பிட்ட இயக்கர், நாகர், கலிங்கர், வங்கர் முதலான யாவரும் தமிழர் என்ற ஒரு பேரினத்திற்குள் அடக்கப்படுவதை நாம் அவதானிக்கலாம். கிழக்கிலங்கையில் வாழ்ந்த பல்வேறு இனங்களும் தமிழ்மதம் என்ற கட்டுக்கோப்பிற்குட்பட்டிருந்தார்கள் என்பதனை மனுநேயகயபாகுவின் வரலாறும் ஏற்கனவேயுணர்த்தியிருந்தது (ம. மா. பக். 26). மாகன் காலத்தில் இக்கருத்து மேலும் வலுப்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டது. இனி, மண்ணாற்றுப்பகுதியின் வரலாறு, மாகோனுக்குப்பின் விசயதுவீப அரசுகள் மேலெழும்பியதனால், விசயதுவீபத்தை மத்திய நகராக ஏற்றுக் கைச்சாத்திட்டதாகக் காணப்படுகின்றது. இனிப் போர்த்துக்கேயர் முதலில் மண்ணாறு, மணற்றிடர்ப் பகுதிகளைக் கைப்பற்றினர் என்பதனால் மண்ணாறு கிறித்தவமத வளர்ச்சிக்கு வித்திட்ட களமாக மாறலாயிற்று.

முள்ளுத்தீவு

விசயன் இலங்கைக்கு வந்தசமயம் முள்ளுத்தீவு குருகுல நாகராட்சிப் பிரிவாக இருந்தது. தொலமியன் (கி. பி. 150) புவியியற் குறிப்பும் இதனை நாகர்பிரிவாகக் குறிப்பிடும். ஆனால் கி. பி. 9ம் நூற்றாண்டளவில் முள்ளுத்தீவில் நாகர் கலாசாரம் தன் தனித்துவத்தை இழக்கலாயிற்று.வையாபாடல் மாருதப் பிரவிவல்லியின் மகனின் விவாகத்திற்கு மதுரையிலிருந்து பெண் கொண்டுவந்த வண்ணியர்கள், பின் அடங்காப் பகுதியில் குடியமர்ந்து, தமக்கு வேண்டிய குடிமக்களை மதுரை, மருங்கூர், திருச்சிராப்பள்ளி, மலையாளம், துளுவம், தொண்டைமண்டலம் முதலான பகுதிகளிலிருந்து தருவித்துக் குடியேற்றி முள்ளிமாநகராக்கினர் என வையாபாடல் விபரிப்பதனால் இங்கிருந்த நாகர் கலாசாரம் எவ்வாறு நிலையிழந்தது என்பதை நாம் உய்த்துணரலாம். இன்று இது ''முல்லைத்தீவு'' எனத் திரிபுபெற்றுக் காணப்படுகின்றது.

மண்முனை

பூமியமைவை அடிப்படையாகக் கொண்டெழுந்த பெயர். அம்பிலாந்துறைக்கு வடபாகமாயிருந்த மண்ணேறி முனையின் காப்பு (காவல்) முனைக்காட்டை (இன்று இது முனைக்காடு என அழைக்கப்படுகிறது) மட்டக்களப்பை யாண்ட குணசிங்க மன்னனிடமிருந்து உலகநாச்சி பெற்றுத், திருத்தி எடுத்துத் தன் இராசதானமாக்கினாள். இவள் ஓரிசா தேசத்தையாண்ட குகசேனன் மகன். இலங்கைக்கு வரும் போது குகன் வமிசத்தார் கையிலையிலிருந்து எடுத்துவைத் திருந்த சிவலிங்கத்தையும், புத்தருடைய பல் சின்னத்தையும் எடுத்துக்கொண்டு சகோதரன் உலகநாதனுடன் வர்த்தகப் படகிலேறி, மணிபுரத்திலிறங்கி விசயதுவீபத்தையடைந்து, மேகவண்ணனுக்கு (கி. பி. 362-380) புத்தருடைய சின்னத்தை அன்பளிப்புச் செய்து, அவனை மகிழ்வித்தாள். பின் மட்டக்களப்பையாண்ட குணசிங்கன் இராசதானியைக் கொங்குகாசி அப்பன்பிட்டியூடாகச் சென்றடைந்தாள். இவள் வரலாற்றை இந்தியக் கல்வெட்டும் (EP. IND XU 246), மகாவம்சமும் (அத். 37) ஊர்ஜிதப்படுத்துகின்றன. மண்முனை ஆட்சிப் பிரிவை உருவாக்கியாண்டவள் இந்த அரசியே. இவளுக்குப் பின் இம்மண்முனைப் பிரிவை மட்டக்களப்பு மன்னரே யாண்டனர். மாகோனுக்குப்பின் ஏறபட்ட அரசியல் அதிகார மாற்றம் காரணமாக மட்டக்களப்பு நான்கு பாகமாகப் பிரித்தாளப்பட்டது. அப்பொழுது கலிங்கரே இப்பகுதியையாண்டனர். மண்முனைப்பிரிவில் இவளால் ஓரிசாவிலிருந்து தருவித்

துக் குடியமர்த்தப்பட்ட குடிகளே இன்று உலகநாச்சிக்குடி அல்லது உலகிப்போடி குடியென அழைக்கப்படுகிறார்கள். இவளால் எடுப்பிக்கப்பட்ட தான்தோன்றீசுவரர் கோவிலில், மட்டக்களப்பு சிவாலய மரபின்படி காலிங்ககுடியினரே தலைமைப் பதவிக்குரியோராவர். உலகிப்போடிக்குடி பொருளாதார அலுவல்களுக்கும், படையாண்டகுடி நிருவகத்திற்கும் பொறுப்பாய் இருப்பர்.

கொக்கட்டிச்சோலை:

மண்முனைப்பகுதியைச் சேர்ந்த களப்புமுனைக்குத் தென்பாகத்தில் திடகன் என்பவன் கொக்குநெட்டி மரத்தை வெட்ட இரத்தம் பாய்ந்தது. அதனைக கண்ணுற்ற திடகன் உலகநாச்சி அரசிக்குத் தெரிவித்தான். அவளும் சென்று பார்த்து, அங்கொரு சுயம்புலிங்கம் தோன்றியிருப்பதைக் கண்டு, தான்தோன்றீசுவரருக்குக் கோவிலெடுப்பித்தாள். (கதிரைமலையைத் தரிசிக்கவந்த யோகியொருவர் கொக்குநெட்டி மரத்தின்கீழ் சமாதியிருந்ததனால், அவ்யோகியின் உடலே இலிங்கமாக உருவாகிக் கொக்குநெட்டி மரத்தினால் மறைந்து கிடந்தது என மரபுக்கதைகள் தெரிவிக்கின்றன). பின் கொல்லடத்தித்திருந்து பட்டர் (சங்கமர் எனப்படும் பூசகர்) மூவரையும், தந்தபுரத்திலிருந்து பூமாலை தொடுக்கும் பதின்மரையும் தருவித்து, பூசைகளுக்கு ஏற்பாடுகள் செய்தாள். ஆனால் உலகநாச்சி ஓரிசாவிலிருந்து கொண்டுவந்த இலிங்கத்தை வைத்து நிறுவிய ஆலயம்பற்றி அறியமுடியவில்லை. சிங்கர் அரசர் சிலர் மட்டக்களப்பில் ஆட்சிபுரிகையில் மதபேதமின்றி யாட்சி புரிந்துள்ளனர். (ம. மா. பக். 45-50) இவர்களுள் தர்மசிங்கன் கொக்குநெட்டியாலயத்தைக் கல்லினால் கட்டி, மதில் மண்டபங்களும் இயற்றி, மூன்று தேரும் சோழநாட்டிலிருந்து தருவித்தான். இவற்றுள் இரு தேர்கள் இன்றும் உள. மட்டக்களப்பில் தேரோடும் கோவிலும் இதுவேயாம். சிங்கர் பரம்பரையில் வந்த நாதன் மகன் தினசிங்கன் அரசாண்ட பொழுது, இவன் சோழருட் திருமணம் செய்துகொண்டு, சிவாலயங்களையிடித்து சோழநாட்டிற்கு நிதிகளையனுப்பி முகமன் பெற்றுவந்தான். இத்தருணம் உலகநாச்சி ஓரிசாவிலிருந்து கொண்டுவந்த இலிங்கத்திற்கு எழுப்பிய கோவில் சூறையாடப்பட்டு அழிவுற்றிருக்கலாம் அல்லது போர்த்துக்கேயர் காலத்தில் இடிக்கப்பட்டிருக்கலாம். (பார்க்க: க. மகேஸ்வரலிங்கம், ''கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும், தொகுப்பாசிரியர் வித்துவான் F. X. C. நடராசா, 1980, பக். 135-141).

முக்கனர் வாய்க்கால் :

கிழக்கிழங்கையில் சிவாலயத் திருப்பணிகளுக்காகவும், சமூக பொருளாதார வளர்ச்சிக்காகவும் கலிங்கமன்னர்கள் ஏரிகளையும், அணைக்கட்டுகளையும், மதகுகளையும், கால்வாய்களையும் அமைத்துச் செய்த விவசாயப்பணிகள் அளப்பரியன். இத்தகைய விவசாயப்பணிகளில் ஒன்றாக முக்கனர் வாய்க்கால் வரலாறு அமைந்துள்ளது. முக்கனர் என்பது குமுகனல் என்றும் அழைக்கப்பட்டிருந்தது. இவ்வாய்க்கால் குமுக்கன் ஆற்றிலிருந்து நீரைப் பெற்றதனால் இப்பெயரைப் பெறலாயிற்று. வாகூரன் ஆட்சிசெய்யும்பொழுது மாணிக்ககங்கையில் ஒரு வெட்டுவாய்க்கால் எடுத்து ''முக்கனர் வாய்க்கால்'' எனப் பெயரிட்டு விவசாயப்பணிகளை மேற்கொண்டான் என ம. மா. கூறும். (இங்கு கும்புக்கன் ஓயாவையே மாணிக்ககங்கை யெனக் குறிப்பிட்டதாகத் தெரிகின்றது). பின் சிங்ககுமாரன் உகந்தைத் திருப்பணி வருவாய்க்காக, மேற்குறிப்பிட்ட குமுக்கனர் வாய்க்காலிலிருந்து நீரெடுத்து மூன்று ஏரிகளிற் தேக்கி, ஆயிரம் அவண நெற்கழனிகளைச் செய்தான். (ம.மா. பக். 39) புரோஹியர் தென்னிலங்கையில் மாணிக்ககங்கைக்கும், கும்புக்கன் ஓயாவிற்குமிடைப்பட்ட பிரதேசத்திற் பல கிறித்துவிற்கு முற்பட்டகால அணைக்கட்டுக்களின் அழிபாடுகளைக் குறிப்பிடுவர் (R. L. Brohier, Ancient Irrigation works in Ceylon, Pt. III P. 29). இவற்றைச் செய்தவர்கள் மேற்குறிப்பிட்ட மன்னர்களே என்று உறுதிப்படுத்துவது ம. மா. ஆகும். இந்த ஆற்றினையண்டிய பிரதேசம் இன்று ''குமுக்கன்'' ஊர் எனப்படுகின்றது.

தோப்பாவை :

தோப்பாவையின் ஆதிப்பெயர் புலஸ்தியர் நகர் ஆகும். இராவணன் பாட்டர்களுள் ஒருவனான புலஸ்தியர் பெயரால் ''புலஸ்தியர் நகர்'' எனப் பெயர்பெற்றுக் காலப்போக்கில் ''பொல்லநறுவை'' எனத் திரியலாயிற்று. இப்புலஸ்த்தியர் நகருக்கு தோப்பாவை என்ற பெயர் பிற்காலத்தில் ஏற்பட்டதாகும். தோப்பு-மரஞ்செடி தொகுப்பாக மண்டிக்கிடக்கும் இடம் எனவும், வாவி – குளம் எனவும் பொருள்தரும். தோப்பு + வாவி பேச்சுவழக்கில் தோப்பாவை ஆயிற்று. இதனைச் சிங்கள நூல்கள் ''தொபவேவ'' எனக் குறிப்பிடுகின்றன. மட்டக்களப்பு மான்மியத்தில் முதன்முதலாகச் சேனன் I ன் (கி. பி. 821–851) காலத்திலேதான் தோப்பாவைப்பற்றிக் குறிப்புக் காணப்படுகின்றது. சேனன் I, வரகுண

பாண்டியன் I ன் மகன் ஸ்ரீமாறலல்லபன் (கி. பி. 835–862) படையெடுப்பிற்குப் பின்வாங்கித், தோப்பாவைக்கு ஓடி ஒளித்தான் என்று குறிப்பிடுகின்றது. பின் சோழராட்சிக்காலத்தில் பொல்லநறுவை அவர்கள் தலைநகராயிருந்தது. இதுவும் பாதுகாப்பு நோக்கம் கருதியே ஏற்படுத்தியதாகத் தெரிகின்றது. பின் சிங்கள அரசுகளும் தோப்பாவையைத் தலைநகராக வைத்திருந்துள்ளனர். மாகோனும் (கி. பி. 1215-1255) தோப்பாவையையே தலைநகராக வைத்திருந்தான். தோப்பாவைப் பாங்கரில் புரோஹியர் குறிப்பிடுகின்ற கலிங்க, கலிங்கல என்ற பிரிவுகள் கலிங்கரின் செல்வாக்கை வலியுறுத்தும் தடயங்களாம்.

மடுவோடை :

மடு – சிறு நீர்நிலை. ஓடை – நீர் பாயும் சிறு வாய்க்கால் எனப் பொருள்தரும். மண்ணாறுக்கருகாயிருந்த பகுதியில் நாகர், தமிழர் என்போர் வாழ்ந்திருந்ததாக ம. மா. குறிப்பிடும். ஊர்ப் பெயர் ஆய்வுகள் தமிழ்மொழியின் ஆதிக்கத்தையே வலியுறுத்துகின்றன. இன்று ''மடுமாதா'' கோவினால் இவ்வூர் பெருமை பெரும்.

கதிரை :

கதிர்காமத்திற்கருகாய் அமைந்துள்ள புனிதமலைகளில் ஒன்று. முருகக்கடவுள் சூரனைச் சங்காரஞ்செய்ய இம்மலையிலே பாடிவீடு அமைத்தார் என்றும், அதனாலே இம்மலை ''கதிரை'' எனப் பெயர்பெற்றது என்றும் தெரிகின்றது. கந்த புராணம் ஏழு மலைகளின் நடுவே உயரமாய் நிற்கும் மலையெனக் கூறும். இப்பகுதிவாழ் எயினமக்கள் மட்டக்களப்புத் தேசத்துக் கோவில் விழாக் கடமைகளில் ஊழியம்செய்து, தம்மைக் கதிரை என்று கூறிப் பங்கு வாங்கினர். மட்டக்களப்பு மான்மியத்தில் ''தேசம்'' எனில் மட்டக்களப்புப் பிரதேசத்தையாளும் உரிமைபெற்ற கலிங்க மன்னரையே குறிக்கும். பிறவின மன்னரை இது சுட்டாது. இனித் தேசத்துக் கோவிலெனில் கலிங்கராசர்கள் முன்னுரிமையுடன் முந்நீர் (தீர்த்தம், பிரசாதம் என்பன) பெறுகின்ற கோவில்களாம். எனினும் கலிங்கர் தாம் முன்னுரிமை பெறுகின்ற இக்கோவில்களில் மட்டக்களப்புத் தேசத்துடன் தொடர்பான சாதியினரும், சாகியத்தாரும் தொண்டுபுரியவும், பங்குவரிசைகள் பெறவும் முறைமைகள் வகுத்திருந்தார்கள். எனவே தேசத்துக் கோவில்கள் பல்வேறு சாதியினரும், சாகியத்தாரும் ஒன்றுகூடி விழாக்களை நிறைவேற்றித் திருப்தியடையும் சமய ஒன்றியங்களாகவே இக்கோவில்கள் திகழ்ந்திருந்தன. இம்முறைமைகள் கூறு

கின்ற பகுதியை ம.மா. திருப்படைக்களஞ்சியம் என்றும் கூறும். மன்னன் முதலாக, அயோத்தி நாட்டுரிமை கோரும் மறவர் ஈறாக யாவருக்கும் கோவிற்றிருப்பணிகள் ஆற்றித் திருவேட்டைவிழாவும் முடிவுபெற்றபின் வேளாளர் குடுக்கையில் அடித்துப் பொங்கள் படைப்புகள் (பிரசாதம் முதலானவை) மற்றும் மன்னனால் வழங்கப்பெறும் வெகுமதிகளைப் பெற அழைப்பான். இவ்வாறான பங்குவரிசைகளையே திருப்படைக்களஞ்சியம் எனும் சொல் தொகுப்பாகக் குறிக்கும். இவ்வரிசை முட்டிகள் சித்திமுத்தி தரவல்லன என்று தொனிக்கும் கருத்து, ஆன்மீக வளர்ச்சியைக் குறிப்பாகச் சுட்டும். இதனால் இத்தகைய முறைமைகளைப் பேணியிருந்த தேசத்துக் கோவில்களுக்குத் திருப்படைக் கோவில்கள் என்று இன்னோர் பெயரும் இருந்தது. மேலும் இக்கோவில்களில் வரிசை கூறுவதற்கு அடிக்கப்பட்ட முட்டியும் ''திருப்படை'' என அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. திருப்படை அல்லது தேசத்துக் கோவில்களுள் முதலாவது கோவில் திருக்கோவில் ஆகும். காலத்தால், பிற்பட்ட மற்றைய திருப்படைக் கோவில்களாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர் கோவில், பெரியகல்லாறு சித்திரவேலாயுத சுவாமி கோவில், வெருகல் சித்திரவேலாயுதசுவாமி கோவில், கோணேசுவரர் கோயில், கதிர்காமம், மண்டூர்க் கந்தசாமி கோவில் ஆதியன கருதப்பட்டன. கலிங்கத்து மன்னனாகிய மனுவரதனின் புதல்வர்களில் ஒருவனான சோடகங்கன் (குளக்கோட்டன்) உலகமுய்ய தேசத்துக் கோவில்களில் திருப்பணிகள் ஆற்றினான் என்று ஒரு பாடல் குறிப்பாக உணர்த்தும். கோணேசர் கல்வெட்டு திருக்கோணேசுவரர் தலத்திலே குளக்கோட்டன் இறைவனுடன் இரண்டறக் கலந்தான் என்று சுறிப்பிடும். ஆனால் பேராசிரியர் சி. பத்மநாதன் குளக்கோட்டனை உலகியற் போரில் வெற்றிகொண்ட இராசகுமாரனாய் விளங்கிக் கோகர்ண தரிசனம்பண்ணித் திருப்பணிகள் செய்திருத்தல்கூடும் எனத் திருகோணமலைக் கோட்டையிலுள்ள சமஸ்கிருதச் சாசனத்திற்கு விளக்கம் கொடுப்பார். குளக்கோட்டன் பற்றற்றுக் கோவிற் தொண்டுகள் புரிந்த கிரியாயோகியாக இருந்தமையால் அவன் செய்த போர் ஆன்மீகப் போரேயாம். (பேராசிரியர் சி. பத்மநாதன், கோணேஸ்வரத்தில் சோடகங்கன், வீரகேசரி *13-2-1994 – 20-2-1994*).

மேலும் .. ..

சூரர்க்கரு வறுத்த வேலோன்
சூட்சமத்தால் வரையில் நின்று துலங்கு தீபம்
வல்லியெனும் சூரருக்காய் வள்ளியம்மன் வந்துதித்து

வேலெறிடும் மறைந்து முன்னாள்
துல்லிப மாயெயினர் பதியாண்ட தாலே

(ம. மா. திருப்படைக் களஞ்சியம், கதிரை, பக். *110*)

என ம. மா. குறிப்பிடுவதனால் கதிர்காமப் பிரதேசத்தை கந்தன் படையெடுப்புக் காலமாக ஆண்டிருந்தவர் எயினர் என்பது புலனாகின்றது. இன்றும் கதிர்காமக் கோவில் விழாக்களில் இவ்வெயினர் குடி இடம்பெறுவது, அம்மரபைப் பின்பற்றியேயாம். எனவே குடுக்கையடித்துப் பங்குவரிசைக்கு அழைக்கப்பட்ட ''கதிரை'' இவ்வெயினர் குடியினரேயாம். மாகோன் இலங்கை முழுவதிலுமுள்ள காலிங்ககுலத்தவருக்கு ''தேசராசகுலமென'' விருதுகளுயர்த்திக் கதிர்காமத்திலும், விசயதுவீபத்திலும் சிவாலயமுன்னீரும் பெற்றுக்கொடுத்தான் என்பதனால் கதிர்காமத்திலிருந்த எயினர் ஆதிக்கம் புலனாகும்.

கண்டுமுனை :

கடலோரத்தில் சுழலைக்கட்டிபோல் திரண்ட சுற்றிடர்கள் செறிந்திருந்ததனால் இக்கரை ''கண்டுமுனை'' எனப் பெயர் பெற்றதாகலாம். யாழ்குடாவிலும் பூநகரிப் பகுதியில் கல்முனை எனும் ஊர் உண்டு. வடவிந்தியாவில் மகமது சூசினியின் (கி. பி. *998 – 1030*) துன்புறுத்தலால் வடமதுரையிலிருந்து மூன்று படகுக் குகக் குடிகள் வந்த படகு சேர்ந்த கறையே ''கண்டுமுனை'' எனப்படலாயிற்று. பின் இத்துறை படகுகள் அணையக்கூடியவகையில் ஏற்படுத்தியபொழுது, வடமதுரை வர்த்தகர்கள் போக்குவரவு செய்யும் துறையாக வளரலாயிற்று. ''கண்டுமுனை'' என்ற பெயர் காலப்போக்கில் கல்லேறுமுனைத் துறையென அழைக்கப்படலாயிற்று. இன்று இது கல்முனை எனச் சுருக்கம் பெறலாயிற்று.

பாண்டுறுப்பு :

குருகுலநாகரான துரியோதனன் ஆதியோர், பாண்டவர்களுக்குச் செய்த கொடுமைகளை விபரிக்கும் மகாபாரதத்தை எடுத்துக்கொண்டு நாகர்முனைக் (திருக்கோவில்) கரையையடைந்த கொங்குதேசத்துத் தாதன் எனும் துறவி, திருக்கோவிலில் கூடியிருந்த மக்களுக்கு மகாபாரதக் கதையையெடுத்துரைத்தான். அதனையறிந்த திக்கதிபன் எதிர்மன்னசிங்கமன்னனுக்கு (போர்த்துக்கேயர் காலத்தவன்) அறிவித்தான். எதிர்மன்னசிங்கன் திருக்கோவிலுக்குச் சென்று, தாதனின் வருகையின் நோக்கங்களையறிந்து தாதன் கூறிய பாண்

டவர் வரலாற்றைச் செய்துகாட்டுமாறு கேட்டான். தாதன் கல்முனையையண்டிய கரையோரமாய் வடவால் மரங்கள் அடர்ந்திருந்த ஓரிடத்தைத் தேர்ந்து, அங்கு தீவளர்த்துப் பஞ்ச பாண்டவர் வேடம் தாங்கி, தீயிலிறங்கி வெளியேறினான். அரசன் அதனைக்கண்டு மகிழ்ந்து, அவ்விடத்திலே ஆலயமு முண்டாக்கி ''பாண்டுறுப்பு முனை'' எனப் பெயருமிட்டு, வங்கர்குலத்திக்கதிபரிடம் நிருவகிக்கும்படி கையளித்தான். கண்டி மன்னன் விமலதருமசூரியன் I (கி. பி. 1694 – 1604) இக்கோவிலுக்கு மானியங்கள் வழங்கினான் என இக்கோவிற் பட்டயங்கள் குறிப்பிடுகின்றன. இன்று இவ்வூர் ''பாண்டி ருப்பு'' என்றும், கோவில் திரௌபதியம்மன் கோவிலென் றும் அழைக்கப்படுகின்றன. ஜேம்ஸ் ஹார்ட்மன பொற் கொல்லர் ஒருவர் இந்தியாவிலிருந்து திரௌபதியினதும், பஞ்ச பாண்டவரதும் திருவுருவங்களைக் கொண்டுவந்து பதித்து இவ்வாலயத்தையுருவாக்கினர் என்பர். (Hinduism in Ceylon பக். 119). இது திருவுருவங்கள் இந்தியாவில் வார்க்கப்பட்டுக் கொண்டுவரப்பட்ட நிகழ்ச்சியைக் குறிப்பதாகலாம்.

கண்டி :

''கண்டி'' எனும் சொல்லிற்குத் தமிழில் ஆணெருது, உருத்திராக்கமாலை எனப் பொருள்கள் உள. அதனால் எருது கள் கட்டுமிடம் ''கண்டியான் கட்டு'' எனத் தமிழில் குறிப்ப தாயிற்று. தமிழகத்தில் இடைக்காட்டுக் கண்டியிற் சேரமான் தங்கியிருந்ததனால், அவ்வூர் சேரமாங்கண்டியென அழைக்கப் படலாயிற்று. இலங்கையிற் திகவாபியையண்டிய பகுதிகளில் எருதுகள் இருந்ததனாற்போலும் ''திகவாபி'' தமிழில் ''கண்டியகட்டு'' என்றும், சிங்களத்தில் ''கண்டியவேவ'' என் றும் அழைக்கப்படலாயிற்று. வடஇலங்கை மன்னனான வால சிங்கன் கண்டியைத் தலைநகராக்கியாண்டான் எனச் சீர்பாதக் குலச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. வையாபாடல் மாரு தப்பிரவி வல்லியின் மகன் வாலசிங்கனின் விவாகத்திற்குப் பெண் கொண்டுவந்து அறுபது வன்னியர்களுள் ஒருவன் கண் டிக்குத் திசாவையாக அமர்த்தப்பட்டான் எனக் கூறும். இங்கு ''கண்டி'' என்பது ஒரு மலைநாட்டுப் பிரிவாகும். ''கந்த'' என்ற சிங்களப்பதம் மலையைக் குறிக்கும். போர்த்துக்கேயர் முதலான மேலைத்தேயத்தவர் பேச்சுவழக்கில் ''கந்த'' எனும் பதம் கண்டியாயிற்று எனத் தெரிகின்றது. ம. மா. சிங் கர் சிங்கதுவீபத்தை (விசயதுவீபம்) மத்தியநாகராக மட்டக் களப்பு, முள்ளுத்தீவு, தட்சணாபதி, மண்ணோறு முதலான

நாட்டதிபர்களும் ஏற்றுக்கொண்டதனால் கண்டிநகர் (மலை நகர்) என மாற்றினர் எனக் கூறும் (பக். 56).

கோறளை நாடு

இது ஒரு சிங்களச் சொல். திசாவனி என்ற ஆட்சிப் பிரிவின் உபபிரிவு கோறளை எனப்பட்டது. (பார்க்க: அரும் பத விளக்கம் கோறளைநாடு). மாகோன் பரம்பரையினரின் ஆட்சிமுடிவில் மட்டக்களப்புக் கலிங்க அரசுகள் நலிவடைந் திருந்தன. அப்பொழுது சிங்கர், வங்கர் குலத்தவருதவியுடன் மட்டக்களப்பைக் கைப்பற்றி, மண்முனைக்களப்பிற்கு மேலே யுள்ள (வடக்கு) பகுதியைக் கோறளை நகராக்கி வங்கர், சிங்கர், படையாட்சி குலம் மூன்றையும் குகன் குலத்தவ ரென வகுத்து, அவர்களைத் திக்கதிபராய் வைத்து ஆண்ட னர். இவ்வாறே மண்முனைக்கு வடக்கே கோறளை நாடு உருவாயிற்று. பின் கலிங்கனான மாருதசேனன் தோப்பாவை, மட்டக்களப்பு, உன்னரசுகிரி, மண்முனை, கோறளைநாடு யாவற்றையும் தன்னாட்சிக்குட்படுத்தினான். இவனுடைய காலத்தில் கோறளைநாட்டின் எல்லைகள் விரிவடைந்திருக்க லாம். ஆனால் இன்றுள்ள கோறளைநாடு வாழைச்சேனை முதல் வெருகல்வரையுள்ள பகுதியை உள்ளடக்கியுள்ளது. இது கோறளைப்பற்று, கோறளைப்பற்று வடக்கு என இரு பிரதேச செயலகப்பிரிவுகளாக நிருவகிக்கப்பட்டுவருகின்றது.

கலைவஞ்சியூர்

மட்டக்களப்பை அமரசேனன் ஆண்டிருக்கையில் இராம நாட்டு (தமிழகத்து இராமநாதபுரம்) மறவர்குலத்து இராச வமிசத்தைச் சேர்ந்த கலைவஞ்சி, மங்கம்மை, செட்டிச்சி, மகிழரசி, இராசம்மை, வீரமுத்து, பாலம்மை முதலான ஏழு பெண்கள் தத்தம் கணவன்மாருடனும், வவனியர் (வன்னியர்) குலத்துக் குருகக் (குருக்கள்) குடும்பம் ஐந்துடன் (இவர்கள் குடியமர்ந்தவிடமே குருக்கள்மடம் எனப்படலாயிற்று), சிறைக் குடிகளும் எடுத்துக்கொண்டுவந்து அமரசேனனைக் கண்டார் கள். இவர்கள் வந்த நோக்கம் மட்டக்களப்பில் வைதூலிய (வைதீக) சைவத்தை மாற்றி ''அரிநமோ'' என இராம வழி பாட்டைப் போதிப்பதே. இவர்கள் கொட்டியாபுரமூடாக மட்டக்களப்பையடைந்து தம் வரலாற்றைக் கூற, மன்னனும் 'வன்னிச்சிமார்' என விருதுகள் வழங்கி, அவர்களை ஏழு ஊர்களில் அமர்த்தினான். இவ்வாறு கலைவஞ்சி குடியமர்ந்த ஊரே கலைவஞ்சி ஊர் எனப்படலாயிற்று. இன்று களுவாஞ் சிக்குடி என அழைக்கப்படுகின்றது.

இவ்விதமே பாலம்மை குடியமர்ந்த ஊர் பாலமீன்மடு என்றும், மகிழரசி குடியமர்ந்த பகுதி மகிழவெட்டுவான் அல்லது மகிழூர் என்றும், செட்டிச்சி குடியமர்ந்த பகுதி செட்டிகுளம் என்றும் (செட்டிச்சி பெயரால் ஊர் உருவாகியதால் இது குல அடிப்படையானதல்ல). மங்கியம்மை குடியமர்ந்த பகுதி மங்கிக்கட்டென்றும் அடையாளம் காணமுடிகின்றது. இவர்களுள் இராசம்மை குடியமர்ந்த இராசம்மாதறை பேச்சு வழக்கில் அம்மாதறையாகிக் காலப்போக்கில் ''அம்பாறை'' எனச் சுருக்கம் பெற்றிருக்கலாம் என்றும், வீரமுத்துக் குடியமர்ந்த பகுதி முத்துக்கல் (மன்னன்பிட்டிக்கணித்தான ஊர்) என்றும் பெயர் பெற்றிருக்கலாம் என்றும் கருதமுடிகின்றது.

புலியமாறன் கோட்டையும், இவன் சகமந்திரிகள் நிருவகித்த ஊர்களும் :

கதிர்சுதன் என்னும் சிங்ககுல மன்னன் (கி. பி. 11ம் நூற்றாண்டின் முற்பகுதி) மட்டக்களப்பு, மண்முனை, உன்னரசுகிரி முதலாய பிரிவுகளை நீதியாய் ஆட்சிபுரிவதற்கு வவுணசிங்கம், புலிமாறன், சத்துவண்டன், கொட்டக்கச்சன், நீலவண்ணசேனன், அகுராகு, கட்டகமன் எனும் ஏழு மந்திரிமார்களும் உதவியாய் இருந்தார்கள். (ம. மா. பக். 47) மாகோன், புலியமாறன் மந்திரியாயிருந்த ஊரில் ஒரு சிறிய கோட்டையியற்றி ''மண்முனை வடபகுதி'' எனப் பெயரிட்டு சுகதிரனுக்கு வழங்கினான் (பக். 54) என்பதனால், மந்திரிமார் கண்காணித்த பகுதிகள் அவர்கள் பெயர்களாலே அழைக்கப்பட்டன எனத் தெரிகின்றது. ''இவ்வாறு புலியமாறன் ஆண்ட பகுதியில் கட்டப்பட்ட கோட்டையே புலியமாறன் கோட்டை'' எனப் பெயர்பெறலாயிற்று. போர்த்துக்கேயர் புலியமாறனின் கோட்டையையே கைப்பற்றிப் பலப்படுத்தினர். பின் ஒல்லாந்தரும் இக்கோட்டையையே தமது நிருவாகத்தலமாக வைத்திருந்தனர். புலியமாறன் கோட்டையிலேயே இன்றும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கச்சேரி இருந்துவருகின்றதெனில் புலியமாறன் கோட்டை அழியாச் சின்னமாகத் திகழ்கின்றது எனில் மிகையாகாது.

இனி, கதிர்சுதனின் பிற மந்திரிமார் பெயரால் உருவாகிய ஊர்களின் பெயர்களை நோக்குவாம். நீலவண்ணசேனன் நிருவகித்த பிரிவு நீலாவணை (நீலவண்ணன்+அணை) எனப் பெயர் பெறலாயிற்று. பிற்காலத்தில் நீலன் அணைப் பகுதி

யில் சீர்பாதர் குடியேறி துறையமைத்து போக்குவரத்துச் செய்ததனால், இதன் ஒருபகுதி துறைநீலாவணை என அழைக்கப்படுகின்றது. சத்துவண்டன் நிருவகித்த பகுதி ஒல்லாந்தர் காலத்தில் சத்துருவண்டான் என அழைக்கப்பட்டிருந்தது. (ம. மா. பக் 68) இன்று சத்துருக்கொண்டான் என்று திரிபு பெற்றுக் காணப்படுகின்றது. இவ்வாறே கொட்டகச்சன் ஆண்ட பகுதி கொட்டியபுலமென்றும், அகுராகு ஆண்ட பகுதி கரைவாகு என்றும், கட்டகமன் ஆண்ட பகுதி கட்டகாமம் என்றும் பெயர்பெற்றனவாம்.

சொறிக்கல்முனை

இது சவளக்கடைக்கு (ஜவுளிக்கடை – துணி) அருகாய் அமைந்துள்ள ஊர். நாப்பிட்டி (நாய்ப்பிட்டி) முனைக்கு மேற்கே பாஸ்கோல் முதலி அமைத்த கிறித்தவ ஆலயம், இச்சொறிக்கல்முனையிலேதான் அமைக்கப்பட்டதாகலாம். சொறிக்கல் செறிந்திருந்ததனால் இவ்வூர் இப்பெயரைப் பெற்றதாகத் தெரிகின்றது.

கவடாவை மன்னம்பிட்டி

கவடா – கடவை, கடப்பு என்னும் சொற்களின் திரிபு. இவ்விதவே 'திருக்கடவை' எனும் கோவில் வாயில்களும் பேச்சு வழக்கில் திரிபுபெற்றுத் 'திருக்கவடா' என அழைக்கப்படுகின்றது. அதனால் மட்டக்களப்பின் மேற்கெல்லையான 'மன்னன்பிட்டி' 'கவடாவை மன்னன்பிட்டி' என்று பெயர் பெற்றதாகத் தெரிகின்றது. மட்டக்களப்புக் கலிங்க மன்னன் தினகரசேனனுக்கு வாரிசில்லாமையால், உன்னரசுகிரியின் பட்டத்தரசன் பானுவுக்கு மட்டக்களப்பையும் சேர்த்துப் பட்டம் கட்டியபொழுது, அவனது ஆட்சியெல்லைகள் தெற்கே மத்தங்கடவத்தன (இவ்வூர் அடையாளம் காண முடியவில்லை. புதிய குடியிருப்புக்களினால் பெயர்மாற்றமேற்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது). மேற்கே மன்னன்பிட்டி, கிழக்கே சமுத்திரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம. மா. பக். 40). மன்னன்பிட்டியையண்டிய ஊர்களான முத்துக்கல், கறுப்பளை, தம்பன்கடவை என்பன மேற்கெல்லைக் கிராமங்களாக இன்றும் திகழ்கின்றன.

கொங்குகாசி அப்பன்பிட்டி

ஓரிசாவிலிருந்து வந்த உலகநாச்சி மணிபுரத்திலிறங்கி, விசயதுவீபத்தையாண்ட மன்னன் மேகவண்ணனைக்கண்டு,

பின் அவள் கொங்குகாசி அப்பன்பிட்டி வழியாக மட்டக் களப்பையடைந்தாள். (ம. ம. பக். 42) இப்பாதை மணி புரம், கொட்டியாபுரம், தம்பன்கடவை வழியாய் அனுராத புரம் அணுகிப், பின் அங்கிருந்து சியம்பலாந்தை - கொங்கு காசியப்பன்பிட்டி வழியாக அமைந்திருக்கலாம் என சி. கணபதிப்பிள்ளை விபரிப்பர். (மு. கு. பக். 20) மேகவர்ண ணன் இச்சமயம் மலைநாட்டிலமைக்கப்பட்ட விசயதுவீபத் தில் இருந்திருக்கலாம் எனத் தெரிகின்றது. தென்னிலங்கை யில் மலைநாடு எல்லையில் அமைந்துள்ள அன்பிட்டியவே (Anpitiya) கொங்குகாசியப்பன்பிட்டியின் சுருக்கமாகக் கருத முடிகின்றது. அக்காலத்தில் கடல் பிரயாணம், ஆற்றங்கரை யோரப் பிரயாணங்கள் மூலமே மக்கள் உள்ளூர்களையணுகு வது சாத்தியமாயிருக்கலாம்.

எஞ்சிய ஊர்ப்பெயர்களின் தொகுப்பு

கூத்திகன் மகன் சேனன் ஆட்சிக்காலத்தில் அரசன் தன் தீக்கதிபர்களைச் சந்திக்கும் இடங்களாக மாட்புட்டி, உன் னாஞ்சை, பங்கிடான்வெளி, தம்புட்டி அம்பிலாந்துறை, மணற்புட்டி, நாப்பிட்டி, மலகவத்தை கொங்குகாசிஅப்பன் பிட்டி, அறுகமனப்பூமனை என்பன இருந்துள்ளன. இவற் றுள் 'மாபிட்டியே' பிற்காலத்தில் 'மன்னம்பிட்டி' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கலாம் எனப் புலனாகின் றது. மற்று உன்னாஞ்சையை இன்றைய உன்னிச்சையுடனும், பங்கிடான்வெளியைப் பங்குடாவெளியுடனும், அறுகமனப் பூமனையை அறுகம்களப்புடனும், அப்பிளாந்துறையை அம் பிலாந்துறையுடனும், தம்புட்டியை தம்பட்டியுடனும் (புல்லு மலையிலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ளது), நாப்புட் டியை நாய்ப்புட்டிமுனையுடனும் (கல்முனைக்கருகாயுள்ளது), மணற்புட்டியை கொக்கட்டிச்சோலைக்கருகாயமைந்த மணற் புட்டியுடனும், மலகவந்தையை மல்வத்தையுடனும் அடை யாளம் காணமுடிகின்றது. இம்மல்வத்தைப் பூங்காவில் பிற் காலத்தில் வீரமூனையில் குடியமர்ந்த சீர்பாத குலத்தவருக்கு மானிய நிலங்கள் விடப்பட்டிருந்தன. எனவே காலப்போக் கில் 'மல்வத்தை' மலகவத்தையாயிற்று எனத் தெரிகின்றது. இன்று இம் மல்வத்தை அம்பாறை மாவட்டத்திற்குள் மல்வத்தை, மல்லிகைத்தீவென இரு கிராமங்களாக இருக் கின்றது. மல்லிகைத்தீவு மல்வத்தையின் பழைய பெயராக இருந்துள்ளதையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

நாமிதுவரை ஆராய்ந்த ஊரும் பேரும் வரலாறுகள் மட்டக்களப்புத் தமிழகம் இதுவரை கருத்திற்கொள்ளாதிருந்த பல வரலாறுகளைப் புதுமைபெறச் செய்துள்ளன. இனி

உகந்தை, நாகரின் தலைநகராயிருந்த காலத்திலும், காளி சேனன் காளிதேசத்திலிருந்து ஆண்டகாலத்திலும், உகந்தை முதல், மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ் குடா, மன்னார் ஆகிய பிரதேசங்கள் யாவும் முறையே நாகர், காளிசேனன் ஆட்சிக்குட்பட்டிருந்தன என்பதனை உணர்த்துகின்றன. மாகன் காலத்தில் இன்னுமொருபடி மேலாக இராமேசுவரமும் இவனதிகாரத்தையேற்றிருந்த தாகத் தெரிகின்றது. நாகசிற்றரசுகள் பரவி ஆண்ட எல்லை கள் காலப்போக்கில் தமிழ்மயமான அரசியற், சமூகப் பின் னணிகளாகப் பரிணமித்தமையையும் நாம் விளங்கிக்கொள்ள முடிகின்றது. எனினும் மேற்குக்கரையாகக் களனியாவரை பரவியிருந்த நாக அரசுகள் பற்றியோ அல்லது தாமிரபர் ணித்துறையில் (தம்பபன்ன) இருந்த தமிழ்ச்சிற்றரசுகள் பற் றியோ இவ்வரலாறுகளிலிருந்து அறியமுடியவில்லை. ஆனால் விசயதுவீபத்தின் ஆட்சிக்குட்பட அனுராதபுரம், வதுளா, நுவரெலியா, காலி, மாத்தளை, அம்மான்தோடை, இரத்தின வல்லி நாடு முதலிய பிரிவுகள் இருந்துள்ளன எனத் தெரிய வருகின்றது. கிழக்கிலங்கையரசுகள் மேற்குக்கரையோர அரசு களுடன் தொடர்புகொண்டிருக்காமையாலே குதிரைமலை தவிர இலங்கையின் மேற்குக்கரை வரலாறுகளைக் குறிப்பிட வில்லையெனலாம். தொலமிக்கு (கி. பி. 150) இலங்கை யின் உள்நாட்டுப் பட்டினங்கள், அரசுப்பிரிவுகள், வர்த்தக நிலையங்கள், மலைநாடுகள் பற்றிப் புவியியல் அடிப்படை யில் விபரிக்கமுடியுமாயின், எல்லைகளைப் பாதுகாப்பதிலும், விரிவாக்கம் செய்தலிலும் மட்டுமன்றி, இந்தியாவின் பல பகுதி களின் விவகாரங்களையும் அறிந்திருந்த மட்டக்களப்பு அரசு கள், தம்மரசின் அயற்பிரதேசங்கள்பற்றி அறியாமைபடைத் திருந்தார்கள் எனக் கருதுவது தவறாகும்.

எனவே தத்தம் அரச, சமூக, பொருளாதாரத் தேவை களுக்கிணங்க அறிவுக்கெட்டிய விடயங்களை எழுதிப் பேணிய வரலாற்றுக்கூறுகளை, தற்கால அறிவுத்திகளைத் துணைக் கொண்டு ஆராய்ந்து, அவர்கள் தொட்டும் விட்டும் சென்ற வரலாற்றுண்மைகளைத் தொடுத்துப்பார்த்தல் எம் கடனா கும். இன்றைய அரசியல் வரலாறுகளைக்கூட நாம் உள்ள படி எழுதிப் பேணுகின்றோமா? என்பது ஐயத்திற்கிடமானது. எனவே வரலாற்றுணர்வுமிக்க மட்டக்களப்புத் தமிழகம் எமக் களித்திருக்கும் சமய, சமூக, அரசியற் பாரம்பரியங்களை நாம் பேணுவதோடு, எதிர்கால வரலாறுகள் நேரிதாகச் செல்ல இவற்றை ஆராய்ந்துகாட்டி, மக்களை உணரவைப் பதும் அவசியமாகின்றது. ✸

இயல் 5

மட்டக்களப்பு மான்மியம்

விபரிக்கும்

சாதியமைப்புக்கள்

எமது ஆய்வுகள் தென்கிழக்கிலங்கையில் கலிங்கர் உருவாக்கி வளர்த்திருந்த அரசுகள் தமிழரசுகளாக விளங்கிய பொழுதிலும், இங்கு இவர்கள் உருவாக்கி வளர்த்திருந்த சமய, சமூக பாரம்பரியங்கள் வடஇலங்கைத் தமிழரசுகள் பேணியிருந்த சமய, சமூக பாரம்பரியங்களினின்றும் சிறிது வேறுபட்டிருந்தன என்பதனைத் தெரிவிக்கின்றன. ஆதியில் தென்கிழக்கிலங்கைக் கலிங்கரின் ஆட்சிகளையுறுதிப்படுத்தி வளம்படுத்திய கிழக்கிந்திய மக்கள் (கலிங்கம், வங்கம், சிங்கபுரம், ஒறிசா, காளிகட்டம்) பல்வேறு சமூக பாரம்பரியங்களைப் பின்னணியாகக் கொண்டிருந்தவர்களாயினும், இவர்கள் யாவரும் சைவம் பேணியிருந்தவர்களாகும். இவர்களது சமூக பாரம்பரியங்கள் வேறுபட்டாலும், சமய பாரம்பரியங்கள் சைவத்தை நிலைக்களனாகக் கொண்டு வளர்ந்ததனால், சைவத்தைப் பேணியிருந்த சேர, சோழ, பாண்டி நாட்டு மக்களின் சமூக பாரம்பரியங்கள் சமரசமுற்றுக் கலப்புற்றபொழுதிலும், இவ்விரு சமூகங்களும் தத்தம் பண்டைய சமய, சமூக பாரம்பரியங்களுக்குத் தனித்துவம் அளித்துவந்துள்ளனர். அதனால் குருகுலநாகர் கலாசாரம் ஒருபுறமிருக்க, சேர, சோழ, பாண்டிய நாடுகள், மற்றும் தொண்டை மண்டலத்துச் சமய, சமூக பாரம்பரியங்களையே மையமாகக் கொண்டு வளர்ந்த யாழ்குடா சமய, சமூக பாரம்பரியங்களும் தனியியல்புடையனவாகக் காணப்படுகின்றன. எனவே தென்கிழக்கிலங்கையில் கலிங்கரின் ஆட்சியின் கீழ் கிழக்கிந்திய சமய, சமூக பாரம்பரியங்களும், தென்னிந்திய சமய, சமூக பாரம்பரியங்களும் சங்கமமாகியதனால் ஏற்பட்ட வேற்றுமைகளையும், ஒற்றுமைகளையும் ஈண்டு ஆராய்தல் உகந்ததாம்.

சாதியமைப்புகளை மட்டக்களப்பு மான்மியத்திலுள்ள பெரிய கல்வெட்டு (பக். 72–73) உலகப்படைப்புக் காலம்

முதலாகச் சாதிப்பிரிவுகள் ஏன்? எவ்வாறு? ஏற்பட்டன என்பதனை விபரிக்கும். இக்கல்வெட்டின்படி பூமியின் படைப்புக் காலத்தில் தோன்றிய மனுக்குலம் விண்ணவரென இன்பம் துய்த்திருக்கையில், சூரியகிரணச் சுடர்விரிவால் அவுணசாதிகள் உதித்து மனுக்குல முறைகளை மாற்றி, மனுக்களைத் (மக்களை) தம்மை வணங்கும்படி வதைத்தனர். அத்தருணம் திருமால் அவர்களை அழித்து, மனுக்குலத்தின் முறைமைகளை நிறுவினார். அப்பொழுது காசிபன் (அயன் மகன்) உதித்து மனுக்குலத்தினை ஆதி (பிராமணர்) அரசன் (சத்திரியன்) வைசியன் (வணிகன்) எனக் கன்ம அடிப்படையில் சாதிகளை வகுத்து, அவ்வச் சாதி நெறிப்படி ஒழுகுமாறு பணித்தான். ஆனால் பின் இம்மூன்று சாதியரிலும் மாயையணுகியதனால், தத்தம் சாதிக் குணநெறிகளிலிருந்து நழுவியோரைக் காசிபன் தள்ளி அவர்களைச் சூத்திரராக வகுத்து, தவங்களினால் சாதியை மாற்றுவீரெனச் சபித்தான். இவ்வாறு சாதி அமைப்புக்கள் எவ்வாறு உருவாகின என்பதனைப் பெரிய கல்வெட்டு முதலில் விபரித்தபின், கலியுக நிகழ்ச்சிகளையும் தொடர்புபடுத்தி விபரிக்கும் அவற்றைத் தொடர்ந்து நோக்குவோம்.

இவ்வாறு உயிர்களின் கன்மங்களுக்கமையச் சாதி, சமூக அமைப்புக்கள் வளர்ச்சிபெற்றிருக்கையிற், கலியுகத்தில் பாண்டியன், சோழன், சேரன் என்போரும் தத்தமக்கு வேண்டிய சிறைகளை வகுத்து வேந்தராய் ஆட்சிபுரிந்து மூவர் (பிரம்மா, மால், சிவன்) தேவாலயங்களையுமியற்றி, தேவாலயங்களின் திருத்தொண்டர்களையும் வகுத்து, பின் கலிங்கனையும் சேர்த்துத் திறைபெற்று ஆண்டுவந்தனர். இவ்வாறு, கலிங்கரும் இம்மூவேந்தர் ஆட்சிக்குட்பட்டிருக்கையிலே, கலிங்கனாகிய இரஞ்சலன் ஏறக்குறைய கிறித்துவிற்கு முன் மூன்றாம் நூற்றாண்டளவில் மட்டக்களப்பிற்கு வந்து தென்கிழக்கிலங்கைக் கலிங்கராட்சியை உறுதிப்படுத்திப், பின் பண்டு மரபைப் பகுத்தான் எனப் பெரிய கல்வெட்டு விபரிக்கும். இக்கல்வெட்டின் காலம் ஒல்தாந்தர் காலமாயினும், எழுதிப் பேணப்பட்ட விடயங்கள் பழைய சாதி அமைப்புக்கள் சமய, சமூகத் தேவைகளை மையமாக வைத்து உருவாகின என்பதனை வலியுறுத்தும். சாதித் தெய்வக் கல்வெட்டும், தென்கிழக்கிலங்கையில் மூவேந்தர் செய்திட்ட சாதி மரபுகள் இவையெனக் கூறுகையில், ''தென்னவன் சென்னி கொங்கன் தீரரென மூவரசாண்டு வரு நாளிலே திறமை நலமேவு வரிசை செய்திட்ட மரபு'' என்பதனால் தமிழகத்தில் பண்டு வகுக்கப்பட்ட சமய, சமூக நம்பிக்கைகளைப் பின்னணியாகக்

கொண்டே தென்கிழக்கிலங்கையிலும் ஆதியில் சாதி அமைப்புக்கள் வகுக்கப்பட்டன என்பது உய்த்துணரத்தக்கது.

இக்கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே சாதித் தெய்வக் கல்வெட்டு சமய, சமூக அமைப்புக்களை விபரித்துச் செல்வதனை இங்கு ஆராய்தல் உகந்ததாம்.

சைவத்தினை மூவேந்தரும், கலிங்கரும் பேணியிருந்தபடியினால் சைவத்தின் உட்பிரிவுகளுடன் சாதியமைப்புகளைத் தொடர்புபடுத்தி வழிபாட்டு நெறிகளையும் வகைப்படுத்தினர்.

உழவர்	—	சிவன்
உடுக்கு	—	மாரியம்மன்
நழவர்	—	வயிரவர்
நாடார்	—	கண்ணகை
தொழுவர்	—	பிதுர்
தொண்டர்	—	வேலவன்
மழுவர்	—	வீரபத்திரன்
மறையோர்	—	நான்முகன்
வேந்தர்	—	திருமால்
வேடர்	—	கன்னி
ஏந்துபணி செய்வோர்	—	காளி

இவ்வாறு வெவ்வேறு சாதி அமைப்புக்கள் வெவ்வேறு கடவுட்டிருமேனி வழிபாட்டினராயினும், இவர்கள் யாவரும் சிவன் கோவில்களில் சிவவழிபாட்டுத் தொண்டர்களாகவும் இருந்துவந்துள்ளனர். மட்டக்களப்புப் பிரதேசத்துச் சாதியமைப்புக்கள், எவ்வாறு சிவன்கோவில்களிற் திருத்தொண்டர்களாய் இருந்து பணிபுரிந்து வந்துள்ளனர் என்பதனை ம. மான்மியத்திலுள்ள ஆசாரிகள் கல்வெட்டு (பக். 93); ஒழிபியல் (திருப்படைக்களஞ்சியம் பக். 98), குடுக்கை கூறும் விபரம் (பக். 99), பங்கு தடுக்கும் முறை (பக். 102 – 112) என்பன விபரிக்கின்றன. முதன் முதலாக நாகர்முனைச் சுப்பிரமணியர் ஆலயத்தைச் சோழநாட்டுச் சிற்பிகளைத் தருவித்துத் திருப்பணிகள் நிறைவேற்றியபின் ''திருக்கோவில்'' எனப் பெயரிடப்பட்ட இக்கோவில் நிருவாகத்துடன் தொடர்பான சாதி அமைப்புக்கள் பின்வருமாறு:

(1) கலிங்ககுல இராசர்களே சிவன் கோவில்களுக்கு முதன்மையானவர்கள். (சிவாலயங்களை எந்தக் குலத்து அரசர்களியற்றினாலும் கலிங்ககுலத்ததிபருக்கே முதன்மை கொடுத்துவரவேண்டும்.

(2) அந்தணர் இருபாகையர், ஐந்து பண்டாரங்கள் முதன்மை இராசர் ஊழியர், வேளாளரின் பதினாறு சிறைகளும் வேளாளரின் ஊழியர், ஏழு இராசர்களும், படையாட்சிகுலத்து மூன்று வன்னியரும் பரிபாலனகாரர்.

இனி கி. பி. 1215 - 1255 மாகோன் வந்து தென்கிழக்கிலங்கையில் கலிங்கராட்சியை உறுதிப்படுத்திய காலத்தில், அந்தணர்கள் முற்காலத்தில் கலிங்க மன்னர்களால் வகுக்கப்பட்ட சிவன்கோவிற் திருத்தொண்டர்கள் நாகர் சொற்கேட்டு, பண்டு கலிங்கனிட்ட கடமைகள் மாற்றி அரனைத் தூற்றி இராம வழிபாடு போற்றித் தமிழ்மதம் (சைவம்) கைவிட்டனர் என்பதனை மாகோனுக்கு எடுத்துரைக்க, மாகோன் திரும்பவும் அரனூழியம் வகுத்திருந்தான். அப்பொழுது சைவமதம் வளர்ந்து ஓங்கிச் சிவாலயங்கள் பூத்திலங்க அந்தணர் சொற்படி கோவகியரில் ஏழு குடிகளைப் பகுத்து ஈசர் பணிகளைத் தலைமுறை தலைமுறையாகச் செய்துவரும்படி வகுத்தான். இவ்வேழு குடிகளும் சிவபூசைக்கு வேண்டிய விளக்கேற்றல், பூவெடுத்தல், தூசகற்றல், சாணமிடல், அணிவிளக்கல், மாலைகட்டல், மேளமீட்டல், சந்தனமரைத்தல், நெல்லுக்குத்துதல், சிவிகை ஏந்தல், தானிகட்டல், அமுது வைத்தல், நீர் வார்த்தல் முதலான அகத்தொண்டுகளுக்கென அமர்த்தப்பட்டனர் ஆவர். (ம.மா. குடிக்கல்வெட்டுமுறை பக். 70-71).

இச்சாதி அமைப்புக்கள் கிவாலயங்களுடன் தொடர்புடையனவாய்த் திருத்தொண்டுகள் புரிந்துவரினும், இவற்றிடையே தத்தம் முதன்மைபற்றி உட்பூசல்கள் இருந்துவந்துள்ளமையும் அவதானிக்கத்தக்கது. உதாரணமாகச் சிவன் சூகர (பன்றி) வேட்டைக் காலத்தில், வன்னிபங்களுக்குப் பண்டாரங்கள் ''வெள்ளாளர் சுவாமியின் இரத்தினமாலையைத் திருடிச் செட்டிமார்களுக்குக் கொடுத்தார்கள்'' எனக் கூற, வன்னிபங்கள் செட்டிமாரையும், வேளாளரையும் பிடித்துக் கட்டிவைத்து அடிக்கும்படி ஏவ, பண்டாரங்களும் கட்டிவைத்து அடித்து அவிழாமற் கட்டுடனே அவர்களைக் கிடக்கச்செய்து, சிவன் பன்றிவேட்டை முதலான சகல திருவிளையாடல்களையும் செய்தபின், இவர்களைக் கட்டவிழ்த்துவிட்டுப் பங்கு கூறவைப்பர். இவ்விழாவில் கிழக்கிந்தியரான படையாட்சிகுல வன்னிபங்கள், தென்னிந்திய வேளாளரையும், மற்றுச் செட்டிமாரையும் தமக்குக்கீழ் வைத்திருக்க விரும்பிய மனப்போக்கை, இவ்விழா தெளிவாக எடுத்துக் காட்டும். இதேபோன்று வேளாளரின் பதினேழு சிறைகளும்

(இவர்கள் யாவரும் பண்டாரங்கள் உட்பட சோழநாட்டினர் என்பது, ''சோறும், சோழனும் சிறைதளம் வகுத்துப் பாராண்டிருந்த முறையிலே பகுப்பாய்'' என்பதிலிருந்து புலனாம். பக். 76-77). மேலும் பன்றிவேட்டை விழா முடிவில் வரிசைப்படி பங்குமுட்டி கூறப் பிராமணர் எழும்பியபொழுது, வேளாளரின் 17 சிறைகளும் பிராமணரிடத்துக் காணப்படும் குறைகளை பின்வருமாறு எடுத்துக் கூறினார்கள்.

''அன்னா ளந்தணன் அறம் பறித்திடுவான்
சாதம் புசிக்கில் தனித்து உண்டிருப்பன்
ஓதிலெவர்க்கும் உபதேச மளியான்
ஈயர் குலத்தோனிடத்தில் இருந்தி
தூயாத் தோஷம் தொடரு மென்றோதி'' (பக். 73)

எனக் கூறிப், பின் தம் குடித் தலைவனான வேளாளரின் ஆசார ஒழுக்கங்களையும், நற்பண்புகளையும், வேளாளரின் தேவாலயத்தில் செய்யும் சிவனடித்தொண்டுகளையும் கூறித் தாம் வேளாளர் கைகளிலிருந்தே தத்தம் பங்குகளைப் பெற விரும்புவதாகக் கலிங்கராசனுக்குக் கூறினார்கள். அப்பொழுது கலிங்கராசன் அந்தணர், அரசர், வைசியர் என்போர் சூத்திரருடைய கைகளிலிருந்து பங்குகளை வாங்கமாட்டார்கள் என்பதனால் அவர்களுக்குப் பட்டுப் போட்டு பங்குவரிசை கூற வேண்டுமென்றும், மற்றவர்களுக்குப் பட்டுப் போடாது வரிசை கூறவேண்டுமென்றும் கூறவே, சிவன் சூகர வேட்டை விழாவிற் காகக் கட்டிப்போட்டிருந்த செட்டிமாரையும், வேளாளரையும், பண்டாரங்கள் அவிழ்த்துவிட, வேளாளன் எழும்பி பங்கு வரிசைகளை வழங்கினான் என்பதனால் சிவதொண்டாற்றிய குடிமக்களிடையேயிருந்த சாதிப்பூசல்களை ஓரளவிற்கு நாம் உணரலாம். இப்படியான சாதிப்பூசல்கள் விமலதருமன் I (கி. பி. 1594 - 1604) கண்டியை ஆண்ட காலத்திலும் இடம் பெற்றதாக ம. மான்மியம் குறிப்பிடும். இவன் காலத்தில் சிவன்கோவிற் திருத்தொண்டுகளில் வன்னிபங்களுக்கும் வேளாளர்களுக்கும் முன்முறைமை தவறிக் குழப்பமேற்படவே, மன்னன் வன்னிபங்களை வினவ, அவர்கள் பழைய செப்பேட்டை எடுத்து வாசித்துக்காட்ட, அவனும் அதைக் கேட்டு, அச்செப்பேட்டிலுள்ள ஏற்பாட்டின்படியொழுகித் திருத்தொண்டுகள் புரியுமாறு கேட்டுக்கொண்டான்.

இனி, வேளாளர் சிவன் சூகரவேட்டை முடிவில் பங்கு வரிசை கூறும்பொழுதிலும் சாதிமுன்னுரிமைகள் காட்டப்பட்டன. தென்கிழக்கிலங்கையிற் கலிங்கராசனின் ஆட்சி உருவாகிய காலத்தில் தொடர்பாய் இருந்த கிழக்கிந்தியப் பழங்

குடியினருக்கு முதலில் பங்கு வரிசைகள் வழங்கியபின்னரே, சோழநாட்டுக் குடிகளான வேளாளருக்கும், பதினேழு சிறைத் தொண்டர்களுக்கும் பங்குவரிசைகள் வழங்கப்பட்டன. பங்கு வரிசை முறை பின்வருமாறு:

1. பெரியதிருவாசல் — கைலைமலை
2. வேதம் — பிரமா
3. நம்பி — விட்டுணு
4. திருப்பாட்டு — சிவன்
5. சரிகைசன்னாசம் தேசம் — தேசத்தை ஆளும் கலிங்க ராசன்
6. உலககுருநாதர் — கலிங்கரின் சமயக்கிரியைகளை நிகழ்த்தும் பிராமணர்கள்
7. பூபாலர் — கலிங்கரின் சிவபணிக்கு உதவியாக வந்த கலிங்க வேளாளர்
8. பூவசியன் — சிவபணிபுரிகின்ற கலிங்கத்து வைசியர்கள் (வணிகர்)
9. புன்னாலை — ஆடகசவுந்தரி வழிவந்த வங்கர் குடிகள்.
10. மண்முனை — உலகநாச்சி குடிவழிவந்த உலகிப்போடி குலம்.
11. மட்டக்களப்பு — கலிங்க அரசின் பாதுகாப்பிற்காக காளிகட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பழைய படையாட்சி குடிப் பரம்பரையினர்.
12. நாடு — அமரசேனன் காலத்தில் வந்த இராம நாட்டு மறவ வமிசத்தாரின் குருக்கள்.
13. நகரம் — தஞ்சை நகர் (சோழநாட்டு) தம் பதி நல்லாள் காலத்தில் வந்த வேளாளர் குடிகள்.
14. கண்டி — வங்கர்குலத் தொடர்புடைய விசயனின் சிங்கபுரக் குடியினர்.
15. கதிரை — முருகனொளி நுண்வடிவில் விளங்கும் கதிரமலை வாழ் எயினர்.

16. கந்தளை — மேல்வங்கர் குலத்து மகாசேனன் வழிவந்த குடியினர்.
17. மாவலி — மாவலிகங்கைக் கரையில் வாழ் சிவ வழிபாட்டையுடைய வதனமார் எனும் இடையர்.
18. அயோத்தி — அயோத்தியைச் சேர்ந்த இரகுவிற்கும் மறவர்குலப் பெண்ணுக்கும் பிறந்த மக்கள். அயோத்தியுரிமையைப் பெற்றுப் பின் இராமர் துணைவராகி அரக்கர்குலம் வேரறுத்தனர். இவர்களே சிவமறவர்குலம் எனப் பங்குபெற்றனர்.
20. பதினென் சிறைகள் — இவர்கள் சோழநாட்டு வேளாளருக்கு உதவியாக வந்த சோழநாட்டுச் சிவத்தொண்டர்கள் (வேளாளர், மாதுலர், கோயிலார், பண்டாரம், பண்டாரப்பிள்ளை, குசவர், கொல்லர், முதலிகள், வாணிபன், நம்பிகள், வண்ணார், அம்பட்டர், சாணார், பள்ளர், பறையர், கோவியர், தவசிகள், கடையர் முதலானோர்).

இவ்வாறு முதலிற் கிழக்கிந்தியப் பழங்குடியினருக்குக் கொடுத்தபின்னரே, சோழநாட்டுக் குடிகளுக்குப் பங்குகள் வரிசை கூறப்பட்டன. இன்னும், இச்சோழநாட்டுச் சிறைக் குடிகள் சிவன்கோவிற் திருத்தொண்டர்களாய்ப் பணிபுரிந்ததோடு, சமூகத் தொண்டுகளும் செய்துவந்தனர் எனத் தெரிகின்றது.

மட்டக்களப்பில் கலிங்கரே நீண்டகாலமாகத் தம் அரச பாரம்பரியங்களைப் பேணியவர்கள். வங்கர், சிங்கர், ஒறிசர், சோழர் அரசபாரம்பரியங்கள் மட்டக்களப்பில் நீடிக்கவில்லை. எனவே கலிங்கரே தம்மை எப்பொழுதும் முதன்மை இராசாக்களாகக் கருதிவந்துள்ளனர். மற்றைய அரசவமிசத்தாரின் அரசபாரம்பரியங்கள் மறைந்தபொழுது, இவர் பரம்பரை வழிவந்ததாகக் கருதப்பட்ட குடிகள் முன் (முற்) குலத்தவர் எனக் கருதப்பட்டுச் சமூகத்தில் உயர்நிலையில் வைத்துக் கருதப்பட்டவர்கள். இவர்களுள் படையாண்டகுலம், வங்கர் (பணிக்கனார்) குலம், உலகிப்போடிகுலம் என்பன தம்மை

மூற்குகர் குலமென அடையாளம் கண்டு, தமக்கெனவொரு சமூக பாரம்பரியங்களையும் வளர்க்கலாயினர். எனினும் இவர்கள் எப்பொழுதும் சூரிய குலக் கலிங்கராசகுலத்தினரைத் தமக்கு மேலான சாதியென ஏற்றுவந்துள்ளனர். அதனோடு சமூக அமைப்புகளிலும் ஏற்றத்தாழ்வுகளை இவர்கள் பெற்றிருந்தனர் என்பதனை நாம் அவதானிக்கலாம்.

நன்மைக்கும் தீமைக்கும் அமைக்கும் கும்பவரிசைகள் முதலானவை வகுத்துக்கூறிய பகுதிகளில், ஒவ்வொரு சாதியினருக்கும் அவரவர் சமூக அந்தஸ்து நிலைகளுக்கேற்ப எத்தனை நிறைகுடங்கள், கூரைமுடிகள், மேற்கட்டிவிதானங்கள், நிலபாவாடைகள், பூ வகைகள், தீபங்கள், இன்னிய வாத்தியங்கள், தானியங்கள், ஊழியம் செய்யும் குடிகள் என்பன உரித்துடையன போன்ற விபரங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.

இவர்களுள் தேசத்தையாளும் கலிங்கருக்கே, நன்முறைகள் யாவும் சிறப்பாகச் செய்து முடிவில் வேளாளர், தனவணிகர் என்போர் கொடைகள் வழங்கி மகிழ குகர்முறை கூறும் மூன்று சாதிகளும் (படையாட்சி, பணிக்கர், உலகிப்போடி குலம்), பதினெண்சிறையாதிகளும் இம்முறைகளைத் தவறாது செய்து, முதன்மைபெற்ற சாதியென ஏற்கவேண்டுமென்றும், தவறின் ஏழ்நரகு வீழ்வர் என்றும் வற்புறுத்தப்பட்டுள்ளது (ம. மா. பக். 88–89).

தேசத்தை ஆளும் கலிங்க அரசபரம்பரையினருக்கு அடுத்த நிலையிலே, குகமரபினர் மூவரும் இடம்பெறுகின்றனர். இவர்களுள் படையாட்சி குலத்தவருக்காகிய நன்முறைகள் இவையெனக் குறிப்பிட்டு, இவர்களே குகனைத் தம் குலத்தவன் (முற்கால குகனென்குலம்) என்பர் என்றும், பிறர் தம்மை முற்குகர் (முன்குகன்) என மரபுத்தொடர்பே காட்டுவர் என்றும் கூறி, இவர்களின் குகன்குல உரிமைகள் அழுத்திக் கூறப்பட்டுள்ளன (ம. மா. பக். 89–90).

புன்னாலை எனப்பட்ட வங்கர்குலத்தார் பிற்காலத்திலேற்பட்ட கேரளநாட்டு (மலையாளநாடு) வீரர் வருகையினால், அவர்களைக் கௌரவிற்குமுகமாகப் ''பணிக்கர்'' எனப்பட்டனர். (பார்க்க: ''பணிக்கர்'' அரும்பதவிளக்கம்) பழைய மரபுகளின்படி அரசகுலக் கலிங்கரும், வங்கரும் திருமணத்தால் கலப்புற்றதனால் மன்னர்கள் காலிங்காகுலம் எனப்பட்டனர். ஆயினும் வங்கருக்கென, கலிங்க அரசுகளில் திக்கதிபர் பதவிகள் இருந்தன. உன்னரசுகிரிப்பிரிவை ''வங்கர்''

குலத்தவர் சிலர் ஆண்டிருந்தனர் என்பதனால், இவர்கள் சமூக முக்கியத்துவம் புலனாகின்றது. எனவே இவர்களுக்கும், மண்முனையையாண்டிருந்த உலகநாச்சி குடிக்கும் வகுத்த வரிசைகள் பொதுவானவையாம். வங்கர்குலம், கலிங்க அரசுகளில் முக்கியத்துவமிழந்திருந்த பிற்காலத்தில், இவர்கள் கலிங்கருக்கெதிராகச் சிங்கருடன் சேர்ந்து மட்டக்களப்புப் பகுதியின் ஆட்சிப்பாரத்தை சிங்கர் கைக்கு மாற்ற ஏதுவாக இருந்திருக்கிறார்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இனி, இச்சாதி வரிசைகள் எவையெனச் சுருக்கமாக ஆராய்வோம். கலிங்க அரசகுடியினருக்குப் பதின்மூன்று கும்பமும், தென்னம்பாளை அலங்காரமும், தனிப்பாவாடை மேற்கட்டியும், தாரை, தவில், குழல், வீணை வாசிப்போர் இருக்கும் பந்துளுள் உயரியஸ்தானத்தில் இரு நிறைகுடங்களும், ஐவகை நிற மலர்களில் கஞ்சமலர் கூடியபங்காய் இருக்கவும், புலவர்கள் மன்னரைப் புகழ்ந்துபாடவும், பதின்மூன்று பட்டாடை கொய்து கூறைமேல் எறியவும், பல தீபச்சுடர்கள் எரியவும், நவதானியங்கள் தூவப் பதினெட்டு ஊழியரும் எழுந்து மரியாதை செய்யவும், வேளாளர் சிறை பதினெட்டும் ஊழியஞ்செய்யவும், வெண்குடைக்கீழ் பூபாலர் வருகையும், வேற்றுமக்கள் வணக்கம் புரியவும், எல்லாக் கோவில்களிலும் முன்னுரிமை பெறவும், வேளாளர், தனவணிகர் கொடை வழங்கி மகிழவும், குகர்முறை கூறும் சாதியினர், மற்றும் சிறைகள் யாவரும் இம்முறைகளைத் தவறாது செய்யக்கடவர். தவறின் ஏழ்நரகு வீழ்வர் என்று மலையமான் வகுத்த முறைகள் இவையேயாம் என்று வரிசைகள் வகுக்கப்பட்டுள்ளன (ம. மா. பக். 88–89). எதிர்மன்னசிங்க மன்னன் ஆட்சியுடன் இம்முறைகள் வழக்கற்றிருக்கலாம். இவன் பரம்பரையில் அரசகுடி பரம்பரையினர் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை.

கலிங்கமன்னரின் ஆட்சிகளுக்குப் பாதுகாப்பளித்திருந்தவரும், குகன் மரபு கூறுவோரில் சிறந்தவராகக் கருதப்படும் படையாட்சிகுலத்தாருக்குக் கும்பம் ஒன்பது வைக்கவும், தேங்குமலர் அலங்காரம் செய்யவும், சேலை கொய்தெறியவும், பறை, மேளம், குரவை இசைகள் செய்யவும், இருபந்தர் இடவும், வேளாளர் சிறைகளில் எழுவர் பணிசெய்யவும், பல தீபச்சுடர்கள் இடவும், நிலபாவாடை போடவும், பந்தர் கூரைகளில் எம்மலராவது வீசவும், சேரன் எழுதிவைத்த முறைமைகளை உலகுள்ளோர் ஏற்றுவரவும், வரிசைகள் விதிக்கப்பட்டிருந்தன. இந்த மரபுகள் சில காலப்போக்கில் ஏற்பட்ட

சமுதாய மாற்றங்களினால் கைவிடப்பட்டிருக்கலாம். எனினும் ''படையாண்டகுடி'' எனப்படும் இன்றைய குடிமக்கள் ஊருக்கூர், புதிய சமுதாய பழக்கவழக்கங்களுக்கமைய சில மரபுகளைக் கைவிட்டிருப்பின், அதற்கு இன்றைய காலகட்டச் சூழ்நிலைகளே பின்னணிகளாம். எனவே ம. மா. குறிப்பிடுகின்ற குலவரிசை மரபுகள் அத்தனையும், இன்று கடைப்பிடிக்கப்படாததால், அவை நடைமுறையில் இல்லாதவை என்று நினைத்தல் தவறு.

அரசுரிமைகளில் கலிங்கருக்கடுத்த நிலையிலிருந்த வங்கருக்கும், உலகிப்போடி குலத்தவருக்கும் சீர்வரிசைகள் பொதுவானவை. பூம்பந்தரிடல், பறை, மேளம், வெடிகுரலை, ஆலாத்தி, புலவர் கவிபாடல், மேற்கட்டி, தென்னைமலர் அலங்காரம், நிலபாவாடை என்பனவற்றுடன், கூரைமுடி பதினொன்றும், ஒன்பது புதியதுயில் கொய்தெறிதல், வெள்ளாளர் சிறை பன்னிரண்டு பொதுத்தொண்டு செய்தல், முதலான சீர்வரிசைகளையும் பெறக்கடவர்.

இனி சமூகத்தில் செல்வமும், உயர்குணங்களுமுடைய வரான வணிகர் (வைசியர் என்றே ஆதியில் அழைக்கப்பட்டனர். காலப்போக்கில் வெவ்வேறு சூழலில் கோவசியர், பூவசியர், தனவசியர் (தனக்காரர்) எனப்படலாயினர். செட்டிமார் என்போர் தமிழகத்து வணிகமரபு வழிவந்தவர் ஆவர்.) வேளாளர் இருவருக்கும் சீர்வரிசைகளில் வேறுபாடு இருக்கவில்லை. இவர்களுக்கு ஏழு கூரைமுடி, ஆடையேழு கொய்து வளைதல், தென்னம்பூ அலங்காரம், வெகுபுட்பமிடல், ஏழுவகைத் தானம் வழங்கல், ஆடல், பாடலும், நாதஸ்வரம், தாரை, தவில் எனும் இன்னியங்களுடன் தம்பட்டம், வெடிகுரலை, ஆலாத்தி, தீவெட்டி, நிலபாவாடை, சங்கொலித்தல், மேற்கட்டியுடன் கூடிய தானம் வழங்கும் பந்தல், சிறைகள் பதினேழும் இவர் கூறுபலற்றைச் செய்தல் முதலான சீர்வரிசைகளுக்குரித்துடையவராவர்.

இனி, சோழநாட்டு வெள்ளாளர் (நகரிலுயர் வெள்ளாளர்) தம் சிறைகளுக்கும் வரிசைகள் தப்பாமல் நன்கு வர வேண்டுமென்று கருதி வகுத்திட்ட வரிசைகளாவன: மூன்று கூரைமுடி, கமுகம் பூ அலங்காரம், நற்றுயில் முற்றத்திலிடல், மேற்கட்டி ஒன்று, தத்தம் தொழில்களைத் தாமே செய்யக் கடவர்.

மறையோராகிய பிராமணர் குடிமக்களுடன் கலப்புறாது. தத்தம் மரபுகளைத் தமக்குள்ளே பேணுபவர்களாதையால் அவர்களுக்கு வரிசைகள் வகுக்கப்படவில்லை. ஆனால் மறையோர், பூசுரர் என்ற பதங்களால் அவர்கள் சமய ஞானங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இவைதவிரப் பிற்காலத்தில் வகுக்கப்பட்ட குலவிருதுகள் (சாதிச் சின்னங்கள்) பற்றிய பகுதியிலிருந்தும் (ம. மா. பக். 87) மட்டக்களப்புப் பகுதி சாதி, சமூக அமைப்புகள் பற்றிச் சில தகவல்களைப் பெறமுடிகின்றது. தமிழகத்திலும், யாழ்ப்பாணத்திலும் சாதியாசாரத்தைக் காட்டும் சின்னமாகக் குடுமி முறைகளும், கடுக்கண், உடை நடைமுறைகள், பெயர்கள் முதலாயின இருந்துள்ளன. இச்சின்னங்களைக் கொண்டு இவரின்ன சாதியினர் என இனம் காணமுடியும். ஆனால் மட்டக்களப்பில் செய்தொழிலையுணர்த்தும் குலவிருதுகள் அவரவர் மாட்டில் சுடப்பட்டிருக்கும் சின்னங்கள் மூலமே அறிந்துகொள்ளலாம்.

''தோணி கரையார்க்குத் தொப்பி துலுக்கருக்கு
காணி யுழுமேழிசுளி காராளருக்கு
நாணி வில்லம்பு நாட்டிலுள்ள வேடுவருக்கு
எழுத்தாணி சுளி முற்குகர்க்கு கமலமலர் கோயிலார்க்கு
கைப்பிரம்புபண்டாரப்பிள்ளைக்கு திமிலர்க்குப் பால்முட்டி
சேணியர்க்கு நூலச்சு அமலருக்குத் தேர்க்கொடிகள்
அம்பட்டருக்குக் கத்தரிக்கோல் விமலருக்கு மத்து
வேதியர்க்கும் பூணூலாம்
வண்ணார்க்குக் கல்லு வாணிபர்க்குச் செக்கு
சுண்ணாம்பு சுடும் கடையர்க்குக் கூடையாம் –
தொல்லுலகில்
வேந்தர்க்குச் செங்கோல் மேளமது வள்ளுவர்க்குச்
சேர்ந்தகுயவர்க்குக் கும்பகுடம் செப்புவேன் இன்னும்
தட்டார்க்குக் குறடு சாணார்க்குக் கத்தி
செட்டி குலத்தோர்க்குத் தோடு தராசுப்படி.

(ம. மா. பக். 87)

இக்குலவிருதுகள் யாவும் செய்தொழிலைப் பிரதிபலிப்பனவாய் அமைந்துள்ளன.

முற்குகர் குடிகள்

இன்று மட்டக்களப்புப் பிரதேசத்தில் பெரும்பான்மையோர் முக்குவர் குடிகளேயாவர். கலிங்க அரசர்களின் அர்

சாட்சியின் ஆரம்ப காலத்தில் வங்கம், காளிகட்டம், ஒறிசா முதலிய கிழக்கிந்தியப் பிராந்தியங்களிலிருந்து தருவிக்கப்பட்டுக் குடியமர்த்தப்பட்ட குடிகள், கங்கைக் குகமரபு வழிவந்த குடிகள் எனக் கௌரவிக்கப்பட்டு, இராசசேவகத்தில் படைத் தொழில், எழுத்துவேலை, வேளாண்மை முதலான தொழில் களை ஏற்றிருந்தனர். யாழ்குடாவில் குகன்வழித் தொடர்பு காட்டும் முக்குவர் (முக்கியர்)கள் இராசசேவகமாக முத்துக் குளித்தும், கடற்படையிற் சேவை செய்தும் வந்தவர்கள் ஆவர். யாழ். முக்குவர்கள் மட்டக்களப்புப் பிரதேசத்திற்குக் குடிபெயர்ந்து சென்றிருந்தார்கள் என யாழ்குடா மரபுகள் சில தெரிவிக்கின்றன. அத்தகைய மரபுகளை மட்டக்களப்பு மரபுகள் பேணியிராதபொழுதிலும், யாழ்குடா முக்குவர் பேணிய விட்டுணு, கண்ணகையம்மன் வழிபாடுகளை இவர் களும் பேணிவந்துள்ளமை குறிப்பாக அவதானிக்கத்தக்கது. இன்னும் மாகோன் மட்டக்களப்பில் இம்முற்குகர்களை வில் லவர், பணிக்கனார், மாளவன், சட்டிலான், தனஞ்சயன், சங்கு, பயத்தன், கச்சிலாகுடியென ஏழு பிரிவுக் குடிகளாக வகுத்திருந்தான் எனத் தெரிகின்றது. தொழில் அடிப்படை யில் இக்குடிகள் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டார்கள் என்று தெரிகின்றது. இம்முற்குகர் வழிவந்த குடிகள், இன்று மாங் காடு, மகிழூர், கிரான்குளம், பாண்டிருப்பு, பெரியபோர தீவு, வெல்லாவெளி, பட்டிப்பளை, அம்பிலாந்துறை, அர சடித்தீவு, மகிழதீவு, தாந்தாமலை, முனைக்காடு, முதலைக் குடா, கொக்கட்டிச்சோலை, மண்முனை, கன்னன்குடா, குறிஞ்சாமுனை, ஈச்சந்தீவு, கரவெட்டி, கொக்குவில், மகிழ வெட்டுவான், பன்குடாவெளி, ஆயித்தியமலை, கரடியனாறு, செங்கலடி, ஏறாவூர் ஐந்தாம் குறிச்சி, ஆறுமுகத்தான் குடி யிருப்பு, மட்டக்களப்பு நகர் முதலான பகுதிகளில் பெருந் தொகையினராக வாழ்ந்துவருவதனை அவதானிக்கலாம். அதனால் மட்டக்களப்புப் பிரதேசத்தை ''முக்குவதேசம்'' என்று கருதி இங்கு பேணப்பட்ட மரபுவழிச் சட்டங்களை ''முக்குவச்சட்ட''மென்றும் அழைக்கும் நிலையும் ஏற்பட லாயிற்று. உண்மையில் ஒல்லாந்தர்கள் யாழ்ப்பாணத்தில் ''தேசவழமைச் சட்ட''த்தைத் தயாரித்ததுபோல் மட்டக் களப்பிலும் மக்கள் பாரம்பரியங்களைப் (நாட்டின் வழக்கு கள் – வழக்காறுகள் என்பன) பேணுவதற்காகிய சட்டங் களைத் தயாரித்தனர். அப்பொழுது பெரும்பான்மை யோராக முக்குவர்கள் இருந்தமையால்போலும், முக்குலத்த வருக்காக (கலிங்கன், வங்கன், சிங்கன்) இயற்றிய சட்டம் முற்குகச்சட்டம் எனப்பட்டது. கலிங்க அரச வமிசம் அற்றுப்

போனபின் காலிங்க குலத்தவரென்று கருதப்பட்ட மக்கள் தம்மை முற்குகக் குலத்தவரென கருதிக்கொண்டனர். ஒல்லாந் தர் காலத்தில் நிலைமைப் பதவி வகித்த அறுமக்குட்டிப் போடி காலிங்க குலமானபடியால் சிறைத்தளதாபர அதி காரத்தில் மட்டக்களப்பு முற்றும் முதன்மைபெற்று வந்தான் என்று ஓரிடத்திலும் (ம. மா. பக். 67), இன்னோரிடத்தில் அறுமக்குட்டி சாதி முக்குவன் (அனுபந்தம் அ) என்பதனா லும் இது உணரத்தக்கது.

வேளாளர் குடிகள்

யாழ்குடாவில் அரசனுக்கடுத்து சமுதாய முக்கியத்து வம் பெற்ற குடிகள் வேளாளர் ஆவர். தொண்டைநாட்டு வேளாளர் முதலி, சோழநாட்டு வேளாளர், பாண்டிநாட்டு வேளாளர், துளுவநாட்டு வேளாளர் எனப் பலவிடத்து வேளாளரும் குடியமர்ந்து, தம் தொழிலால் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்து வந்தமையால், யாழ்குடா அரசர்கள் பதினொரு வேளாளர் பிரிவுகளுக்குப் பதினொரு வேளாளர் தலைவர்களை அதிகாரிகளாக்கியாண்டனர் எனத் தெரிகின்றது. (ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை. மு. கு. பக். 18–20, சாதியாசாரம், சாதி வரிசைகளுக்கு பக். 33, 37, 103, 106), மட்டக்களப்பில் ஆதி யில் கலிங்கநாட்டு வேளாளர் மன்னருக்குதவியாக இருந் தார்கள். பின் சோழநாட்டு வேளாளரும், பதினெண் சிறைக் குடிகளும் குடியமர்த்தப்பட்டார்கள். பாண்டி நாட்டிலிருந் தும் சிறைகள் கொண்டுவரப்பட்டுக் குடியமர்த்தப்பட்டார்கள். ஆயினும் யாழ்ப்பாணத்திற்போற் பெருந்தொகையாக வேளா ளர்கள் குடியமர்த்தப்படவில்லை. எனினும் இவ்வேளாளர் மரபுகள் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் பொது வானவை எனக் கருதலாம்.

மட்டக்களப்பில் ''பூபாலர்'' என்று பங்கு வாங்கு வோர் கலிங்க வெள்ளாளர் ஆவர். ''நகரம்'' என்று சோழ நாட்டுழவர் பெருமை கூறிப் பங்கு வாங்குவோர் சோழ நாட்டவர் ஆவர். கலிங்க அரசுகள் மூவேந்தருக்குத் திறை கொடுக்கும் அரசுகளாக இருந்த காலத்தில் மட்டக்களப்பில் கலிங்கராட்சியை உறுதிப்படுத்த வந்த கலிங்கநாட்டு இரஞ் சலனும், படையாட்சியினரும், தம் வருகையின்போது,

''பார்முழுதாண்ட பாண்டியன் சோழனை
கண்டு மகிழ்ந்து கடல் சூழிலங்கையில்
பண்டு மரபைப் பகுக்க நினைத்து

குடிபடை சிறையொடு கொற்றவனெழுந்து
முடிதரித் தெங்களைப் படைக்கு
முதல்வனாயழைத்து அனுப்பினார்.
(ம. மா. பக். 76)

என்பதனால் இக்காலம் முதலாகவே தமிழகத்து வேளாளர் முதலான பதினெண் குடிகளும் மட்டக்களப்பில் குடியமர்த்தப் பட்டார்கள் எனக் கருதலாம். ஆனால் இக்குடியேற்றங்கள் பற்றித் தெளிவான குறிப்புக்கள் இல்லை. உன்னரசுகிரி எனும் ஆட்சிப்பிரிவு உருவாக்கிய பின், அரசாட்சியையேற்ற புவனேய கயபாகு (கலிங்கன்) தன் மாமனாகிய திருச்சோழகண்ட பிள்ளைக்கு அறிவித்து சோழநாட்டு வேளாளரையும், பதி னெண் சிறைக்குடிகளையும் தருவித்துக் குடியமர்த்தினான். இவர்கள் திருக்கோவில், தம்பிலுவில், காரைக்காடு (காரைதீவு), அட்டப்பள்ளம், சிங்காரவத்தை முதலான பகுதியில் இன்று வாழும் வேளாளரின் ஆதிக்குடிகளாகலாம். இராமநாட்டு (இராமநாதபுரம்) மறவர்குல இராசவம்சத்தைச் சேர்ந்த ஏழு பெண்களுடனும், கணவன்மாருடனும் வந்த வேளாளர் முதலான குடிகள் வழியினரே இன்று தாழங்குடா, குருக்கள் மடம், செட்டிபாளையம், தேற்றாத்தீவு, களுதாவளை, களுவாஞ்சிக்குடி முதலான ஊர்களில் வதியும் வேளாளரும். பிற குடிகளும் எனக் கருதலாம். வீரமுனைச் செப்பேடு முத லான செப்பேடுகள் குறிப்பிடுகின்ற, சீர்பாததேவியுடன் வந்த வேளாளர் காரைவள நாட்டிலிருந்து வந்தவராவர். இவர் களுடன் வந்த பிற குடியினர் ஒற்றியூர், கட்டுமாவட்டம், பெருந்துறை முதலான இடங்களிலிருந்து வந்தவராவர். இவர் கள் முதலில் வீரமுனை, துறைநீலாவணை, சம்மாந்துறை, மல்வத்தை முதலானவிடங்களில் குடியமர்த்தப்பட்டனர். பிற்காலத்தில் குறுமண்வெளி, மண்டூர், பெரியபோரதீவு முத லான இடங்களுக்குப் புலம்பெயர்ந்து வாழ்ந்துவருகின்றனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சீர்பாதர் எனக் குறிப்பிடும் வேளாண்குலத்தோரே இன்று மண்டூர் கந்தன் கோவில் முன் னீட்டு உரிமைபெறுவர். ஓடம் இயக்கிவந்த சிந்தனின் பரம் பரையினரே பூசகராகக் கடமையாற்றி வருகின்றனர். இவர் களுள் சீர்பாத வேளாளர் குலத்தோர் படையன், பரதேசி, பாட்டுவாழி, முடவன், உடையனருளன், உத்தமன், ஞானி என்னும் தலைவர் பெயர்களால் வகுக்கப்பட்டிருந்தனர் என் றும் மற்றும் சீர்பாததேவியின் ஓடத்தையியக்கிவந்த கப்ப லோட்டி வீரர்களான சிந்தன், காங்கயன், காலதேவன் முத லான தலைவர்கள் பெயர்களாலும் சீர்பாதர் குடிகள் சாதி யமைவுகளுக்கமைய வகுக்கப்பட்டிருந்தனர். பிற்காலத்தில்

மாகோன் சாதியியல் ஒழுங்குகளை வகுத்த காலத்தில் இக் குலத்தவர் பெயரில் சிறு வேறுபாடு இருப்பதை அவதானிக்க லாம். சித்தாண்டிக்குடி வேளாளர் குடியேற்றங்களுக்கும் தனி வரலாறுகள், மரபுகள் உள.

இவ்வேளாளர்களுள் ''கலிங்க வேளாளர்'' திருப்படைக் கோவில் நிருவாகம், பராமரிப்பு என்பனவற்றைக் கண்காணிக் கும் தலைவர்களாக அமைக்கப்பட்டவர்கள். இவர்கள் பூமியை நன்முறையில் பயன்படுத்திப் பலன் பெறுபவர்க ளாகையால் ''பூபால கோத்திரம்'' எனவும் அழைக்கப்பட் டனர். சிறப்பாக கலிங்க வேளாளருக்கு இப்பெயர் இருந் தது. இவர்களை முதலில் திருக்கோவில் பணிக்கெனக் கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்ட இடம் கோரைக்களப் பாகும். மாகோன் இவர்கள் சாதியியலை வகுக்கும்போது ஏழு தலைவர் குடிகளாக வகுத்து, அரனூழியம் (சிவதொண்டு) திட்டமிட்டானென்று குடிக்கல் கல்வெட்டுக் கூறுகின்றது. இக்கல்வெட்டில் குறிப்பிட்ட கோவசியர் என்பதும் கலிங்க வேளாளரையேயாம். கண்டன் குடி, சருகுபில்லி குடி, கட்டப் பத்தன் குடி, கவுத்தன் குடி, அத்தியாயன் குடி, பொன் னாச்சி குடி, வயித்தி குடி ஆகிய ஏழு குடிகளில், முதல் மூன்று குடிகள் மட்டுமே இன்று திருக்கோவில் நிருவாகத்திற்காக அங்கு வாழ்ந்துவருகின்றனர். தென்னிந்திய சேர, சோழ, பாண்டியர் மரபில் வந்த வேளாளர் குடிகளைப் புத்தூர், மருங்கூர், வீரச்சோலை, காரைக்காடு, கொங்குநாட்டார் என ஐந்து பிரிவினராக மாகோன் காலத்தில் பிரித்து வேளாண்மை செய்யப் பணித்திருந்தான். இவ்வாறு மட்டக் களப்பு மாவட்டத்தில் கலிங்க வேளாளர் கோயில் நிருவாகக் கடமைகளைக் கண்காணிப்போராயும், தமிழகத்து வேளா ளர் கார்காக்கும் மேழித்தொழிலையும் செய்யக் கடமைப் பட்டிருந்தனர். இவர்களுள் குடுக்கை கூறும் வேளாளன் காராளர் குலத்தைச் சேர்ந்தவன் ஆவன். பதினெண் ஊழிய சிறைகளும் தம் தலைவனான காராளர் பண்டைய பெருமை யும், சீலமும், சிந்தையும் மன்னனுக்கெடுத்துக்கூறி, காராளர் கையாலே தாம் கோவிற் பிரசாதத்தைப் பெற்று சித்தி, முத்தி பெற விரும்புவதாகக் கூறுவதிலிருந்து இது புலனா கின்றது. இனிப் பங்கு வாங்குகையிலும் கலிங்க வெள்ளாளர் 'பூபாலர்' என்றும், சோழநாட்டுக் காராளர் ''நகரம்'' என் றும் இரு பிரிவினராக அழைக்கப்படுவர். எனவே இருநிலை யான வேளாள மரபுகள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் அவ தானிக்கக்கூடியதாக உளது. இம்மரபுகளை விளங்கினாலே பல்வேறு வேளாளர்குடிப் பிரிவினரின் உருவாக்கங்களையும், மரபுகளையும் நாம் புரிந்துணரமுடியும்.

வைசியர் குடிகள் :

வைசியர்கள் குலத்தொழில் வாணிபம் செய்து பொருளீட்டல் ஆகும். அதனால் இவர்கள் பெரும் செல்வம்படைத்தவர்களாகவும், கொடைவள்ளல்களாகவும் விளங்கினர். இவர்களுள் கோவசியர், பூவசியர், தனவசியர் எனும் பிரிவுகளும் இருந்தன. கோவசியர் என்போர் செல்வத்தால் அரசர்க்குச் சமமான தகுதிபெற்றோர் ஆவர். பூவசியர் என்போர் வேளாரைப்போன்று பூமியிலிருந்து செல்வமீட்டுபவர்கள். தனவசியர், பணமுதலீடு செய்து வாணிபத்தினால் பொருளீட்டுபவர்கள். இவர்கள் தனவணிகர் என்றும் அழைக்கப்படலாயினர். (பக். 80-86). இவர்களே இன்றைய தனக்காரர் எனும் குடிமக்களுமாவர். வைசியர் குலத்தவர் செல்வம் மிக்கவர்களாதலால், ஆதியில் காசிசிவன் கோவிலுக்குத் தேர், சத்திரங்கள், தாசி நடனமண்டபம் ஆகியன இயற்றக், கொடைகள் வழங்கியவர்கள் எனத் தெரிகின்றது. இவர்கள் கலிங்கருடைய சிவத்தொண்டுகளுக்குப் பொருள் உதவும் பொருட்டு, அவர்களுடன் வந்து, மட்டக்களப்பு தேசத்துக் கோவில்களிலும் திருப்பணிகள் செய்திருந்தார்கள் (ம. மா. பக். 106). வணிகர்களில் இன்னோர் பிரிவினரான செட்டிகுடியினர் தமிழ்நாட்டு வணிகர் மரபினர். ஆனால் இவர்கள் திருக்கோவிலுக்குக் கொடி, கொடிக்கம்பம், கோபுர மண்டப்படி, வாவி என்பனவும் இயற்றுவித்து, வேறு சந்நிதானங்களில் திருப்பணிகளுக்கும் கொடைகள் வழங்கிக் காசி திரும்பினர் என்பதனால் வைசியரையே செட்டிகுடியென இங்கு கூறினர் எனத் தெரிகின்றது. இவர்கள் போனபின்னர் வைசியமரபினரான தனவசியருக்குச் சந்ததிமுறையாய் சதுர்த்ததி தினத்தில் கோவில்விழாப் பூசைகளைச் செய்யும் உரிமையினை, இவர்க்கே மன்னன் வழங்கினான் என்பது திருப்படையில் (கோவிற்பட்டயத்தில்) இருப்பதாகப் பட்டயத்தை வாசித்தவர் தெரிவிப்பர் (ம. மா. பக். 80). இக்குடியினர் மட்டக்களப்பில் கல்லடித்தெரு, செங்கலடி, கொக்குவில் முதலான பகுதிகளில் சிறு தொகையினராக வாழ்ந்துவருகின்றனர். யாழ்குடாவிலும் உடுப்பிட்டியில் தனக்காரர் குறிச்சி என்ற பகுதியில் இவர்கள் வாழ்கின்றனர். இக்குறிச்சிக்குள் கெருடாவில், மயிலியதனை, ஊரிக்காடு, கொம்மாதறை முதலான ஊர்கள் அடங்குவன. இன்னும் கரணவாய், கல்லுவம் பகுதிகளிலும் சிறு தொகையினர் வாழ்ந்துவருகின்றனர். யாழ்குடாவில் 1790ம் ஆண்டு எடுத்த கணக்கெடுப்பில் 388 தனக்காரக் குடிமக்களே இருந்துள்ளனர்.

வணிகர், வேளாளர் ஆகிய இருகுடியினருக்கும் நன்மை, தீமைக்குரிய சீர்வரிசைகள் பொதுவானவை.

''ஆன திருமரபிலுயர் வணிகர், வேளானர் -
அவரவர்களுயர் வரிசைகேள்''
(ம. மா. பக. 90).

என்றும்

''வானவர்களொப்பிடுதல் செய்முறைகள் குன்றாத -
வணிகர் வெள்ளாளர் மறையோர்''
(ம. மா. பக். 91).

என்றும், மட்டக்களப்பு மான்மியம் இவர்கள் பழைய மரபுகளை எடுத்தியம்பும். வேளாளரின் பதினேழு சிறைத்தொண்டளும் தனக்காரர்களுக்கு ஊழியம் செய்யும் மரபுகள் அண்மைக்காலம்வரை பேணப்பட்டுவந்துள்ளன. இவர்கள் சிறு தொகையினரானபடியினாலும், பழைய அடிகொடி மரபுகள் வழக்கற்றுப் போனதாலும், இன்று கூடுதலாக வேளாளருடன் திருமணத் தொடர்புகளை வைத்துவருகின்றனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஆனால் இவர்களுடைய பழைய பணச்செருக்கும், இறுமாப்பும் இன்னமும் நீங்கவில்லையென்று வேளாளர் குடிகள் கருதிவருகின்றனர். செங்கலடி, கொக்குவில் பகுதிகளில் இவர்கள் உடையார் பதவிகளை வகித்திருந்தமையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. செட்டிமார் குடியேற்றங்கள் பற்றிய குறிப்புகள் சீர்பாதர் கல்வெட்டுக்களில் உள. அதனால் மாகோன் காலத்தில் செட்டிகுடிகள் ஏழாக வகுக்கப்பட்டன. பிற்காலத்திலும் அண்ணாமலைச் செட்டிகள் நாப்புட்டிமுனைக்கு மேற்கில் வாடிவீடுகள் அமைத்து வர்த்தகம் செய்தனர் (ம. மா. பக். 89). எனினும், இவர்கள் மட்டக்களப்பில் நிலையூன்றி வாழ்ந்து, தம் குடிமரபுகளைப் பேணியதற்கான எச்சங்கள் போதியளவில் இல்லை.

முற்குகர் வன்னிமைக்குடிகள் :

வன்னிமைக்குலம், வவனியர்குலம் என்போர் வீரம் மிக்க மறவர்குலத் தொடர்புடையவர்கள். வன்னிபம், வன்னிமை, வன்னிச்சி என்பன இவர்களின் வீரத்தை மெச்சிக் கௌரவிக்கும் பட்டங்கள் ஆவன. பங்கு தடுக்கும் பகுதியில் வன்னிமைக்குடிகள் தம் குலவரலாற்றை விபரிக்கையில்,

.....
..... சுயநாடு காளிகட்டம் நீர்குலமே
படையாட்சி யுழுதூணுண்டோர்

வெறுகமழு மகாலிங்க வாசனெங்கள் திறந்தோரைப்
படைத்துணைக்குத் தலைவனாக்கி
குறியறிந்து வன்னிபங்கள் குலமே என்றும்
குகப்பட்டத்தரசு கொண்டோனானே
(ம. மா. பக். 104).

என்று எடுத்துரைப்பர். இரஞ்சலன் மட்டக்களப்பில் தலை யெடுத்திருந்த இயக்கர், நாகரை வென்றபின் படையாட்சித் தலைவனான சிறிகுலனுக்குப் பட்டம் கட்டினான் என்பத னால், கலிங்கர் இவர்மீது வைத்திருந்த நம்பிக்கை புலனா கின்றது. மற்று முதற்தேசத்துக் கோவிலான திருக்கோவில் திருப்பணிகள் முடிந்தபின், மனுநேயகயபாகு மன்னன் கோவி லின் நிருவாக நடைமுறை கவனிக்கும் சபைக்கு, படையாட்சி குலத்திலிருந்து மூன்று வன்னியர்களை நியமித்தான் என்பத னாலும், அவர்களுக்கென வகுத்திருந்த சீர்வரிசைகளினாலும், இவர்களுக்குச் சமுதாயத்தில் அளிக்கப்பட்ட உயரிய நிலையும், மதிப்பும் குறிப்பிடத்தக்கன. கிழக்கிந்திய நாட்டுப் படையாட் சிக் குடிகளைமட்டுமன்றி, இராமநாட்டு (இராமநாதபுரம்) மறவர்குலத்தோராகிய ஏழு அரசவமிசத்துப் பெண்கள் தம் கணவன்மாருடனும், சிறைகளுடனும் வந்து அமரசேனன் மன்னனைக் கண்டபொழுது, அவன் அவர்களை ''வன்னிச்சி மார்'' என விருதுகளளித்துக் கௌரவித்தான். மாகோனும் மட்டக்களப்புப்பகுதியில் வாழ் வன்னிமைக்குடிகளை (முற் குகர்) அவரவர் படைப்பயிற்சிக்கும், தொழிற்பயிற்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்து ஏழு பிரிவுகளாகப் பிரித்துவைத் தான். வில்லவர் (விற்பயிற்சி பெற்றோர்), பணிக்கனார் (யானைப்படைப் பயிற்சிபெற்றோர்), மாளவன், சங்குபயத் தன், கச்சிலாகுடி, சட்டிலான், தனஞ்சயன் என்பவரே இவ் வேழகுடிப் பிரிவினர் ஆவர் (ம. மா. பக். 95). குளக்கோட்டு ராசாவும், தான் திருப்பணிகள் செய்த திருக்கோணேசுவரர் ஆலயத்தைப் பரிபாலிக்கும் பொறுப்பை மதுரையிலிருந்து தருவித்த தனியுண்ணாப் பூபால வன்னியனிடமே கையளித் தார்.

யாழ்குடா மரபுகளின்படி வெடியரசனும், சகோதரர் களும் வீரதீரர்களாக இருந்திருந்தார்கள் எனினும், அவர்களது ''வன்மை''யைக் கௌரவிக்கும் விருதுகளிருந்ததற்கான சான் றுகள் இல்லை. சங்ககாலத்தில் வீரர்கள் தம் வீரத்தைக்குறிக்க ''வன்னிப்பூ'' சூடிப் போருக்குச் சென்றனர் என்ற குறிப்பு கள் சங்க இலக்கியங்களில் விரவிக்கிடக்கின்றன. இந்த வீரர் மரபின் வழிவந்தோரே தமிழகத்து வன்னியர் குடியினர் ஆவர் ஆகலாம். இனி யாழ்குடாவில் குடியேற்றப்பட்ட வன்னியர்

குடிகளைப்பற்றி வையாபாடல் குறிப்பிடும். வையாபாடலின் படி உக்கிரசிங்கன் மகனின் (கி.பி. 9ம் நூற்றாண்டு) திருமணத் துக்குச் சோழநாட்டிலிருந்து பெண் கொண்டுவருகையில், பாது காப்பளித்துவந்த வன்னியர்கள் மதுரையைச் சேர்ந்தவர்கள் என்றும், திருமணத்தின்பின் இவ்வன்னியர்கள் அடங்காப்பற் றில் குடியேற்றப்பட்டார்கள் என்றும் அறியமுடிகின்றது. இன்று யாழ்குடாவில் வழக்கிலிருக்கும் வடமராட்சி (வடமற வர் ஆட்சி), தென்மராட்சி (தென்மறவர் ஆட்சி) என்ற பெயர்ப் பிரிவுகள் இப்பகுதிகளுக்குப் பாதுகாப்பளித்துவந்த படைவீரர்களான வன்னியரின் ஆதிக்கத்தைச் சுட்டி நிற்கின் றன. நாட்டையும், அரசனையும் காக்கும் பணி படைவீரர் களிலேயே தங்கியிருந்தது. அதனால் மன்னர்களும், மக்களும் இவர்கள்மீது பெருமதிப்புவைத்திருந்தார்கள் என்பதனையே இவ்வன்னிமைக்குடி வரலாறுகள் எடுத்தியம்புகின்றன. யாழ் குடாவில் இவ்வன்னியர் தனியாக இருந்தாண்ட பகுதிகள் வன்னிநாடெனப்பட்டன. ஆனால் அவ்வன்னியரையடக்கி யாண்ட வேளாளர் ''வன்னியனார்'' எனப் பெயர்பெற்றி ருந்தனர் எனத் தெரிகின்றது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் காணப்படும் ''வன்னியனார் தெரு'' மரபுகள்பற்றியறிய கள ஆய்வுகள் அவசியமாகின்றன.

குகன்குலக் குடிகள் (முற்குகர், முக்குவர்):

முருகப்பெருமான் பெயர்களுள் ''குகன்'' எனும் பெய ரும் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு மான்மியம் ''அர சனை'' குகன் எனும் சொல்லால் பலமுறை குறிப்பிட்டுள்ளது. இனி, இராமருக்குச் சீதையைத் தேட உதவிபுரிந்த கங்கைக் கரைப் படகோட்டியும், ''குகன்'' என்ற பெயரைப் பெற்றி ருந்தான். குகன் இராமருடைய அன்பிற்கு அடிமைப்பட்டவ னாய் இருந்து, இராமரால் கௌரவிக்கப்பட்டவன். ஆதனால் இராமர் குகனுக்குச் ''சேதுபதி'' எனும் பட்டத்தைச் சூட்டிக், குகன் குலத்தாரை இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி முத லானவிடயங்களில் குடியமர்த்தினார் என ஐதீகவரலாறுகள் உணர்த்துகின்றன. பாண்டியமன்னரும் சேதுபதிக்கடலோர மாகக் குகன் குலத்தவருக்குக் காடுகளை வழங்கினார்கள். இன் றும் இக்குகன்வழி முக்குலத்தோர், மூதுகுத்தூர், அரிப்புக் கோட்டை, இராமநாதபுரம், பரமகுடி, திருவாடானை போன்ற கிராமங்களில் வாழ்ந்துவருகின்றார் என்று மு. சு. சிவப்பிரகாசம் குறிப்பிடுவர் (விஷ்ணுபுத்திர வெடியரசன் வர லாறு 1988, பக். 29). பிற்காலத்தில் புகழ்பெற்றிருந்த ''சேதுபதி மகாராசாக்கள்'' என்று விளங்கியவரும் இக்குகன்

குலத்தாரே என்றும் கருதப்படுகின்றனர். குகன் குலத்தார் மாலுமி சாஸ்திரமும், யுத்த சாஸ்திரமும் கற்றுக் கடற்படை வீரர்களாகவும், அரசன் மெய்க்காப்பாளராகவும் விளங்கினார்கள். தென்கிழக்கிலங்கைக் கலிங்க அரசரும் தம் ஆட்சியை உறுதிப்படுத்தக் கங்கைக்கரைக் குகன் குடிகளைத் தம் படையில் அமர்த்தியிருந்தார்கள். இவர்கள் காளிகட்டத்திலிருந்து (கல்கத்தா) தருவிக்கப்பட்டவர்கள். ஒல்லாந்தர் காலத்தில் இப்படையாட்சி குலத்தவர் தம் வரலாற்றை விபரிக்கையில் ''இரஞ்சலன் மட்டக்களப்பைப் படையாட்சி குலத்தவனான சிறிகுலசேனனுக்கு முடிசூட்டித் தம்மைக் ''குகன்'' என நாமம் கொடுத்து எங்கும் குகன் குலமெனச் சிறை குடியேற்றினான்'' என்று குறிப்பிட்டனர். குடுக்கை கூறும் பகுதியிலும் படையாட்சி குலத்தார் ''தம் குலம் குகன் குலத்து வன்னிபங்கள்'' என்பர் (ம. மா. பக். 100). மேலும் கும்பவரிசை கூறுகையிலும் ''முற்கால குகனென் குலமென்று மற்றுமுள்ளோர் முன்குகனென்று வரவும்'' என்பதனால் படையாட்சி குலத்தார் குகன்குலத்தார் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

வங்கர், முன்குகர் முறைகூறும் சாதிகளில் ஒருவராயினும், இவர்களுக்குச் சிறப்பான குகன்குல மரபுகள் வற்புறுத்தப்படவில்லை. ஆரம்பத்தில் வங்கர், கலிங்கர் திருமணத்தால் கலப்புற்றதனால் காலிங்ககுடிகள் எனப்படலாயினர். பிற்காலத்தில் ஆடகசவுந்தரி பரம்பரை கூறிய வங்ககுடிகளும், மகாசேனன் பரம்பரை கூறிய வங்க குடிகளுமே தம்மை வங்கர்குடிகளாக இனம்காட்டினர். எனினும் காலப்போக்கில் கேரளநாட்டு வீரர்களின் செல்வாக்கினாற்போலும், வங்கர் குடிகள் என்று கூறும் மரபு வழக்கறப் ''பணிக்கன் குடிகள்'' என்ற மரபு வலுப்படலாயிற்று என்று தெரிகின்றது.

இனி, உலகிப்போடி குலத்தார் கிழக்கிலங்கைக்கு வருகையிலே, தாம் குகவமிசத்தார் என்று வமிசவழி கூறிக்கொண்டனர். எனவே குகமரபினர் என்று கருதப்பட்டோர் படையாட்சிகுலம், வங்கர்குலம், உலகிப்போடிகுலம் ஆகியோரேயாவர்.

தென்கிழக்கிலங்கையில் ஆதியில் குடியோர் யாவரையும் முன்குலத்தவர் என்று குறிப்பிட்டு, அவர்களுக்கு மதிப்புக் கொடுத்திருந்தார்கள். இவர்களுள் தேசத்தை ஆண்டிருந்த கலிங்கர் தம்மைப் பரிதிகுலத்தார் (சூரிய) என்றும், தம் குலம் மகாவமிசம் என்றும் கூறிக்கொள்வர். நன்மைக்கும், தீமைக்கும் கும்பவரிசையில் கலிங்கரைப் பூபாலரெனத் துதிபுரியவும்,

தேசமென்று பணிசெய்து வரவும், வேளாளர் தனவணிகராகிய சந்திர மரபினர் கொடையீந்து மகிழ, மூன்று குகர்முறை கூறும் சாதியினரும், சிறைக்குடியினரும் இம்முறைகள் தவறாதிருத்தி முன்சாதியென ஏற்றுவரவும் வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. மாகோன் கலிங்கரைச் தேசராசகுலமென்றும், மட்டக்களப்பில் கலிங்கரே எக்காலமும் இராசராகவும், படையாட்சி, வங்கர் இருவரும் மந்திரிகளாய் வரவேண்டுமெனவும் வகுத்துக் கலிங்ககுல அரசுகளின் தனித்துவத்தைப் பேணியிருந்தான். கலிங்க அரசுகள் வல்லரசுகளாக விளங்கியிருந்தன என்பதற்கு அசோகனுடனும், மூவேந்தருடனும் இவர்கள் செய்த போர்கள் சான்றுகளாக உள. பங்கு தடுக்கும் பகுதியிலும் கலிங்கர் தாம் எதிரிகளில்லாமல் அயோத்தி, வங்கம், அரிபுரம், காளிகட்டம், ஒறிசா முதலான் தேசங்களில் சைவம் பேணியாண்டிருந்ததாகக் குறிப்பிடுவர். எனவே இவ்வாறான அரசவமிசப் பின்னணிகளைக் கொண்ட கலிங்க அரசுகள் தமக்குக் குகவமிசத் தொடர்பை எக்காலத்திலும் காட்டவில்லை.

பொதுவாக அரசியற் போர்களும், அதன் எதிரொலியான பொருளாதாரப் போராட்டங்களும், மக்களைத் தம் குலப்பெருமைகளுடன் போராடவைக்கின்றன. இச்சூழலில் சிலர் தாம் பேணியிருந்த ளெகரவங்களையும், பெருமைகளையும் இழக்கநேரிடுகின்றது. இத்தகையதொரு நிலை கலிங்கருக்கு மட்டக்களப்பு அரசாட்சியில் இருந்தமையை நாம் அவதானிக்கலாம்.

மாகோன் ஆட்சிக்குப்பின் சிங்கர், வங்கர் துணையுடன் கலிங்கரை வென்று மட்டக்களப்பரசாட்சியைக் கைப்பற்றினர். இத்தருணம் சிங்கர் அரசியற் காரணங்களுக்காகத் தம்மைக் குகன் குலத்தவர் என்று தொடர்புகாட்டி, வங்கர், சிங்கர், படையாட்சியாகிய மூன்று குலத்தவரையும் குகன் குலத்தவர் எனத் திட்டஞ்செய்து, வங்கரையும், படையாட்சியினரையும் திக்கதிபராக்கி ஆளலாயினர் (ம. மா. பக். 56). காலப்போக்கில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் தலையீட்டினாலும் கலிங்கருடைய நிலை மேலும் தளர்வடையலாயிற்று. அதனால் ஆண்டான், அடிமை நிலைகளில் பெருமாற்றம். இந்நிலையிலேயே கலிங்கரும் தம் சமுதாய நிலைகளைப் பேணுவதற்காகத் தம்மையும் குகன் குலத்தவராக அடையாளம் காணவேண்டியிருந்தது. அதனாற்போலும் கண்டியரசன் இவர்கள் வரலாற்றைக் குகன் மரபு காட்டுவதற்காகப் போர்த்துக்கேயரிடம்,

செகமதில் திருச்சிரா சேர்நகரோரிவர்
தலைமையிலுயர்ந்தோர் இராமநாட்டதிபர்
நிலைமையாய் வைத்து நீயிவையானெனக்
(போடிக்கல்வெட்டு பக். 85)

கூறினார்போற் தெரிகின்றது. அப்பொழுது போர்த்துக்கேயரும் குகன்நகர் பார்த்து மகிழ்ந்து, கலிங்கரை நிலைமையாய்ச் செய்து இராச குடும்பமாய் வைத்துக் குகன் புகழ்பரப்பினர் எனத் தெரிகின்றது. பின்னர் வந்த ஒல்லாந்தரும் கலிங்கரைப் போடியாய் வைத்து ஆண்டனர். இவ்வாறு கலிங்கர் அரசோச்சும் உரிமைகள் இழந்த நிலையில், குகன் குலத்தவராய் இனம் காட்டிப் போடிப்பதவியைப் பெறும் நிலையைக், காலமே அவர்களுக்கீட்டிக்கொடுத்தது எனலாம். எனவே, ஒல்லாந்தர் முற்குலச் சட்டமியற்றும்போது கலிங்கர், வங்கர், சிங்கர் எனும் முக்குலத்தவருக்காகவே சட்டமியற்றினர். சூழ்நிலைகளுக்கேற்ப முற்குகர் சட்டமெனவும் அழைக்கப்படலாயிறு.

யாழ்குடா முற்குகர்களும் தம்மைக் குகன் வமிசத்தவர் என்றே உரிமை கோருவர். எனவே அவர் வரலாற்றினைச் சுருக்கமாக ஈண்டு குறிப்பிடல் அவசியம். ஆதிநாகர்குடி வழித்தோன்றல்களாகிய முகுளிநாகர்கள் வட ஈழத்தையாண்டிருக்கையில்,ஏற்பட்ட மூன்றாம் கடல்கோளினால் சீர்சிறப்பெல்லாமிழந்து முகுளிநாகர் குடிகள் துயருற்று விஷ்ணுவின் மீன் அவதாரமான நாராயணனை வழிபட்டுவருகையில், நாராயணன் துயருறும் மக்களுக்கு அருளும்பொருட்டுத், தனது வலம்புரிச் சங்கை விலைமதிக்கமுடியாத முத்துக்களும், சங்குகளும் இருக்கின்ற பாற்கடலிலே (காரைநகர் கடல்) மறைத்து வைத்து இம்முகுளிநாகர் மக்களைத் தனது வலம்புரிச் சங்கை எடுத்துவரும்படி பணித்தார். அம்மக்கள் பாற்கடல் எங்கும் தேடியும் கிடைக்காத நிலையில் கவலையுற்றுத், தம் இயலாமையைத் தேவநாராயணனிடம் தெரிவித்தனர்.

அச்சமயம் நாராயணன் அம்மக்கட்கு அருள்புரிய எண்ணிச், சிவனைத் துதித்துத் தனது வலதுதொடையில் தன் கருத்தைச் செலுத்தினார். அப்பொழுது அம்மக்கள் முன் ''உகன்'' எனும் குகன் தோன்றினான். அக்குகனை நாராயணன் பாற்கடலில் தவறிய தனது வலம்புரிச் சங்கை எடுத்துவரும்படி பணித்தார். குகனும் சுழியோடித்தேடி அதனைக் கண்டெடுத்து வந்தான். தன் திருவிளையாடல் நிறைவேறியதனால் மகிழ்வுற்ற நாராயணன் ''நீயே முதன்மையான முன்+உகன் (முற்குகன்) எனக் குலவிருது கொடுத்து,

''குகன் எனக் குலமும் குவலையத் தமைத்து''
(கர்ணபரம்பரைக் கல்வெட்டு)

எனது சங்கும், சக்கரமும் உனது சின்னமாகட்டும் என்றும், நீயே முழு ஈழத்தையும் ஆள்வாய் என்றும், வரமும் கொடுத்து மறைந்தார். இக்குகனே கண்ணகி காலத்தில் வடஈழத்தையாண்ட வெடியரசன் (வெளியரசன்) ஆவன். இவன் தம்பிமாராகிய வீரநாராயணன், விளங்குதேவன், போர்வீரகண்டன், ஏரிளங்குருவன் ஆகியோரும் விஷ்ணுபுத்திரர்களே.

இனி, இவ்வெளியரசனாகிய குகன் கங்கைக்கரைக் குகன் வமிசத் தோன்றலாகிய சேதுபதிராசாவினுடைய மகளாகிய நீலகேசியைத் திருமணம் செய்தான் என்பதனால் மாகாவிஷ்ணு அவதாரங்களுடன் தொடர்புபட்ட, இரு குகன் வம்சமும் திருமணத்தால் ஒன்றாகும் நிலையேற்படுகின்றது. பின் விஷ்ணு புத்திரர்கள் கண்ணகியின் கால்சிலம்பிற்கு நாகமணி எடுக்க வந்த மீகாமனுடன் போர் செய்ததனாலும், பின் கண்ணகியின் தெய்வீகத்தன்மையை உணர்ந்து அவளாற் தமக்கும், குடிகளுக்கும் கேடுவருமோ என அஞ்சிப் புத்தளம், மட்டக்களப்பு முதலான பகுதிகளுக்குப் புலம்பெயர்ந்துவந்து, அங்கும் விஷ்ணு விற்கும், கண்ணகியம்மனுக்கும் கோவில்கள் எடுத்து வழிபட்டிருந்தனர் என்பதே வட இலங்கை முற்குகர் வரலாறாகும் (மு. சிவப்பிரகாசம், மு. கு.).

இனி வெளியரசன் பரம்பரை வழி முற்குகர் வரலாற்றினை மட்டக்களப்பு மான்மியம் வெளிப்படையாகக் குறிப்பிடாதபொழுதும், மாகோன் முற்குகர் வன்னிமைகளை வகுத்தபோது கிழக்கிந்தியப் பிராந்தியப் பாரம்பரியங்களைக் கொண்ட முற்குகர்களை ஏழு குடிகளாக வகுத்தபின், வட ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்ற முற்குகர்களை,

''வார்தங்குகுகன் வாளரசகண்டன்
வளர்மாசுகரத்தவன் போர்வீர கண்டன்
பார்தங்கு தண்டவாணமுண்டன் பழமைசெறி
.....''
.....

என வேறாக வகுத்திருந்தான் எனத் தெரிகின்றது. இம்முக்குவர் வகுப்புப்பற்றிய பாடலில் ஈற்றடி இல்லாமையால், இப்பகுப்பினை, நாம் பூரணமாக விளங்கிக்கொள்ள இயலாது. எனினும் இங்கு குறிப்பிடும் வாளரசகண்டன் – வெளியரசனைக் குறிப்பதாகும் எனக்கொளின் தவறாகாது.

பணிக்கர் குலம்

யானைப்படையில் பயிற்சிபெற்றோர் "பணிக்கர்" எனப் பட்டனர். மலையாள நாட்டில் யானைகளைப் பிடித்துப் பழக்கியெடுப்போர் பணிக்கர் சாதி ஆயினர். இம்மலையாள நாட்டார், வெவ்வேறு இடங்களிலிருந்து புலம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் குடியேறியபொழுது பணிக்கன் சாதியினர் வேலணையில் குடியேறிய இடமே பணிக்கன் சாட்டி எனப் பெயர்பெற்றது. (மு. கு. மு. சு. சிவப்பிரகாசம், பக். 20). சூளவம்சமும் (80·59) இருபத்துநான்காயிரம் கேரள வீரர்களுடன் மாகோன் வந்து, இலங்கை அரசினைச் சூறையடித்துக் கைப்பற்றிய கிராமங்களையும், வயல்களையும், பிறவற்றையும், சிங்கள மக்களின் உடமைகளையும் கேரள வீரர்களுக்குக் கையளித்தான் எனக் கூறும். (80:76-78). இக்கேரளப் படைப்பிரிவில் இடம்பெற்றிருந்த யானைப்படை வீரர்களே ''பணிக்கனார்'' என்று மட்டக்களப்புப் பகுதியில் கௌரவிக்கப்பட்டவர்கள் ஆவர் எனக்கொளின் தவறாகாது. ஏனெனில் வங்கர்குலக் குடிகள் அரசியற் செல்வாக்கிழந்த நிலையில், கேரளப் பணிக்கர் குலத்தோர் அவ்விடத்தைப் பெற்றிருக்கலாம் எனத் தெரிகின்றது. இதன் எதிரொலியாகவே வங்கர் குலத்தோர் காலிங்க அரசுகளுக்கு எதிராகச் சிங்கருக்கு அரசாட்சியைக் கைப்பற்ற உதவியிருக்கலாம். மாகோன் சாதியியல் வகுத்த காலத்திலே, வங்கருக்குப் பதிலாகப் ''பணிக்கர்'' என்ற பெயர் இடம்பெறுவதை நாம் அவதானிக்கலாம். பின் தாதன் வரலாற்றைக் கூறும் உரைநடைப் பகுதி, எதிர்மன்னசிங்கன் பாண்டிருப்பு ஆலய முன்னீடும் (முன்னுரிமை) நிருவாகமும் வங்கர்குலத்ததிபரிடம் கொடுத்தான் என்று கூறுகையில், இவ்வரலாற்றைக் கூறும் செய்யுட் பகுதி, பணிக்கர்குலத்ததிபனிடம் கொடுத்தான் எனக் கூறும். கும்பவரிசைப் பகுதியிலும் வங்கருக்குப் பதிலாக பணிக்கர் குலம் இடம்பெற்றுள்ளது. ''பங்கு வாங்கும் விபரம்'' எனும் பகுதியை விளக்க முற்பட்ட உரைகாரர், நாம் மேற்குறிப்பிட்ட வரலாற்றுப் பின்னணிகளை உணராத நிலையிற் போலும், ''புன்னாலை'' என்பது ''பணிக்கன் வன்னிச்சி'' என்றும், ''கந்தளை'' என்பது ''மலையாள முக்குவர்'' என்றும் விளக்கம் கொடுத்துள்ளனர். இவையாவும் மாகோனுக்குப் பிற்பட்டகால நிகழ்ச்சிகள். ஆயினும் பங்கு தடுக்கும் முறையில் பழமை பேணிய பழம்குடியினர் மரபுகளை, இப் புதிய வளர்ச்சிகள் மாற்றியமைக்க முடியாதுபோயிற்று. பங்கு வாங்குகையில் ''புன்னாலை'' என அழைக்கப்பட்டோர், ஆடகசவுந்தரி வரலாற்றுடன் தொடர்பான மேல் வங்கர்

குடிகளுமேயாவர். பணிக்கர் சார்பில் பங்கெடுப்பதற்கு எவருமே அழைக்கப்படவில்லை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. பின்னர் வந்த பணிக்கருக்கு, வங்கருக்குச் சமமான சமுதாய நிலைகள் கொடுக்கப்பட்டிருந்தபொழுதும், இந்நிலை பழைய ஊறிப்போன குலமரபுகளை மாற்றச் சக்தியற்றனவாக இருந்தன என்பதனை நாம் அவதானிக்கலாம்.

இனிக், காலிங்ககுலம், படையாட்சிகுலம், பணிக்கனார் குலம், உலகிப்போடிகுலம் ஆகியோருக்கு வேளாளரின் சிறைகள் ஊழியம் செய்வதேயொழிய மற்றவர்களுக்குச் செய்யக் கூடாது (ம. மா. பக். 93) என்பதனாலும், பங்கு கூறும் கல்வெட்டில், ''படையாட்சி கலிங்கன் பணிக்கன் சிங்கன் அவர்களோடுழவர்'' (பக். 79) என்பதனாலும் பணிக்கருக்களிக்கப்பட்ட சமுதாய முன்னுரிமைகள் குறிப்பிடத்தக்கது. விமலதருமசூரியன் காலத்தில் பணிக்கர்குலத்ததிபன் பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோவிலில் மாயோன் மதமோங்கத் தாம் பணியாற்றிய வரலாறு கூறுவதனாலும், இவர்கள் நிலை புலனாகும். மட்டக்களப்புப் பிரதேசத்தில் பல்வேறு பின்னணிகளைக்கொண்ட முக்குகர் குடிகள் வாழ்ந்ததனால், அவர்களிடையேயிருந்த குடிப்பிரிவுகள் யாவும் காலப்போக்கில் இனம்காணமுடியாது குழப்பமடையலாயின. அதனாலே சில முக்குகர் குடிப் பிரிவில் ''பணிக்கனார்'' குடி இடம் பெற்றும், வேறு குடிப்பிரிவுகளில் இடம்பெறாமல் வேறு குடிகள் இடம்பெற்றிருத்தலுக்கும் காரணமாம். உதாரணமாக உலகநாச்சி பெயரால் உருவாகின உலகிப்போடி குடிப்பிரிவினரில் காலிங்கா குடி, படையாண்ட குடி, உலகிப்போடி குடியென்போரே இடம்பெறுவர். இவ்வாறு ஊருக்கு ஊர் இக்குடிகள் வேறுபட்டுக் காணப்படுவதற்குக் காரணம் மலையாளம், கலிங்கம், வங்கம், ஓரிசா, கல்கத்தா, வட இலங்கை முதலான வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து முற்குகர் குடிகள் வந்து, தமக்குள்ளே வெவ்வேறு குடிப்பிரிவுகளை ஏற்படுத்திக்கொண்டமையேயாம்.

கரையார் குடிகள்

தமிழ் இலக்கியங்கள் போற்றும் நெய்தல்நில மக்களான கரையார் குடிகள், வேளாளரின் சிறைத் தொண்டர்களுக்குள் அடக்கப்பட்டாரில்லை. கரையார் மன்னருடைய நாட்டு வருவாய்க்கும், பாதுகாப்பிற்கும், சேவையாற்றும் குடிகளாய் இருந்தனர். முத்துக்குளித்தல், மீன்பிடித்தல் முதலான வழிகளில் வருவாய் தேடியதோடு, கடற்படைகளிலும் பணிபுரிந்து

நாட்டைக் காப்பாற்றினர். தூரநாட்டுக் கடற்பிரயாணங்களைச் செய்து கடல் வாணிபத்திலும் இவர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்துள்ளனர். ''கம்பிளியார்'' என்போர் கடல் வியாபாரம் பண்ணும் கரையார்குலச் செட்டிமாராவர். மட்டக்களப்பில் மாகோன் சாதியமைப்புக்களை வகுத்தபொழுது கரையூரார், கும்பிளியார், ஆறுகாட்டி (ஆறுகளில் பிரயாணம் செய்பவர்), முதலித்தேவன் (கங்கைக்குல மரபு கூறும் குருகுல முதலிக் கரையார். யாழ்குடாவிலும் முதலிக்கரையார் உளர். இவர்கள் தென்மேற்கிலங்கைக்குப் புலம்பெயர்ந்ததனால் குருகுல சூரியர், வர்ணகுல சூரியர் முதலான கரையார் குடிகள், சிங்கள மக்களிடையேயும் காணப்படுகின்றனர்). வயித்தி, வேலன், வங்காளம் வீரமாணிக்கன் (வங்காளத்திலிருந்து வந்த குடியினர் ஆவர்) என ஏழு குடிகளாக வகுத்திருந்தான். காலந்தோறும் வங்கதேசப் படகுகள் இலங்கையின் வடகரைக்கு வந்துபோய்க்கொண்டிருந்தன என்பதனை அகநானூறு, மணிமேகலை முதலான பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு வந்து குடியேறிய கரையார் குடிகள், தம்மை வங்காள குடியினர் என்று கூறும் மரபை ஆரையம்பதி கரையார் குடியினர் இன்னமும் பேணி வருகின்றார்கள். இவர்கள் வங்காளம் வீரமாணிக்கன் குடிவந்தோராகலாம் என்று கருதுவதிற் தவறில்லை. கரையார் கடலாதிக்கம் பெற்ற குடியினராயினும், தம்மைக் கங்கைக் கரைக் குகன் குலத்தவருடன், முற்குகர் (முக்குவர்) தொடர்பு காட்டுவதுபோல் இவர்கள் காட்டிக்கொள்வதில்லை. இவர்கள் நெய்தல்நிலக் குடியினராய் மூவேந்தர் நாட்டுக் கரையோரங்களில் வாழ்ந்தோராவர். ஆனால் குருகுல முதலி என்போர் தம்மைக் கங்கைக்குல மரபுடையவர்களாகக் கருதுவர். இவ்வாறு கடலாதிக்கம் பெற்றிருந்த கரையார், பதினெண் சிறைக்குடிகளுக்குள் அடங்கினாரில்லை. ஆயினும் பரதவர் குலத்தில் சிப்பி பொறுக்கிச் சுண்ணாம்பு சுடுபவரான கடையர் சிவத்தொழும்புக்குச் சுண்ணாம்பு நீறு கொடுக்கும் தொண்டராக இருந்துவந்துள்ளனர்.

திமிலர் குடிகள்

''திமில்'' எனும் சிறு படகைக்கொண்டு மீன்பிடித்தல் தொழிலைச் செய்தோர் திமிலர் எனப்பட்டனர். ஆனால் மட்டக்களப்பு மான்மியம் பழங்குடியினராகிய இயக்கரே திமிலர் எனக் கூறும். (ம.மா. பக். 22, 23, 75). தட்சணாபதியையாளும் உரிமையை இயக்கராகிய திமிலருக்கீர்ந்தனர் (பக். 23, 75) என்பதனால், இக்காலத்தில் தட்சணாபதியில் திமிலர்

செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பது புலனாகின்றது. ஆயினும் இவர்களுக்கு எதிராளிகளாக நாகர், கலிங்கர், சிங்கர் யாவரும் இருந்ததனால், திமிலர் குடிகள் பெருகி வளரமுடியாமற்போய்விட்டது. பிற்காலத்திலும் முற்குக வமிசத்தார் திமிலரை முஸ்லீம் படைவீரர் துணைக்கொண்டு வெட்டித் துரத்தினர் என்றும் தெரிகின்றது. யாழ்குடாவில் 1790ம் ஆண்டு எடுத்த குடிசனமதிப்பில், இவர்கள் எண்ணிக்கை 576 ஆகும். மட்டக்களப்பில் விளங்கும் ''திமிலத்தீவு'' மட்டுமே இப்பழங்குடியினரின் வரலாற்றை ஊர்ஜிதப்படுத்தும் கிராமமாக இருந்துவருகின்றது.

நழுவர் குடிகள்

நழுவர் எனும் குடியினரும் வேளாளரின் பதினெண் சிறைக்குடிக்குள் அடங்கப்பட்டாரில்லை. ஏனெனில் இவரது மூதாதையோரான நம்பி எனும் சாதிப்பிரிவினரே தீவட்டி எடுக்கும் சிறைகளாகத் தொண்டாற்றியிருந்தனர். நம்பியரில் சிலர் அரசபடையிலும் சேவையாற்றியிருந்தனர். அதனாற் போலும் குடுக்கை வரிசை கூறும்பொழுது,

நம்பு தாளைக்கு அதிபதியோன்
நடுக்கடலுள் வில்லுரண்டி
அம்பு தொழில் அனேகம் கற்றவன்
நம்பி யென்று அழைக்கப்படும்
மயில்க்கொடி வேந்தன் முட்டிக்கு வா

என்று அழைக்கப்பட்டான் எனத் தெரிகின்றது. (இப்பாடலை சண்முகமணி பார்வதிப்பிள்ளையெனும் மூதாட்டி தம் குல மரபு இன்னது என்று கூறுகையில் இப்பாடலை மேற்கோளாகக் கொண்டார்). இனி, யாழ்குடாவில் இந்நம்பிகளைச் சங்கிலி (கி. பி. 16ம் நூற்றாண்டு) தன் படையினின்றும் விலக்கிய பொழுது இவர்கள் சான்றார் (சாணார், சாண்டார்) குறிச்சிபோய் சான்றார் தொழிலை மேற்கொண்டு (சாறு-கள்) விற்றதனால் நறவர், நளவர் என அழைக்கப்படலாயினர் என முத்துத் தம்பிப்பிள்ளை இவர் சாதிமரபை விளக்குவர். இவ்விதமே மட்டக்களப்பிலும் நழுவிய நம்பிமாரை நழுவரென மதுவெடுக்க மாகோன் வகுத்தான் (ம. மா. பக். 97) என்று தெரிகின்றது. எனவே மட்டக்களப்பிலும் நழுவரின் முன்குடியினராகிய நம்பிமார் தீவட்டி எடுக்கும் தொழிலைத் தேசத்துக் கோவில்களில் செய்திருந்தனர் எனலாம். பின் சாணார் தொழிலை மேற்கொண்டதனாலே சாணாரின் சிவத்தொழும்பான, தெங்குப்பாளைக் குருத்து வெட்டிக் கோவில் அலங்காரத்திற்குக் கொடுக்கும் பணியையேற்றிருந்தனர் ஆகலாம்.

சிங்களக் குடிகள்

மட்டக்களப்பில் சிங்களக் குடிகளுக்கும் தனி வரலாறு ஒன்றுண்டு. தென்னிலங்கைக் கலிங்கர், சிங்கர் (சிங்களவர்) குலத்தார் அனுசரணையுடன்தான் இலங்கைக்கு வந்து, பின் தென்கிழக்கிலங்கையில் தமக்கென ஒரு அரசாட்சிப் பிரிவை ஏற்படுத்தியிருந்தனர். அதனால் கலிங்கர் சிங்கரைத் துவே சித்துப் பகைக்க விரும்பவில்லை. எனினும் தென்கிழக்கிலங் கையில் ''தாமே தேசராசகுலம்'' என்ற மரபைப் பேணுவ தில் உறுதியாக இருந்துவந்துள்ளார்கள். அதனால் எல்லை விரிவாக்கத்தில் நாட்டம்கொண்ட சிங்கர், தம தாட்சியை மட்டக்களப்பில் ஏற்படுத்தமுனைந்த தருணங்களில் எல்லாம் கலிங்கர் அவர்களுடன் போராடிவந்திருக்கிறார்கள். பலமுறை தமதாட்சியை மீளவும் உறுதிப்படுத்தியுமுள்ளார்கள். மட்டக் களப்பைச் சிங்கர்குலத் தினசிங்கன் ஆண்ட காலத்தில், அவன் முற்காலத்தில் கலிங்கர், வங்கர் இயற்றிய சிவாலயங்களை (சிவனாலயம், முருகனாலயம்) இடித்துத் தன் மாமனாகிய சோழனுக்குச் செல்வங்களை அனுப்பிவந்தான். இதனைக் கலிங்கர், வங்கர் மந்திரிகள் கலிங்கத்திற்கு அறிவிக்கவே, மாகோன் இலங்கை முழுவதிலும் தமிழ்மதம் (சைவம்) வள ரச்செயயவேண்டுமென்று படை திரட்டிவந்து தினசிங்கன் குடும்பத்தினரை வாளுக்கிரையாக்கித், திரண்டெழுந்த சிங்கர் குடிகளையும் வாளுக்கிரையாக்கிச், சில சிங்கரையும் மட்டக் களப்பால் அகற்றிவிட்டான். ஆயினும் எஞ்சியிருந்த சிங்களக் குடிமக்களை மாகோன் தனிச் சாதியினராகக்கொண்டு, அவர் கள் வாழ் ஊர்களின் அடிப்படையில் ஏழு பிரிவினராக வகுத் தான். அரியகலமிடு முதலி, மீகான்கோடை, அவுறாளை, மேலச்சேனை, பள்ளச்சேனை, பெரியகல்மடுமுதலி, மூவாங் கல்லு என்போரே அவன் வகுத்த சிங்களக் குடியினர் ஆவர். பிற்காலத்தில் இறக்காமப் பகுதியில் குடியமர்ந்த சிங்களக் குடிகள்பற்றிய விபரங்களை நாடுகாடு பரவணிக் கல்வெட்டு விபரிக்கும். மட்டக்களப்புத் தமிழ்மக்களிடையே காணப்படும் மானுடவியற் பண்புகள், மற்றும் பரம்பரைப் பெயர்கள், சில உணவுமுறைகள் போன்றவை சிங்களக் குடியினர் தமிழ்க் குடியினராக மாறிவிட்டபொழுதும் விட்டகலாத எச்சங்க ளாம்.

இனி, வேளாளரது பதினேழு சிறைகள் யாவர் என்ப தனையும், அவர்தம் சிவத்தொண்டுப் பணிகளையும் ஈண்டு நோக்குவோம். அகத்தியமுனிவரே தென்னாட்டில் பதினெண் குடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையும் குடியமர்த்தி வளம்படுத்தினார் எனப் பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்

றன. (தொல்காப்பியம், நச்சினார்க்கினியர் பாயிரவுரை). எனவே தமிழரின் பதினெண் குடிமரபு மிகத் தொன்மை வாய்ந்தது என்பது புலனாகும். அகத்தியர் காலத்தில் வகுக் கப்பட்ட பதினெண் குடிமுறைகள் காலத்துக்குக்காலம் கால தேவைகளையொட்டிச் சிற்சில மாறுபாடுகளைப் பெற்றிருந் தன. பிற்காலத்தில் கோவில்கள் கட்டிடக்கலைச் சிறப்புக் களுடன் பாரிய அளவில் கட்டப்பெற்றபொழுது, அவற்றின் நிருவாகமுறையிலும் வளர்ச்சிகள் ஏற்படலாயின. அதனால், சிறப்பாகச் சோழர்காலத்தில் கோயில் ஊழிய அமைப்புகளும் பெருமளவில் வளர்ச்சிபெற்றிருந்தன. இக்காலம் தேவார திருவாசகங்கள் ஓதி வழிபட்ட காலமாகவும் இருந்தது. அத னால் இசைத்தமிழில் வல்லார் நாற்பத்தெண்மர், உடுக்கை வாசிப்பவன் ஒருவன், கொட்டிமத்தளம் வாசிப்பவன் ஒருவ னுடன் ஐம்பதுபேர் இசைக்கென்றே கோவில்களில் இருந் தனர். இவர்களேயன்றி காண்பாடி ஆரியம் (வடமொழி இசை யாளர்), தமிழிசை பாடுவார் என இரு பிரிவினரும், நடனம் புரியும் தேவரடியார்களும் கோவிற்றொண்டர்களாகக் கருதப் பட்டனர்.

எனவே, இப்புதிய தொண்டரெல்லாம் பழைய பதி னென் குடிமுறைக்குட்பட்டாரில்லை என்பது புலனாகும். ஆயி னும் கோவில்களில் புதிய மரபுகள் இடம்பெற்றதனால், பழையன கழியப் புதியனவேற்றல் என்ற விதிக்கிணங்கச், சில சாதிமரபினர் காலப்போக்கில் பதினெண்குடி மரபின ராகக் கருதப்படலாயினர். இனிக் கோவில்களில் நித்திய திருப் பணிகள் வளர்ச்சிபெற்ற காலத்தில், சில குடிமக்களை மன் னர்கள் கோவிற்கருகாமையில் நிலங்கள் வழங்கிக் கோவிற் திருப்பணிகளை நிறைவேற்றி வந்தார்கள். இவர்களைப் ''பதியிலார்'' என அழைத்தனர். இவ்வாறு திருத்தொண்டு புரிந்துவந்த இவர்கள் காலப்போக்கில் கோவிற் திருத் தொண்டுபுரியும் பதினெண்குடிகளாகக் கருதப்பட்டனர். இவர்களையே ம. மா. ''கோவிலார்'' எனக் குறிப்பிடும். பண்டாரிகள், பண்டாரப்பிள்ளைகள் என்ற குடிமரபினரும் பழைய பதினெண்குடிமுறை வழிவந்தவர்களல்லர். பிற்காலச் சோழ மன்னர்கள் ஆரியதேசம் (ஆரியர் பரவி கங்கைக்கரைப் பகுதிவரை வாழ்ந்த பகுதி ஆரிய வர்த்தம் எனப்பட்டது), மத்ய தேசங்களிலிருந்தும் சைவ ஆசாரியர்களையும், பண்டி தர்களையும் தருவித்துக் கோயில் வழிபாடு முறைகளை நடாத்தினார்கள். முதலாம் இராசராசன் (கி. பி. 985 - 1014) இவர்களைத் தருவித்திருந்தான் என்பது கல்வெட்டுக்களால் உணர்த்தப்பட்டுள்ளது. அல்விதமே முதலாம் இராசேந்திர

னும் (கி. பி. 1014 – 1044) கங்கைக் கரையிலிருந்து சைவாசாரியர்களைத் தருவித்துத் தமிழகத்திற் குடியேற்றினான் எனச் சித்தாந்த சாராவளியின் முன்னுரையில் குறிப்பிடப் பட்டுள்ளது. இத்தருணம் கங்கைக்கரைச் சிவாசாரியருடன், பண்டாரிகள் (கோவிற் களஞ்சியசாலைக்குப் பொறுப்பானவர்கள்), பண்டாரப்பிள்ளைகள் (பண்டாரிகள் முதலான அதிகாரிகளின் ஏவற்காரன்) ஆகியோரும் தருவிக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது. எனவே தமிழகத்துக் கோவில்களில் சோழர்காலம் முதலாகப் பண்டாரிகள் (பொக்கிஷங்களுக்குப் பொறுப்பானவர்), அவர்தம் ஏவலாளரான பண்டாரப்பிள்ளை யென்போர் கோவிற்றொண்டர்களாக இடம்பெறலாயினர். இவர்கள் கிழக்கிந்திய மரபினரானபடியினால், மட்டக்களப் பிலும் இவ்விரு குடியினரும் கோவிற்றொண்டரான பதினெண் குடிமரபில் இடம்பெற்றிருப்பினும் பண்டாரம் செல்வாக் கிழந்த நிலையிலே இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. பழைய பதினெண் குடிமரபுகளில் மடப்பள்ளியர் (மடையர்–மாதுலர்) இடம்பெற்றிருக்கவில்லை. ''அன்புக்குறிகளை'' வழிபட்டிருந்த பழைய காலக் கோவில்களில் அமுது படைக்கும் முறைமையில்லாமையால், இக்குடிமரபு இடம் பெற்றிருக்கவில்லை. காலப்போக்கில் பெருங் கோவில்களில் ஆறுகாலப் பூசைகள், மூன்றுகாலப் பூசைகள் இடம்பெற்ற போது திருவமுது படைக்கும் புதிய சமயாசாரங்கள் இடம் பெறலாயின. அப்பொழுது மடப்பள்ளியர் எனும் சமையற் காரர் திருவமுது பொங்கும் தொழிலில் பிராமணர்களுக்கு உதவியாக இருந்தார்கள். இவர்களையே மட்டக்களப்புச் சைவமரபு 'மாதுலர்' எனக் குறிப்பிடும். சாணார், நழவர் என்ற சாதியினரும் பதினெண்குடி மரபில் முதலில் இடம் பெற்றிருக்கவில்லை. பள்ளர் என்போரே இடம்பெற்றிருந்தனர். பள்ளரில் ஒரு பிரிவினரே பிற்காலத்தில் சாணார் எனபபட்டனர். அவ்விதமே நம்பிகள் வழியில் வந்த நழவரும் சாணார், பள்ளர் தொழில்களை ஏற்றிருந்தார்கள் எனத் தெரிகின்றது. நம்பிகள் என்போர் ஆதியில் அரசர்களின் படைவீரர்களாய்த் தொழில்புரிந்தமையால், பதினெண் குடி மரபுக் கோவிற்றொண்டர்களாக இருக்கவில்லையென்பது புலனாகின்றது. பிற்காலத்திலே நம்பிகள் கோவில்களில் தீவெட்டியெடுக்கும் தொண்டினை மேற்கொண்டிருந்தார்கள். அதற்குமுன் 'பதியிலார்' அல்லது 'கோவிலார்' என்போரே தீவெட்டியெடுத்தலை மேற்கொண்டிருந்தனராகலாம். ''சிவிகையார்'' எனும் குலமரபும் தேர்கள் உருவாக்கத்துடன் மறைந்தொழியலாயிற்று எனலாம். எனவே பழைய பதினெண்

குடி மரபினராக வேளாளர், கோவியர், சிவியார், பாணர், மாலைக்காரர், கன்னார், குயவர், கொல்லர், தச்சர், தட்டார், நாவிதர், பள்ளர், மூவாணிபன், வண்ணார், வலையர், கைக்கோளர், திருவிளக்கிடுவார், ப்றைய்ர் முதலானோர் இடம்பெற்றிருக்கப், பிற்காலத்தில் புதிய தொண்டர்கள் இடம்பெற்ற காரணத்தால் கொல்லர், தட்டார், கன்னர், தச்சர் ஆகிய நால்வரும் கம்மாளர் எனப் பொதுப்பெயரால் அழைக்கப்பட்டனர். இனி இப்புதிய குடிமுறைகளில் இடம் பெற்றிருக்கும் மாதுலர், கோவிலார், பண்டாரம், பண்டாரப் பிள்ளை, சாணார், நம்பி ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கோர் ஆவர்.

இனி மேலே தொடர்ந்து மட்டக்களப்புப் பிரதேசத்தில் மாகோன் சீர்திருத்தியமைத்த பதினெண் குடிமுறைகள் யாவை என்பதனை ஆராய்வோம்.

1. மாதுலர் — (மடைப்பள்ளியில் அமுது சமைப்போர்)

2. கோயிலார் — சந்தனமரைத்தல், பூக்கொய்தல், திருவிளக்கிடுதல், பூசைப்பெட்டி காவுதல், கூட்டுதல், நந்தவனங்களுக்குத் தண்ணீர் விடல் முதலான தொழில்களைச் செய்வர்.

3. பண்டாரம் — சந்தனம், தாம்பூலம் பகிர்தல்.

4. பண்டாரப்பிள்ளை — அதிகாரிகளின் வீடு, வீதி கூட்டிச் சாணம் தெளித்தல், கலம் மினுக்குதல், எச்சிக்கல்லை எடுத்தெறிதல், கொடிகட்டல், வள்ளுவருக்கு இராச மேளம், இராசப்பறை எடுத்துக் கொடுத்தல், வீதி அதிகாரம் செய்தல் முதலியன.

5. குசவர் — குடம் முதலிய மட்பாண்டங்கள் கொண்டுவருதல்.

6. கம்மாளர் — கோடரி, கத்தி முதலிய இரும்பாயுதங்களைக் கொண்டுவருதல். தச்சர் கோவில் கட்டும் தொண்டுகளைச் செய்தல். கன்னார் பித்தளைப் பொருட்கள் வழங்கல். தட்டார் பொன்னாபரணங்கள் செய்தல்.

7. முதலிகள் (கைக்கோளர்-சேணியர்) — நூல் சீலை, தீபச் சீலை கொண்டுவருதல்.

8. வாணிபன் (செக்கன்) — எண்ணெய் கொண்டுவந்து தலைக்கிடுதல், தீபத்துக்கிடுதல்.

9. நம்பிகள் — தீவெட்டி எடுத்தல், இவர்களில் எஞ்சியோரை நழவரென மாகோன் வகுத்தான்.

10. வண்ணார் — துயில் தூசி நீக்கிக்கொண்டுவருதல்.

11. அம்பட்டர் (நாவிதர்) — மயிர் சவரம் பண்ணுதல்.

12. சாணார் — தெங்குப்பாளைக் குருத்து வெட்டி அலங்காரத்திற்குக் கொடுத்தல்.

13. பள்ளர் — நன்மைக்குப் பனம்பாணி கொண்டு வருதல், தீமைக்குப் பிரேதமெரித்தற்கு விறகுவெட்டிச் சுடலை செப்பனிடல்.

யாழ்ப்பாணத்தில், வேளாளரின் பள்ளக்காணிகளில் வேளாண்மை செய்ததனால் பள்ளர் எனப்பட்டனர் என்று மரபுகள் கூறும். ஆனால் இவர் பழங்குடி மரபினர். ஆதியிலிருந்தே மரமேறும் தொழில்களையும் மேற்கொண்டிருந்தனர் என்பது புலனாகும்.

14. கோவியர் (இடையர்) — ஆதியில் தீபங்களுக்கு நெய் வழங்குவதற்காக மந்தைகளை வளர்த்துவந்தனர். இராசராசன் I (கி. பி. 985 - 1014) ஆடு, பசு, எருமை ஆகிய மூவினங்களையும் இடையருக்கு வழங்கி, கோவில் தீபங்களுக்கு நெய் பெறச் செய்தான் என்பதனால், இவர் தொண்டு புலனாகும். காலப்போக்கில் தானியங்களைச் செக்கில் ஆட்டி எண்ணெய் எடுக்கும் வாணிபரே எண்ணெய் வழங்கியதனால், கோவியர் பிரேதம் காவுதல், மற்றும் வேளாளர், தனக்காரர் வீடுகளில் நன்மை தீமைகளுக்குச் சமைத்தல் முதலான தொழில்களைச் செய்துவரலாயினர்.

15. தவசிகள் — மாலைதொடுப்போர், சோழர்காலத்தில் "திருப்பள்ளித் தொங்கல் பிடிப்பவர்" எனப்பட்டனர். காலப்போக்கில் பண்டாரம் என்போரும் பூக்கட்டி விற்கும் தொழிலைப் பேணியிருந்தனர். சீர்பாத கல்வெட்டு II குறிப்பிடும் "சித்தர்" என்ற பதம் சித்துக்கள் வல்லாரைக் குறிப்பிடாவிடின், தவசிகளையே குறிப்பிடுவதாகலாம். தவசிகள் தொழில் பூமாலை கட்டல், பந்தல் முதலான விதானங்கள் சோடித்தலாம். இவர்களுடன் மாதுலர், கோயிலார், பண்டாரப்பிள்ளை, கோவியர் முதலானோரும் பந்தர் சோடிதஞ் செய்யலாம்.

16. கடையர் (வலையர்) — சிப்பிகளை நீறாக்கிச் சுண்ணாம்பு கொண்டுவருதல்.

17. பறையர் — பறை மேளமீட்டல், தீமைக்குப் பாடைகட்டல், பிரேதம் எரித்தல்.

18. வேளாளர் — மேற்குறிப்பிட்ட பதினேழு குடிமரபினரையும் வேளாளர் தென்கிழக்கிலங்கைக் காலிங்ககுல அரச குடிகளுக்கு மட்டும் கொண்டுபோய்விட்டு ஊழியஞ் செய்விப்பார். மற்றும் படையாட்சிகுடி, பணிக்கனார் குடி, உலகிப்போடிகுடி முதலானோருக்கு விதிக்கப்பட்ட குடிகளை வேளாளர் அனுப்பி ஊழியஞ் செய்விப்பாரேயொழியத் தான் போவதில்லை. மற்று வேளாளர், வணிகராகிய வைசிய குடிமரபினராகிய தனக்காரருக்கு இப்பதினேழு குடிகளும் தொண்டு புரிவர். மற்றக் குடியினர் தத்தம் தொழில்களைத் தாமே செய்துகொள்வர்.

இதுவரை நாம் ஆராய்ந்த குடிமரபுகளும், தொண்டுகளும் கலிங்க அரசுகள் தமக்கும், முக்குலத்தவருக்கும் மட்

டக்களப்புப் பிரதேசத்தில் முன்னுரிமைகள் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவையாம். அதனால் வேளாளருக்கும், முக்குலத்தவருக்கும் முன்முறை தவறிக் கொத்தளிப்புகள் ஏற்பட்டதற்கான குறிப்புகளும் உள. குடுக்கை கூறும் பகுதியில் வேளாளர் சிறைகள், பிராமணர் கையால் குடுக்கைப் பங்குகள் வாங்க மறுத்துக், காரானர் பெருமைகளையெடுத்துக்கூறி, அவன் கையாலே தங்களுக்கு வரிசைமுட்டி தரவேண்டுமென்றும் விண்ணப்பித்தனர். (ம. மா. பக். 99 – 100) இந்நிகழ்ச்சிகள் யாவும் மன்னர்கள் சமுதாய மரபுகளை மாற்றியமைக்க முடியாதிருந்த நிலைகளையே எடுத்துக்காட்டுகின்றன. இதனால் கலிங்க அரசுகள் நிலைதளர, இவ்வரசுகள் அகத்தியர் காலம் முதலாகத் தமிழகத்தில் வேரூன்றியிருந்த சமுதாய மரபுகளை மாற்றியமைக்க எடுத்த முயற்சிகளும் நிலைதளர்ந்தன.

வணிகர்

வைசியரான வணிகர்பெருமக்கள் திருக்கோயில்களின் நித்திய திருப்பணிகளுக்கும், கோவிற்கட்டிடங்களுக்கும் விழாக்களுக்கும் பொருளை வாரி வழங்கினர். ஏரி, குளம் முதலியவற்றைச் சீர்திருத்தவும், பாதுகாக்கவும் பண உதவி புரிந்துவந்துள்ளனர்.

இயல் 6

மட்டக்களப்பில்
தென்னிந்திய - கிழக்கிந்திய
சைவமதப் பண்பாடுகளும்
பிற வழிபாட்டு நெறிகளும்

வடக்கே இமயம் முதல் தெற்கே சூரபத்மனது அரச இருக்கையான வீரமகேந்திரம் (வீரமகேந்திரம் இலங்கையின் தென்கடற் பகுதியில் இருந்ததாகத் தெரிகின்றது) வரை சிவவழிபாடுடைய மக்கள் வாழ்ந்திருந்தார்கள் என வடமொழி' தென்மொழி நூல்கள் உணர்த்துகின்றன. இந்துவெளி மங்கள் பேணியிருந்த மதமும் சைவமே. இன்னும் ஆழ்ந்து நோக்கின் யூதர்களின் மதமும் சைவத்தின் சாயலைப் பெற்றிருந்தது என்பது புலனாகும். ஆரியருடைய தொடர்பினால், இந்துவெளி நாகரிக மக்கள் பேணியிருந்த சைவம் வேதகிரியைகளையும் ஏற்கலாயிற்று. அதனால் வேதக்கிரியைகளுடன்கூடிய சிவவழிபாட்டை ''வைதிக சைவம்'' என அழைக்கலாயினர். இராமாயணம், மகாபாரதம் எனும் வடமொழி நூல்கள் எழுந்த காலத்தில் வைதிகசைவம் பெரும் முக்கியம்பெற்ற மதமாக வளர்ந்திருந்தது. இராவணன், இராமர், கிருஷ்ணர், அர்ச்சுனன் முதலானோர் சிறந்த சிவபக்தர்களாகவும், சிவவழிபாட்டுக் கிரியைகளில் மனமொருமித்தவர்களாகவும் காணப்பட்டார்கள். இராமர் அயோத்திக்குத் திரும்பும்போது மாமாங்கை, முன்னீசுவரம், இராமேசுவரம் முதலான தலங்களில் இலிங்கங்கள் நிறுவி வழிபட்டிருந்தார் என வால்மீகி இராமாயணம் குறிப்பிடும்.

தென்நாட்டில் அகத்தியர் வருகையுடன் வைதிகசைவம் தென்னாட்டிலும் பேணப்படலாயிற்று. வான்மீகி முனிவர், அகத்தியர் முனிவர் தென்கோடியிலுள்ள பொதியமலையில் காவியுற்பத்தியாகுமிடத்தில் வசிப்பதாகக் கூறுவர். எனவே அகத்தியர் காலம் இராமாயண காலத்திற்கு முற்பட்டது என்பது புலனாகும். ஆனால் அகத்தியர் சித்தர்களில் ஒருவரான

படியால் நீண்டகாலம் வாழ்ந்து, தமிழக வகலாற்றுடன் நீண்ட காலம் தொடர்புடையவராகக் காணப்படுகின்றார். முற் காலச் சோழருக்கும், பாண்டியருக்கும் அருள்புரிந்து வைதிக வழிபாட்டு நெறிகளையும் அறிமுகம் செய்திருந்தார். அதனால் அகத்தியர் போன்ற முனிவர்கள் வியக்கும் வண்ணம் பாண்டியர்கள் யாகங்களைச் செய்திருந்தார்கள் என்று காளிதாசனின் ரகுவம்சம் குறிப்பிடும் (சர்க்கம் 6.61). சங்க இலக்கியங்களும் பாண்டியமன்னர்கள் யாகக்கிரியைகளில் ஈடுபாடுடையவர்களாக இருந்தார்கள் எனக் குறிப்பிடுகின்றன. அதனால் இக்காலம் முதலாகவே வேதக்கிரியைகளில் தேர்ச்சி பெற்ற பிராமணர்களைத் தருவித்து மன்னர்கள் யாகங்களை இயற்றியிருந்தார்கள்.

இலங்கையில் வைதிகசைவநெறி வழிபாட்டினை இராவணன் பேணி, தட்சணகையிலையில் முக்கோணமுள்ள ஒரு லிங்கத்தைப் பூசித்திருந்தான் என்றும், அவன் செய்த நிகும்பலை யாகத்தில் பூதங்கள் தோன்றின என்றும் ம. மா. குறிப்பிடும் (பக். 30-32). இராவணனுக்குப்பின் தென்னிலங்கையை அடைந்து, ஆட்சிபுரிந்த அத்தினாபுரிக் குருகுலநாதரும் ''மறைமுறை'' வேதக்கிரிகைகளைப் பேணியிருந்தார்கள். விசயனும் ''ஈசர் பாதம் போற்றித் தன் படகைத் தென்முகமாகத் திருப்பினான்'' என்பதனால், இவனும் கிழக்கிந்தியாவில் இக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த வைதிக சைவத்தைப் பேணியிருந்தான் எனக் கருதலாம்.

கலிங்கம், வங்கம், அங்கம், ஒரிசா முதலான கிழக்கிந்திய நாட்டுப் பழங்குடியினர் ஆரியர் வருகைக்குப்பின், இந்து வெளியிலிருந்து புலம்பெயர்ந்துவந்து இப்பகுதிகளில் குடியமர்ந்தோர் ஆவர். பின்னர் ஆரியர் சுமுகமான முறையில் கிழக்கிந்தியாவை நோக்கிப் பரவிய காலத்தில், இந்நாட்டு மன்னர்களும் வைதீகக்கிரியைகளை விரும்பியேற்றிருந்தார்கள். இம்மன்னர்கள் தேவாலயங்களில் வல்ல பிராமணர்களைக் கொண்டே சிவவழிபாட்டைப் பேணிவந்துள்ளனர். அதனால் தென்கிழக்கிலங்கையிலும் அப்பிராமணரையே தருவித்திருந்தனர்.

இதனைக் குடுக்கை கூறும் வேளாளன்,

.....
பெருமைகளும் மறைநான்கும் பட்டம்பெற்ற
பெரியோருங்கன் முறைவகுத்தார்
(பங்கு தடுக்கும் முறை, குருநாதர்)

யார் என்று வினவி குருநாதர் குலம், கோத்திரம் கூறும்வண்ணம் கேட்க, குருநாதர்,

தீதகலப் பூதலத்தில் பிரமபுத்ராத் தீர்த்தமதில்
சிவனுமையும் வேடரெனச் சிலையம்பேற்றி
தாதுலவு நீராட வெங்கன் மூன்னோர்
சதாசிவவெள்றடியைப் போற்ற
மாதுபங்கனறிந் தைதந்து மந்திரதையீந்து
குருநாதரென மறைந்தபின்பு
பூதலத்தி லுயர் கலிங்கராசனுடன்
வந்திலங்கைமுதல் குருவாய்ப் புகுந்தோனானே
(பங்கு தடுக்கும் முறை, குருநாதர்)

எனப் பதில் அளிப்பர். இங்கு குருநாதர் கூறிய சைவமரபு கிழக்கிந்தியநாட்டுடன் தொடர்புடையது. இரஞ்சலன் மட்டக்களப்பைப் படையாட்சிகுலத்துச் சிறிகுலனுக்குப் பட்டம் கட்டி, கலிங்கம் சென்றிருந்தபொழுது, குருவெனும் நாதன் இராசனைக் கண்டு ''இலங்கையிற் சிவதலம் திருத்தினையோ'' என, அவனும் ''பாசமே அகற்றிப் பசுபதிக்கமைத்த நேசமே கொடுத்து நீங்கினேன்'' என்றான். அதனைக் கேட்டு மகிழ்ந்து இக்குருவெனும் நாதன் திருகோணமலையையடைந்து, கயிலைக் கடவுளை இராவணன் நித்தம் துதித்த வடிவை ஞானக் கண்ணிற் கண்டு, உமைபாகனை வணங்கி யோகத்தில் இருந்தார். அதனைக் கேள்வியுற்ற சிறிகுலன் தட்சணாகையிலையையடைந்து குருவை வழிபட்டு நின்றான். அப்பொழுது, ''உன்வரவு யாதோ?'' என வினவ, சிறிகுலன், தான் படைத்தலைவனாய் இருந்து கலிங்கனுக்குத் திறை பெற்றுக்கொடுத்த எல்லைகள் கூறிப், பார்முழுதாண்ட பாண்டியனையும், சோழனையும் கண்டு மகிழ்ந்து, மட்டக்களப்பிலும் பண்டுமரபைப் பகுக்கவந்தவாறும் எடுத்துரைத்தான். அப்பொழுது குருவும் மகிழ்ந்து ''அண்டலாரலயங்களை அமைத்தரசாளென'' வரமீந்தார்.

இச்சிறிகுலன் மகன் பிரசன்னசித்துவே, இராவணன் காலத்தின்பின் பாழடைந்திருந்த சிவாலயங்களைப் புனருத்தாரணம் செய்யும் பணியிலீடுபட்டிருந்தான். அதற்குதவியாகப் புவனேயகயபாகுவும் சோழநாட்டிலிருந்து சிற்பிகளைத் தருவித்துக் கொடுத்தான். நாகர்முனைச் சுப்பிரமணியர் கோவிலே இவன் திருப்பணிகள் செய்த கோவில்களில் சிறப்புமிக்கதாகும். பின் புவனேயகயபாகுவின் மகன் மனுநேயகயபாகுவும் நாகர்முனைச் சுப்பிரமணியர் ஆலயத்தைச் சோழநாட்டுச் சிற்பிகளைத்தருவித்து மேலும் வளம்படுத்தினான். பின் இக்கோவில் நிருவாகம், தொண்டுகள் என்பன வகுக்கப்படும்போது சோழ

நாட்டுப் பதினெண்குடிகளும் கோவிற்தொண்டர்களாக இடம் பெற்றனர். இக்கோவில் வளர்ச்சியில், இவ்வாறு கிழக்கிந்திய சைவக்குடிகளும், தென்னிந்திய சைவக்குடிகளும் தொடர்பு கொள்வதை நாம் அவதானிக்கலாம்.

மேல்வங்கர்குலத்து மகாசேனன், சங்கமிகுந்து நிகும் பலையாகம் முதலான கிரியைகளுடன் வழிபாடு நடத்திவந்த இராவணனுக்குப்பின், தட்சணகைலைக் கோவில் பூசைகளின் றிப் பாழடைந்து கிடக்கின்றது என்றும், அதனைச் செப்ப னிட்டு வைதீக வழிபாட்டு நெறிகளை ஆரம்பித்து வைப்பின் இலங்கைமுழுவதும் மகாசேனன் வசப்படும் என்றும் கூறியதைக் கேள்வியுற்று, வங்கநாட்டுச் கிவாலயமியற்றும் சிற்பிகளுடன் வந்து தட்சணகைலைக் கோவிலைச் செப்பனிட்டு, பூசை களை ஆரம்பித்துவைத்தான். இவனுக்குப்பின், இவன் மகன் சிங்ககுமாரன் இராவணனால் பூசிக்கப்பட்டுக் கைவிடப்பட் டிருக்கும் உகந்தைமலைச் சிவாலயத்தை, வடநாட்டு (தென் னிந்திய) சிற்பிகளைத் தருவித்து மலையுச்சியில் சிவாலயம், விட்ணுவாலயம், பிரம்மவாலயம் முதலான வற்றையும், மலையடிவாரத்தில் எட்டுத்திக்கு பாலகருக்கும் (இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசா னியன்) எட்டு ஆலயங்களும் எடுத்து, பூசைகளுக்கும் திட்டம் வகுத்திருந்தான். சிங்ககுமாரன் செய்த உகந்தைக் கோவிற் திருப்பணி வரலாறுகள், முற்றுமுழுதாக வேதவழிபாட்டு விதி களின்படியே கோவில்கள் எழுப்பட்பட்டிருந்ததனை எடுத்துக் காட்டுகின்றன. இக்காலத்தில் கலிங்கம், வங்கம் முதலிய நாடு களில், வைதீகநெறியை மையமாகக்கொண்டு சைவம் வளர்ந் திருந்த நிலையின் எதிரொலியாகவே இது காணப்படுகின்றது. கலிங்க – ஓரிசா தேசத்து உலகநாச்சி இலங்கைக்கு வரும் பொழுது, கைலையில் குகவம்சத்தார் முற்காலத்தில் எடுத்து வைத்திருந்த சிவலிங்கத்தையும் எடுத்துவந்திருந்தாள். மட் டக்களப்பில் தன் இராச்சியப்பிரிவான மண்முனைப்பகுதியில் அச்சிவலிங்கத்தை நிறுவி ஆலயமியற்றி வழிபட்டுவந்தாள். பின் கொக்குநெட்டி மரத்தின்கீழிருந்த சுயம்புலிங்கத்திற்கும் ஆலயமெடுப்பித்தாள். இவ்வாலயங்களின் பூசகராகக் கொள்ள டத்து (கொல்லடம்) பூசகர் மூவரைத் தருவித்துப் பூசைகளுக்கு ஒழுங்கும் செய்து, தந்தபுரத்திலிருந்து பூமாலை தொடுக்கும் குடிகளையும் தருவித்து, தான் ஒறிசாவில் பேணியிருந்த வழி பாட்டு நெறிகளையே இங்கும் பேணினாள். கொள்ளடத்தி லிருந்து தருவிக்கப்பட்ட பூசகர் வீரசைவர். இவர் பரம்பரை யினரே இன்றும் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீசுவரர் பூசகராகத் தொண்டுபுரிவர்.

சிங்கர் மட்டக்களப்புப் பகுதியை ஆண்டிருந்த காலத் திலும் தென்னிந்திய – கிழக்கிந்திய மரபுகளின் படியே சைவத்தை வளர்த்திருந்தார்கள். இவர்களுள் கி. பி. 9ம் நூற்றாண்டளவில் மட்டக்களப்பையாண்டிருந்த தருமசிங்கன் எனும் சிங்கர்குல மன்னன், கொக்குநெட்டி ஆலயத்தை அந்தணர் ஆலோசனைப்படி கல்லினால் கட்டி, மூன்று ரதங் களும் சோழதேசமிருந்து தருவித்துக் கொடுத்தான். மட்டக் களப்பில் தேரோடும் கோவில் இதுவொன்றேயாம். இதற்கு வழிகோலியவன் தருமசிங்கமன்னனே ஆவன். சிங்கர் குடி வழிவந்த கதிர்சுதன் சிவாலயங்களைச் செப்பனிட்டு, தனது நகரத்தவரை மறைநெறியால் தாவரபோசன வாசிகளாக்கிப் புலவர்கள் 'இராசஇராசன்' எனப் புகழ்ந்துபாடும் வண்ணம் மனுநீதி காத்திருந்தான். இவ்வண்ணமே இவன் மதிசுதனும் மனுமுறை காத்திருந்தான். இவனே காளசேனனால் உடைக் கப்பட்ட மண்டூர்க் கோவில் பதினைந்து நூற்றாண்டுகளா கப் பாழடைந்து இருப்பதைக் கண்ணுற்றுற், தொண்டை நாட் டுச் (பல்லவர்) சிற்பிகளைத் தருவித்து, புனருத்தாரணப் பணி களை மேற்கொண்டு பூசைகளை ஆரம்பித்துவைத்தான். பின் கோவிலுக்குச் சிறைக்குடிகள் வகுக்கும்போது, மதிசுதனே தில்லை மரத்தில் வேலை வைத்துப் பூசித்திருந்த சிந்தன் பரம்பரையினரைப் பூசகராகவும் (வாய் கட்டிப் பூசை புரிவர்), அவர்க்கு முதன்மையாக முற்குக வன்னிமைகளும் (கலிங்க மன்னரின் அபிமானத்திற்குரியவர்கள்) சிறைகளும் வகுத் திருந்தான். இங்கு சிறைவகுக்கையில், பதினெண் கீழ்ச்சிறைக் குடிகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சிங் கர்குல வரிசையில் வந்த தினசிங்கன் சைவாலயங்களை இடித் துச் செல்வங்களைச் சோழநாட்டுக்கு அனுப்பிவைத்தான். இந்த நிலைமையை மாற்றியமைக்கவே கலிங்கத்திலிருந்து மாகோன் (கி. பி. 1215 – 1255) இலங்கைக்கு வந்திருந்தான். மாகோன் மட்டக்களப்பில் சைவ மறுமலர்ச்சிக்கு வழிகோலி, சிவாலயச் சிறைகளையும், தொண்டர்களையும் சீர்திருத்தி வகுத்திட்டான். அதன்பின் காலிங்ககுல மன்னருக்குத் தேச ராசகுலமென விருதுகளுயர்த்திக், கதிர்காமத்திலும், விசய துவீபத்திலும் சிவாலய முன்னீரும் பெற வழிவகுத்துக் குல வரிசைகளையும் ஏற்படுத்தினான். இம்மறுமலர்ச்சிக்கு மேலும் தொண்டாற்றியவன் இவன் சகோதரனாகிய சோழகங்கன் (குளக்கோட்டன்) ஆவன். சோழகங்கன் இளவரசன் ஆகை யால், அவன் இலங்கையில் ஆண்ட பிரிவுகன் எவையென ஆய்வாளர்கள் ஆராய்ந்து, அவன் ஆண்ட திசைகள், எல்லை கள் எதுவும் கண்டுபிடிக்கமுடியாதுள்ளனர். ஏனெனில் இவன்

அரசியல் வாழ்விலிருந்து ஒதுங்கியே வாழ்ந்துள்ளான் என்பதனைச் சீர்தூக்காமையாலேயாம். இவன் ஒரு கர்மயோகியாக இருந்து, தேசத்துக் கோவில்களில் தொண்டாற்றியவன் ஆவன். அதனாலே இவனை மட்டக்களப்புச் சைவமரபுகள்,

சீர்மேவு இலங்கைப் பதிவாழ்வு தரு
செல்வமும் சிவநேச இருசமயமும்
செப்புதற்கரிதான மாணிக்க கங்கையும்
செகமேவு கதிரை மலையும்
ஏர்பெறும் தென்கயிலை வாழ் கோணலிங்கம்
மேன்மைதான் தோன்றுலிங்கம்
வெற்றிபுனை மயூர சித்திர சங்காரவேல்
வெள்ளை நாவற் பதியதாம்
பேர்பெறும் தென் திருக்கோயில்
சிவாலயமும் சிவபூசை தேவாரமும்
செய்திருமுறைகள் என்றென்றும் நீடுழிகாலமும்
தேசம் தளம்பாமலும்
ஏர் பெருகு பரிதிகுலராசன்
குளக் கோட்டன் எவ்வுலகுமுய்வதாக
ஏழுகோபுரம் கோயில் தொழுவார் தினமும்
தேட எங்கெங்கு மியற்றினரே

என்று பாராட்டிவருகின்றன. இவன் மட்டக்களப்பு அரசியல் வாழ்வில் இடம்பெற்றிருக்கவில்லை. அதனாலே மட்டக்களப்பில் மன்னராட்சிகளைச் சுருங்கக் கூறும் மட்டக்களப்பு மான்மியம் குளக்கோட்டன்பற்றி எதுவும் கூறுவதாக இல்லை.

இனி, மாகோனுக்குப் பின் கலிங்ககுலத்து மன்னனான எதிர்மன்னசிங்கனும், தனக்கு முன்னிருந்த சிங்கராட்சியில் சிவாலயங்கள் கவனிப்பாரற்றுக் கிடந்தமையால், அவற்றைச் செப்பனிட்டு ஆறுகாலப் பூசைகளை இடம்பெறச்செய்தான். இவ்வாறு கலிங்ககுலத்து மன்னர்கள் கிழக்கிந்திய – தென்னிந்திய கலாச்சாரப் பின்னணிகளை இணைத்துச் சமய, சமூகத் தளங்களை உறுதிப்படுத்தி வைத்திருந்தமையினாலே, கண்டி யரசர்களும் சைவத்திற்கும் தமிழுக்கும் ஆதரவளித்துத் தம் ஆதிக்கத்தையும் செலுத்தக்கூடியதாகவிருந்தது எனலாம். சைவனாக வாழ்ந்த இராசசிங்கன் I (கி. பி. 1581 – 1593) மட்டக்களப்பில் சைவம் தழைக்க உறுதுணையாக இருந்தமையினால் அவனைப் போற்றும் கல்வெட்டுக்களும் உள.

மேலும், தென்னிந்திய – கிழக்கிந்திய சைவ மரபுகளை தேசத்துக் கோவில்களில் பங்குகூறும் முறைமைகளிலும் அவ

தானிக்கலாம். கோவிற் திருவிழா முடிவில் இறைவன் திருவேட்டைக்குப் (பன்றிவேட்டைக்குப்) போதல் சிறப்பான சமய நிகழ்ச்சியாகும். இவ்வேட்டைத் திருவிழா முடிந்தபின் அமுதுகன் குடுக்கைகளில் படைத்து, கோவிற்றொண்டர் யாவரும் வரிசைமுறைப்படி வழங்குவர். இப்பங்களிக்கும் பணியைச் செய்யப் பிராமணர் எழுந்தபொழுது, தென்னிந்திய சைவமரபைப் பேணிய காராளரின் பதினெண் குடிகளும், தமக்குச் சோழநாட்டு மரபைப் பேணி வேளாளரே பங்களிக்கவேண்டுமென்றுகோரி, அவர்தம் நற்பண்புகளைக் கலிங்க மன்னனுக்கு எடுத்துரைத்தனர். அப்பொழுது கலிங்கனும் சோழநாட்டுக் குடியினருக்கு, மட்டக்களப்பில் பேணப்பட வேண்டிய குலவரிசைகள், பங்குமுறைகள் இவையெனக் கூறி காராளனைப் பங்கு கூறும்படி ஏவினான்.

இப்பங்கு வரிசையில் முன்னுரிமை பெற்றவர்கள் கிழக்கிந்திய மரபு வழிவந்த முற்குலத்துச் (ஆதியில் வந்தவர்) சைவக்குடிகளே ஆவர். இவர்களுக்கு வழங்கியபின்னரே சோழநாட்டு வேளாளரும், பதினேழு சிறைகளும் தத்தம் பங்குகளைப் பெற்றனர். இம்முறைபற்றிய விபரங்கள் இயல் 5ல் காணலாம். இவர்களுள் நாடு, நகரம் என்றழைக்கப்பட்டோர் மட்டுமே தென்னிந்திய சைவமரபைக் கூறினர். எயினர் குடிகளாகிய 'கதிரை' எனப்பட்டோர் இலங்கை மரபு கூறினர். மற்றவர் யாவரும் கிழக்கிந்திய நாடுகளில் பேணப்பட்டிருந்த சைவ பாரம்பரியங்களையே கூறினர். இப்பங்குகள் கூறிமுடிந்த பின்னரே சுவாமியை ஆலயத்திற்குள் கொண்டுபோய் வைத்து மஞ்சள் நீரூற்றி விளையாடி வாழ்ந்தனர்.

இனிப், பங்கு தடுக்கும் பகுதியில் இவர்கள் யாவரும் தம் முன்னோர் சிவவழிபாடு நெறியை எவ்வாறு பெற்றார்கள் என்ற முறைகளை எடுத்துக்கூறக் கடமைப்பட்டோர் ஆவர்.

அத்தருணம் கலிங்கர்,

''பேர்பெரிய வெனது முன்னோரிருந்த தேசம்
பிரமபுத்ரா நதிதனக்குப் பக்கமாகும்
ஆரெதிரியில்லாமல யோத்தி வங்கமரிபுரம்
காளிகட்டஞ் சேர்ஒறிசா தேசமது
ஏரணிகள் முன்பின் படைகள் சூழ சிவகோத்திரத்
திறமையுடன் செங்கோலோச்சி
நீர்சூழுமிலங்கை முற்றுமிராவணன் பின்
நிலையரசு புரிகலிங்க ராசனானே''

என்று கூறித் தாம் சிவகோத்திரத்தார் என்பர்.

குருநாதர்,

''தீதகலப் பூதலத்தில் பிரமபுத்ராத் தீர்த்தமதில்
சிவனுமையும் வேடரெனச் சிலையம்பேற்றி
தாதுலவு நீராட வெங்கள் முன்னோர்
சதாசிவ னென்றடியைப் போற்ற
மாதுபங்கனறிந் தைந்து மந்திரத்தையீந்து
குருநாதரென மறைந்தபின்பு
பூதலத்திலுயர் கலிங்கராசனுடன்
வந்திலங்கைமுதல் குருவாய்ப் புகுந்தோனானே''

என்பர். சிவனும் உமையுமே திருவைந்தெழுந்து மந்திரத்தைத் தம் முன்னோருக்கு உபதேசித்துக் ''குருநாதர்'' என்றும் கூறி மறைந்தனர் என்று தாம் சிவவழிபாடு பெற்ற முறையைக் கூறுவர்.

பூபால கோத்திரத்தார்,

''தூசிமாற்றுங் கெங்கர்குலத் தரசன்றானும்
செப்பரிய காலிங்கநகரரசு செய்யுங்காலம்
நீரகழிலங்கை முற்றுஞ் சைவமோங்க
நிலையரசு புரிந்து பூபாலனென்ன நின்றெங்கள்
காரற்றிச் சிவப்பணிக்குக் காவல்வைத்த
காரணத்தால் சிவகோத்திரக் காளை யானே''

என்பர். (கெங்கர்குலம்-கங்காகுலம்)

பூவசியர்,

''தற்பரனார் பதிகளுக்கு நிதியமீந்து தேருடனே
சத்திரங்கள் தாசிநடனமண்டபமும் தரித்துக்காசி
விற்பரனார் கிருபையினாலெங்கள் குலம் கலிங்கனொடு
மிலங்கைசென்று திருப்பணிகள் மேன்மையாக்கி''

என்பர்.

மாவலி என்ற வதனமார்,

''தேடறிய சிவனடியில் செறிந்தெழுந்த
திருக்கங்கை வதன மாரிருந்து வாழ்ந்தார்
மாடேறு மீசனடி துதித்திடைய மக்களென்று
பண்டு பண்டு வரிசை பெற்றார்''

என்பர்.

அயோத்தி என்ற மறவர்,

''சிவமறவர்குலம் நானும் வரிசை கோட்டேன்''

என்பர்.

இவ்வாறு சிவவழிபாட்டு நெறியைக் குலத்தொடர்புடையவர் கூற, மற்றயோர் சிவவழிபாட்டுத் தொடர்பைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டுவர். புன்னாலைப் பங்கெடுத்தோர் ஆடகசவுந்தரி வைதீக சைவத்தைப் பிற்காலத்தில் பேணியிருந்தாள் என்பதனைக் குறிப்பாய் உணர்த்துவர். உலகநாச்சி சிவவழிபாடுடையவள். ஆனால் சிவவழிபாட்டுக் குலத்தில் தோன்றியவளல்ல. இவ்விதமே படையாட்சி குலத்தோரும் காலப்போக்கில் சைவம் பேணியிருந்தனர். நாடு என்று பங்கு பெற்ற இராமநாட்டுக் குருக்கள் மட்டக்களப்பில் அனைவருக்கும் பூசகராய் இருந்தமையால், அவர் சிவபூசைத் தொண்டுகள் குறிப்பாக உணர்த்தப்பட்டன. ஆனால் இராமவழிபாட்டைப் பரப்பவந்த மறவர்குலத்துப் பெண்கள் பங்குவரிசையில் இடம்பெற்றிருக்கவில்லை. இவ்விதமே விசயன் குடிகளும் பழைய சிவவழிபாட்டுத் தொடர்பைக் குறிப்பாய் உணர்த்துவர். திருச்சோழன் மகள் தம்பதிநல்லாளின் விழாக்கடமை செய்துவந்த சைவவேளாளர் சிவவழிபாட்டு நெறியை, அவர்களது சிறைகளே விதந்துகூறியுள்ளார்கள். (ம. மா. பக். 77 – 88). எயினர் குடிகள் சிவனின் திருவருட்சக்தியாகிய முருகன் வழிபாட்டைச் சிறப்பாகச் சுட்டிநிற்பர்.

விநாயகர் வழிபாடு:

நாகர்முனைத் திருக்கோவில் திருப்பணிகள் நிறைவேறியபின் அந்தணர்களைத் தம்பட்டார் ஊரில் குடியமர்த்தும்போது மாணிக்க வைரத்தால் கணேச விக்கிரகம் ஒன்று அங்கு நிறுவப்பட்டது (ம. மா. பக். 20). இது புதிய குடியிருப்பாளர்களுக்கு இடையூறுகள் வராமல், விநாயகரைக் காவற்தெய்வமாகக் கருதிச் செய்திருக்கலாம். சீர்பாதர்குல வரலாற்றுக் கல்வெட்டுக்கள் வீரமுனையில் விநாயகர் கோவில் நிறுவப்பட்ட வரலாறுகளை எடுத்துரைக்கின்றன. இன்று தெருவோரங்களிலும், சந்திகளிலும் விநாயகர் ஆலயங்கள் பெருமளவிற் காணப்படுகின்றன. குடிமக்கள் இடையூறுகளை நீக்குபவர் என்ற கோட்பாட்டை மையமாகக்கொண்டே விநாயகர் கோவில்கள் பெருமளவில் எழுந்திருக்கலாம் எனத் தெரிகின்றது.

திருமால் அவதாரங்கள் (இராமர், கண்ணன் வழிபாடுகள்)

காளசேனன் இராகு வமிசத்தவனாகையால், இராமர் வழிபாடுடையவனாக இருந்திருக்கலாம். அதனாலோ என்னவோ நாகருடைய நாகர்முனைச் சுப்பிரமணியர் கோவிலையும், மண்டூர் முருகனாலயத்தையும் இவன் உடைத்தான் என

ம. மா. கூறும். இவனுக்குப்பின் ஆடகசவுந்தரி, இராமர் வழி பாட்டைப் பேணியிருந்தாள். இவள் ஏழுவயதாயிருக்கையில், நித்திரையில் இராமர் தோன்றி இராமமந்திரமும், இராம தியான முறையையும் உபதேசித்தகன்றார் (ம. மா. பக். 29). இவ்விராம வழிபாட்டினை மட்டக்களப்பில் வளர்க்கவேண்டு மென்று இராமநாடு விட்டு வந்த ஏழு பெண்கள் வெவ்வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டார்கள். ஆனால் இராமர் வழி பாட்டினை எவ்விதம் இங்கு வளர்த்திருந்தனர் என்பதற்குக் குறிப்புகள் ம. மா. இல்லை. ஆயினும் மாகோன் காலத்தில் சிவன்கோவிற் தொண்டர்கள் நாகர் போதனைகேட்டு இராம வழிபாட்டைப் பேணியிருந்தார்கள் என்று அந்தணர்கள் மாகோனுக்கு எடுத்துக்கூறவே, மாகோன் அவர்களைத் தண் டித்துச் சிவாலயங்கள் சிறப்புறச் சிறைகளைச் சீர்படுத்தி வகுத்திட்டான்.

.....

அரனகத்து ஊழியர்கள் அகன்று நாகர்
பந்தமதில் சேர்ந்து கயல் பிடித்து உண்டு

.....

சந்தி அந்தி நாமமிட்டு அரனைத்தூற்றித்
தசரதன் மகன் ராமன் தன்னைப் போற்றி

(ம. மா. குடிக் கல்வெட்டுமுறை பக். 70).

என்பதனால், இராமர் வழிபாடு செல்வாக்குப் பெற்றிருத் தமை புலனாகும்.

மற்று, கொங்குநாட்டுத் தாதன் திருமாலின் அவதார மான கண்ணனின் பெருமையைக் கூறும் மகாபாரதத்தை எடுத்துக்கொண்டுவந்து போதித்து, எதிர்மன்னசிங்க மன்ன னுக்கும் பாண்டவர் வரலாற்றைச் செய்துகாட்டி மகிழ்வித் தான். அதனால் கண்ணபிரான் பாண்டவருக்கு அருளிய மதத்தை, மட்டக்களப்பு மக்களும் மேற்கொள்ளவேண்டு மென்ற எண்ணமுடையவனாய் திரௌபதை அம்மன் ஆல யத்தைப் பாண்டிருப்பில் அமைத்து நிவந்தம் வழங்கினான். இன்றும் பாண்டிருப்புத் திரௌபதையம்மன் வழிபாடு, மறை முகமாகக் கண்ணனை வழிபடவைக்கும் மதமாக விளங்குகின் றது.

யாழ்குடா வெடியரசன் வரலாறுகள், வெடியரசன் முதலானோர் விஷ்ணுபுத்திரர்கள் ஆகையால், விஷ்ணுவை வழிபட்டுவந்தனர் என்றும், பின் கண்ணகியம்மனின் கோபத் திற்காளாகலாம் என்ற பயத்தினால் விஷ்ணு வழிபாட்டுடன்

மட்டக்களப்பு, புத்தளம் பகுதிகளில் குடியேறினர் என்றும் தெரிவிக்கின்றன. இன்று மட்டக்களப்புப் பகுதிகளில் விஷ்ணு கோவில்கள் பல இருக்கின்றபொழுதிலும், ம. மா. சைவமத வரலாற்றுக்கு முக்கியத்துவம் அளித்ததனால், இவற்றின் ஆதி வரலாறுகள்பற்றி எதுவும் கூறுவதாக இல்லை.

கண்ணகியம்மன் வழிபாடு :

வெடியரசன் வரலாற்றுடன் தொடர்பான முறையிலே கண்ணகியம்மன் வழிபாடு மட்டக்களப்பு, புத்தளப்பகுதிகளுக் குப் பரவின எனத் தெரிகின்றது. இதுபற்றியும் ம. மா. எது வும் குறிப்பிடுவதாக இல்லை. ஆனால் போர்த்துக்கேயர் காலத்தில் பாதுகாப்புக்கருதி, யாழ்ப்பணத்திலிருந்து கந்தப் பரும், நாடாரும் ஏழு கண்ணகையம்மன் திருவுருவங்களுடன் மட்டக்களப்பையடைந்தனர். இவர்களது கண்ணகையம்மன் திருவுருவமொன்று மண்முனைக்கருகான ஊரில்வைத்து, நாடார் பூசகராகவும், கோவியர் ஊழியராகவும் இருந்தனர். மற்ற ஆறு திருவுருவங்களும் முக்கிய ஊர்களில் நிறுவப்பட்டன. எனினும் அவ்வூர்களின் பெயர்கள்பற்றிய குறிப்புகள் நூலில் இடம்பெறவில்லை. ஆனாலும் மட்டக்களப்பில் பழமைமிக்க தாய் இருந்த கண்ணகியம்மன் வழிபாட்டிற்கு, புத்துயிரளிப் பதாகக் கந்தப்பரும், நாடாரும் கொண்டுவந்த திருவுருவங் கள் அமையலாயின எனலாம்.

பௌத்தம்

மட்டக்களப்புப் பகுதி சிங்கராட்சிக்குட்பட்ட காலங் களில் பௌத்தக் கோவில்கள் எழுப்பப்பட்டன. மகாசேனன் காலத்தில் இலங்கை முற்றிலுமுள்ள பௌத்தக் கோவில்களில் முருகனாலயங்கள் எடுப்பிக்கட்டப்பட்டிருந்தன. அதனால் பௌத்தமும், இந்துமதமும் அருகருகாயிருந்து மக்கள் மன தில் மதமொருமைப்பாட்டுக் கோட்பாடுகளை உருவாக்க ளாயின. சிங்கர் அரசர்களான கதிர்சுதன், மதிசுதன் ஆகிய இருவரும் மனசமரசக் கோட்பாட்டை வளர்த்திருந்தார்கள். இவர்களுள் தினசிங்கன் எனும் சிங்கர் அரசன் சிவாலயங்களை இடித்துச் செல்வங்களை அபகரித்திருந்தான். இவனுடைய மத நிந்தனையைப் பொறுக்கமுடியாத நிலையிலே, மாகோன் வந்து புத்தவிகாரைகளையும், ஆலயங்களையும் இடிப்பித்துப் புத்தகுருமாரையும் சிறைப்பிடித்தான். அதனால் மட்டக்களப் பில் எழுப்பப்பட்டிருந்த பழைய புத்தரூலயங்கள் கைவிடப் படலாயின. மாகனுக்குப் பின் மட்டக்களப்பு ஆட்சியைக்

கைப்பற்றிய சிங்கர் திரும்பவும் பௌத்தாலயங்களை எடுப்பித்திருந்தார்கள். கண்டியரசர் காலத்தில் ''திக்கனகா'' என்ற விகாரை மட்டக்களப்பில் இருந்ததாகத் தெரிகின்றது. எனவே மட்டக்களப்பில் நிலையானவொரு வரலாற்றைப் பௌத்தம் பெற்றிருக்கவில்லையென்பது புலனாகின்றது.

கிறித்தவ மதம்:

கிழைத்தேய மக்களுக்கு கிறித்தவமதத்தைப் பெருமளவில் அறிமுகம் செய்துவைத்தவர்கள் போர்த்துக்கேயர். ஆனால் கி. பி. 3ம் நூற்றாண்டளவிலே காவிரிப்பூம்பட்டனம், கொல்லம் (மலையாளப் பகுதிகளிலுள்ள குரக்களூர்) ஆகிய பகுதிகளில் தமிழ்நாட்டு, மலையாளநாட்டுக் குடிகள் கிறித்தவத்திற்கு மாறியிருந்தார்கள். இவர்களிற் சிலரை மாணிக்கவாசகர் சுவாமிகள் சைவத்திற்குத் திரும்பவும் மாற்றினார் என்றும், பின் அவர் பெயராலே மணிக்கிராமக்காரர் என இவர்கள் தம்மை அழைத்திருந்தார்கள் என்றும், அவ்வாறு மாறாதோர் நெறியான கிறித்தவர்கள் என்றும் அழைக்கப்பட்டுவந்தார்கள் என்றும் தெரிகின்றது. (கா. சுப்பிரமணிய பிள்ளை, மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம், கழக வெளியீடு - 1928. பக். 158 - 161). தமிழகத்தில் இக்காலத்தில் கிறித்தவமதத்தைப் பரப்பிய குருமார்களில் ஒருவராக தோமா முனிவர் காணப்படுகின்றார். இதனை நிரூபணம் செய்யும் வகையில் மயிலாப்பூரில் தோமா முனிவர் அடக்கம் செய்யப்பட்ட இடம் இன்றும் பேணப்பட்டுவருகின்றது. (மு. தெய்வ நாயகம், கிறித்தவம் அந்நிய சமயமா?, இந்து சமயம் இந்தியர்களின் சமயமா? 1992, இரண்டாம் பதிப்பு பக். 23). ஆனால் கி. பி. மூன்றாம் நூற்றாண்டளவில் இலங்கையில் கிறிஸ்தவமதம் பரவியதற்கான சான்றுகள் எதுவுமில்லை.

போர்த்துக்கேயர் கி. பி. 1505ல் இலங்கையையடைந்திருந்தும், கி. பி. 1543ம் ஆண்டளவிலே பிரான்சிஸ்கன் குருமார் (Franciscan Friars) இலங்கைக்கு வந்து கிறித்தவ மதப் பரப்புகையில் ஈடுபட்டிருந்தார்கள். மட்டக்களப்பைப் போர்த்துக்கேயர் கி. பி. 1622ம் ஆண்டளவிலேயே கைப்பற்றினர். ஆனாலும் அவர்கள் கிறித்தவமதப் பரப்புதலுக்கு எடுத்த முயற்சிகளை முக்குலத்தவரும், கண்டியரசரும் எதிர்ப்புத் தெரிவித்துவந்தனர். அதனால் யாழ்குடாப் பண்ணைநாட்டிலே கிறித்தவக் குருமாரை வைத்து, அங்கு கிறித்தவ மதத்தைப் பரப்பியபின்னர், மட்டக்களப்பு, காளிதேசம் முதலான பகுதிகளில் தமது மதப்பிரசாரத்தைத் தொடக்கிவைத்தனர்.

மக்கள் தம் மதத்தை முழுமனதுடன் விசுவாசிக்கவேண்டுமென்பதற்காக சைவாலயங்களையும், பௌத்தாலயங்களையும் இடிப்பித்துவிட்டு, அவ்விடங்களில் கிறித்தவ ஆலயங்களைக் கட்டுவித்தார்கள். அதனைப் பொறுக்கமுடியாத மட்டக்களப்புத் திக்கதிபர்கள், போர்த்துக்கேயரின் நடவடிக்கைகளைக் கண்டி அரசனுக்கு அறிவித்தார்கள். அதனால் சினரதன் மலாய வீரர்களைத் (முஸ்லீம் வீரர்) துணைக்கொண்டு போர்த்துக்கேயரை மட்டக்களப்பால் அகற்றி, மதம்மாற்றும் முயற்சிகளைக் குறைத்திருந்தான்.

போர்த்துக்கேயரைத் தொடர்ந்துவந்த ஒல்லாந்தரும் கிறித்தவமதப் பரப்புகையில் ஈடுபட்டிருந்தனர். பண்ணைநாட்டுப் பிரதிநிதியாக மட்டக்களப்பிற் கடமையாற்றிய பஸ்கோல் முதலி பத்துவருட ஆட்சியின்பின் கிறித்தவமதக் கோவிலொன்றை மட்டக்களப்பில் எடுப்பித்தான். (இது சொறிக்கல் முனையிலுள்ள கத்தோலிக்கத் தேவாலயமாக அடையாளம் காணப்பட்டுள்ளது). பின் பண்ணைநாட்டிலிருந்து கிறித்தவ மத வாசிகளையும், குருமாரையும் தருவித்து திமிலதீவிலிருத்திச் சமயத்தைப் பரப்ப வழிவகுத்தான். அப்பொழுது முக்குலத்து (கலிங்கர், வங்கர், சிங்கர்) நிலைமைகள் எதிர்ப்புத் தெரிவிக்கவே, பஸ்கோல் முதலி, மதமாற்றலைக் கைவிட்டவன்போல் நடித்துச் சூழ்ச்சியாக ஒரு கடிதம் தயாரித்து, முக்குலத்து நிலைமைகளைக் கண்டியரசன் ஸ்ரீ விசயராசசிங்கன் முன்னையில் விசாரணைக்குட்படுத்திக் கொலைசெய்வித்தான். அதன்பின் தன் மதமாற்றும் முயற்சிக்கு எதிர்ப்பிருக்காது என்று கருதித், திரும்பவும் நாப்புட்டிமுனைக்கு மேற்கே கிறித்தவமதத்தைப் பரப்பிவந்தான். பின் இவன் சூழ்ச்சிகளைக் கண்டுபிடித்த கண்டியரசன், ஒல்லாந்தருக்குத் தெரிவித்து அவனை ஊர்காவற்றுறைச் சிறையில் வைப்பித்தான். இதற்குப்பின் ஒல்லாந்தர் மட்டக்களப்பில் கிறித்தவமதப் பரப்புகையிலீடுபட்டிருக்கவில்லை. எனினும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கிறித்தவமதப் பிரச்சாரங்களுக்கு அடிகோலிவைத்ததனாலே, ஆங்கிலேயர் கிறித்தவமதத்தைச் சுலபமாகப் பரப்பக்கூடிய சூழ்நிலைகள் உருவாகியிருந்ததெனலாம்.

இஸ்லாம் மதம்

மட்டக்களப்பில் இஸ்லாம்மதம் அறிமுகமாகியிருந்ததா என்று அறிந்துகொள்வதற்கு மத அடிப்படையிலான குறிப்புகள் எதுவும் ம. மா. இடம்பெறவில்லை. ஆனால் எதிர்மன்னசிங்க மன்னன் மட்டக்களப்பில் வர்த்தகத்தை

விருத்தி செய்யவேண்டுமென்ற கருத்துடையவனாக இருந்தான். அதனால் இவன் காட்டான், பட்டாணி, சுல்தான், சீகந்தர் ஆகியோரது குடும்பங்கள் வர்த்தகத்தைப் பெருக்குமாறு மண்முனைக்கடுக்காய் (காத்தான்குடிப் பாங்கர்) பாளையம் போட்டு வர்த்தகம் செய்ய அனுமதித்திருந்தான். (ம. மா. பக். 59). கண்டியையாண்ட விமலதருமன் (இது சென ரதன் கி. பி. 1605–1635 கால நிகழ்ச்சியாகும்), போர்த்துக்கேயர் மட்டக்களப்பில் கிறித்தவமதத்தைப் பரப்ப முயன்ற போது மலாயவீரர்களை (மூவர்சாதியினர்) துணைகொண்டு போர்த்துக்கேயரை மட்டக்களப்பால் அகற்றுவித்தான். இதனாற்போலும் போர்த்துக்கேயர் கி. பி. 1626ல் முகம்மதியரைக் கோட்டை இராச்சியத்திலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிட்டபொழுது, செனரதன் 4000க்கு மேற்பட்ட முகம்மதியக்குடிகளை மட்டக்களப்புப் பகுதியிற் குடியேற்றினான் எனத் தெரிகின்றது. குவெய்றோஸ் சுவாமியாரும் போர்த்துக்கேயர் இஸ்லாமியரை வெளியேற்ற முயன்றபோது கண்டியரசன்அவர்களை மட்டக்களப்பிற் குடியேற்றினான் என்று குறிப்பிடுவர். ஆனாலும் இவர்கள் மதநிறுவனங்கள், மதவளர்ச்சிகள் பற்றிய குறிப்புகள் எதுவும் மட்டக்களப்பு மான்மியத்தில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இயல் 7

மட்டக்களப்பு மான்மியம் கால ஆய்வுகள்

ஆதிநாகரிகங்களின் வரலாற்றுக்காலம்
(கி. மு. 3500 — கி. மு. 3000)

மனிதன் இதுவரை சாதித்த சாதனைகளுள், இன்று வரை முன்னணியில் திகழ்வது ஒலிகளைக் குறிக்க வரிவடிவங்களை உருவாக்கியமையேயாம். ஆதிநாகரிகங்கள் செழிப்புற்றிருந்த எகிப்து, சுமேரியா ஆகிய நாடுகளில் அன்றாட வாழ்கைக்கு எழுத்து மிக அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது. எகிப்திய மன்னர்களான பரோக்கள் (pharoahs) எடுப்பித்த கல்லறைகளில் (பிரமிட்டுக்கள்) அரச குடும்ப வரலாறுகள், கால அடிப்படையில் ஒழுங்காக எழுதி வைக்கப்பட்டிருந்தன. மற்று, ஓவியங்களும் சமுதாயத்தைப் பிரதிபலிப்பனவாக அமைந்திருந்தன. சுமேரியாவில் கி. மு. 2000 ஆண்டளவில் வாழ்ந்திருந்த ஹமுரபி (Hammurabi) எனும் மன்னன் சமூகப்பிரச்சினைகளுடன் தொடர்பான 285 நீதிச்சட்டங்களைத் தயாரித்திருந்தான். இவ்வாறு ஆதிநாகரிகங்களின் களஞ்சியங்கள் எனப் போற்றப்படுகின்ற எகிப்திலும், சுமேரியாவிலும் (மொசெப்பொட்டேமியா, பபிலோனியா எனவும் அழைப்பர்) எழுத்துமுறைகள் வளர்ந்திருந்ததனால், இந்நாடுகளின் வரலாறுகள் முறையே கி. மு. 3500-லும், கி. மு. 3000-லும் எழுதப்படலாயின.

இந்நாடுகளில் எழுத்துமுறைகள் வளர்ந்திருந்தன என்பது உண்மை. ஆனால் அவர்கள் எழுதிவைத்த சித்திரங்களையும், குறியீடுகளையும் வரிவடிவங்களையும், இன்னபொருளெனக் கண்டுபிடிப்பது இன்னோர் பாரிய சாதனையாகும். தற்செயலாக இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றே எகிப்தியரின்

எழுத்துக்களையும், அவையுணர்த்தும் பொருளையும் விளங்கிக்கொள்ள உதவிற்றெனலாம். நெப்போலியனின் படை வீரன் ஒருவனே 1799ல் நைல்நதிக்கரையில் ரொசெட்டாக் கல்வெட்டினைக் (rosetta stone) காணநேரிட்டது. இக்வெட்டு மூன்றுவகையான எழுத்துக்களில் கட்டளை ஒன்றினைக் குறிப்பிட்டிருந்தது. இக்கல்வெட்டிலெழுதப்பட்ட எழுத்து வடிவங்கள் மேலிருந்து கீழாக முதலில் எகிப்திய சித்திர எழுத்திலும் (Pictorial hieroglyphs), இரண்டாவதாக எகிப்திய வளர்ச்சிபெற்ற டெமொற்றிக் எழுத்திலும் (demotic), மூன்றாவதாகக் கிரேக்க எழுத்திலும் எழுதப்பட்டிருந்தன. கிரேக்க எழுத்தின் உதவிகொண்டு சம்போலியன் (Champollian) என்பவரே 1822ல் வாசித்து விளங்கக்கூடியதாக இருந்தது. இதுவும் மனிதனின் இன்னொரு சாதனை எனலாம்.

இந்திய நாகரிகத்தின் வரலாற்றுக்காலம்
(கி. மு. 327 — 324)

ஆதிநாகரிகங்கள் வளர்ந்திருந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்துவெளிக் கலாசாரத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளிலுள்ள குறியீடுகளை அறிஞர்கள் இன்னமும் புரிந்துகொள்ளமுடியாத நிலையிலேயிருக்கிறார்கள். அதனால் இந்தியாவின் ஆதிவரலாறுகளை விளங்கிக்கொள்ளமுடியாத நிலையில், அலெக்சாண்டர் படையெடுப்பையே நம்பகமான வரலாற்று நிகழ்ச்சியாக வரலாற்றாசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகவலும் எமக்குக் கிரேக்க மூலங்களிலிருந்தே கிடைக்கப்பெற்றதாகும்.

இலங்கையின் வரலாற்றுக்காலம்
(கி. மு. 3ம் நூற்றாண்டு)

இலங்கை வரலாற்றாசிரியர்கள் புத்தர் நிர்வாணம் அடைந்த ஆண்டை மையமாக வைத்தே, இதுவரை இலங்கை வரலாற்று நிகழ்ச்சிகளைக் காலக்கணிப்புச் செய்திருந்தார்கள். அதுவும் மரபுவழியான தகவல்களைக்கொண்டு ஒரு சாரார் புத்தர் நிர்வாண நிலையையடைந்த ஆண்டு கி. மு. 543 என்றும், இன்னொரு சாரார் கி. மு. 483 என்றும் கருதியே, காலக்கணிப்புக்களைச் செய்திருந்தனர். இவற்றிலுள்ள குறைபாடுகளை ஹெயின்ஸ் பெசட் (Heins Bechert) ஆராய்ந்து காட்டியுள்ளார். (G. C. Mendis and the Dates of the Historical Buddha Daily News. Augast 21, 24 1993). இந்நிலையில் அசோகமன்னனின் சமகாலத்தவனான தேவநம்பியதீசனின்

ஆட்சியாண்டுக் கணிப்புகளும். மற்று அவன் தம்பி உத்தியன் புத்த சங்கத்திற்கு வழங்கியதாகக் குறிப்பிடும் குகைக் கல்வெட்டின் காலமும், உத்தியனின் சரியான ஆட்சியாண்டுக் காலக் கணிப்புகள் இல்லாமல் வலியிழந்து நிற்கின்றன. எனினும் இதுவரை வரலாற்றாசிரியங்கள் ஏற்றுக்கொண்டிருந்த இலங்கை வரலாற்றுக்காலம் தேவநம்பியதீசன் – உத்தியன் காலமாகும். இவர்கள் ஏறக்குறைய கி. மு. 3ம் நூற்றாண்டில் ஆண்டிருந்தார்கள் என நாமும் ஏற்றுக்கொள்வது ஏற்றதாகும்.

மட்டக்களப்பு மான்மியத்தின் காலக்கணிப்புகள்

நாம் மேலேயாராய்ந்து காட்டியதிலிருந்து, இதுவரை இலங்கை வரலாற்றாசிரியர்களால் செய்யப்பட்டிருந்த இலங்கையின் வரலாற்றுக் கணிப்புகள் குறைபாடுடையன என நாம் தெரிந்துகொண்டோம். இந்நிலையில் ம. மா. கையாண்டுள்ள கலியாண்டுகளைத் துணைகொண்டு கால ஆய்வு செய்வதென்பது, குருடனை வழிகாட்ட அழைத்தது போன்றதாகும். ஆனாலும் இதுவரை இலங்கை, இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளை வரலாற்றாசிரியர்கள் அங்குமிங்குமாகத் தொடர்புகண்டு, ஓரளவிற்கு நிகழ்ச்சிகளின் காலங்களைக் கிட்டத்தட்ட அல்லது ஏறக்குறைய என்ற கணிதமுறைப்படி, சில காலங்களைத் தொட்டுக்காட்டி வந்துள்ளார்கள். அவற்றுக்குப் பதில் காலம்தான் கூறவேண்டும். எனவே நாமும் எமது நிலையைப் புரிந்துகொண்டு, ம. மா. நாலைந்து பரம்பரையினரின் ஆட்சியாண்டுகளைத் தொகுத்துப் பூஜ்ஜங்களில் (பத்துக்களில்) இலகுவாகக் கூறிவிடுவது போலல்லாமல், முன்பின் நிகழ்ச்சிகளையும், பிற சமூக, அரசியற் காரணிகளையும் துணைக்கொண்டு, பூஜ்ஜ இலக்கங்களில் காலக்கணிப்புகளைத் தொட்டுக்காட்ட முயல்கின்றோம். இவற்றின் பின்னாலுள்ள சிக்கல்களை வாசகர்கள் புரிந்துகொள்ளல் அவசியமாகும்.

கந்தன் படையெடுப்புக் காலம்
(கலியுக சகாப்தம் – இக்கலியுகத்தில் ஸ்ரீமுருக வருடத்துடன் 5095 வருடங்கள் இதுவரை கழிந்துவிட்டதாக வாக்கிய பஞ்சாங்கம் கணித்துள்ளது)

மட்டக்களப்பு மான்மியம் இலங்கையின் பூர்வீக வரலாற்றைக் கந்தன் படையெடுப்புக் காலத்துடனே ஆரம்பிக்கின்றது. கலியுக சகாப்தத்தில், சூரபன்மனை அழிக்கச் சுப்பிரமணியர் விட்ட வேலானது உக்கிரம் சகிக்கமுடியாது கடலை நோக்கி வரும்வழியில் வாகூரமலையை இரண்டு பிளவாக்கிச்

சமுத்திரத்தில் மூழ்கி நாகர்முனை (திருக்கோவில்), மண்டூர், உகந்தை முதலான இடங்களில், மூன்று கதிர்களாகச் சிந்தி யிருந்தது. இவ்வாறு சுப்பிரமணியர் சூரபன்மனை அழித்த காலம், கலியுக சகாப்தகாலமென்று மட்டுமே எமக்குத் தெரி கின்றது. இனித் தமிழக வரலாற்றில், வரலாற்றுக்கு முற் பட்டகாலச் சோழ அரசர்களுள் ஒருவனான முசுகுந்தனைக், கந்தபுராணம் முருகப்பெருமான் படையெடுத்த காலத்துடன் தொடர்புபடுத்திக் கூறும். எனவே காலவரையறைக்கப்பாற் பட்ட சோழமன்னன் முசுகுந்தன் காலத்தில் நிகழ்ந்ததான முருகன் படையெடுப்பின் காலத்தையும் நாம் உய்த்துணர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இனி, இலங்கையில் முருகன் படையெடுப்பிற்குப் பின் னரே நாகர்முனை, மண்டூர், உகந்தையென்பன புண்ணிய பூமிகளாகக் கருதப்பட்டு ஆதி நாகர்களால், இப்பகுதிகளில் முருகனாலயங்கள் எழுப்பப்பட்டிருந்தன என்றும் புலனாகின் றது. மட்டக்களப்பு மான்மியம் குபேரனை ''பன்னவர்க்கு அரசனாகவிருந்து முருக வேலோந்து கின்னர் பிரானவர் முறைமை ஓங்க'' எனப் பாராட்டுவதனால், கந்தன் படை யெடுப்பிற்குப்பின் இலங்கையையாண்டிருந்த குபேரன் முருக வழிபாட்டைப் பேணி, நாகர் குடிகளையாண்டிருந்தான் எனத் தெரிகின்றது. இராவணன் சீதைக்குக் காவலாக நாகப் பெண்களை வைத்திருந்தான் என்பதனால், இராமாயணக் காலத்தில் நாகர்கள் இலங்கையில் வாழ்ந்திருந்தார்கள் என் பது ஊர்ஜிதமாகின்றது.

இராமாயண காலம்

(இ. மு. 1000)

கந்தன் படையெடுப்பிற்குப் பின் இலங்கையிலிடம் பெற்ற முக்கிய வரலாற்று நிகழ்ச்சி இராமர் – இராவணன் போராகும். ம. மா. இந்நிகழ்ச்சியை, இராவணன், குபே ரனை அரசால் நீக்கிச் சைவமே தழைத்து ஓங்க ஆண்டிருந் தான் என்றும், பின் அவன் பூர்வகன்மத்தினால் இராமருடன் செய்த போரில் உயிர்துறக்க, அவனாண்ட இலங்காபுரியும் கடல்கோளில் அழியலாயிற்று என்றும் விவரிக்கும். இராஜா வலிய இக்கடல்கோளினை ஊர்ஜிதப்படுத்தியுள்ளது. எனவே இராமாயண காலத்தைத் தற்கால ஆய்வு நெறிகளைத் துணைக்கோண்டு, ஆய்வாளர்கள் கி. மு. 1000 – 900க்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்திருக்கலாம் என்று கருதுவர். இன்னும் சற்று முற்பட்ட காலத்தில் நடந்திருக்கலாம் எனி னும் தவறாகாது.

முற்கால நாகர் - இயக்கர் ஆட்சிக்காலம்

(இ. மு. 900 — 500)

ஆதி நாகர்குலத்தோர், இராமாயண காலத்தில் இலங் கையில் வாழ்ந்திருந்தார்கள். இதற்குக் குபேரன் வரலாறும் சான்றாக அமைகின்றது. ஆனால் ம. மா. இலங்கையின் கிழக்குக்கரையோரமாக வாழ்ந்து ஆட்சிபுரிந்திருந்த நாகர் களை, அத்தினாபுரத்தில் வாழ்ந்திருந்த குருகுலநாகர் குடியி னர் எனப் பிரித்துக்காட்டுகின்றது. இவர்கள் வமிசாவழி துரி யோதனனாதியோரின் குருகுலநாகர் வழி என்று குறிப்பாக வும் சுட்டிக்காட்டும் (பக். 58). இராவணன் உயிர்துறந்தபின், இலங்கை கடல்கோளினால் செழிப்பிழந்து இருக்கையிலே, இக்குருகுலநாகர் இலங்கைக்குவந்து, இயக்கரோடு சேர்ந்து உகந்தையைத் தலைநகராக்கியாண்டிருந்தனர் என்பதனால், இவர்கள் இலங்கைக்கு வந்தகாலம் மகாபாரதப் போருக்குப் பிற்பட்ட காலமாகும். இப்போர் பெரும்பாலும் கி. மு. 900ம் ஆண்டளவில் நிகழ்ந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுவர். பாரதப்போர் நிகழ்ந்தகாலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பாண்டவர்க்குத் துணையாய் நின்றனர் எனக் கூறப்படுகின்றது. உதியன் சேரல் என்ற சங்ககாலச் சேரவேந்தர்களுள் முதல் சேரவேந்தன் பாண்டவ சேனைக்கு உணவளித்ததாக முரஞ்சியூர் முடி நாகராயரென்ற தலைச் சங்கத்துப் புலவரும், பிறரும் பாடியுள்ளார்கள். சிலப் பதிகாரமும் பாண்டவர் சேனைக்கு சோழர் உணவு வழங்கிய தைக் குறிப்பிடும் (காதை. 23; வரி 55). இனி, மகாபாரத வரலாற்றின் முக்கிய வரலாற்று நாயகனாகிய அர்ச்சுனன் தெற்கே தலயாத்திரையாக வந்தபோது, மணலூரரசனாகிய பாண்டியன் மகள் சித்திராங்கதையைத் திருமணம் செய்தான் என வடமொழி நூல்கள் பல குறிப்பிடுகின்றன. (ஸ்ரீ வியாஸ பாரதம், ஆதிபர்வம்; அம்சாவதரணபர்வதம் (அத். 64); விஷ்ணுபுராணம், நான்காம் அம்சம் அத். 20; பாகவதம் அத். 10; ஸ்கந்தம் அத். 84, பாரதசம்பு)' எனவே இந்நிகழ்ச் சிகளையெலாம் சீர்தூக்கி மகாபாரதகாலத்தை நாமும் கணிப்பீடு செய்துகொள்ளலாம். இனி இம்முற்காலக் குருகுல நாகர் உகந்தையிலிருந்து ஆண்டிருக்கையிலே, அயோத்தி இரகுவமிசத்தைச் சேர்ந்த காளசேனன் படையுடன் வந்து இந்நாகர், இயக்கரைப் புறமுதுகிடச்செய்து, தென்னிலங்கை யில் காளிதேசத்தைத் தன் இராசதானியாக்கியாண்டிருக்கை யில், விசயனால் கொலைசெய்யப்பட்டு உயிர்நீத்தான். காள சேனனின் ஆட்சிக்காலம் இவ்வாறு விசயனின் இலங்கை வரு கையுடன் தொடர்புபட்டுக்கிடக்கின்றது. இனி விசயன் இலங்

கைக்குவந்த ஆண்டு புத்தர் நிர்வாணமடைந்த ஆண்டுடன் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. எனவே இப்பின்னணிகளை வைத்து முற்கால நாகர் – இயக்கர் ஆட்சிக்காலத்தை கி. மு. 900 - கி. மு. 500க்கும் இடைப்பட்டகாலமாகக் கொள்ளலாம்.

காளசேனன் - விசயன் ஆட்சிக்காலம்
(கி. மு. 500 — கி. மு. 400)

காலசேனன் அயோத்தி இரகுவம்சத்தைச் சேர்ந்தவன். அதனாற்போலும் நாகர் இயற்றியிருந்த நாகர்முனைச் சுப்பிரமணியர் ஆலயத்தையும், மண்டூர் சுப்பிரமணியர் ஆலயத்தையும் இடித்திருந்தான். பின் தென்னிலங்கையில் காளிதேசத்தை இராசதானமாக்கியாண்டிருந்தான். இவன் காலம் முதலாகவே தென்னிலங்கையில் வாழ்ந்திருந்த குருகுல நாகர்கள் வடக்கே முள்ளுத்தீவு, மணற்றிடர் முதலான பாதுகாப்பான இடங்களை நோக்கிப் புலம்பெயரத்தொடங்கினார்கள். இந்நாகர் சிற்றரசுகள், காளிசேனனைத் தம் முதலரசனாக ஏற்றிருந்தனர். இவ்வாறு இவன் ஆண்டிருக்கையிலே, விசயனும், தோழரும் மணற்றிடர்க்கரையையடைந்து, பின் நாகர் உதவி மூலம் காளிசேனனைக் கண்டு பேசி, அவன் படைவீரராய் இருந்துவருகையிலே, காளிசேனன் பிரதானியொருவனின் விருந்துவைபவத்தில் காளிசேனனையும், அவனது பிரதானிகளையும் கொன்று அரசாட்சியைக் கைப்பற்றினான். பின் தென்னிலங்கையில் ஒரு மலைநாட்டில் தன் இராசதானியை அமைத்து, விசயதுவீபமெனப் பெயரிட்டு ஆண்டிருந்தான். இவ்விசயதுவீபம் மகாவம்சம் குறிப்பிடுகின்ற கிறிஸ்தவத்து நகரிலே அமைந்திருக்கலாம் எனத் தெரிகின்றது. இவ்வாறு கி. மு. 600 – கி. மு. 500க்குமிடைப்பட்ட காலத்தில் நடந்த வரலாற்றுக்கூறுகள், இலங்கையின் ஆதிவரலாற்றை நடுநிலையுடன் நின்று உண்மைகளைக் கண்டறிவதற்கு மிகவும் உதவவல்லன.

முற்காலக் கலிங்கர்கள்
(கி. மு. 400 — கி. மு. 10)

விசயனுக்குப் பின் விசயதுவீப ஆட்சிபாரத்தைத் தாங்கியிருந்த கலிங்கனான சிறிகுலசேனனே, தென்கிழக்கிலங்கையில் கலிங்கருக்கென ஒரு இராச்சியப் பிரிவையேற்படுத்தி, அப்பிரிவுக்குத் தன் மகன் கூத்திகனைப் பட்டம்கட்டியவனாவன். இக்கூத்திகன் முதலில் காளசேனனின் காளிதேசத்தைத் தலைநகராகவைத்து ஆண்டிருந்து, பின் புதிய கலிங்க அரசுக்

கென ஒரு இராசதானியை அமைத்துக்கொண்டான். இவ்வாறு இவனுருவாக்கிய தலைநகரே பழைய மட்டக்களப்பு நகராகும். இவனுக்குப்பின், இவன் மகன் சேனனும், சேனனுக்குப்பின் நாலு தலைமுறையினரும் ஆண்டிருந்தனர். இவர்களே தென்னிலங்கைக் கலிங்கர்குலத்து முன்னோர்களாவர்.

இடைக்கால நாகர் - இயக்கர் ஆட்சிக்காலம்
(கி. மு. 10 — கி. பி. 20)

முற்காலக் கலிங்கரின் வமிசம் அருகவே, நாகர் - இயக்கர் மேலெழும்பி விண்டு - அணையை இராசதானியாக்கி, முக்குலத்தவரையடக்கி முப்பது வருடங்களாக ஆண்டிருந்தார்கள். இக்காலத்தில் அனுராதபுரத்தைத் தலைநகராக்கியாண்டிருந்த விசயதுவீபத்து மன்னனாகிய சோரநாகன் (கி. மு. 3 - கி. மு. 9) இயக்கருக்காதரவளித்தமையினால் முக்குலத்தவர் நிலைமை மேலும் நலிவடையலாயிற்று. இம்முக்குலத்தவர் நிலையை உறுதிப்படுத்தவந்த கலிங்கனாகிய இரஞ்சலன், இயக்கரையும், நாகரையும் மட்டக்களப்பால் அகற்றியபொழுதிலும், இவர்களை முற்றாக நீக்கமுடியவில்லை. அதனால் இரஞ்சலன், சோரநாகனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்போது, நாகருக்கு மணற்றிடர், மண்ணாறு எனும் ஆட்சிப்பிரிவுகளும், இயக்கருக்குத் தட்சணாபதி ஆட்சிப்பிரிவும் வழங்கப்படலாயிற்று. மாகோன் கி. பி. 13ம் நூற்றாண்டில் வந்தகாலத்தும் நாகர்கள் யாழ்குடாவில் செல்வாக்குடையவர்களாக இருந்திருக்கிறார்கள். இந்நாகர்கள் காலப்போக்கில் தமிழ்ச் சமுதாய வெள்ளத்திற்குள் ஒன்றுகலந்து, இனம் காணமுடியாமல் போய்விட்டார்கள். இயக்கர்கள் நிலையும் அத்தகையதே. ஆகையால் இவர்கள் மட்டக்களப்பில் மேலெழும்பியாண்டிருந்த காலத்தை (கி. மு. 10 – கி. பி. 20) இவர்களது இடைக்காலமாகக் கருதலாம்.

இடைக்காலக் கலிங்கர் ஆட்சிக்காலம்
(கி. பி. 10 — கி. பி. 700)

இடைக்கால நாகர் – இயக்கர் எழுச்சியை இரஞ்சலன் அடக்கி, சோரநாகனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி மட்டக்களப்பைத் திறையற்ற இராச்சியமாக்கினான். பின் கலிங்கரின் பிரதிநிதியாகப் படையாட்சித் தலைவன் சிறிகுலனுக்குப் பட்டம் கட்டிக் கலிங்கம் சொன்றான். சிறிகுலன் காலம் முதல் வங்கலாடன் காலம்வரை கலிங்கருக்காக மட்டக்களப்பையாண்டிருந்து, கலிங்க அரசுகளுக்குரிய தேசம்,

முன்னீடு, சீர்வரிசை முதலான கௌரவங்களையும் படையாட்சிகுலத் தலைவர்களே பெற்றிருந்தனர். கலிங்கத்து வங்கலாடன் பின், இவன் பரம்பரையினர் நூற்றிருபது வருடங்கள் ஆண்டிருக்கையில், மட்டக்களப்பை இரத்தினவல்லியரசு தன்னாட்சிக்குட்படுத்தியது. எனவே வங்கலாடன் பரம்பரை முடிவுக்காலம்வரை, இடைக்காலக் கலிங்கராட்சியெனக் கருதுதல் ஏற்புடையதாம்.

இனி, இவ்விடைக்காலக் கலிங்கர் காலத்தில், படையாட்சிகுலத் தலைவன் வமிசத்தில் வந்த பிரசின்னசித்து மட்டக்களப்பையாள்கையில், இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சி, கலிங்கத்து இளவரசன் புவனேயகயபாகு, திருச்சோழன் மகள் தம்பதிநல்லாளைத் திருமணம் செய்துகொண்டு, தலயாத்திரையாக வந்து பிரசின்னசித்துவைக் கண்டான் என்பதாகும். அத்தருணம் நாகர்முனையில் பாழடைந்திருந்த சுப்பிரமணியர் ஆலயத்தைப் புனர்நிர்மாணிக்கப் புவனேயகயபாகு உதவியிருந்தான். அதன்பின் நாகர்முனைக் கோவிலின் குடமுழுக்கு விழாவிற்குச், சோழநாடு, இராமநாடு, கலிங்கம் முதலான நாடுகளிலிருந்து ஏழு இளவரசர்கள் திரவியங்களுடன் வந்திருந்தார்கள் (ம. மா. பக். 26-27). ஆனால் இக்கோவிலிற் பாதுகாத்துவைக்கப்பட்ட பதிகமொன்று, இவ்விளவரசர்கள் யாவரும் சோழநாட்டவரென்றும், இவர்கள் இக்கோவிலைக் கட்டுவதற்கு, இந்தியாவிலிருந்து கல் முதலான பொருட்களைக் கொண்டுவந்து கட்டிமுடிக்க, வடக்குமுகமாக இருந்த வேல் கிழக்குமுகமாகத் திரும்பிற்று எனக் குறிப்பிடுகின்றது. மகாவம்சம் இந்நிகழ்ச்சியை இன்னோர்விதமாகக் கூறும். வட்டகாமினி காலத்தில் (கி. மு. 43) ஏழு தமிழர்கள் படையெடுத்துவந்தனர் எனவும், அவர்களில் இருவர் தம் நாடு திரும்ப, புலகத்தன், வாஹியன், பனயமாறன், பிளயமாறன், தாதிகன் என்போர் இலங்கையையாண்டிருந்தனர் எனவும் கூறும். இது, உண்மையாக இடம்பெற்ற வரலாற்று நிகழ்ச்சியை, வெவ்வேறான மரபுகள் வெவ்வேறான வடிவில் பேணிக் கொண்டமையையே, குறிப்பாக உணர்த்தும். இவற்றின் குறிப்புகளிலிருந்து இந்நிகழ்ச்சி கிறித்துசகாப்த ஆரம்பகாலத்தில் இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிகின்றது.

இரண்டாவதாக, இவ்விடைக்காலக் கலிங்கராட்சியில் ''உன்னரசுகிரி'' எனும் இன்னோர் இராச்சியப்பிரிவு தென்னிலங்கையில் உருவாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வுன்னரசுகிரியை ஆடகசவுந்தரி ஆண்டிருக்கையில், மகாவம்சம் குறிப்பிடுகின்ற தெத்ததீசன் (கி. பி. 323 - 33), மகாசேனன் (கி. பி. 334 - 362) ஆகியோர் உன்னரசுகிரியுடன் தொடர்புகொண்டிருந்தார்கள்.

மூன்றாவதான முக்கிய வரலாற்று நிகழ்ச்சி, ஒரிசா நாட்டு உலகநாச்சி வருகையாகும். இவள் ஸ்ரீ மேகவண்ணன் காலத்தில் (கி. பி. 362 - 390) வந்து, மட்டக்களப்பில் மண்முனை இராச்சியப்பிரிவை உருவாக்கியிருந்தாள். இவள் காலத்தில் மட்டக்களப்பையாண்டிருந்த குணசிங்கனின் பரம்பரையினரின் இருநூறு வருட ஆட்சிமுடிவிலே, கலிங்ககுலத்து வங்கலாடன் படையுடன் வந்து, குதிரைமலை, அனுராதன்புரி, விசயதுவீபம், காளிதேசம் முதலான அரசுகளைக் கைப்பற்றி, மட்டக்களப்பையும் ஆண்டிருந்தான். இவன் பரம்பரையினர் ஆட்சிமுடிவில் மட்டக்களப்புச் சிறிது, சிறிதாகச் சிங்கராட்சிக்குட்பட்டு, ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகளுக்கிருந்துள்ளது. இதன்மேல் இடம்பெற்ற மட்டக்களப்பு வரலாற்று நிகழ்ச்நிகளின் காலம் இயல் 3-ல் ஆராயப்பட்டுள்ளது.

பிற்காலக் கலிங்கர்கள்

தென்னிலங்கைக் கலிங்கரின் பிற்கால வரலாற்றில், மாகோன் ஆட்சிக்காலம் கலிங்கரின் பேரெழுச்சிக்காலமாகும். அவனது பரம்பரை முடிவில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் கலிங்கரின் வீழ்ச்சிக்காலமாகக் கருதப்படவேண்டும். இக்காலத்திலே சிங்கர் மேலெழும்பி வங்கர் - சிங்கர் - படையாட்சிகுலம் மூவரையும் குகன்குலம் எனத் திட்டம் செய்து, சூரியகுலமென்றும், கங்கைக்குலத்தோரென்றும் பெருமை பாராட்டியிருந்த கலிங்கரைச் சமூகத்தின் கீழ்மட்டத்திற்குத் தள்ளிவிட்டார்கள். ஆயினும் கலிங்கர் பாராட்டியிருந்த பழம்பெருமைகளை இவர்களால் முற்றாக வேரறுக்கமுடியாது போய்விட்டது என்பதனை மாருதசேனன், எதிர்மன்னசிங்கன் ஆட்சிகள் எடுத்துக் காட்டி நிற்கின்றன. இவர்கள் இருவரது ஆட்சிக்காலமும், அணையும் சுடர் தீடீரென ஒளி பரப்பிச் சுடர்விட்டணைவது போல், கலிங்கரின் அரச பாரம்பரியங்களை முற்றுப்பெறமுன், பெருமையை நிலைநிறுத்திய காலமாகக் கொள்ளலாம்.

அரும்பத விளக்கம்

அக்கசாலை — மடப்பள்ளி, கோவிலுள்ள சமையற்கட்டு.

அசோகநாடு, அசோககிரி — வங்கம் அல்லது கலிங்க நாட்டின் ஆட்சிப்பிரிவுகளில் ஒன்று. திருக்கோணாசல வைபவம் ஆடகசவுந்தரியின் வரலாற்றைக் கூறுகையிற், கலிங்க தேசத்தில் அசோகசுந்தரன் தம்பதிகளுக்குப் பற்களுடனும், சீவிமுடித்த குழலோடும் ஒரு பெண் குழந்தை பிறந்ததாகக் குறிப்பிடும். ஆனால் ம. மா. ஆடகசவுந்தரியை வங்கநாட்டுக் குடிகளுடன் தொடர்பு படுத்தும்.

அட்சனாதங்குரு — குரு, அறியாமையை நீக்கி அறிவைக் கொடுப்பவர். ஆலயங்களில் கடமையாற்றும் குருமார் தீட்சாகுரு, வேதகுரு, சித்திரகுரு, உலககுரு, பத்ததி நாமகுரு எனப் பல திறத்தர். இவர்களில் அட்சனாதங்குரு சிவபூசையின்போது அச்சனை செய்பவர் ஆவர்.

அந்தணர் இருபாகையர் — கோயிற் பூசகர்கள் அந்தணர், ஆசாரிமார், பட்டர் முதலான பெயர்களால் அழைக்கப்படுவர். இவர்களுள் இருபாகையர் என்பவர் கோவிற் கிரியைகளில் கருமபாகம், ஞானபாகம் எனும் இருவகைக் கிரியைகளைச் செய்யும் இரு பூசகர்கள் ஆவர்.

அமலர் — சிவன், விஷ்ணு, குற்றமற்றவர்.

அவணம் — ஏழரைப்புசல் நெல், ஒரு அவணம்.

ஆக்கொத்து — அதிகாரத்திலுள்ளவர்கள் ஆணையிட்டு எழுதும் உடன்படிக்கைப் படிவம்.

ஆறுகாலப் பூசை — தமிழகத்துக் கால அளவைகளின்படி ஒரு நாளின் சிறு பொழுதுகள் ஆறு காலங்களாகப் பாகுபடுத்தப்பட்டு, அவ்வப் பொழுதுகளில் கோவில்களில் பூசை வழிபாடுகளும் பேணப்பட்டிருந்தன. அவையாவன: காலை (6–10 மணிவரை), நண்பகல் (10–12 மணிவரை), ஏற்பாடு (2–6 மணிவரை), மாலை (6–10 மணிவரை), இடையாமம் (10–2 மணிவரை), வைகறை (2–6 மணிவரை).

உடுக்கு — தோணி, அம்புநுனி.

உலகிப்போடி குலம் — உலகநாச்சி தனக்குதவியாக ஓரிசா தேசத்திலிருந்து தருவித்துக் குடியமர்த்திய குடிகள். காலப்போக்கில் இக்குடியினர் அவள் பெயரால் தம்மை அழைத்துக்கொண்டனர்.

ஏந்துபணி செய்வோர் — கோவிலில் எடுபிடி வேலை செய்வோர்.

கச்சு — இடைக்கட்டு.

கதிரை — கதிரைமலைப் பாங்கரில் வாழ்ந்திருந்த எயினர் குடிகள்.

கம்பிளியார் — கடற்பயணங்கள் செய்து பணமீட்டும் கரையார்குலச் செட்டிமார்.

கலிங்கர் — ஆரியர் வருகைக்குப்பின், இந்துவெளிப் பிரதேசத்திலிந்து புலம்பெயர்ந்து கிழக்கிந்தியாவின் கங்கைப் பிரதேசத்தையண்டிக் குடியமர்ந்த சகோதரர்களே கலிங்கம், அங்கம், வங்கம், சுஷ்மம், புண்ட்ர முதலான கிழக்கிந்திய அரசுகளையுருவாக்கியவர்கள்.

கவடா — வாயிற்கடவை, ஆட்சிப்பிரிவுகளின் எல்லைக் காவற் பகுதி.

காசினியோர் — உலகோர்.

காராளர் — வேளாளர்.

காலிங்ககுடி — கலிங்கநாட்டு அரசகுடிகளும், வங்கநாட்டு அரசகுடிகளும் செய்துகொண்ட கலப்புத் திருமணத்தால் காலிங்கா குடியினர் எனத் தம்மை அழைத்தனர்.

காளிகட்டம் — கல்கத்தா (கிழக்கிந்தியாவிலுள்ளது).

காளிதேசம் — காளிசேனன் தென்கிழக்கிலங்கையில் அமைத்த இராசதானியின் பெயர்.

குகன் — முருகன், கங்கைக்கரைப் படகோட்டி.

குகன் குலம் — காளிகட்டத்திலிருந்து தருவிக்கப்பட்ட படையாட்சி குடியினர், வங்கர் குடிகள், உலகநாச்சி குடிகள் யாவரும், தம்மைக் குகன் குலத்தவர் என்பர்.

குகப்பட்டத்தரசு — குகனைக் கௌரவிக்குமுகமாகப் படையாட்சிகுலத்தாருக்கு வழங்கப்பட்ட விருதுகள்.

கும்பவரிசை — ஒவ்வொரு சாதியினருக்கென வகுக்கப்பட்டிருந்த நிறைகுடம் முதலான சீர்வரிசைகள்.

குருக்கள் குடும்பம் — இராமநாட்டு வன்னியர் குலத்து ஏழு பெண்களுடன் வந்த குருக்கள் குடும்பம்.

குருகுலநாகர் — ''குரு'' எனும் பழங்குடியினர் வடஇந்தியாவில் கங்கை, யமுனா நதிகள் பாயும் பிரதேசங்களையண்டி வாழ்ந்திருந்தனர். இக்குருகுலத்தார் வாழ்ந்த இடம் குருசேத்திரம் எனப்பட்டது. இக்குருகுலத்தவரிடை நடந்த போரினையே மகாபாரதம் விபரிக்கும். இக்குருகுலத்தில் வந்த துரியோதனன்னாதியோர் நாகர்கள் என்றும், இந்நாகரே, இராவணனுக்குப்பின் இலங்கையைக் கைப்பற்றியாண்டனர் என்றும், ம. மா. குறிப்பிடும்.

குளிக்(குடி) கல்வெட்டு — சிவாலயத்தில் தொண்டுபுரியும் குடிமக்கள் தொழும்புகளைக் கூறும் கல்வெட்டு.

கொலு — மன்னர் சபையோர்முன் அமர்ந்திருக்கும் மண்டபம், கொலு மண்டபம் எனப்படும்.

கோலோந்தர் — ஒல்லாந்தர்.

கோவசியர் — மன்னர்க்குச் சமமான தகுதிகள் பெற்ற வைசியர்குலச் செல்வந்தர். காலிங்க வேளாளரும் ''கோவசியர்'' எனப்பட்டனர்.

கோவியர் — இடையர்.

கோவிலார் — கோவிலில் பணிபுரியும் சாதியினர்.

கோறளை நாடு — சிங்கர் ஆட்சியில் ''திசாவனி'' பெரும் ஆட்சிப்பிரிவையும், ''கோறளை'' உபபிரிவையும் குறிக்கும். ஒரு கோறளை பல கிராமங்களை உள்ளடக்கிய தாய், திசாவனியால் நியமிக்கப்பட்ட கிராமசேவகரால் நிருவகிக்கப்படும்.

சவளக்கடை — சவளி அல்லது சவுளி எனில் துணி என்பது பொருள். அதனால் துணிச் சரக்குக் கடைகளுள்ள பகுதி சவளக்கடை எனப் பெயர்பெற்றது போலும்.

சந்திரமரபினர் — தனவணிகர் (தனக்காரர்), வேளாளர் ஆகியோர் சந்திரமரபினர் என ம. ம. குறிப்பிடும்.

சரிகைசன்னாசம் தார் வளர் தேசம் — சரிகைப் பட்டுத் தலைப்பா, நீண்ட கூழுத்தணி முதலானவற்றைக் கொண்ட தேசத்தை ஆளும் கலிங்க மன்னன். (''பட்டுச் சன்னாசம் தேசம்'' என்ற தொடரும் கலிங்க மன்னனைச் சுட்டும்).

சரிகை, சன்னாச முறைகள் — சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலான சைவநெறிகள். (சரிகையொடு சைவநெறி தந்தார் என்ற தொடரும் சைவநெறிகளையே சுட்டும்).

சிங்கர் — லாலநாட்டுத் தலைநகரான சிங்கபுரத்துச் சிங்க பாகு வமிசத்தில் வந்த விசயன் பரம்பரையினர், இலங்கையிற் தம்மை ''சிங்கர்'' எனக் கூறிக்கொண்டனர். சூளவம்சம் இவர்களைச் ''சீகளர்'' எனவும், தமிழ் இலக்கியங்கள் ''சிங்களர்'' எனவும் குறிப்பிடுகின்றன.

சித்திரகுரு — திருக்கோவில்களில் பல்வகைக் (நானாவித) இரியைகளையும் செய்யவல்ல பூசகர்.

சிவகோத்திரம் — சிவவழிபாட்டினைப் பேணிவந்த வம்சாவழியினர்.

சிறைகள் — கோவிற் தொண்டுகளுக்கெனக் கட்டுப்படுத்தப் பட்டோர். இவர்கள் தமிழகத்து மரபினடிப்படையில் பதினெண் சிறைக்குடிகள் எனப்பட்டனர்.

சுரர் — தேவர், பிராமணர்.

சூகர வேட்டை — ''சூகர'' எனும் வடமொழிச் சொல் தமிழில் ''பன்றி'' எனப் பொருள்தரும். கோணேசர் கல்வெட்டின்படி, சிவன் பன்றிவேட்டைக்குப் போவதாக நடாத்தும் திருவேட்டை விழா, தமிழகத்திலிருந்து வந்த மரபெனத் தெரிகின்றது. இலங்கையில் இம்மரபு கூடுதலாக வன்னிப்பிரதேசத்திலும், மட்டக்களப்புப் பிரதேசத்திலும் பேணப்பட்டுவரப்படுகின்றது. முனீசுவரத்திலும் வேட்டைத் திருவிழா நடைபெறும். ஆனால் யாழ்ப்பாணத்தில் குகன்குலத்தோர், அனேக ஆலயங்களில் வேட்டைத் திருவிழாவில் தெய்வத்தைத் தூக்கிக்கொண்டு ஓடும் வளப்பமுண்டு. (மு. சு. சிவப் பிரகாசம், மு. கு. பக். 191).

தமிழ்மதம் — சைவம்.

தம்பட்டர் — ''பட்டர்'' எனில் ஆசாரிமார், கோவிற்பூசகர் என்பது பொருள். ''தம்பட்டர்'', ''தமது பூசகர்'' எனப் பொருள்தரும்.

தனவசியர் — தனக்காரர். வைசியர் குலத்தில் ஒரு பிரிவினர்.

திக்கதிபர் — ஆட்சிகளின் திசைப்பிரிவு, நிருவாகங்களைக் கண்காணிக்கும் தலைவர்.

திமிலர் — ''திமில்'' எனும் சிறு தோணியை இயக்கி மீன் பிடிப்பவர், ஆதியில் இலங்கையில் வாழ்ந்த பழங்குடியினரான இயக்கரைத் ''திமிலர்'' என ம. மா. குறிப்பிடும். அதனால் ஆதியில் மட்டக்களப்பில் திமிலரே வாழ்ந்து ஆட்சிபுரிந்திருந்தனர் எனக் கதிராமர் கருதுவர். (D. N. N. Kathirgamar, Land Marks of Ancient Batticaloa, 1934).

திருப்படை — கலிங்க அரசராலும், பிறராலும் விதிக்கப் பட்ட விதிமுறைகளைக் கொண்ட பட்டயங்கள், ஏடுகள் என்பன திருப்படைகள் எனப்பட்டன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் தொன்மைவாய்ந்த கோவில்களிற் சில, நாட்டிலுள்ள குடிமக்கள் எல்லோருடைய கோவில் எனக் கருதப்பட்டுத், தேசத்துக் கோவில்கள் எனப்பட்டன. இக்கோவில்கள் தேசத்தையாளும் அரசரின் நன்மதிப்பும், கொடைகளும் பெற்றவையாயிருந்த படியால், திருப்படைக் கோவில்கள் என்றும் அழைக்கப் பட்டன. இனி, இக்கோவில்களில் பங்குகூறும் குடுக்கையைத் (முட்டி) ''திருப்படை'' எனக் கூறும் வழக்கு முண்டு.

திருவாசல் — கைலாயமலை.

தேசம் — தேசத்தை ஆளும் கலிங்கமன்னன்.

தேங்குமலர் — தென்னம்பூ.

தொழுவர் — தொழும்பர், தொண்டுபுரிவோர், மருதநில மக்கள்.

தோம்பு — ஒல்லாந்தர் சொல், ஊர்களிலுள்ள காணிகளின் பெயர், பரப்பு, உடையவன் பெயர், சாதி, வரி, கடமை முதலாயின குறிக்கப்பட்ட ஏடு. இவைதவிர, விவாகம், இறப்புப் பிறப்புக்களும் பதியப்படலாயின. இத்தோம்புகளை ஆராய்வதன்மூலம் 18ம், 19ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தமிழ் மக்களின் சமூக வரலாறுகளை அறிந்துகொள்ள வாய்ப்பேற்படும்,

நன்பூகமலர் — கமுகம் பூ.

நிலைமை — சிங்கராட்சி முறையில் திசாவை எனும் அதிகாரிக்கு மேலதிகாரியாகவிருப்பவர்.

பட்டர் — அர்ச்சகர், பூசகர்.

பட்டாணி — மகமதியரில் ஒரு வகுப்பார்.

பண்டாரம் — பூக்கட்டி விற்கும் சாதியார், சிவனடியான், மடாதீனத்தான், தவசி.

பண்டாரப்பிள்ளை — அதிகாரியின் ஏவற்காரன்.

பணிக்கன் — யானைப்பாகன், கேரளத்திலுள்ள ஒரு சாதியார். முற்குகக் குடிகளில் யானைப்படை வீரர். வன்னியில் குடியமர்ந்த பழங்குடியினரும் ''பணிக்கமார்'' எனும் முற்குகக் குடிகளே.

பத்ததி — கோவில் நித்தியகரும விதிகளைக் கூறும் நூல்.
பரவணி — வம்சாவழி.

புன்னகம் — பாம்பு, பன்னகர் - நாகர்.

புன்னாலை — ஆடகசவுந்தரி வம்சாவழி கூறும் வங்கர் குடிகள்.

பொருத்தனை — உடன்படிக்கை.

போடியார் — ''போஷி'' எனும் வடமொழிச் சொல்லின் பேச்சுவழக்கு. உழவர் பெருமக்கள் குடிமக்களைத் துணைக்கொண்டு உழுவித்து, வேளாண்மை செய்து, தம்மையும், பிறரையும் போஷித்துத் தலைமை பெற்று வந்தவர்கள். பிற்காலத்தில் நிலமானிய அரசில் ''போடி'' ஒரு பட்டமாக நிலப்பிரபுகளுக்கு வழங்கப் பட்டது. மலையாள நாட்டில் முக்குவர்களின் தலைவர்களுக்கு இப்பட்டம் வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. மட்டக்களப்பில் இப்பட்டம் பெற்றவர்கள் அதிக நிலபுலங்களையும், மந்தைகளையும் வைத்திருந்தனர். போடிக் கல்வெட்டு மண்முனைப்பற்றுக்கும், தென்பகுதிக்கும் ஒல்லாந்தர் போடிமாரை நியமித்தமைபற்றி விபரிக்கின்றது.

மடுவோடை — மடு – நீர்நிலையிலுள்ள அபாயமான பள்ளம். ஓடை – அடியிலிருந்து ஊற்றெடுக்கும் நீர். எப்பொழுதும் பொசிந்து வாய்க்கால் வழியே ஓடிக்கொண்டிருக்கும் நீர்நிலை.

மத்தங்கடவத்தை — மத்தன் என்பவன் காவல்புரிந்த எல்லை வாயிலாக இருக்கலாம். உன்னரசுகிரி இராச்சியப்பிரிவு குமுக்கன் ஓயாவிற்கும், மாணிக்ககங்கைக்கு மிடைப்பட்ட பகுதியில் இருந்தது. அதன் மேற்கெல்லையாக மத்தங்கடவத்தையிருந்தது. எல்லைகளைக் குறிக்கும் கடவைகள் பல இருந்துள்ளன. மட்டக்களப்பு அரசின் மேற்கெல்லையாகக் கவடாவை மன்னம்பிடடி இருந்துள்ளது. இப்பகுதியே இன்றைய கடவத்தைமடு ஆகும். நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டு, இறக்காமத்திற் கருகான வயல்வெளிகளில் 'கடவத்தை'யும் ஒன்றாகக் குறிப்பிடும். எனவே மத்தங்கடவத்தை எனும் இன்னோர் கடவத்தை மாணிக்ககங்கையின் மேற்குப்பாங்கரில் இருந்துள்ளதாகத் தெரிகின்றது.

மனுவரதன் — மக்கள் நீதிகளைக் காப்பதில் சிறப்பானவொருவன். இவன் கி.பி. 13ம் நூற்றாண்டில் கலிங்கதேசத்தை

யாண்டிருந்தவன். இவன் மூன்றாம் மகன் மாகோனுக்கு ''மனுவரசன்'' என்று இன்னோர் பெயரும் இருந்தது. (ம. மா. பக். 54). இவர்கள் பெயரின்முன் அடைமொழி ''மனு'' எனும் சொல் ஆய்வாளர்களைத் திசைதிருப்பி சிலப்பதிகாரம் போற்றும் ''மனுநீதி கண்ட சோழன்'' என இவர்கள் காலத்தைப் பின்னோக்கிப் பார்க்கவைத்தது. மாகோன் இலங்கையைத் தன்னாட்சிக்குட்படுத்திய பின், அவன் தந்தை திருக்கோணேசுவரர் பெருமை கேட்டுத் திருப்பணிகளுக்காகிய திரவியங்களுடன் வந்திருக்கலாம். பின் மனுவரதனே (வரராமதேவன் என்று இன்னோர் பெயரும் இவனுக்கிருந்திருக்கலாம்) தம் புதல்வரின் ஒருவனான சோழகங்கனைத் திருக்கோணேசுவரர் திருப்பணிகளை நிறைவேற்றிவைக்குமாறு பணித்தவனாவன். அதனால் சோழகங்கன் வாழ்க்கையும் திசைதிரும்பலாயிற்று. கோவிற்றிருப்பணிகள் சோழகங்கனைப் படிப்படியாக சமயஞானியாக வளர்க்கலாயின. கோணேசர் கல்வெட்டு ''கோணைநாதன் தாளை நேர்த்தியாய் வழிபடல் செய் குளக்கோட்டன்''. பாரிலங்கு பூசைதனை நடத்தும் எம்மிற் பின்பிதனை இனிதாகப் பகிர்வர் ஆரென்று குளக்கோட்டன் ஆலயத்திலுள்ள நாற்கால் மண்டபத்திலிருந்து சிந்தித்தான். ''சதுர்வேத ஞான மூர்த்தி குளக்கோட்டு ராசன்'' ''தனியுண்ணாப் பூபாலனை திருக்கோணை நகரரசு செய்யவைத்தான்'' என்ற இவைபோன்ற வாக்கியத்தொடர்களால் அவனொரு கருமயோகி என எடுத்துக்காட்டியுள்ளது, அதனால் போர்த்துக்கேயர் கோணேசுவரர் ஆலயக் கல்வெட்டில் குறிப்பிட்டிருந்ததாகக் குறிப்பிடும் ''மனு ராசா'' மனுவரதனே ஆவன்.

திருக்கோணமலைக் கோட்டையின் சமஸ்கிருத சாசனம் குறிப்பிடும் சோடகங்கன் யார்? என்ற ஆய்வில் ஈடுபட்டிருந்த பேராசிரியர் சி. பத்மநாதன் இவனை நிசங்கமல்லனின் மருமகனான சோடகங்கனையே (கி. பி. 1196–1197) இச்சாசனம் குறிப்பிடுகின்றது என்ற முடிபிற்கு வந்துள்ளார். (வீரகேசரி, 20-2-1994). ஆனால் சூளவம்சம், இச்சோடகங்கன் விக்ரமபாகுவைக் கொலை செய்து ஒன்பது மாதங்கள் ஆட்சிபுரிந்திருக்கையில், தளபதி கித்தி இவன் கண்களைப் பிடுங்கிக் கொலை செய்து அரசாட்சியைக் கைப்பற்றினான் எனக் குறிப்பிடும். (அத். 8 : 29–31). பூஜாவலியவும் இதனையே

விபரிக்கும். ஆனால், இராஜவலிய, லீலாவதியின் தளபதியாகச் சோடகங்கன் மூன்று வருடங்கள் பணியாற்றினான் எனக் கூறும். இங்கு கித்தி பற்றிக் குறிப்புகள் இல்லை. திருகோணமலை, மட்டக்களப்புச் சைவ பாரம்பரியங்கள் பேணியிருக்கும் சோழகங்கன், முற்றிலும் வேறுபட்ட சமூக, அரசியற் பின்னணிகளைக் கொண்டிருந்தவன் ஆவன்.

மற்று, மாகோனுக்குச் சில ஆண்டுகள் சமகாலத்தவனாக ஆண்டிருந்த மூன்றாம் இராசேந்திரனின் (கி. பி. 1246–1279) ஏழாவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட ஸ்ரீரங்கம் சாசனமொன்றில் ''தான் வட இலங்கையை யழித்த இராமன்'' எனக் குறிப்பிட்டுள்ளான். இவனது சிற்றரசர்களில் ஒருவன் பெயர் சோழகங்கன் ஆகும். (ஜே.எம். சோமசுந்தரம், சோழர்கோயிற் திருப்பணிகள், பக். 133). திருகோணமலைச் சாசனம் குறிப்பிடும் சோடகங்கன் இவனாகலாமா? எனில் அதற்கும் மாகனின் அரசியற் பின்னணிகள் இடம் கொடுத்திருக்க முடியாது. சோழர் – கலிங்கர் உறவுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்த காலம் அது. குளக்கோட்டனாகிய சோழகங்கன், மாகோன் சமயப்பின்னணிகள் ஓரியல் புடைத்தனவென்று ஆய்வுகள் சுட்டுவதனால் சோடகங்கன், மாகோன் சகோதரர்களில் ஒருவனே என்பது புலனாகின்றது. கலிங்கத்து மனுவரதனின் திருக்கோணேசுவரக் கோவிற் திருப்பணிகளை நிறைவேற்ற வந்த சோடகங்கனே சமஸ்கிருதச் சாசனம் குறிப்பிடும் சோடகங்கன் ஆவன் என்பதனைச் சமய மரபுகள் வற்புறுத்துகின்றன. எனலாம்.

முக்கனர் — மாணிக்ககங்கைக்கும், குமுக்கன் ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் விவசாயத்திற்காக வாகூரனால் வெட்டப்பட்ட வாய்க்கால் முக்கனர் அல்லது மக்கனல் வாய்க்கால் எனப் பெயர்பெற்றது. ''குமுக்கன்', என்ற சொல்லே பேச்சுவழக்கில் சிதைவுற்றதாகத் தெரிகின்றது.

முதன்மை
முன்னீடு
முன்னீர் } கலிங்க அரசுகள் தேசத்திலும், கோவில்களிலும் வைத்திருந்த முன்னுரிமைகள். நிருவாக உரிமை, தீர்த்தம், பிரசாதம் வாங்கும் உரிமைகள் இவற்றுள் அடங்கும்.

வங்கர் — வங்கதேயத்தார், நெய்தநில மக்கள்.

வதனமார் — இடையர்குலத் தெய்வம்.

வம்பிலா — குற்றமிலாத.

வவனியர் குலம்
வன்னிமைக் குலம் } படையாட்சியினருக்கும், மறவர்குலத்தாருக்கும், அவர்தம் வீரத்தைக் கௌரவித்து வழங்கப்படும் விருதுகள்.

வன்னியன் — வன்னிய வேளாளன்.

வன்னியர் — மறவர் சாதியார். இலங்கையில் வன்னியர் வரலாறு கி. பி. 13ம் நூற்றாண்டு முதலாகவே ஆரம்பமாகின்றது என்று, வரலாற்றாசிரியர்கள் பொதுவாகக் கருதுவர். ஆனால் வையாபாடல் கி. பி. 9ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மாருதப்பிரவியின் மகன் வாலசிங்கனுடைய விவாகத்திற்குப் பெண் கொண்டுவருகையில், மதுரையிலிருந்து அறுபது வன்னியர்கள் பாதுகாப்பளித்துக் கொண்டுவந்தார்கள் என்றும், விவாகத்தின் பின் இவர்கள் அடங்காப்பதிக்கு அனுப்பப்பட்டனர் என்றும் கூறுகின்றது. இவர்களுள் ஒருவன் கண்டிநகர்த் திசாவையாக அமர்த்தப்பட்டான். இவன் தொடர்பாலே சிங்கள மக்களுள் வன்னியர் குலம் உருவாகலாயிற்று. பிற்காலத்தில் குளக்கோட்ட மன்னனும், வன்னியர் தலைவர்களைத் தருவித்துக் கோவில் நிருவாகத் தலைவர்களாக அமைத்திருந்தான். இவ்வாறு பல கட்டங்களில் வன்னியர்கள் தருவிக்கப்பட்டுள்ளார்கள். மட்டக்களப்பு அரசும், சிறிகுலன் காலம் முதலாக இடையிடையே படையாட்சிகுலம் என்ற வன்னிபங்களாலே ஆளப்பட்டுவந்துள்ளது. அதனால் போர்த்துக்கேயர் வந்த காலத்தில் கண்டிக்கும், யாழ்குடாவிற்கும், இன்னும் கிழக்குக் கரையோரமான பகுதிகளான திருகோணமலை, மட்டக்களப்பு, பணாவ (பாணமை), கொட்டியார், யாஎல, பளுகாமம், புத்தளம் முதலான சிற்றரசுகள் வன்னியரசுகளால் ஆளப்பட்டிருந்தது என்று தந்தை எஸ். ஜி. பெரேரர, தமது இலங்கை வரலாற்று நூலில் குறிப்பிடுவார். இக்கூற்றினை மேலும் வலியுறுத்துமுகமாக, ஒல்லாந்தர் காலத்தில் யாழ்குடாவிற்குத் தென்திசையாக அமைந்த வன்னிப்பிரதேசம், மேற்கிற் தெதுறு ஓயா முதலாகக் கிழக்கிற் கும்புக்கன் ஓயா வரை பரந்த பிரதேசத்தை உள்ளடக்கியிருந்தது என்று டெனிஸ் என். பெர்ணாண்டோ ஒல்லாந்தரின் புவியியற் படத்தை ஆதாரமாகக்கொண்டு காட்டுவர்.

வாகூரமலை — உகந்தை மலைக்கும், கதிரை மலைக்கும் இடையில் இருந்த மலையாகக் கருதப்படுகின்றது. சூரனை அழிக்க சுப்பிரமணியர் ஏவிய வேல் வரும் வழியில் வாகூர மலையை இரண்டாகப் பிளந்தது என்பர்.

மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்ற

பிற நாடுகள்

அத்திநாடு
அத்தினாபுரம் — பக். 9, 56, 58. குருகுலத்தாரின் தலைநகர். பாண்டவர் வரலாற்றுடன் தொடர்புபெற்றிருந்த நகர்.

அசோககிரி — பக. 12, 30.

அயோத்தி — பக். 1, 6, 15, 31, 33, 79, 103. இது இரகுநாடு (பக். 112) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்படைக்கோவில்களில் 'அயோத்தி' என்று உரிமை கூறிப் பங்கு வாங்கியவர்கள் அயோத்தி இரகுவமிசத்துக் காளிசேனனுடன் வந்த சிவமறவர் ஆவர்.

அரிபுரம் — லாலாநாட்டுத் தலைநகரான சிங்கபுரம்.

ஆரியநாடு — பக். 36, 37. 'ஆரிய' என்ற பட்டத்தைத் தாங்கிய பாண்டியர் நாடு அல்லது சோழர் நாடு.

இந்திரப்பிரசித்தம் — பக். 58. பஞ்சபாண்டவர்களுடைய தலைநகர் இன்றைய புதுடில்லிக்கு அணித்தான பகுதி.

இராமநாடு — பக். 40, 85, 109. தமிழகத்து இராமநாதபுரம்.

இராமேசுவரம் — பக். 24, 36, 54. இராமேசுவரம் கோவில்

ஒரிசா தேசம் — பக். 42, 104, 107. கிழக்கிந்தியப் பிராந்தியத்தைச் சேர்ந்தது.

ஒல்லாந்து — பக். 63, 64, 65, 66, 86.

கலிங்கம் — பக். 12, 21, 22, 23, 26, 33, 41, 42 46, 51, 53, 105.

காசி — பக். 80, 106. வாரணாசி எனவும் பெயர் பெற்றிருந்த காசி சமயாசாரியர்களுக்குப் பெயர்போன சிவதலமாகும்.

காசிநதி — பக். 80, 106. புனித தீர்த்தம்.

காளிகட்டம் — பக். 20, 36, 104, 108. கிழக்கிந்தியாவில் இன்றைய கல்கத்தா எனக் கருதப்படுகின்றது.

காரைக்காட்டாளர் பக். 95.
காரைமாநகரம் பக். 76, 76 } இது தமிழகத்து காரைக்கால் எனும் ஊரைச் சுட்டும். கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிடும் காரைவளநாடும் இதுவே.

கொச்சி — பக். 95. சேரநாட்டினைச் சேர்ந்த ஊர்

கொங்கு நாடு — பக். 57, 58, 81, 95. சேரநாட்டின் மேற்பகுதியிலிருந்து கொங்கர் ஆட்சி புரிந்த பகுதி. காலப்போக்கில் கொங்கரும், சேரரும் ஒராட்சிக்குட்பட்டு ஒன்றுபடலாயினர்.

கொள்ளடம்
கொல்லடம் } பக். 43, 75, 76. காவேரி வங்காளக் கடலில் விழுமுன் இரு கிளையாகப் பிரிந்தோடும், கிளையாற்றுப் பகுதியே கொள்ளடமாகும்.

சிங்கபுரம் — பக். 2, 16, 17, 21, 22, 26. லாலநாட்டுத் தலைநகர். அரிபுரம் என்பதும் இதுவே. சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன கலிங்கநாட்டிலும் 'சிங்கபுரம்' எனும் நகர் இருந்தமைபற்றிக் குறிப்பிடுகின்றன.

சிதம்பரம் — பக். 76. சோழநாட்டுப் பகுதி.

சேதுநதி — பக். இராமேசுவரப் பகுதியிலுள்ள சேதுக்கரை (செய்கரை) கடலைத் தூர்த்து ஆக்கிய அணையினால் இலங்கையும் இந்தியாவும் இணைக்கப்பட்டது என்பர்.

சேரநாடு — பக். 73, 90, 94.

சோழநாடு — பக். 24, 25, 26, 36, 46, 50, 51, 73, 99.

பஞ்சவடி — பக். 13. கோதாவரி நதிக்கரையில் ராமர், சீதை ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்த இடம்.

பரதநாடு — 73, 74, 81. இந்தியா முழுவதையும் குறிக்கும் பெயர்.

பாண்டிநாடு — 45. 50. (கலிங்கம், சோழநாடு, வங்கம் முதலான நாடுகளைக் குறிப்பிட்டது போல் பாண்டிநாடு ம. மா. அதிகம் முறிப்பிடப்படவில்லையென்பது கவனிக்கத்தக்கது)

பிரமபுத்திரா நதி — பக். 104, 105, 107, பிரமபுத்திரா நதி இமாலயத்தில் ஊற்றெடுத்து தீபெத் தூடாகப் பல மைல்கள் தூரம் ஓடிப், பின் இந்தியாவிற்குள் பிரவேசித்து வங்காளதேசமூடாகப் பாய்ந்து கங்கையுடன் சங்கமமாகி, வங்காளவிரிகுடாவில் விழும்.

புத்திபுரம் — பக். 82. இது கலிங்கத்தைச் சேர்ந்த தந்தபுரத்தைக் குறிப்பதாகும். தந்தபுரத்திற்குரிய இன்னோர் பெயர் தண்டபுத்தி புரமாகும்.

புத்தூர் — பக். 95. தமிழகத்துப் புத்தூரைக் குறிக்கும்.

போர்த்துக்கல் — பக். 59, 60.

தஞ்சாவூர் — பக். 109 சோழநாட்டுப் பிரிவைச் சேர்ந்தவூர்.

தந்தபுரம் — பக். 43. கலிங்கநாட்டினைச் சேர்ந்த ஊர்.

திருச்சிராப்பள்ளி, திருச்சிரால — பக். 31, 85, 86. இராவணன் கோட்டையைக் காவல் செய்தவன் திருச்சிரால் என்பவன். பின் அவன் பெயராலே அப்பகுதியும் பெயர் பெறலாயிற்று.

திருப்பதி — பக். 76. தமிழகத்தின் வடவெல்லையில் அமைந்துள்ள திருவேங்கடப்பதி.

தில்லி — பக். 75. இன்றைய டெல்லி நகர்.

மதுரை — பக். 45, 46. பாண்டிநாட்டுத் தலைநகர்.

வட மதுரை — பக். 47, 48. குமரிமுனையையும், குமரிப் பேரியாற்றையும் கடல்கொண்டபின் பாண்டிய கபாடபுரத்திற்குப் பதிலாக கூடல் (கடம்பவனம், ஆலவாய எனப்படும் வடமதுரையைப் பாண்டியர் தலைநகராக்கினர் என்பதனால், தமிழகத்து மதுரையும் வடமதுரை எனக் குறிப்பிடினும், ஈண்டுக் குறிப்பிட்ட வடமதுரை வடவிந்திய மதுராபுரி என்று புலனாகின்றது. ஏனெனில் கி. பி. 1001 – 1027க்கும் இடைப்பட்ட காலத்தில் முகம்மதியர்கள் பதினேழு தடவைகள் பெரும் படையெடுப்புக்கள் நிகழ்த்தி வடவிந்திய நகர்களான கான்யகுப்ஜம், மதுரை முதலானவற்றைக் கொள்ளையடித்ததாக வரலாற்றேடுகள் பதிவு செய்துள்ளன.

மருங்கூர் — பக். 95. தமிழகத்தைச் சேர்ந்தவூர். கோணேசர் கல்வெட்டும் குளக்கோட்டன் மருங்கூரிலிருந்து குடிகளைக் கொண்டுவந்து திருகோணமலையில் குடியமர்த்தியதாகக் குறிப்பிடும். வையாபாடலிலும் வன்னியர்கள் மருங்கூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, மலையாளம், துளுவம், தொண்டைமண்டலம் முதலான பகுதிகளிலிருந்து பதினெண்சாதிக் குடிகளை அடங்காப்பதியில் குடியமர்த்தியதாகக் குறிப்பிடும்.

மலையாளம் — பக். 76, 82. சேரநாட்டின் மறுபெயர்.

மலயமான், மலையர் — பக். 89. கிழக்கே சோழநாடும், மேற்கே சேரநாடுமிருக்க இடைப்பட்ட மலையரண்கொண்ட பகுதியை மலையர் ஆண்டுவந்தனர். இம்மலையர் நாட்டையாண்டவன் மலையமான் எனப்பட்டான். சேரரும் மலையமான் எனப்பட்டனர்.

வங்கம் — பக். 12, 17, 18, 21, 23, 26, 33, 51, 53, 82, 105, 107, 110, 111. கங்கை நதியும், பிரம்மபுத்திரா நதியும் இணைந்தோடி வளம்படுத்தும் கிழக்கிந்தியப் பகுதி. ''வங்கம்'' எனில் படகு எனத் தமிழிலும், வடமொழியிலும் பொருள்தரும்.

வீரச்சோலை — பக். 95. தமிழகத்தூர்.

லாலநாடு — பக். 2. வங்கத்தின் மேற்குப்பகுதியிலமைந்த பகுதி இந்த லால (லாட, ராட எனக் காலப்போக்கில் திரியலாயிற்று) நாட்டிலே விஜயன் தந்தை அமைத்த சிங்கபுரம் இருந்தது.

பிற்சேர்க்கை

பொல்லநறுவை – புலியந்தீவு தொடர்புகள் :

சோழர் இலங்கையில் தம் தலைநகரான பொல்லநறுவையில் எடுப்பித்த சிவாலயத்திற்கு வழங்கப்பட்ட அறக் கொடைகளில் ஒரு பொற்குடமும் இடம்பெற்றிருந்தது. பின் அரசியல் தாக்கங்களினால், இப்பொற்குடத்தை எடுத்துச் சென்று சைவம் பேணப்பட்டிருந்த புலியந்தீவில் ஏலத்தில் விற்கப்பட்டது. அதனைக் கணபதியெனும் செல்வந்தர் மூவாயிரம் பணம் கொடுத்து வாங்கினார்.

பேராயிரம் சேர் பேரரசன்
அருள்மொழித் தேவன் ஆக்கியருள்
பூவாயிரம் சேர் பொலன்னறுவை மரு
பொன்னகராம் ஜனனாதபுரம் தந்தருள்ந்த
ஓராயிர மாண்டவனிதனில்
உயிர்வாழ் பேரழகு பொற்குடத்தை
பாவாயிரம் பகர் பாணர்களைப்
பார்த்து வந்த புளியந்தீவில்
மூவாயிரம் பணமுடிச்சினைத்
தந்தது பெற்றதனால்
காராயிரம் கோன் கணபதிக்கே
சமர்ப்பிப்போமே.

(கா. நா. வே. சேயோன்,
"ஆதிகால கைவண்ணம் ஆழ்ந்த கலைஞானம்",
வீரகேசரி, 2-5-1993.

மட்டக்களப்புத் தமிழகம் அன்றும் இன்றும்





Km 10 5 0 10 20 30 40 50 Km

SCALE 1: 1,000,000

எமது கருத்தின் படி தயாரித்தவர்
செல்வி. சி. பொன்னையா.
புவியியல்துறை. கிழக்குப் பல்கலைக் கழகம்.

அன்று	இன்று
1. காளிதேசம்	காளிக்கட்டு, காளியோடை. (அட்டைப்பள்ளம், நிந்தவூர் முதலிய ஊர்களை அண்டியிருந்தது).
2. சிங்காரத்தோப்பு	சிங்காரவத்தை (கூத்திகன் காளி தேசமிருந்து நகர் வலம் வரும் போது தங்கியிருந்த பூங்கா).
3. வீரர்முனை	வீரமுனை.
4. மண்கல்பிட்டி	மலக்கம்பிட்டி.
5. மட்டக்களப்பு இராசதானம் (பழைய நகர்)	வீரர்முனை, மண்கல்பிட்டி ஆகியவற்றுக்கு நடுவே இருந்தது. இன்று வழக்கற்றுப் போய்விட்டது.
6. மாட்புட்டி	மன்னன்பிட்டி. (பிற்காலத்தில் மன்னம்பிட்டி எனப்பட்டது).
7. மணற்புட்டி	மண்பிட்டி. (கொக்கட்டிச்சோலைப் பகுதி).
8. நாப்புட்டி	நாய்ப்புட்டிமுனை (கல்முனைக்கருகானது).
9. மலகவத்தை	இன்று மல்லிகைத்தீவு மல்வத்தை என இரு ஊர்களாக விரிவாக்கம் பெற்றுள்ளது.
10. உன்னாஞ்சை	உன்னிச்சை.
11. தம்புட்டி	தம்பட்டி (ஆயித்தியமலைக்கு அருகானது.
12. பங்கிடான் வெளி	பன்குடாவெளி.
13. அம்பிலாந்துறை	அம்பிலாந்துறை.

	அன்று	இன்று
14.	கொங்குகாசி அப்பன் பிட்டி	அன்பிட்டிய. (அறுகம்குடாவிற் குச் சமாந்தரமான நிலையில் மேற் குத் திசையில் அமைந்துள்ளது).
15.	அறுகமனப் பூமனை	அறுகம் களப்பு (குடா)
16.	முக்கனர் வாய்க்கால் (மாணிக்க கங்கையி லிருந்து எடுக்கப் பட்ட வெட்டுவாய்க் கால் என ம. மா. குறிப்பிடும்).	வழக்கற்று விட்டது. குமுக்கன் ஓயாவுடன் இவ்வாய்க்கால் ஆரம்ப நிலையில் தொடர்பு பெற்றிருந் திருக்கவேண்டும். அதனாலே இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்).
17.	விண்டு அணை	விந்தனை.
18.	நாகர் முனை கண்டபாணத்துறை	திருக்கோயில்.
19.	திரிகயிலை தெட்சணாபதி தட்சணாபதி	திருக்கோணமலை.
20.	சங்குமண்கண்டு	சங்குமண் கண்டி (கந்த உபாத எனும் சிங்கள நூல் (பக். 9) முத லாம் விஜய பாகு சோழருக்குப் பயந்து இங்கு மறைந்திருந்தான் எனக் குறிப்பிடும்).
21.	தம்பட்டார் ஊர்	தம்பட்டை.
22.	தம்பதிவில்	தம்பிலுவில்.
23.	உன்னரசுகிரி	சன்னாசிமலை என வி. சி. கந் தையா அடையாளம் காண்பர். ஆனால் ''உன்னரசுகிரி'' ஆட்சிப் பிரிவு மாணிக்ககங்கைக்கும், குமுக் கன் ஓயாவிற்கும் இடைப்பட்ட இராட்சியப் பிரிவென்பதனை நாம் கருத்திற்கொள்ளவேண்டும்.
24.	பாலர் நகை	பாணகை பாணமை

	அன்று	இன்று
25.	மாமங்கை நதி	மாமாங்கம் அமிர்தகழி
26.	மீனேரி மகரவேரி	மின்னேரிய.
27.	கொட்டியனூர்	கொட்டியாரம்.
28.	காந்தளை	கந்தளாய்.
29.	உறவுப்பெற்றானை	ஹெராவுப் பொத்தன.
30.	உகந்தை மலை உகந்தை கிரி	உகந்தை.
31.	கவடாவை, மன்னம் பிட்டி	கடவத்தைமடு, மன்னன்பிட்டி என இரு ஊர்கள்.
32.	மத்தங்கடவத்தன நாடு	மகாவலிகங்கைக்கும், குமுக்கன் ஓயாவிற்கும் இடையில் அமைந்த ஊர். (இன்று வழக்கிறந்திருக்க லாம்).
33.	கலைலவஞ்சிக்குடி	களுவாஞ்சிக்குடி.
34.	மங்கியம்மை கட்டு	மங்கிக்கட்டு.
35.	செட்டிச்சி குளம்	(படுவாங்கரைப் பாங்கரில் செட்டி குளம் எனும் ஊர் வழக்கிறந்த நிலையில் உள்ளது. செட்டிபாளை யத்திலும் செட்டிச்சி குடியமர்ந் திருக்கலாம் என்பதற்குச் சாத்தி யக்கூறுகள் உள).
36.	மலைரசி	மகிளூர் அல்லது மகிழவெட்டுவான்
37.	பாலம்மை மடு	பாலமீன்மடு.
38.	வீரமுத்து கல்	முத்துகல்.
39.	இராசம்மாதறை (அம்மாதறை)	அம்பாறை. (அம்பாறை எனச் சுருக்கம் பெற்றது).

அன்று	இன்று
40. மண்ணேறிமுனை	மண்முனை.
41. காப்பு முனைக்காடு	முனைக்காடு.
42. கொக்கு நெட்டியாலயம்	கொக்கட்டிச்சோலை. தான்தோன்றியீசுவரர் கோவில்.
43. தோப்பாவை	பொலன்நறுவை, புலத்தி நகரம்.
44. வவுண சிங்கம் தீவு	வவுணதீவு.
45. புலியமாறன் தீவு (கோட்டை)	புளியந்தீவு.
46. சத்து வண்டனூர்	சத்துருவண்டன் (ஒல்லாந்தர் காலத்தில்). சத்துருக்கொண்டான் (இன்று)
47. கொட்டகசச்சன்கமம்	கொட்டகமம்.
48. நீலவண்ணசேனன் துறை	நீலாவணை. (துறைநீலாவணை, நீலாவணை என இரு ஊர்களாக விரிவாக்கம் பெற்றுள்ளது).
48. அகுராகு ஊர்	கரைவாகு.
50. கட்டகமம்	கட்டகாமம். (கதிர்காமத்திற் கணித்தானது).
51. கண்டுமுனை கல்லேறுமுனை	கல்முனை.
52. போர்முடைநாடு	போரதீவு.
53. மண்டுநாகன் சாலை	மண்டூர் நாகஞ்சோலை என இரு ஊர்கள்
54. வேலாயுதர் வெளி	வெல்லாவெளி.
55. நாதனணை	நாதனாவெளி.

அன்று	இன்று
56. வாகூரமலை	வழக்கில் இல்லை. சுப்பிரமணியர் வேலால் பிழந்ததனால் சிதைவுற்றிருக்கலாம். (கதிரைமலைக்கும் உகந்தைக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்ததாக நம்பப்படுகின்றது).
57. பாண்டுறுப்பு	பாண்டிருப்பு.
58. இராட்சதக்கல்	யக்கல.
59. சொறிக்கல்முனை	சொறிக்கல்முனை.
60. திமிலத்தீவு	திமிலைதீவு.
61. தாடைகிரி	தலைக்கல் (முதலாம் விஜயபாகு காலம்) இன்று வழங்கிறந்துவிட்டது.
62. குமுக்கன் ஆறு	கும்புக்கன் ஆறு.
63. விசயதுவீபம்	மகாவம்சம் குறிப்பிடும் சிறிஸ்தவத்துவிலே விசயதுவீபமும் அமைந்திருக்கலாம் (தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும், 1988 இலங்கை வரைபடம் பக்கம் 243).
64. கதிரை	கதிரமலை. (சூரனைச் சங்காரஞ் செய்வதற்குப் பாடிவீடு அமைத்த மலை. கதிர்காமத்திலுள்ள ஏழு மலைக்கூட்டத்தில் உயர்ந்தது).
65. கதிர்காமம்	கதிர்காமம்.
66. மட்டக்களப்பு (புதிய நகர்)	மண்முனை வாவியின் வடபுறம் புலியமாறன் கோட்டையை கி.பி 1626 ல் போர்த்துக்கேயர் கட்ட ஆரம்பித்தனர். 1626 ல் ஒல்லாந்தர் பூர்த்தியாக்கினார்கள். கி.பி. 16ம் நூற்றாண்டு தொடக்கமே வாவியின் வடபுறம் மட்டக்களப்பு என அழைக்கப்படலாயிற்று.
67. மாவலி	மகாவலிகங்கை.

A STUDY ON THE GLORY OF BATTICALOA

By

MRS. THANAPACKIAM GUNABALASINGHAM
B. A. Hons. (Cey.), M. A. (Madras)

The history of Batticaloa has been shrouded in a mystic book called 'Mattakalappu Manmiyam' and that has left to its exponents to unravel. It is still true that a considerable expertise is necessary to understand and take advantage of all the finer points of the book. The author has a thorough grasp of the essential facts and features of the book and brings out her task not only by profound scholarship but also by a sincere regard for historical truth, accuracy of facts and impartiality of judgment.

Thus, this book gives an authoritative and compendious account of the political, economic, religious and cultural conditions of Batticaloa from the earliest times to the advent of the Hollanders. This book also maintains its unique position by virtue of the clarity of its explanations. The book has been enhanced by an exhaustive chart of the political rulers and an ancient map of Batticaloa. The general reader, students and scholars alike will find the book highly interesting, useful and valuable of purpose of understanding the history of Batticaloa.

ST. JOSEPH'S CATHOLIC PRESS, BATTICALOA.
Composed by S. Singarajah.